ஜோதி

ஆசிரியர் — வெ. சாமிநாத சர்மா

சுடர் 1 அக்டோபர் 1937 கதிர் 3

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	தலையங்கம்	1
ஜப்பான் வாழ சீனா இறப்பதா?	பு-ஷி-க்வான்	10
மூர்ச்சையாகும்படி அடிக்க வேண்டும்	"கோகுமின்"	13
யுத்தத்தை ஒழிக்க யுத்தங்கள்!	—	14
பிரார்த்தனை	—	15
உலகத்திலே என்ன நடக்கிறது?	(கார்ட்டூன்கள்)	16
தலை தீபாவளி	"புது மாப்பிள்ளை"	20
அசோகன் சாஸனங்கள்	"மௌத்கல்யன்"	23
ஆக்கங் கெடுத்தவன் ஆசான்— ஐசுவரியம் கெடுத்தவன் ஐ. சி. எஸ்.	ஸ்ரீ வத்ஸன்	25
அரசியல் முறைகளும் சமஷ்டி அரசியலும்	கே. வி. ராமசுப்ரமண்யம் B. A., B. L.,	30
கைகேயி கேட்ட வரங்கள் இரண்டில் முன்னேது? பின்னேது?	கு. ப.	33
ஞானக் களஞ்சியம்	—	38

மாரியாயி எங்கே?	"சனத் குமாரன்"	40
தாதாபாய் நௌரோஜி	ஒரு காங்கிரஸ் வாதி	47
சிவப்பு இந்தியர்கள்	நமது அமெரிக்க நிருபர்	52
ராக்பெல்லர்—ஒரு தனி மனிதன்	பி. கோபால கிருஷ்ணய்யா M. A., M. Sc., Ph. D.,	57
தாய் யார்?	"தேவ கவி"	61
கனகாவின் கடிதங்கள்	"சரசா"	62
பசியெடுக்குதே!—ஒரு விதவையின் புலம்பல்	"பழைய பெருச்சாளி"	64
சர்வதேச சர்க்கரை ஒப்பந்தம்—இந்தியாவின் நிலைமை	டி. எஸ். அவினாசிலிங்கம் B. A., B. L., M. L. A.	65
2300 வருஷங்களுக்கு முன் இந்தியா	"சரித்திரக்காரன்"	68
மாப்பிள்ளையின் யுக்தி	—	72
புகைக்கூடு மேலே போவதேன்?	"விஞ்ஞானபோதகர்"	73
பிச்சைக்காரனுடைய பினத்தல்	வை. சுந்தரம் ஐயர் B. A., B. L.,	81
இப்படியும் நடக்குமா?	—	84
தாமஸ் மஸாரிக்—ஜெக்கோ—ஸ்லோவேகியாவின் சிருஷ்டிகர்த்தன்		87
நமது நிருபர்களுடன்—	—	90
கொஞ்சம் கவனியுங்கள்!	"கணக்காயன்"	93
அன்றாட உலகம்	—	94
உனக்காக வாழ்வேன்	—	97
உலகத்தின் பழைய பத்திரிகை எது?	சி. மா.	98
மாணவனே! தலை நிமிர்	வி. தேவாச்சாரியன்	99



ஜோதி

சுடர் 1 அக்டோபர் 1937. கதிர் 3

வாழ்க!

இன்று—அக்டோபர் மாதம் முதல் தேதி—தமிழ் நாடு, தன்னைப் பாராட்டிக்கொள்ள வேண்டிய நாள். ஏனென்றால் இன்று தான் சேலம் ஜில்லாவில் பூரண மது விலக்குத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படுகிறது. சில வருஷ காலமாக, அரசியல் துறையில், தமிழ் நாடு எப்படி மற்ற மாகாணங்களுக்கு வழி காட்டி வருகிறதோ, அப்படியே, இந்த மது விலக்குத் திட்டத்திலும் நமது தமிழ் நாடுதான் வழி காட்டியிருக்கிறது. காங்கிரஸ் கட்சியினர் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொண்ட எந்த மாகாணத்திலும், இன்னும் மது விலக்குத் திட்டம் நடைமுறையில் கொணரப் படவில்லை. உத்தியோக மேற்றுக் கொண்ட 79-வது நாளன்று, அரசாங்க வருமானத்தில் 26 லட்சம் ரூபாய் நஷ்ட மேற்படுமென்பதையும் பொருட் படுத்தாமல், சட்ட ரீதியாக இந்த மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்த சென்னை அரசாங்கத்தை நாம் பாராட்டுகிறோம். மற்ற மாகாணங்களுக்கு வழி காட்டியாயிருக்கிற பெருமை ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரையும், ஸ்ரீமான் வி. ஐ. முனுசாமிப் பிள்ளையையுமே சேருமாயினும், இதில் பங்கு கொள்ள தமிழ் நாட்டாருக்கும் உரிமையுண்டல்லவா? 'ஒரு ஜில்லாவில் மட்டும்-அதுவும் ஸ்ரீமான் ஆசாரியாருக்குச் செல்வாக்குள்ள ஜில்லாவில் மட்டுந்தான் இஃது அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதுவும் பரீட்சார்த்தமாக. இந்தப் பரீட்சை எவ்வாறு முடியும் என்பது இன்னும் தெரியாது. இதற்குள் ஏன் இவ்வளவு சந்தோஷம்?' என்று தன்னம்பிக்கையில்லாத சிலர் நம்மைப் பார்த்துக் கேட்கலாம். வாஸ்தவம். ஆனால் பரீட்சார்த்தமாகவாவது ஒரு திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர தைரியம் வேண்டு மல்லவா? அதுவும் மாகாண பொக்கிஷம் பூராவும் தங்கள் கைவசத்திலில்லாத ஒரு நிலைமையில், உத்தியோக வருஷத்தின் பாதி பாகம் கழிந்து விட்ட பிறகு, வரவு செலவுத் திட்டத்தின் முக்காலே மூன்று வீசம் பங்கு தயாரிக்கப் பட்டுவிட்டுங்கூட, அநேக வருஷங்களாக அரசாங்க வருமானத்தின் உயிர் நாடி போலிருந்த ஓர் அமிசத்தின் மீது கை வைத்துப் பரீட்சை பார்ப்பதென்றால் அதற்கு எவ்வளவோ முன் யோசனையும் தைரியமும் வேண்டும். செல வினங்கள்

குறைகிற திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வந்து விடுவது சுலபம். வரவு இனம் குறையக் கூடிய திட்டத்தை, அதிலும் குடியிலே தங்கள் ஏழ்மையை மறந்திருக்கிற பாமர ஜனங்களின் மத்தியிலே அமுலுக்குக் கொண்டுவருவதென்றால் அஃது எல்லாராலேயும் முடிகிற காரியமா?

சென்னைச் சட்ட சபைகளில் இந்த மதுவிலக்குத் திட்டம் வாதத்திற்கு வந்த போது, பலரும் பலவித சந்தேகங்களைக் கிளப்பினார்கள். இவை நிவர்த்தியாகிற முறையிலேயே, மதுவிலக்குச் சம்பந்தமான விதிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. சேலம் ஜில்லா எல்லைக்குள்ளே குடிப்பதற்கு வசதியில்லை என்று தெரிந்து, அடுத்த ஜில்லா எல்லைக்குள் சென்று குடிக்கிறவர்களை மோடார் பஸ்கள் ஏற்றிக் கொண்டு சென்றால், அந்த பஸ்காரர்களுக்கும் தண்டனை என்கிற மாதிரியெல்லாம் கடுமையான விதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. பொது ஜனங்கள், இந்த விதிகள் அநுஷ்டானத்திற்கு வரும் வகையில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுடன் ஒத்துழைப்பார்களென்று எதிர் பார்க்கிறோம்.

சில வார்த்தைகள்

கலால் இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு இச் சமயத்தில் ஒரு வார்த்தை. சேலம் ஜில்லாவி லிருக்கிற கலால் இலாகா உத்தியோகஸ்தர்கள் வேறு ஜில்லாக்களுக்கு மாற்றப்படுவார்களென்று அறிகிறோம். இது விஷயத்தில் அவர்கள், வருத்தமோ, உத்தியோகம் போய்விடுமே என்ற கவலையோ கொள்ளக்கூடாது. அதற்கு மாறாக ஏழை மக்களின் துயரத்தைக் களைகிற ஒரு நல்ல முயற்சியிலே, தங்கள் உத்தியோக ஆடம்பரங்கள் பலியாக ஏற்றுக் கொள்ளப் பட்டனவேயென்பதற்காக அவர்கள் சந்தோஷமும் பெருமையும் அடைய வேண்டும். இங்ஙனமே, கள்ளுக்கடைகளைக் குத்தகை யெடுத்துப் பணம் சம்பாதித்தவர்கள், இனி வருமானத்திற்கு வழியில்லையே யென்று ஏங்கி நிற்கவும் கூடாது. ஏழை மக்களின் அறியாமையைச் சாதகமாக உபயோகப்படுத்திச் சம்பாதிக்கப் படுகிற எந்தப் பொருளும், இகத்திலோ, பரத்திலோ வழி காட்டாது. கள் குத்தகைக்காரர்கள் இனித் தங்கள் உழைப்பையும் மூல தனத்தையும், விவசாயம் கைத்தொழில் முதலிய வழிகளில் செலவழிக்க வேண்டுமென்று விரும்புகிறோம். இதனால் இவர்கள், சுயலாபம் அடைவதோடு, தேச முன்னேற்றத்திற்கும் சிரமமின்றித் துணை செய்தவர்களாகிறார்கள். கள்ளிறக்குந் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள், ஆரம்பத்தில் சிறிது கலக்கங்கொண்டு நிற்கலாம். ஒரு பெரிய நன்மையை உத்தேசித்து, ஒரு சிலருக்குச் சில அசௌகரியங்கள் ஏற்படுவது சகஜந்தான். இந்த ஒருசிலர் அதிருப்திப் படுவார்களே யென்பதற்காக நமது லட்சியப் பார்வையை மறைத்துக்கொண்டு விட முடியாது. எனவே, கள்ளிறக்குந் தொழிலாளர், அரசாங்கத்தின் ஆலோசனையையும் ஆதரவையும் பெற்று விவசாயிகளாக மாறி உண்மைச் சான்றோராக வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இதற்கான திட்டங்களை அரசாங்கத்தார் வகுத்திருக்கின்றனர் என்று தெரிகிறது. அரசாங்க பீடங்களில் தற்போது அமர்ந்திருப்பவர்கள், உண்மையான ஜனப் பிரதிநிதிகள் என்பதை இந்தக் கள்ளிறக்குந் தொழிலாளர் உணர்ந்து கொண்டு விடுவார்களானால், இவர்கள் எவ்வித ஆசாபங்கமும் அடையத் தேவையில்லை.

ஏழாவது

ஜனப் பிரதிநிதிகளால் நிருவகிக்கப் படுகிற ஆறு மாகாண அரசாங்கங்களுடன், ஏழாவதாக இப்பொழுது வட மேற்கெல்லைப்புற மாகாணமும் சேர்ந்திருக்கிறது. இதற்காக டாக்டர் கான்சாகிபுவையும், மேற்படி மாகாண ஜனங்களேயும் நாம் பாராட்டுகிறோம். கான் அப்துல் கபர் கான், ஆறு வருஷங்களுக்குப் பிறகு, தமது மாகாணத்திற்குள் பிரவேசிக்க அநுமதிக்கப் பட்டதற்கு அநுசரணைபோல், காங்கிரஸ் கட்சியினரும் மேற்படி மாகாணத்தில் மந்திரிப் பதவிகளை ஏற்றுக்கொண் டிருக்கிறார்கள். இனி, அம் மாகாணத்தின் செஞ்சட்டைக் கனவு,இந்தியா அரசாங்கத்தாருக்குத் தோன்றுதென்று நம்புகிறோம்.

வரவு செலவு திட்டங்கள்

ஏழு மாகாணங்களிலும், சட்ட சபைகளில் வரவு செலவு திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. பொதுப்படையாக எல்லா மாகாணங்களின் வரவு செலவு திட்டங்களேயும் சிறிது அலசிப்பார்த்தோமானல் கீழ்க்கண்ட விஷயங்கள் துலக்கமாகப் புலப்படுகின்றன:—

1 செலவினங்களை விட வரவு இனங்கள் சிறிதளவேனும் அதிகப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் அதிக வரவு எதிர்பார்க்கப் படுகிறது.

2 தேச புனருத்தாரண இலாகாக்கள் என்று சொல்லப் பட்ட விவசாயம், கல்வி, கூட்டுறவு முதலிய இலாகாக்களுக்கு அதிக பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

3 விவசாயியின் வரிச்சுமையைக் குறைக்க வேண்டு மென்ற ஆவல் ஒவ்வொரு மாகாண வரவு செலவு திட்டத்திலும் காணப் படுகிறது.

4 கிராமவாசிகளுக்கு நல்ல குடி தண்ணீர் சப்ளை, வைத்திய வசதி, சொற்ப வருமான மாவது கிடைக்க ஏற்பாடு முதலியவைகளை அளித்து அவர்களுடைய வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்த வேண்டுமென்ற லட்சியம், எல்லா வரவு செலவு திட்டங்களிலும் வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

5 அரசாங்க உத்தியோகஸ்தர்கள், தாங்கள் பெறும் சம்பளம், தேசத்தின் பொருளாதார நிலைமைக்குமிகவும் அதிகம் என்று, அவர்களே உணருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிருர்கள்.

6 பதவி மோகத்திற்காகவோ, ஆடம்பரத்திற்காகவோ,காங்கிரஸ்கட்சியினர் மந்திரிப் பதவிகளை எற்றுக்கொள்ளவில்லையென்பதும், தங்களுக்குக் கிடைத்துள்ள அதிகாரங்களை ஜனங்களுடைய நன்மைக்காகவே உபயோகப் படுத்துவார்கள் என்பதும் நன்ருகத் தெரிகின்றன.

7 காங்கிரஸ் கட்சியினருடைய நிருவாகத் திறமையையும், சலியாத உழைப்பையும், நல்லெண்ணத்தையும் எல்லாக் கட்சியினரும் அங்கீகரித்துக் கொண்டிருக்கிருர்கள்.

8 ஹரிஜனங்களிடம் அதிக சிரத்தை.

9 பணக்காரர்கள் மீது சில புதிய வரிகள் போடப்படும் என்ற சூசகம்.

10 ஏழை மக்களைப் பாதிக்கக் கூடிய எவ்வித புதிய வரியும் இனி போடப் படமாட்டாதென்ற உறுதி மொழி.

இவைகளைக்கொண்டு, இந்த ஏழு மாகாணங்களிலும் அடுத்த வருஷத்து வரவு செலவுத் திட்டம் எப்படி யிருக்குமென்பதை நாம் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலா மல்லவா? இந்த வரவு செலவு திட்டங்களில் காங்கிரஸ் வாசனை வீசுகிறதென்பதற்காக ஒரு சிலர் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. இவ்வளவு சீக்கிரத்தில் தேசிய மணத்தை, இந்த வரவு செலவு திட்டங்களில் எப்படிப் புக விட்டார்கள் என்பதற்குத்தான் இவர்கள் ஆச்சரியப் படவேண்டும்.

சென்னையில்

சென்னை அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் பின்வரும் அமிசங்கள் கவனிக்கத் தக்கன:—

1 75 லட்சம் ரூபாய்க்கு வரிவஜா.
2 சேலத்தில் மதுவிலக்குத் திட்ட அமுல். இதனுல் 26 லட்சம் ரூபாய் நஷ்டம்.
3 கதர் இயக்கத்திற்கு 2 லட்சம் ரூபாய் மானியம்.
4 கிராமங்களில் ரேடியோக்களை அமைத்தல்.
5 கிராமங்களில் வைத்தியசாலைகளை ஏற்படுத்தி அவைகளில் மருத்துவச்சிகளை அதிகமாக நியமித்தல்.
6 கிராம ஜனங்களுக்குக் குடி தண்ணீர் சப்ளையும் சாக்கடை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்தல்.
7 கைத்தறி நெசவு ஜவுளிகளைத் தவிர மற்ற ஜவுளி தினுசுகளில் வியாபாரம் செய்கிறவர்கள் மீது லைசென்ஸ் கட்டணம் விதிக்கப் பெறும்.
8 உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களைக் குறைக்க ஏற்பாடு.
9 ஏழைகளுக்குப் பாதகம் உண்டாகாத சில புதிய வரிகளைப் போட உத்தேசம்.

இவையாவும், சென்னை மாகாண வாசிகளுக்குப் பூரண திருப்தியை அளித்திருக்கின்றன. ஏன்? மாஜி மந்திரிகளுக்குக் கூடத்தான்!

மன மாறுதல்

மாகாண சட்டசபைகளில் கவர்னர்கள் நிகழ்த்தியுள்ள பிரசங்கங்களையும், இந்தியா சட்டசபையில் 13–9–37ல் லார்ட் லின்லித்கௌ பேசியுள்ளதையும் சேர்த்துப் படிக்கிறபோது, பொதுஜனங்களுடைய அபிப்பிராயத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்று இவர்கள் நினைக்கிறார்கள் என்றே தெரிகிறது. உலக நிலையும், கால நிலையும் இவர்களை இங்ஙனம் எண்ணும்படி செய்திருக்கின்றன வென்றுதான் நாம் கூறுவோம். ஒரு விஷயத்தில், இந்த உயர்தர அதிகாரிகள் அத்தனை பேரும் ஒரே ஸ்வரத்தில் ஒரு பாட்டைப் பாடியிருக்கிறார்கள். அதாவது, அரசாங்க நிரந்தர உத்தியோகஸ்தர்கள் தற்போதைய மந்திரிகளுடன் ஒத்துழைக்க வேண்டுமென்பதே இந்தப் பாட்டின் அர்த்தமாயிருக்கிறது. அரசாங்க உத்தியோகஸ்தர்கள், தேசீய அபிலாஷைகளுடன் ஒன்று கலவாத வரையில், தேசத்திற்கு அவர்களால் எவ்வித நன்மையும் உண்டாகாது; தேசமும் அவர்களை ஆதரிக்க முடியாது.

மஹா புருஷன்

தேச மக்களிடத்திலே யாகட்டும், தற்காலிகமாகவாவது அரசாங்க உத்தியோகஸ்தர்களிடத்திலே யாகட்டும், ஒரு நம்பிக்கையையும், நற்காலத்தை எதிர்பார்க்கும் ஆவலையும் உண்டுபண்ணிய மஹா புருஷனை இச் சமயத்தில் நாம் நினைக்கத்தான் வேண்டியிருக்கிறது. ஷேகான் கிராமத்தில் ஒரு சிறு குடிசையில் ஆண்டியாக அவர் வசித்தாலும், ஒவ்வோர் இந்தியனுடைய இதயக் கோயிலிலே அவர் ஆண்டவனாகப் பிரதி பலித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய 69-வது ஜனன விழாவைக் கொண்டாடுகிற தருணத்திலே, (2–10–37) அவருடைய மநோரதத்தில் முதன்மை ஸ்தானம் பெற்றிருந்த மது விலக்குத் திட்டம் சேலத்தில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கதர் இயக்கத்திற்கு அரசாங்க ஆதரவு கிடைத்திருக்கிறது. கிராம வாசி, பிழிந்தெடுக்கப்பட வேண்டிய ஒரு பிராணி என்ற எண்ணம் போய், அவன்தான், தேசத்தின் ஜீவாதாரம் என்ற கொள்கை அரசாங்க அங்கீகாரத்தைப் பெற்

திருக்கிறது. இவை யெல்லாம் யாருடைய உழைப்பின் பயன்? காந்தியடிகளின் மகத்தான தியாகம், எல்லையற்ற சகிப்புத் தன்மை, மற்ற எவராலும் அளந்து காணமுடியாத ஆழ்ந்த ராஜ தந்திரம்; இவை யனைத்துமே, தேசத்தின் தற்போதைய விழிப்புக்குக் காரணம். அவருடைய 69-வது ஜனன விழாக் காலத்தின்போது நமது கடமை என்ன? அவருடைய படத்தை வைத்து ஊர்வலம் வருவதா? அவர்பெயரைச்சொல்லி பிரசாதங்கள் தின்பதா? இல்லை; இல்லை. இந்தியாவின் பரிபூர்ண சுதந்திரம் என்ற லட்சியத்திலேஅவருடையபார்வைஇருக்கிறது. அவ்வழியிலேயே நமது பார்வையையும் திருப்ப வேண்டும். காந்தியடிகள் எப்படி, தம்மைத் தேசிய வாழ்க்கையோடு பிணைத்துக் கொண்டு விட்டாரோ, அதுபோலவே நாமும் நமது வாழ்க்கையை, தேசத்தோடு பிணைத்து விடவேண்டும். நம்மால் தேசம் ஆக்கப்பட வேண்டுமே தவிர, தேசத்தினால் நாம் ஆக்கப்பட வேண்டிய காலம் மலையேறி விட்டது. இந்த ஆக்க வேலையில் இன்றே இறங்குவோமாக! அதுவே, காந்தியடிகளின் 69 வது பிறந்த தினக்கொண்டாட்டத்தின் போது அவருக்கு நாம் காட்டும் நன்றி.

இந்தியாவின் கடன்

இந்தியா, வாங்கி யிருக்கும் மொத்தக்கடன் தொகை 1,100 கோடி ரூபாயென்று இந்தியா சட்டசபையில் ஸர் ஜேம்ஸ் கிரிக் கூறினர். இதில் 100 கோடி ரூபாய், ஐரோப்பிய யுத்தத்திற்கு நன்கொடையாகக் கொடுத்த தொகையும் சேர்ந்திருக்கிறது. கடன் வாங்கி தானம் செய்தால் புண்ணியமுண்டா? புண்ணியமோ, பாவமோ, கடன்சுமை என்னமோ இந்தியாவின் தலை மீது ஏறியிருக்கிறது.

மூன்று கடமைகள்

காங்கிரஸ் அரசாங்கத்தினர் மூன்று விதமான காரியங்களை முறையே நிறைவேற்ற வேண்டுமென்று ஸர் எம். விசுவேசுவரய்யா சொன்னதை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம். முதலாவது கல்வித் திட்டத்தை அடியோடு மாற்றியமைக்கவேண்டும்; இரண்டாவது குடிசைத் தொழில்களை ஆதரித்து விருத்தி செய்ய வேண்டும்; மூன்றாவது தேசப் பாதுகாப்புக்காக ஆயிரக் கணக்கான இளைஞர்களைத் தயார் செய்யவேண்டும். இந்த மூன்று திட்டங்களின் எதிரொலி, காங்கிரஸ் அரசாங்கத்தினருடைய வரவு செலவுத் திட்டத்தில் நன்ருகக் கேட்கிறது. மத்திய மாகாணக் கல்வி மந்திரி, ரவி சங்கர் சுக்லா, மகாத்மா காந்தியைக் கலந்தாலோசித்து, ஏழு வருஷத்திற்குக் கல்வித் திட்ட மொன்றைத் தயாரித்திருக்கிருர். அடுத்த வருஷத்திற்குள் ஸர் விசுவேசுவரய்யாவின் நோக்கங்கள் சில, நடைமுறையில் காணலா மல்லவா?

எல்லாம் அமைதிக்காக

வடமேற்கு எல்லைப்புறத்தில் வசிக்கும் ஜாதியாரிடத்தில் அமைதியை நிலைநாட்ட வேண்டிய புனிதமான பொறுப்பை, சென்ற சில வருஷங்களாக இந்தியா அரசாங்கத்தார் ஏற்று நடத்தி வருகின்றனர் என்பது பத்திரிகை படிப்பவர்களுக்குத் தெரிந்த விஷயந்தானே. சென்ற இரண்டு வருஷங்களாக, இது விஷயத்தில் என்ன செலவாயிருக்கு மென்று ஊகிக்கிறீர்கள்? சேனதிபதியின் வாக்கிலிருந்தே கேளுங்கள். 1935-36ம் வருஷத்தில்

3,976.000 ரூபாய்; 1936-37ம் வருஷத்தில் 3,995,000 ரூபாய். அவ்வளவுதான். ஆனால் இதிலே ஒரு விசேஷம். இப்பொழுது சில மாதங்களாகத் தொடர்ந்து எல்லைப்புறத்தில் சச்சரவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவே, அவை சம்பந்தமாக ஏற்பட்டுள்ள செலவு கணக்கு இதில் சேர்க்கப் படவில்லை. நாகரிகமும் அமைதியும் இலேசிலே வருகின்றனவா?

திருவாங்கூர்

திருவாங்கூர் இப்பொழுது பல வழிகளிலும் முன்னேறிக் கொண்டு வருகிறது. மேற்படி சமஸ்தான அரசாங்கக் காரியாலயங்களில் உபயோகிக்கப் பெறும் சாமான்கள் யாவும் அந்தச் சமஸ்தானத்திலேயே உற்பத்தியானதாகவோ செய்யப்பட்டதாகவோ இருக்க வேண்டுமென்று உத்திரவு பிறப்பித்திருக்கின்றது. இதை நாம் மிகவும் பாராட்டுகிறோம். நமது தேவைகளுக்கு வேண்டிய பொருள்கள் நமது நாட்டிலேயே ஏராளமாயிருக்க நாம் ஏன் வெளியிடத்துப் பொருள்களை வாங்க வேண்டும்?

மாணவர்களும் விவசாயமும்

ஆயிரக் கணக்காகப் பணத்தைச் செலவழித்துப் படித்து விட்டு, வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு அண்ணாமலை சர்வகலாசாலையார் ஒரு விவசாயத் திட்டத்தைத் தயாரித்திருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் பத்து ஏகரா நிலம் வீதம் வகுத்துக் கொடுக்கப் படுமென்றும், இதில் சாகுபடிசெய்ய, விதை, கலப்பை, இருக்கக் குடிசை முதலியனவும் கொடுக்கப் படுமென்றும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இளைஞர்கள் இந்தத் திட்டத்தைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். அண்ணாமலை சர்வகலாசாலையில் படித்த பழைய மாணவர்களுக்கே இதில் சேர உரிமையுண்டு. இதில் சேர்ந்து கொள்ள விரும்பும் எந்த இளைஞனும் தன் கையாலேயே வேலை செய்ய வேண்டுமென்ற கட்டாய விதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. பேனாவைப் பிடித்த கையினால் மண் வெட்டியைப் பிடிப்பது முதலில் சிறிது கூச்சமாயிருக்குமாயினும் அதில் கௌரவக் குறை வொன்றுமில்லை யென்பதை இளைஞர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஜெர்மனியில் நாஜி அரசாங்கத்தினரால் விரட்டியடிக்கப் பட்ட யூத இளைஞர்கள், பாலஸ்தீனத்திற்கு வந்து வெகு சொற்ப காலத்திற்குள் ஆச்சரியப் படத்தக்க அபிவிருத்தியைச் செய்திருக்கின்றனர். இதனை நமது இளைஞர்கள் கவனித்தல் மிகவும் நல்லது.

சீன—ஜப்பானிய யுத்தம்

சீனாவுக்கும் ஜப்பானுக்கும் போர் மூண்டு எண்பது நாட்களுக்கு மேலாகின்றன. ஆயிரக்கணக்கான உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆயினும், இன்னும் உத்தியோக தோரணையில் இரண்டு நாடுகளுக்கும் யுத்தம் நிகழவில்லையாம். இது ராஜதந்திர பாஷை! இது வேடிக்கையில்லையா? இந்த மாதமும், உபய கட்சிகளின் வாதத்தையும் எடுத்து வெளியிட்டிருக்கிறோம். சைனாவைச் சுரண்ட வேண்டுமென்ற நோக்கத்தோடுகூட, ஜப்பான், இந்தப் படையெடுப்பைத் தொடங்கி யிருக்கிறதென்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. ஜப்பான்ராஜதந்திரிகளின் பேச்சிலும் அறிக்கைகளிலும் ஒருவித

அகம்பாவ உணர்ச்சி காணப்படுகிறது. 'முழங்கால் முறிய அடிப்போம்' 'மூர்ச்சையாகும் வண்ணம் விழுத்துவோம்' என்பன போன்ற பிரயோகங்கள் ஜப்பானின் ஏகாதிபத்தியத் திமிருக்குப் பொருத்தமாகவே இருக்கின்றன. ஆனால் சீனாவின் அறிக்கைகளில், அதன் பழமையான நாகரிகத்திற்குப் பொருத்தமாக, உறுதி, அடக்கம் முதலியன காணப்படுகின்றன.

யுத்த பலிகள்

இந்தச் சமயத்தில்,சீனர்கள் காட்டி வரும் அற்புதமான தீரச்செயல்களை எடுத்துக் காட்டி அவைகளை நாம் பாராட்டாமலிருக்க முடியாது. ஊஸங் என்ற இடத்தில் ஒரு சீனப் பட்டாளம், முக்கிய ராணுவத்தினின்று கத்தரிக்கப்பட்டு சத்துருக்களோடு போராட வேண்டியிருந்தது. நான்கு நாட்கள் வரை அன்ன ஆகாரமில்லாமல், வெறும் புல்லையும் மரப்பட்டைகளையும் தின்று கொண்டு போராடியது. கடைசியில் எதிரிகளிடம் சரணடையாமல் ஒருவர் கூட பாக்கியின்றி பட்டாளம் முழுவதும் இறந்து பட்டது. இந்தச் செய்தி எவர்க்கும் மயிர்க் கூச்செறிக்கச் செய்யும். இந்த மாதிரியான செயல்கள், நமது இந்தியாவில் ராஜ புத்திரர்களுடைய சரித்திரத்தில் கேள்விப்பட்டிருக்கிறோம். இங்ஙனம் சீனாவில் யுத்த வீரர்கள் பலியாவதொரு புறமிருக்க, நிரபராதிகளான பொது ஜனங்கள் ஆகாய விமானங்களி லிருந்து குண்டுகளால் தாக்கப் பெற்றுப்பிராணனை விடுகிறார்கள். இதை நாகரிக யுத்தம் என்று சொல்கிறோம். உலகத்தின் மற்ற வல்லரசுகள் இதைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றன. இதை ஸ்ரீமதி சியாங் கை ஷேக்கும் ஆச்சரியப்பட்டுக் கூறுகிறாள். 'மேனாடுகளெல்லாம் சீன-ஜப்பானிய யுத்த விஷயத்தில், மிகவும் அசட்டையாயிருக்கின்றன. மனப்பூர்வமாக நிறைவேற்றிக் கொள்ளப் பட்ட உடன்படிக்கைகள் யாவும் காற்றிலே பறக்கவிடப்பட்டிருக்கின்றன. கோழைகள் என்று பல வருஷ காலமாகச் சொல்லப்பட்ட சீனர்கள் தங்களா லான முயற்சிகளைச் செய்வார்கள். வெற்றி பெறுகிற வரையிலாவது, எங்கள் முழங்கால் உடைகிற வரையிலாவது, நாங்கள் போராடியே தீருவோம். சரித்திர சம்பவங்கள் நிரம்பிய எங்களுடைய தாய் நாடு, ரத்தத்தினால் மெழுகப்பெற்று, நெருப்பினால் எரிக்கப்பட்டு, அடியோடு அழிந்து போகிறவரையில் நாங்கள் போராடியே தீருவோம்.' இந்த அம்மையார், சீனாவின் யுத்த கவுன்சிலில் ஓர் அங்கத்தினராக இருப்பதில் என்ன ஆச்சரியம்?

பரிதாபம்

ஸ்பெயின் யுத்தம் இன்னும் முடிந்தபாடில்லை. முஸோலினியும், ஹிட்லரும் பகிரங்கமாகவே, தளபதி பிராங்கோவுக்கு ஆதரவு கொடுத்து வருகிறார்கள். நியுரென்பெர்க்கில் நாஜி கட்சியின் ஒன்பதாவது மகாநாடு சமீபத்தில் கூடியபோது கூட, ஹிட்லர், பொதுவுடமையை நசுக்க வந்த ஒரு தேவதூதன் என்னும் கருத்துப்படப் பிராங்கோவைப் பாராட்டிப் பேசி யிருக்கிறான். மற்ற வல்லரசுகளால் காதலிக்கப்பட்டு வருகிற தலையிடாத திட்டம் என்னவாயிற்று?

ஸ்பெயின்

ஆனால் ஸ்பெயினிலேயோ, சீனாவிலேயோ தொடர்ந்து யுத்தம் நடைபெறுவதைக்குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. இந்த இரண்டு நாடுகளும்

இன்னும் சர்வ தேச சங்கத்தில் நம்பிக்கை வைத்து அதற்கு விண்ணப்பஞ் செய்து கொண்டிருக்கின்றனவே யென்றுதான் நாம் ஆச்சரியப்படுகிறோம். சர்வ தேச சங்கம், இப்பொழுது கூந்தலற்ற ஓர் அழகிபோல் இருக்கிறதென்று சொன்னால், அதில் அங்கம் வகிக்கும் பெரிய மனிதர்களுக்குக் கோபம் வராதென்றே நம்புகிறோம். சென்ற ஒன்றே கால் வருஷ காலமாக நடைபெறுகிற ஸ்பெயின் யுத்தத்தை, இது நிறுத்த முடியவில்லை. சென்ற வருஷம் எதியோப்பியாவை, இத்தலி விழுங்கின போதும், இஃது ஒன்றுஞ் செய்து விடவில்லை. இப்பொழுது, சீனாவும் இந்தச் சங்கத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறது. இதனால் விளையப்போகிற பலன் ஒன்றுமில்லையென்பதை, சீன ராஜ தந்திரிகள் எவ்வளவு தூரம் உணர்ந்திருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. சென்ற மூன்று வருஷ காலமாக, உலக அரசியலில் நடைபெறும் விநோதமான சம்பவங்களைப் பார்க்கிறபோது, அக்கிரமமாகத் தாக்குகிறவர்களும் தாக்கப்படுகிறவர்களும் சர்வ தேச சங்கத்தின் அங்கத்தினர்களாகவே இருக்கிறார்கள். சர்வ தேச சங்கத்தில் சேர்ந்தால், மற்ற வல்லரசுகளின் பாதுகாப்பு நமக்குக் கிடைக்கும் என்ற நோக்கத்தோடுதான், சிறிய நாடுகள் இதில் அங்கத்தினராகச் சேர்ந்தன. பிரசிடெண்டு வில்ஸனுடைய நோக்கமும் அதுவாகவே இருந்தது. ஆனால் வேலியே பயிரை மேய்வதுபோல், சங்கத்தில் அங்கத்தினர்களாயிருப்பவர்களே, மற்ற அங்கத்தினர்களைத் தாக்குவதென்று ஆரம்பித்தால் இந்தச் சங்கத்தில், அங்கத்தினர்களுக்கு எவ்வளவு நம்பிக்கை இருக்கிறதென்று புலப்படுகிறதல்லவா?

உதாரணங்கள்

தென்னமெரிக்காவில் உள்ள பராகுவே என்ற நாடும், பொலிவியா என்ற நாடும் சென்ற பத்து வருஷ காலமாகப் போராடிக் கொண்டுவந்தன. இரண்டும் சர்வ தேச சங்கத்தில் அங்கத்தினர்கள்தான். இந்தப் போராட்டத்தைச் சர்வதேச சங்கம் எவ்வளவு தூரம் தீர்த்து வைத்தது? எதியோப்பியாவும் இத்தலியும் சர்வ தேச சங்கத்தில் அங்கத்தினர்கள் தான். ஒன்றையொன்று விழுங்கி விட்டது. ஹெயிலி செலாஸி எவ்வளவோ கதறிப்பார்த்தார். கேட்பார் யார்? ஆனால் இன்னும் அவருக்கு இந்தச் சங்கத்தினிடத்தில் நம்பிக்கை இருக்கிறது. இஃது அவருடைய பரிதாப நிலைமையைத் தான் காட்டுகிறது. ஸ்பெயினில் சட்ட ரீதியாக ஏற்பட்ட அரசாங்கத்தின் மீது பிராங்கோ படையெடுத்து த்வம்சம் செய்து வருகிறான். ஸ்பானிஷ் அரசாங்கம், சர்வ தேச சங்கச் சுவற்றில் எத்தனையோ தரம் முட்டிக் கொண்டாய் விட்டது. அதன் மண்டைதான் உடைந்து வருகிறதே தவிர, கிட்டிய பலன் ஒன்றும் காணோம். சர்வ தேச சங்க அங்கத்தினர்களாகிய இத்தலியும், முஸோலினியும், கலகக்காரர்களுக்கு உதவி செய்து வருகின்றனர். சர்வ தேச சங்க அங்கத்தினராகிய சைனாவின் மீது, ஜப்பான் அக்கிரமமாகப் படையெடுத்திருக்கிறது. மற்ற வல்லரசுகள் பார்த்துக் கொண்டுதானிருக்கின்றன. அப்படியிருக்க சர்வ தேச சங்கம் என்ன செய்ய முடியும்? நமக்கென்னமோ அதில் கடுகளவு கூட நம்பிக்கையில்லை.

சர்வாதிகாரிகள்

முஸோலினி, ஹிட்லர் ஆகிய இரண்டு சர்வாதிகாரிகளின் ஆர்ப்

பாட்டம் இப்பொழுது அதிகமாயிருக்கிறது. நாஜி கட்சி மகாநாட்டில் ஹிட்லர், ஜெர்மனி இழந்துவிட்ட குடியேற்ற நாடுகளை யெல்லாம் மீண்டும் பெற வேண்டுமென்று பேசி யிருக்கிருன். சென்ற வருஷத்துப் பேச்சைவிட இந்த வருஷத்துப் பேச்சு கொஞ்சம் மிடுக்காகவே இருக்கிறது. மற்ற வல்லரசுகளின் பலஹீனமே இந்த மிடுக்குக்குக் காரணம். இது காறும் சும்மாயிருந்த முஸோலினி இந்த வருஷம், ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளைக் கேட்கும் உரிமையை ஆதரித்துப் பேசியிருக்கிருன். இப்பொழுது இருவரும் சேர்ந்தே பாசிஸப் பல்லவியைப் பாட ஆரம்பித்திருக்கிருர்கள். இது யாருடைய நன்மைக்கோ தெரியவில்லை. மத்திய தரைக் கடல் மகாநாட்டிற்கு, இந்தக்கடல் போக்குவரத்தில் எவ்வித்திலும் சம்பந்தப்படாத ஜெர்மனிக்கு, அழைப்பு அனுப்பியதிலிருந்தே, இங்கிலாந்து, பிரான்சு இவற்றின் பலஹீனம் வெளியாகிறது. இத்தலி, இந்த மகாநாட்டில் கலந்து கொள்ள முடியாதென்று பொருத்த மற்ற காரணங்களைச் சொல்லி விலகிக் கொண்டு விட்டது. ஆயினும் அதனுடன், மற்றவல்லரசுகள் சல்லாபஞ்செய்வானேன்? இந்தப் பலஹீனங்களைக் கண்டுதான், சர்வாதிகாரிகள் மேலே றப்பார்க்கிருர்கள். சமீபத்தில் அமெரிக்காவின் பிரசிடெண்டான ரூஸ்வெல்ட், இந்தச் சர்வாதிகாரிகளினல், உலகத்திலேயே ஜன நாயகத்திற்கு ஆபத்து ஏற்பட்டு விட்டதோ என்று அஞ்சுகிருர். இந்த அச்சம் நமது இதயத்திலும் எதிரொலி கொடுக்கிறது.

பாலஸ்தீனம்

பாலஸ்தீனப் பிரிவினையைப் பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நிர்ணயித்திருந்த சிபார்சுகள், சர்வ தேச சங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டிருந்ததல்லவா? அது 'தகாஸ்து' என்கிற மாதிரி சொல்லி விட்டது. அது வேறென்ன சொல்லவோ செய்யவோ முடியும்? பாலஸ்தீனப் பிரச்னையை இன்னும் பிரிட்டிஷ் அரசாங்கம் ஆராய்ச்சிசெய்து கொண்டுதான் இருக்கும். ஆனல்பாலஸ்தீனத்தில் அராபிய யூதர் கிளர்ச்சி நிற்க வில்லை. அடிக்கடி கொலைகளும் கலகங்களும் நடைபெற்றுக் கொண்டுதா னிருக்கின்றன. அராபியர்கள் மனம் திருப்தி யுறும் வண்ணம் ஒரு முடிவு ஏற்பட்டாலொழிய பாலஸ்தீனத்தில் நிரந்தரமான அமைதி நிலவுமா என்பது நமக்குச் சந்தேகம்.

முடக்குவாதமா?

மத்திய ஐரோப்பாவில் ஜெக்கோ-ஸ்லோவேகியா என்ற ஒரு சிறு நாடு இருக்கிறது. இஃது ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு உருவானது. இந்த நாட்டிலிருந்து, இந்தியாவுக்கு ஏராளமான பொருள்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. நாமும் ஏராளமாக உபயோகித்து வருகிறோம். ஆனல் இப்பொழுது புதிய சரக்கு ஒன்று அந்த நாட்டிலிருந்து இறக்குமதியா யிருக்கிறது. அஃது என்ன? அந்தநாட்டுமண். ஆச்சரிய மில்லையா இது? ஸ்லோவேகியாவில் பிஸ்டனி என்ற ஓர் ஊர் இருக்கிறது. இங்கே, ஒரு காலத்தில் எரிமலை யொன்று இருந்ததாம். அந்த எரிமலையின் மண்ணை எடுத்து தேகத்தில் பூசிக் கொள்வதனலும், வேறு விதமாக உபயோகிப்பதனலும் முடக்குவாதம் போன்ற நரம்பு சம்பந்தமான வியாதிகள் சொஸ்தமாகி விடுகின்றனவாம். இதை உத்தேசித்து இந்தியாவிலுள்ள பணக்காரர்கள் பலர்

ஜப்பான் வாழ சீனா இறப்பதா?

—பு-ஷி—க்வான்
Pu-Shih-Kwan

சென்ற மாத "ஜோதி"யில் சீன-ஜப்பானிய யுத்தத்தின் இரண்டு கட்சிகளையும், அந்தந்த நாட்டு ஸ்தானீகர்களின் மூலமாக வெளியிட்டிருந்தோம். இந்த மாதமும் உபய கட்சிகளின் வாதங்களையும் வெளியிட்டிருக்கிறோம். ஏனென்றால், இப்பொழுது நடைபெறுகிற யுத்தங்களெல்லாம், மேலுக்கு என்ன காரணங்கள் கூறப்பட்டபோதிலும், அடிப்படையான காரணம் பொருளாதாரமாகவே இருக்கிறது, வட சைனாவின் மீது ஜப்பானுக்கு ஏற்பட்டுள்ள ஆசைக்குக் காரணம் மேற்படி பிரதேசத்தைச் சுரண்ட வேண்டுமென்ற எண்ணந்தான். ஜப்பானின் ஏகாதிபத்தியப் போக்கைக் கண்டிப்பது நமது கடமை. இதற்காகவே 26-9-37ல் இந்தியா முழுவதும் கூட்டங்கள் கூட்டி சைனாவுக்கு நமது அநுதாபத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னார் ஜவஹர். அங்ஙனமே கூட்டங்களும் நடைபெற்றன. இப்பொழுது, உத்தியோக தோரணையில் யுத்தம் தொடுக்கவில்லையென்று சொல்லிக் கொண்டே, ஜப்பான், சைனா முழுவதையும் ஆகாய விமானக் குண்டுகளால் தாக்கி வருகிறது. இதைப்பற்றி அந்நிய நாடுகளும் கண்டித்து வருகின்றன. ஆனால் ஜப்பான் கேட்பதாகத் தெரியவில்லை. உத்தியோக தோரணையில் யுத்தம் தொடுக்கவில்லையென்பதற்கு என்ன அர்த்தம் என்றால், ஒரு நாடும் மற்றொரு நாடும் பரஸ்பரம் நேசப்பான்மையுடனிருப்பதற்கு அடையாளமாக அந்தந்த நாட்டு ஸ்தானீகர்கள் இருப்பார்கள். விரோதம் ஏற்பட்ட காலத்தில் இந்த ஸ்தானீகர்கள் வாபீஸ் வாங்கிக் கொள்ளப் படுவார்கள், இப்பொழுது ஜப்பானிலும் சைனாவிலும் உள்ள ஸ்தானீகர்கள், அவரவர் நாட்டுக்குத் திருப்பி அழைத்துக் கொள்ளப்படவில்லை. இதனால் இரு நாடுகளுக்குள்ள நேசப்பான்மை முறிந்து போகவில்லையென்று அர்த்தம். ஆனாலும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது !

தற்போது சீனாவில் நடைபெறுகிற யுத்தம், 1931-ம் வருஷத்திலிருந்து ஜப்பான் கொண்டுள்ள ஆக்ரமிப்பு எண்ணத்தின் ஒரு விளைவுதான். 1931-ம் வருஷம் செப்டம்பர் மாதம் மஞ்சூரியா ஆக்ரமித்துக் கொள்ளப்பட்டது. 1932-ம் வருஷம் ஷாங்காயில் சண்டை. 1933-ம் வருஷம் ஜிஹோல் பிரதேசம் கைப்பற்றப் பட்டது. 1936-ம் வருஷம் நவம்பர் மாதம் ஸூயியுவான் மாகாணத்தில், ஏற்கனவே போட்டிருந்த திட்டப்படி சண்டை.

வட சைனாவிலுள்ள ஹோபை,

பிஸ்டனிக்குச் சென்று வசிக்கிறார்கள். போபால் மகாராஜா, டேஹ்ரி மகாராஜா, பர்த்வான் மகாராஜா முதலிய மகாராஜாக்களின் படையெடுப்பு அங்கே அதிகமாகப் போய்விட்டது. டாக்டர் அன்ஸாரி, பி. சி. ராய் முதலிய பல இந்திய தேசீய டாக்டர்கள் கூட இந்த 'மண்ணைப் பரிசோதித்து இதன் குணத்தைப் பாராட்டியிருக்கிறார்களாம். இனி ஆட்சேபமேன்? இறக்கு மண்ணை இந்தியாவிலே! மருந்தாக விற்கப்படும்போலும் இது. இது சம்பந்தமாகச் சில சந்தேகங்கள் நமக்குத் தோன்றுகின்றன. இந்தியாவிலே வாத நோய்கள் அதிகமா? அப்படி இருந்தால் பிரபுக்கள், மகாராஜாக்கள் முதலியவர்களைப் பார்த்துத்தான் அது வருமா? இந்தியாவிலே, இந்த நோய்களுக்குப் பரிகாரங் கிடையாதா?

ஷாண்டங், ஷான்ஸி, சாஹார், ஸூயி யுவான் ஆகிய ஐந்து மாகாணங்களை சுவாதீனப்படுத்திக் கொள்வது மஞ்சூரியாவின் ஆக்ரமிப்பை விட முக்கியமானது என்று ஜப்பான் கருதுகிறது. ஏனென்றால், சைனாவில் விளையும் கோதுமையில் நூற்றுக்கு ஐம்பத்தைந்து பாகம் இந்த ஐந்து மாகாணங்களிலே தான் விளைகிறது. சைனாவின் மொத்தப் பருத்தி விளைவில் நூற்றுக்கு அறுபது பாகமும், மொத்த நிலக்கரி உற்பத்தியில் நூற்றுக்கு எண்பத்தெட்டு பாகமும், அதிகமான இரும்புச் சுரங்கங்களும் இந்த ஐந்து மாகாணங்களிலேதான் இருக்கின்றன.

தவிர, இந்த ஐந்து மாகாணங்களையும் தன்னுடைய அரசியல் மேடையாக வைத்துக் கொள்ள ஜப்பான் நினைப்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஏனென்றால், இங்கிருந்து கொண்டு மங்கோலியக் குடியரசையும், ருஷ்யாவையும், மத்திய சைனாவையும் எப்பொழுதும் ஒரு கண் பார்த்துக் கொண்டிருக்கலாமல்லவா?

இரண்டு வருஷங்களுக்கு முன்னாடியே, ஜப்பானியர்கள் வட சைனாவில் தங்கள் முயற்சியைத் தொடங்கினார்கள். இந்த முயற்சி பலிக்கவில்லை. எனவே, ஹோபை, சாஹார் என்ற இரண்டு மாகாணங்களிலுள்ள சில முக்கிய ஊர்களை மட்டும் கைப்பற்றிக் கொண்டார்கள்.

பின்னர், 'சாஹார், ஹோபை அரசியல் கவுன்ஸில்' என்ற ஸ்தாபனம் காணப்பட்டது. வட சைனாவின் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஜப்பானும், நாங்கிங் அரசாங்கமும் கலந்து பேச இந்த ஸ்தாபனம் உபயோகித்துக் கொள்ளப்பட்டது. ஜப்பானிடம், நேசப் பான்மை காட்டி வந்த சில ராணுவ உயர்தர உத்தியோகஸ்தர்கள் இதில் சம்பந்தப் பட்டிருந்தார்கள். ஆனால், இந்த ஸ்தாபனத்தைப் பொதுவாகவே சீனர்கள் வெறுத்து வந்தார்கள். பொதுவாகவே ஜப்பானோடு தங்களை நெருக்கமாக இணைக்கிற எந்த ஸ்தாபனத்தையுமே சீனர்கள் வெறுக்கிறவர்கள்.

வட சைனாவில் ஜப்பானின் தூண்டுதலின் மேல் ஏற்பட்ட 'பொம்மை அரசாங்கம்' அதிகாரத்தை ஏற்றுக் கொண்டவுடன், ஜப்பானுக்கு விரோதமான கிளர்ச்சி, நாடெங்கணும் ஏற்பட்டது. இதில் மாணவர்கள், தொழிலாளர்கள், அறிஞர்கள், பணக்காரர்கள் முதலிய பலரும் கலந்து கொண்டார்கள். முதலில் ஒரு சிலர் கைது செய்யப்பட்ட போதிலும் இந்தக் கிளர்ச்சி வலுத்துக் கொண்டே வந்தது. இதன் விளைவே 1936ம் வருஷம் ஏற்பட்ட 'சீனாவின் விடுதலைச் சங்கம்' என்ற ஸ்தாபனம். இந்த ஸ்தாபனத்தைக் கண்டு, ஜப்பானியர்கள் பெரிதும் அஞ்சுகிறார்கள். ஜப்பான் ஸ்தானீகரான கவாகோ, (Kawagoe) சீன தளகர்த்தரான சியாங் கை ஷேக்குடன் எட்டு முறை சமரசப் பேச்சு நடத்தினார்; எட்டு முறையும் இது முறிந்து விட்டது.

ஜப்பானியர்களுடைய கோரிக்கைகள் என்னவென்றால்:— 1. ஜப்பானும் சைனாவும் பொருளாதார சம்பந்தமாக ஒத்துழைக்க வேண்டும். 2. வட சைனாவுக்கு அரசியல் சுதந்தரம் கொடுக்கப்பட வேண்டும். 3. ருஷ்யாவுக்கு விரோதமாக ஜப்பானும் ஜெர்மனியும் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்கையைப் போல் ஜப்பானும் சைனாவும் செய்து கொள்ள வேண்டும்.

இவற்றில், முதல் கோரிக்கை ஏறக்குறைய நிறைவேறி விட்டதென்றே சொல்லலாம். வட சைனாவை ஜப்பான்

சுரண்டுவதன் மூலம், சீன ஜப்பானியப் பொருளாதார ஒத்துழைப்பு ஏற்பட்டு விட்டதல்லவா? இன்னும் 'ஒத்துழைப்பு' வேண்டும் என்பதற்கு என்ன பொருள் என்றால் :—

1. ராணுவ சம்பந்தமாகவும், அரசியல் சம்பந்தமாகவும் முக்கியத்துவம் பெற்ற ஆகாய விமான பாதைகளை ஏற்படுத்துதல். இந்த நோக்கத்தைக் கொண்டுதான் 'ஹுயூட்டுங் ஏர் கம்பெனி' (Huitung Air Company) ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலதனம் நூற்று முப்பத்தைந்து லட்சம் ரூபாய். ஐந்து வழிகளில் ஆகாய விமானங்களின் போக்குவரத்து நடைபெற வேண்டுமென்பது இந்தக் கம்பெனியின் கொள்கை. இந்த ஆகாய விமான பாதைகளின் மூலமாக ஜப்பானிலிருந்து ஏராளமான சைந்யங்களை எட்டு மணி நேரத்துக்குள் சீனாவில் இறக்கி விடலாம்.

2. ஹோபை மாகாணத்தில் உள்ள இரும்புச் சுரங்கங்களையும், ஷான்ஸி மாகாணத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களையும் தாங்களே சுரண்ட வேண்டுமென்பது ஜப்பானியர்களின் நோக்கம். ஜப்பானில் இரும்பு மிகக் குறைவு. தன் தேவைக்காக, அது வருஷந்தோறும் மஞ்சூரியா, இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய நாடுகளிலிருந்து நாற்பது லட்சம் டன் இரும்பை இறக்குமதி செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. இதனாலேயே, சைனாவிலுள்ள இரும்புச் சுரங்கங்களுக்கு அஃது ஆசைப் படுகிறது.

3. வட சைனாவில் ஜப்பானியர்கள், பதினேரு விதமான ரயில் பாதைகளைப் போட்டுக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள். சிறப்பாக ஹோபை மாகாணத்தில் சாங்ஹீ பாதையை 240 லட்சம் ரூபாய் மூலதனம் வைத்துப் போட்டு விட வேண்டுமென்பது இவர்கள் ஆவல். இந்தப் பாதை அதிக நீளமில்லாவிட்டாலும் ராணுவ சம்பந்தமாகவும், பொருளாதார சம்பந்தமாகவும் அதிக முக்கியமானது. மேற்படி மாகாணத்தின் எந்த ஜில்லாவில் அதிகமான நிலக்கரி, இரும்பு, பருத்தி, கோதுமை முதலியன உற்பத்தியாகின்றனவோ அந்த ஜில்லாவில் இந்த ரயில் பாதை போகின்றது. 1921ம் வருஷத்திருந்து 1929ம் வருஷத்துக்குள் இந்த ரயில் பாதையைப் போடும் உரிமையைத் தங்களுக்கே கொடுத்து விட வேண்டுமென்று இத்தலி, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக சீன அரசாங்கத்துடன் சமரசப் பேச்சுகள் நடத்திப் பலனடையாமற் போயின என்பதொன்றைக் கொண்டே, இந்த ரயில் பாதையின் முக்கியத்துவம் நன்கு விளங்கும்.

4. ஹைகோ (Haiko) டக்கூ (Takku) என்ற இரண்டு துறைமுகங்களையும் விசாலப் படுத்த வேண்டுமென்பது ஜப்பானின் நோக்கம். இவையிரண்டும் டீன்ஸ்டினுக்குச் சமீபத்திலிருக்கின்றன. இவைகளை விசாலப் படுத்திக் கொண்டால்தான் ஜப்பானியக் கப்பல்கள் இங்கே தாராளமாக வந்து தங்க முடியும்.

பரஸ்பரம் போரிட்டுக் கொள்ளும் இரு கட்சியினராகச் சீனர்களை ஆக்கி விட வேண்டுமென்பதுதான் ஜப்பானியர்களின் நோக்கம். இப்பொழுது அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத்தான், பல் பட்ட முறையில் யுத்தம் தொடங்கியிருக்கிறார்கள்.

மூர்ச்சையாகும்படி அடிக்க வேண்டும்

—"கோகுமின்"—டோக்கியோ

வட சீனாவில் சீனத் துருப்புகளின் அக்கிரமம் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டுவருகிறது. சீனர்கள், எல்லா உடன்படிக்கைகளையும் மீறுகிறார்கள். ஜப்பான், இந்த நிலைமையை இன்னும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. நிலைமையை நெருக்கடியாக்கத் தனக்கு இஷ்டமில்லை யென்று சைனா சொல்லிக் கொண்டுதான் வருகிறது. ஆனால் உள்ள நிலைமையில், சைனாவிலுள்ள தீமையின் அடிவேரையே கல்லிவிட வேண்டுமென்று ஜப்பான் தீர்மானித்திருக்கிறது. இப்பொழு தேற்பட்டுள்ள நிலைமைக்குக் காரணங்கள் எல்லாருக்கும் தெரிந்ததுதான். ஜப்பானை எதிர்க்குமாறும், அதனை அவமானப் படுத்துமாறும் சீனத் துருப்புகளை நாங்கிங் அரசாங்கத்தார் தூண்டி வருவதே இதற்குக் காரணம். நாங்கிங் அரசாங்க அதிகாரிகள் இது விஷயத்தில் தாங்கள் சிறிது அளவு மீறிச் சென்று விட்டதாக நினைக்கிறார்கள். ஆனால் இனிமேல் என்ன செய்ய முடியும்? காலங் கடந்து விட்டதல்லவா? விதைத்ததைத்தானே அறுக்க வேண்டும்?

தாங்கள் அடைந்த அவமானத்தைப் போக்கிக் கொள்வதற்காக, சைனா ஏதேனும் சமரஸத்திற்கு வருமானால் அதற்கு ஜப்பான் எந்த விதத்திலும் இணங்கக்கூடாது. சீனர்கள், தங்கள் மனப்பான்மையையே மாற்றிக்கொள்ளும் வகையில் ஜப்பான் நடந்து கொள்ள வேண்டும். ஜப்பானின் நடவடிக்கை சைனாவுக்குப் பிடிக்காம லிருக்கலாம். ஆனால் அவர்களிடத்திலுள்ள தீய சுபாவங்களை இஃது ஒழிக்கலாமல்லவா? தவிர, அவர்களுடைய நீண்ட காலத் தூக்கத்திலிருந்து எழுப்புமல்லவா? அப்பொழுதுதான், உலகத்திலுள்ள பழமையான ஜாதியார் என்ற முறையில், தங்கள் சுதந்திரத்தை அவர்கள் காப்பாற்றிக் கொள்ள முடியும். சைனா, இப்பொழுது ஒரு குடியேற்ற நாடு போல்தான் இருக்கிறது. இந்தச் சங்கடமான ஸ்திதியிலிருந்து அது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், ஜப்பானிய சமூகத்தின் பெருமையை அஃது உணர வேண்டும்.

வட சைனாவில் ஏற்பட்ட நிலைமையை ஓர் உள் நாட்டுக் குழப்பமாகவே வர்ம்பு கட்டிவிட வேண்டுமென்று நாம் முதலில் கூறினோம். ஆனால் இப்பொழுது நம் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு விட்டோம். சைனாவின் மத்திய அரசாங்கத்தைப் பலமாக அடித்துவிட வேண்டும்.

நிலைமையைச் சமாளிக்க, ஜப்பானிய அரசாங்கம், சில முறைகளைச் சீன அரசாங்கத்திற்குச் சொன்னதாகத் தெரிகிறது. இவைகளை நாங்கிங் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளா விட்டால், அதனை, மூர்ச்சையாக விழும்படி அடித்துவிட வேண்டும். லீ ஹங்-சாங் (Li Hung-Chang) கும் அவருடைய சகாக்களும், ஜப்பானை அவமானப் படுத்துவதில் அதிக தூரம் சென்று விட்டனர். சியாங்-கை-ஷேக்கும் அவருடைய புதிய சைனாவும் இந்தக் குற்றத்தின் பலன்களை அதிகமாக அநுபவிக்கத்தான் வேண்டும். ஜப்பான், யுத்தத்திற்குச் சிறிதும் அஞ்சவில்லை யென்பதை சைனா நன்கு உணருமாக.

யுத்தத்தை ஒழிக்க யுத்தங்கள்!

இனிமேல் யுத்தம் ஏற்படக்கூடாதென்பதற்காக, ஐரோப்பிய யுத்தம் நடைபெற்றதாகச் சொல்லப் பட்டது. 1918ம் வருஷம் நவம்பர் மாதம் 11ந் தேதி, யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பெற்றபோது, இனி எந்த நாட்டிலும் பெரிய யுத்தங்கள் கிளம்பாதென்று ராஜதந்திரிகள் கருதினார்கள். அதிலும், சர்வதேச சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, மெலியாரை வலியார் தாக்குவதென்கிற அக்கிரமமான காரியங்கள் நடைபெறாதென்றும், சிறு நாடுகளின் சுய நிர்ணய உரிமைகள் பாதுகாக்கப்படுமென்றும் எல்லாரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் இதற்குப் பிறகு அநேக சில்லரை யுத்தங்கள் உலகத்தில் நடைபெற்றுக் கொண்டு வந்திருக்கின்றன. 1914ம் வருடத்து ஐரோப்பிய மகா யுத்தமானது, யுத்தங்களை ஒழிக்க ஏற்பட்ட யுத்தமாகத் தோன்றவில்லை. யுத்தங்கள் விளைவதற்குரிய பண்பட்ட நிலமாகவே அமைந்துவிட்டது மேற்படி மகா யுத்தம்.

இந்த ஐரோப்பிய யுத்த முடிவிற்குப்பிறகு, உலகத்தின் பல பாகங்களிலும் ஏற்பட்ட சண்டைகளை வருஷவாரியாகக் கீழே தந்திருக்கிறோம்.

1918-1919—கலீஷியா மாகாணத்தின் கிழக்குப் பாகத்தைத் தங்கள் சுவாதீனப்படுத்திக் கொள்வதற்காக போலந்துக் காரர்களும் உக்ரேனியர்களும் போராடினார்கள். கடைசியில் இந்தப் பிரதேசம், 25 வருஷ காலம் வரை, போலந்தின் சுவாதீனத்திற்கு விடப்பட்டது.

1919—சைபீரியாவில் தளபதி கோல்சாக்கும், தெற்குப் பாகத்தில் தளபதி டெனிக்கினும், எஸ்தோனியாவில் தளபதி யுடெனிக்கும் நேசக் கட்சியினரால் உதவி செய்யப் பட்டு ருஷ்யாவில் ஏற்பட்ட (வெள்ளை ருஷ்ய) கலகத்தை அடக்கினார்கள்.

1919-1921—ஐர்லாந்தில் போராட்டம். இதன் முடிவு ஐரிஷ் சுதந்திர நாடு ஸ்தாபிதம்.

1919-1922—மொராக்கோவில் ஸ்பானியர்களின் யுத்த ஆர்ப்பாட்டம். 1921ம் வருஷம் ஜூலை மாதம் மெலில்லா என்ற ஊரில் ஒரே நாளில் பதினாயிரம் ஸ்பானியர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

1919-1926—அரேபியாவில் இபுன் சாத்தின் யுத்தமும், மேற்படி நாட்டின் ஆதிக்கமும்.

1920—போலந்தின் மீது ருஷ்யா படையெடுத்தது. ஆனால் அதே வருஷத்தில் தோல்வியுற்றது.

1920—அர்மீனியக் குடியரசு நாட்டின்மீது துருக்கியின் படையெடுப்பு. கார்ஸ், அலெக்ஸாந்த்ரோபோல் ஆகிய பிரதேசங்கள் கைப்பற்றப் பட்டன. இதன் விளைவாக ருஷ்யாவுக்கு நேரான பாதை ஏற்படுத்திக் கொண்டது துருக்கி.

1920-1926—சைனாவில் உள்நாட்டுச் சண்டைகள்.

1921-1922—சின்ன ஆசியாவின்மீது கிரேக்கர்கள் படையெடுத்தார்கள். ஆனால், சகேரியா என்ற இடத்தில் துருக்கியர்களால் பல

மாக முறியடிக்கப்பட்டார்கள். ஸ்மர்ணு சூறையாடப் பட்டு தீக்கிரையாக்கப் பட்டது. சுமார் 600,000,000 ரூபாய் நஷ்டம். ஆயிரக்கணக்கான பேர் கொலை செய்யப் பட்டார்கள்.

1925—சிரியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்து, பெரிய கலகம். டமாஸ்கஸ் நகரத்தின் மீது வெடிகுண்டுப் பிரயோகம்.

1925–1935—தென் னமெரிக்காவிலுள்ள பொலிவியா நாட்டுக்கும், பாராகுவே நாட்டுக்கும் இடைவிடாத சண்டை.

1926–1928—சீனுவில் பல கட்சியினருக்குள்ளும் மன மாற்றமும் போராட்டமும். நாங்கிங்கில் குடியரசு அரசாங்க ஸ்தாபிதம்.

1931–1932—மஞ்சுகோவின் மீது ஜப்பான் படையெடுத்து, சீன கவர்னரான சாங்-சியோ-லியாங் என்பவனைத் தூரத்தி விட்டது. ஹென்ரி-பு-யி என்பவனை சக்ரவர்த்தியாக ஸ்தாபிதம் செய்தது.

1932—ஷாங்காய் நகரத்தில் 50,000 ஜப்பானியர்களுக்கும் 120,000 சீனர்களுக்கும் பலத்த சண்டை. ஷாங்காய் நகரத்தில் மட்டும் சுமார் 1,050,000,000 ரூபாய் நஷ்டம்.

1935–1936 — எதியோப்பியாவை, இத்தலி ஆக்ரமித்துக் கொண்டது.

1936—ஸ்பெயினில், தளபதிபிராங்கோ குடியரசு அரசாங்கத்தின் மீது கலகத்திற்குக் கிளப்பினுன். ஜெர்மனியும், இத்தலியும் பிராங்கோவுக்கு உதவி செய்கின்றன. இன்னும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

1937—சீன ஜப்பானிய யுத்தம். மும்முரமாக இப்பொழுது நடக்கிறது.

பிரார்த்தனை

கடவுளே! என்னை உனது சாந்தத்தின் கருவியாகச் செய். எங்கே துவேஷம் இருக்கிறதோ அங்கே அன்பு விதை விதைக்கிறேன். கொடுமைக்குப் பதில் மன்னிப்பு; சந்தேகத்திற்குப் பதில் பூரண நம்பிக்கை; ஏக்கத்துக்குப் பதில் எல்லாம் நன்மைக்கே என்ற எண்ணம்; இருட்டுக்குப் பதில் வெளிச்சம்; துயரத்திற்குப் பதில் சந்தோஷம். இவை யனைத்தையும் நான் செய்யட்டும்.

நான் ஆறுதல் பெறுவதைக் காட்டிலும் பிறர்க்கு ஆறுதல் அளிப்பேன். தெரிந்து கொள்வதைவிட பிறர்க்குத் தெரிவிப்பேன். நேசிக்கப்படுவதைக் காட்டிலும் பிறரை நேசிப்பேன். ஏனென்றல் கொடுப்பதிலேதான் பெறுகிறோம். மன்னிப்பதிலேதான் நாம் மன்னிப்படைகிறோம். இறந்துதான் நித்திய வாழ்வை அடைகிறோம்.

உலகத்திலே என்ன நடக்கிறது?

நல்ல காவல்! எல்லாம் தவிடு பொடி!

முஸோலினியின் கைப்பிள்ளையாக இருக்
கிறான் தளபதி பிராங்கோ!

சேம்பர்லேன் (காதலன்) : :

: : முஸோலினி (காதலி)

காதலர்களே! நீங்கள் உங்கள்
காதலிக்குக் கடிதம் எழுது
கிறபோது இப்படியா
சங்கோஜப்பட்டுக்
கொண்டு
யோசிக்
கிறீர்கள்?



Courtesy W. R.

ஆளுக்கு ஒரு பங்கு!

முஸோலினியும் ஹிட்லரும் (25—9—37)ல் சந்தித்தார்கள். இந்தச் சந்திப்பைக் கண்டு ஐரோப்பிய சமாதான தேவதை ஏன் இப்படி நடுங்குகிறாள்?

இன்னும் ஒரு துண்டுமட்டும் வெட்டிக்கொள்கிறேன். எல்லாம் உன்னுடைய நன்மைக்குத்தான். சும்மாயிரு. சீறாதே.

ஜோதி

தலை தீபாவளி!

—"புது மாப்பிள்ளை"

"உன் பாடு இந்த வருஷம் ஜோர். புது மாப்பிள்ளை. முதல் தீபாவளி. ஷோக்காய் போகப் போகிறு யாக்கும். ஆம்படையாளைப்பார்ப்பையோ? பார்க்க மாட்டாயோ?" என்றெல்லாம் என் நண்பர்கள் என்னைப் பரிகசித்துக் கொண்டிருந்தார்கள். இவர்களுடைய பரிகாசத்தில் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை. எனக்கும் என் மாமனாருக்கும் சென்ற ஒன்றரை மாத காலமாக நடந்து கொண்டு வரும் கடிதப் போக்கு வரத்துகளைப் பற்றி என் நண்பர்களுக்கு என்ன தெரியும்? எல்லாரையும் போல் நானும் மாமியார் வீட்டுக்குப் போவதற்குக் குஷியாயிருப்பேன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தேசத் தொண்டனாயிருப்பதா அல்லது மாப்பிள்ளையாயிருப்பதா என்பதைப் பற்றி என் மனதுக்குள்ளே நடந்து கொண்டிருக்கும் போராட்டத்தைப் பற்றி நான் யாருக்குமே சொல்லவில்லை. மனதுக்குள்ளே யிருக்கிறதை வெளியிலே முகத்தில் காட்டிக் கொள்கிற சுபாவமும் என்னிடம் கிடையாது. எனவே, என் சிநேகிதர்கள், என்னை யறிந்து கொள்ளாமலே என்னைப் பரிகசித்து வந்தார்கள்.

நான் ஒரு எம். ஏ. சென்னைச் சர்வகலாசாலைப் பட்டதாரி. இதற்குத் தனி கௌரவம் உண்டல்லவா? ஆங்கில இலக்கியத்தை அப்படியே கரைத்துக் குடித்து விட்டதாக என் புரொபஸர், என்னை வேலைக்குச் சிபார்சு செய்கிற போதெல்லாம் சொல்லிக் கொண்டு வருவார். தவிர, சமஸ்கிருதத்திலும் வித்துவான் பரீட்சை பாஸ் பண்ணி யிருக்கிறேன். தமிழிலோ, பழைய சங்க இலக்கியங்களுக்கு உரை சொல்லுவேன். அநேக தமிழ்ப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதி, ஆசிரியர்களால் பாராட்டப் பட்டும் இருக்கிறேன். அழகோ—? என்னைப்பற்றி நானே எப்படி சொல்லிக்கொள்வது? என் போடோவைப் பார்த்தவர்கள் 'நீ ஒரு அசல் வெள்ளைக்காரன் மாதிரி இருக்கிறாயடா' என்று சொல்லுவார்கள். உயரம் 6-அடிக்கு 2/¾ இஞ்சுதான் குறைவு. போன மாதம்தான் எடைபோட்டுப் பார்த்தேன். 152-பவுண்டு சரியாக. அந்தக் கார்டின் பின் பக்கத்திலே கூட எழுதி யிருந்தது, 'சீக்கிரத்தில் உன் கவலை ஒழியும்' என்று. ஆனால் 'ஓயாதோ என் கவலை' என்றுதான் நான் இன்னும் பாடிக் கொண்டிருக்கிறேன்.

இவ்வளவு தூரம் என்னைப் பற்றி நான் ஏன் சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது தெரியுமா? சென்ற இரண்டு வருஷ காலமாக நான் வேலையில்லாத கூட்டத்தில் சேர்ந்தவனாயிருக்கிறேன். 'நல்ல படிப்பு இருக்கிறது; பையனும் லட்சணமாயிருக்கிறான். ஆஸ்தி பாஸ்தி எதற்கு? சீக்கிரத்தில் வேலை கிடைத்து விடும். அப்பொழுது சம்பாதித்துக் குவியல் குவியலாகச் சேர்த்து விடுகிறான்' என்று நினைத்துத்தான் எனக்குப் பெண்ணைக் கொடுத்தார் ராவ் பகதூர் ராமலிங்க ஐயர். தலை தீபாவளிக்கு லீவ் அகப்படுமா அகப்படாதா என்னும்படியாக நான் ஓர் உத்தியோகத்தில் இருப்பேன் என்று என் மாமனார் நினைத்திருந்

தாரோ என்னவோ? நானும் அப்படித்தான் எழுத வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் அதிர்ஷ்டம் என் பக்கம் இல்லையே.

ராவ் பகதூர் ராமலிங்க ஐயர், கலால் இலாகாவில் அஸிஸ்டெண்டு கமிஷனராயிருந்து 'ரிடைர்' ஆனவர். உத்தியோகத்திலிருக்கும்போது லேசுபாசாக சம்பாதித்துமிருக்கிறார். பென்ஷனில் கொஞ்சம் 'கம்யூடேஷன்' செய்து, சென்னை தியாகராய நகரில் ஒரு வீடும் கட்டியிருக்கிறார். அவர், தம் செல்வாக்கை உபயோகித்து, கலால் இலாகாவில் எனக்கு சின்ன 'கிளார்க்' உத்தியோகமாவது சம்பாதித்துக் கொடுத்து விட வேண்டுமென்று பிரயத்தனப்பட்டுப் பார்த்தார். முடிகிற காரியமா? எந்த அதிகாரியைப் போய்ப் பார்த்தாலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விதியை எடுத்துக் காட்டி பிராமணனுக்குவேலையில்லையென்கிறார்கள். இப்பொழுது கலால் இலாகாவுக்கே ஆபத்து வந்து விட்டது. அவர் என்ன செய்வார்?

நான் வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமையை உணர உணர, என் தேசத்தின் பரிதாபகரமான நிலைமையையும் உணர ஆரம்பித்தேன். தேசீய இயக்கத்தில் ஈடுபட்டேன். சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். என்னுடைய ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியாக இப்பொழுது இருக்கிறேன். தேசத் தொண்டன், அதிலும் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி என்கிற முறையில் அங்கங்கே யாராவது சாப்பாடுபோட்டு விடுகிறார்கள். ஆசாரஉபசாரம்.இப்படியாக என் காலட்சேபம் நடந்து வருகிறது.

ஆனால் இப்படி நான் காங்கிரஸ் காரியதரிசியாயிருப்பது என் மாமனாருக்கு லவலேசமும் பிடிக்கவில்லை. எப்படிப் பிடிக்கும்? ஒரு 'எக்ஸைஸ் அசிஸ்டென்ட் கமிஷனர்' மாப்பிள்ளை, கதர் உடுத்தி, காந்தி குல்லாய் அணிந்து, காங்கிரஸ் காரியதரிசி என்று சொல்லிக் கொண்டு திரிகிறானென்றால் அது அவருக்குக் கௌரவக் குறைவு தானே! இதனால் அவருக்கும் எனக்கும் அவ்வளவு மனப்பொருத்தம் இல்லை. 'வேலையில்லாமல் போனால் போகிறது; என் வீட்டிலே யாவது சும்மா விழுந்து கிடக்கக் கூடாதா? ஏன் இப்படிக் கதரைக் கட்டிக் கொண்டு தறி தலையாகத் திரிகிறான்' என்பது அவருடைய கட்சி.

ஆனாலும் சம்பிரதாயத்திற்கு, தலை தீபாவளியின் போது, என் மாமனார் என்னை அழைத்தார். ஆனால் ஒரு நிபந்தனை போட்டார். அவர் எனக்கு எழுதியிருந்த கடிதத்தை அப்படியே உங்களுக்கு எடுத்துக் காட்டுவது சரியாயிருக்குமல்லவா?

அன்புள்ள மாப்பிள்ளை சந்திரமௌளிக்கு ஆசீர்வாதம். நாளை நவம்பர் மாதம் 2ந்தேதி தீபாவளி வருகிறது. நீ அதற்கு அவசியம் புறப்பட்டு வரவேண்டும். இது முதல் தீபாவளியானதால், நீ வராமலிருக்கக்கூடாது. ஆனால் ஒரு விஷயம். கதர் வேஷ்டிதான் எனக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தாதே. அந்தக் கோணிப்பையை, என் மனமார உனக்கு வாங்கிக் கொடுக்கத் தயாராயில்லை. நல்ல சரிகை வேஷ்டிகள் எத்தனைஜோடிகள்வேண்டுமானாலும் வாங்கித் தருகிறேன். அதற்கு எவ்வளவு பணம் செலவழிக்கவும் நான் தயார். என் வீட்டிலிருக்கும் வரையிலாவது, நீ கதரைக் கட்டிக் கொள்ளாமல், நான் கொடுக்கிறவேஷ்டிகளைக் கட்டிக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் என் மனம் திருப்தி யடையும். தவிர, கதர் கட்டுகிறவர்களை நான் ஆதரிப்பதனால், என்பென்ஷனும் போய்விடுமல்லவா? நீ தீபாவளிக்கு அவசியம் வரவும்.

ராமலிங்கம்.

தேசம் பெரிதா? பென்ஷன் பெரிதா? என்ற கேள்வி என் மாமனாருக்கு. தலை

தீபாவளி பெரிதா? என் சுய மரியாதை பெரிதா? என்ற கேள்வி எனக்கு.

இந்தப் பிரச்னைகள் என் மனத்தில் போராடிக் கொண்டிருக்கிற போது தான், என் நண்பர்கள் என்னைப் பரிகாசஞ் செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது தெரிகிறதா என் ஆரம்பக் கதை.

வாஸ்தவம். நான் பாலிய மல்லவா? என் பாலிய மனைவியைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு இருப்பது சகஜந்தானே. அவளை, கலியாணப்படியில் பார்த்தது தான். அதுவும் கால் கண்ணும் அரைக் கண்ணும். அப்படிப் பார்க்கிறபோது கூட பக்கத்திலுள்ள பெண்கள், என்னைக் கேலி செய்ததற்குக் கணக்கு வழக்கே யில்லை. ஆனால் இப்பொழுது, என் மாமனுருடைய கடிதம் வந்த பிறகு, என்னுடைய தன் மதிப்பைக் குறைத்துக் கொண்டு, என் வாழ்க்கைக் கினியாளைப் பார்க்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக தீபாவளிக்குப் போவதா? அவளைப் பொறுத்த மட்டில், நான் எந்த உடை தரித்துக் கொண்டு போனாலும் அவளுக்குத் திருப்தியாகத் தானிருக்கும். ஆனால் எப்படிப் போவது?

'மாமனுர் கடிதத்தை நான் ஏன் பொருட் படுத்த வேண்டும்? வழக்கம் போல் என் கதர் வேஷத்துடன் நான் போனலென்ன? படியேறி வந்தவனை வேண்டா மென்று சொல்லி விடுவார்? போய்த்தான் பார்ப்போமே' என்று, என் மனைவியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல்-இதற்குத்தான் காதல் மூளை என்ற பெயரா?—என்னைத் தூண்டியது.

ஒரு கால், அவமரியாதையாகப் பேசி விட்டால் என்ன செய்வது என்ற சந்தேகம், பனி போல் அந்த ஆவலின் பேரில் மூடிக் கொண்டது.

இப்படியாக நான் தடுமாறிக் கொண்டிருக்கிறேன்; இச் சமயத்தில் மாகாண காங்கிரஸ் கமிட்டியிடமிருந்து ஒரு தாக்கீது வந்தது. தீபாவளி சமீபித்து வருவதால், அதிகமாகக் கதர் விற்பனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், தொண்டர்கள் தோளின் மீது கதர் போட்டுக் கொண்டு வீடு வீடாக விற்பனை செய்தல் நல மென்றும், இது விஷயத்தில், காரியதரிசி இந்த வருஷம் அதிக பிரயாசை எடுத்துக் கொள்வார் என்று எதிர் பார்ப்பதாகவும் அதில் காணப்பட்டிருந்தது.

தீபாவளியா? தேசமா? மாப்பிள்ளையா? காங்கிரஸ் காரியதரிசியா?

காரியதரிசி போன்ற பொறுப்புள்ள பதவிகளைச் சிலர் ஏற்றுக் கொண்டு விடுகிறார்கள். இதன் கௌரவத்தைத் தான் இவர்கள் கருதுகிறார்களே தவிர, இதன் பொறுப்பை அதிகமாகக் கவனிப்பதில்லை. ஒரு பொது ஸ்தாபனத்தில்தான் அதிகமான பொறுப்பு. மேடைகளின் மீதேறி பிரசங்கங்கள் செய்வதுடனே எதிர்க் கட்சியினரை மரியாதைக் குறைவாகத் தாக்குவதுடனே தங்கள் கடமை முடிந்து விடுகிறதென்று இவர்கள் கருதுவார்களானல் இதை விடத் தவறு வேறொன்றுமில்லை. ஆனால் இப்படி யெல்லாம் நான் இருக்கமுடியா தல்லவா? படித்தவன் என்ற பெயரை வைத்துக் கொண்டு அதிலும் எம். ஏ. பட்டதாரியாக இருந்து நல்ல தீபாவளி சமயத்தில், சிறந்த தொண்டு செய்யும் சந்தர்ப்பத்தை விட்டு, மாமியார் வீட்டு மாப்பிள்ளையாகப் போவதா? இந்த மாதிரி பிரச்னைகளுக்கிடையே நான் திண்டாடிக் கொண்டிருந்தேன். ஆனால்,

அசோகன் சாஸனங்கள்

—"மௌத்கல்யன்"

இந்தியாவில் முதன் முதலாக, அரசாங்க பலத்தின் துணைகொண்டு அஹிம்சா தர்மத்தைப் பரப்பியவன் அசோக மகாராஜன். இவன் ராஜ்ய சிங்காசனத்திலிருந்து கொண்டு, தனது செங்கோலின் பலத்தினால், தேசமெங்கணும் ஒழுக்கத்தையும் கடமையையும் போதித்தான். பிற

என் மனைவியின் சிரித்த முகம் மட்டும் என் உள்ளத்தில் தெளிவாக மூர்த்திகரித்துக் கொண்டிருந்தது.

மாமனாருக்கு நான் என்ன பதிலெழுதுவது? நான் கதர் உடையோடு வந்தால் என்னை ஏற்றுக்கொள்வாரா என்று முதலில் என் சரஸ்வதிக்கு—என் காதலியின் பெயர் ஸார் இது, என்ன இனிமையாக இருக்கிறது இந்தப் பெயரைச் சொன்ன மாத்திரத்தில்!—எழுதிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமா வென்று யோசித்தேன். ஆனால் என்னோடு நெருங்கிப் பழகாத முறையில் அவள் என் கடிதத்திற்குப் பதில் போடுவாளா? முதற் கடிதம் எழுதுவதென்றால் லேசான காரியமல்ல வென்பதை நான் படித்த ஆங்கில இலக்கியங்களிலிருந்து நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

யோசித்தேன்; யோசித்தேன். எனக்கு இந்த ஆங்கிலப் படிப்பு இருந்திரா விட்டால், இவ்வளவு யோசித்திருக்க மாட்டேன். இவ்வளவு சந்தேகங்களும் எனக்கு ஏற்பட்டிராது.

நாள் நெருங்கிவிட்டது. மாகாண காங்கிரஸ் காரியாலயத்திலிருந்து, நடந்திருக்கும் கதர்ப் பிரசாரத்தைப் பற்றி ஒவ்வொரு வாரமும் 'ரிபோர்ட்' அனுப்ப வேண்டுமென்று 'உத்திரவு' வந்தது. இது, என் தீபாவளி விஜயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது.

மாமனாருக்கு, அவருடைய நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு வர முடியாதென்று கண்டிப்பாகத் தெரிவித்து விட்டேன். தோள் மீது கதர் துணிகளைத் தூக்கிப் போட்டுக்கொண்டேன். கதர் தரித்துக் கொண்டாலே, படித்தவன் படியாதவன் என்ற வேற்றுமை எப்படியோ நம்மை யறியாமலே ஓடிப்போய் விடுகிறது. என் சகாக்களிற்சிலரை அழைத்துக்கொண்டேன். 'கதர்வாங்கலையோ, ஐயா, கதர் வாங்கலையோ' என்று பாட்டுப் பாடிக் கொண்டே சென்றோம். முதல் நாள் 69-ரூபாய்க்கு விற்பனையாயிற்று. எங்களையும் அறியாத ஒரு பெருமையும் சந்தோஷமும் எங்களுக்கு உண்டாயிற்று. ஏன் தெரியுமா? நாங்கள் கதர் விற்பனைக்குச் சென்றது, காந்தியடிகளின் பிறந்த நாளன்று. அதாவது அக்டோபர் மாதம் இரண்டாந்தேதி. இதனால் மேற்படி பெரியாருடைய ஆசீர்வாதம் எங்களுக்குப் பூரணமாக இருப்பதாக நாங்கள் உணர்ந்து கொண்டோம். இனி என் மாமனாருடைய கோபமோ, சாபமோ என்னை என்ன செய்ய முடியும்?

சகோதரர்களே! உங்களிலே எத்தனை பேர், என்னைப்போல் புது மாப்பிள்ளைகள்? உங்கள் அனைவருக்கும் மாமனார் வீட்டிலிருந்து அழைப்பு வரும். அப்பொழுது என்னைப் போல் போகாமலிருக்க வேண்டாம். ஆனால் கதர் தரித்துக் கொண்டு செல்லுங்கள் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்ளலாமல்லவா?

நாட்டின் மீது படையெடுத்து, பல்லாயிரம் உயிர்களை வதைப்பது தேசிய தருமத்திற்கு விரோதமானது என்பதை அநுஷ்டானத்தில் கொண்டு வந்த பெருமையும் இவனுடையதே.

அசோகன் கி. மு. 273ம் வருஷத்தில்—அதாவது இன்றைக்கு 1210 வருஷங்களுக்கு முன்னே—பாட்னு என்று தற்போது வழங்கப் படுகிற பாடலிபுரத்தில் பாரத தேசத்துச் சக்ரவர்த்தியாக முடி சூட்டப் பெற்றான். 37 வருஷ காலம் இவன் ஆண்டான். இவன், புத்த தருமத்தை, இந்தியாவில் மட்டுமல்ல, உலகமெங்கணும் பரவ ஏற்பாடு செய்தான். இதற்காக பல உத்தியோகஸ்தர்களையும், அரசாங்க பொக்கிஷத்திலிருந்து பணங்கொடுத்து நியமித்தான்.

அசோகனுடைய சாஸனங்களை, சிறிய பாறைச் சாஸனங்களென்றும், பெரிய பாறைச் சாஸனங்களென்றும், ஸ்தம்ப சாஸனங்களென்றும் மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள் சரித்திரக் காரர்கள். இவற்றில் முதலாவது சிறிய பாறைச் சாஸனங்களைத் தெரிந்து கொள்வோம்.

இந்தச் சாஸனங்களில் அசோகன் தன்னை, தேவப்பிரியனுன பிரியதர்சி மகாராஜன் என்றே அழைத்துக் கொள்கிறான் என்பது குறிப்பிடத் தக்கது.

சாஸனம் 1

(ரூபநாதத்திலுள்ள சாஸனத்தின் வாசகம்)

உழைப்பின் பயன்

தேவப்பிரியரான மகாராஜர் பின் வருமாறு தெரிவிக்கிறார்:—

இரண்டரை வருஷங்களுக்கு அதிகமாக, நான் அதிக உற்சாகத்துடன் உழைக்காமல் சாதாரண ஓர் உபாஸகனுகவே இருந்தேன். ஆனல் சென்ற ஒரு வருஷகாலமாகத்தான், புத்த சங்கத்தில் சேர்ந்து தீவிரமாக உழைக்க ஆரம்பித் திருக்கிறேன். இந்தக் காலத்திற்குள், ஜம்புத்வீபத்தில் உண்மையான தேவர்கள் என்று கருதப்பட்டவர்கள் எல்லாம் பொய் யென்று நிரூபிக்கப்பட்டு விட்டது. இது தான் உழைப்பின் பயன். இதனை ஒரு பெரிய மனிதன் மட்டும் அடைய முடியுமென்பது இல்லை. சாதாரண ஒரு மனிதன் கூட, அதிகமாக உழைக்க முற்பட்டால், அவன் மோட்ச சுகத்தை அடையலாம்.

இதற்காக, நான் இந்தக் கட்டளையைத் தயாரித்திருக்கிறேன்:—

'சிறியவர்களும் பெரியவர்களும் ஊக்கத்துடன் உழைப்பார்களாக'.

என்னுடைய அந்நியர்களும் இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய உழைப்பு நீண்டகாலம் நிலைத்திருப்பதாக!

இந்த (என்னுடைய) நோக்கம் வளர்ச்சியடையும். ஏன்? நன்றாக வளர்ச்சி யடையும்? குறைந்தது ஒன்றரைப் பங்காவது வளரும்.

இந்த நோக்கத்தை, தூரத்திலும் சமீபத்திலும் உள்ள பாறைகளில் எழுதவேண்டும். எங்கெங்கே கற்றூண்கள் இருக்கின்றனவோ அங்கங்கெல்லாம் இஃது எழுதப்படவேண்டும்.

இந்தச் சாஸனத்தின் வாசகத்தை, அப்படியே, உங்கள் அதிகாரம் செல்லுகிற இடங்களில் நீங்கள் அனுப்பவேண்டும்.

நான் யாத்திரை செய்துகொண்டிருக்கிறபோது, இந்தக் கட்டளை வெளியிடப் பட்டது. 256-வது தங்குமிடத்தில் (இது வெளியாயது).

குறிப்பு: இந்த உத்திரவு அசோகனுல் அவன் கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பியதாக இருக்க வேண்டியிருக்கிறது.

ஆக்கங் கெடுத்தவன் ஆசான்—ஐசுவரியம் கெடுத்தவன் ஐ. சி. எஸ்.

—ஸ்ரீ வத்ஸன்

ஸ்ரீ வத்ஸன், ஒரு பள்ளிக்கூட ஆசிரியர்போலிருக்கிறது. நிரம்ப அநுபவசாலி என்றும் தெரிகிறது. தமது தொழில் சமூகத்தின் நிலைமையைக் குறித்து வருந்தி விட்டு, பிறகு, பத்திரிகாசிரியர் கூட்டத்தைக் கண்டு 'உங்களுக்கென்ன ஐயா குறைவு' என்கிற மாதிரி சொல்கிறார். எல்லாம் இக்கரைக்கு அக்கரை பச்சைதான். பள்ளிக்கூட ஆசிரியர்கள் பகிரங்கமாக இடிபட்டுக் கொண்டிருக்கலாம். அதுவும் இவர் சொல்லித்தான் நமக்குத்தெரிகிறது. ஆனால் பத்திரிகாசிரியர்கள் அந்தரங்கமாக இடிபடுவதை, ஈசுவரா! நீதான் கண் திறந்து பார்க்க வேண்டும். வேண்டுமானால் இரண்டு பேரும் கொஞ்சம் 'தலைப்பாகை மாற்றி'க் கொள்ளலாமா? ஸ்ரீவத்ஸரே!

ஒரு காலத்தில் குருவென்றழைக்கப் பெற்று வந்தவரும், சமீப காலத்தில் நற்றமிழ் நடையில் ஆசான் என்றும், சாதாரணமான பேச்சு முறையில் வாத்தியார் என்றுமே அழைக்கப் பெற்றுவரும் ஒரு வகுப்பார் மீது, சமூகம் சதா கவனம் செலுத்தி வருவது சகஜமாய் இருக்கிறது. ஒவ்வொருவரும், அறியாப் பருவமும் அருமையாம் பருவமும் ஆகிய இளம் பிராயத்தே இஷ்டப்பட்டோ கஷ்டப் பட்டோ இவருடன் இருந்து வாழ வேண்டியது இயல்பாய் விட்டது. கல்வியின் சிறப்பும் படிப்பின் அவசியமும் விரிக்கப்பட வேண்டுவதில்லை. ஆகவே படிப்பென்றால் உபாத்தியாயரும் உடன் தோன்றுவர். அதிலும் கட்டாயப் படிப்பு என்றால் கட்டாயம் உபாத்தியாயர் உண்டென்பது கூறாமலே விளங்கும். எனவே உபாத்தியாயர் இல்லாமல் சமூகம் இருக்கப் போவதில்லை. ஆனால் சமூகம் தழைக்காவிட்டால் உபாத்தியாயர் பிழைக்க முடியாது என்பதை அவரும் உணர வேண்டும். இன்னும் சமூகத்தை உபாத்தியாயர் பாதிப்பதுபோல, சமூகம் உபாத்தியாயரைப் பாதிப்பது இயல்புதான். உபாத்திமைத் தொழில் பெறும் பொறுப்புக் கொண்டது; ஆகவே பெருமையும் பெற்றது.

நிற்க, கொஞ்ச காலமாக வாத்தியார் நிலை யெப்படி யிருக்கிறதென்பதை யோசிப்போம். ஊராலுக்கு ஒரு புறம் இடி; மக்களுக்கு இரு புறம் இடி; ஆனால் வாத்தியாருக்கு வாய்த்த புறமெல்லாம் இடி என்கிறார்கள். 'ஆக்கங் கெடுத்தவன் ஆசான்; ஐசுவரியம் கெடுத்தவன் ஐ. ஸி. எஸ்.' என்பது ஒருவாறு உண்மையாகவும் தெரிகிறது. இந்திய அரசாட்சியில் இவர் இருவருக்குமே பங்கும் பரிசும்.

பத்திரிகைகளை எடுத்துப் பிரித்தாலே போதும். சில சமயம் மேல் பக்கத்திலேயும் காணலாம். வழி கேட்டு, போலீஸ்காரனுக்காகக் கையை நீட்டிக் கொண்டிருக்கும் மோட்டார் ஓட்டியின் கையில் மறந்தவராய் ஒரு வாத்தியார் பிரம்பைப் பிரயோகித்துக் கொண்டிருப்பார். பத்திரிகையைப் பிரித்தாலோ பரிதாபம். பாவம், ஒடிந்து விழுகிறாப் போல் ஒரு உயர்ந்த உருவம், மூக்குக் கண்ணாடியை மூக்குக்கும் கண்ணுக்கும் இல்லாமல் நெற்றிக்கு மேல்

ஏற்றினதாய், கலைப்பாகையும் கொண்டு, கையில் பிரம்பேந்தியோ அல்லது ஒரு சிமிட்டா பொடி கொண்டோ நிற்பதும், எதிரில் சிலேட்டும் கையுமாய் அழுத வண்ணம் ஒரு சிறுவன் இருப்பதும் பார்க்கலாம். இன்னும் படிப்போமென்று தொடங்கி விட்டால் மானக்கேடு பகிரங்கம். ஞாபக மறதிக்குப் பேர்பெற்ற ஆசாமி வேண்டுமானாலும், பைத்தியக் காரத் தனத்திற்குப் பொறுப்பாளி வேண்டுமானாலும் யாரும் கேளாமல் உபயோகிக்கலாம் உபாத்தியாயர் பெயரை. பொதுவாய் ஹாஸ்யப் பகுதிகளே உபாத்தியாயர்களுக்கு உரிய இடம். 'வாசிப்பவர்கள் சிரிக்க வேண்டுமானால் விடு வாத்தியாரைப் பற்றி இரண்டு கப்ஸா' என்பது ஏற்பாடாகப் போயிற்று.

பத்திரிகாசிரியர் யாரையாவது இப்படிச் சொல்லி விட்டால்என்னவாகும்? இதழ்களெல்லாம் இடிமயமாகும். கதிரும் மலரும் கனல் பொறிகளாகி விடாதா? பள்ளிக்கூட ஆசிரியர்தான் ஏமாந்த பேர்வழி போலும். யாரும் சொல்லலாம்; எதுவும் எழுதலாம்; சமயா சமயமும் கிடையாது என்றெல்லாம் ஆய்விட்டது.

பழைய காலத்தில் இவர் நிலைமை எப்படி இருந்தது என்பதையும் இந்தச் சமயம் கவனிக்க வேண்டியது தான்.

கிராமாந்தரங்களில் இவருக்கிருந்த பெருமை யென்ன! செல்வாக்கென்ன!! வமிசவழி நடந்து வந்த வசதிகள் என்ன!!! எல்லாம் பறந்தோடி விட்டனவா? அரக்கன் ஒருவன் பூமிதேவியைக் கொண்டு ஒளித்து வைத்திருந்தது போல், ஆசிரியர்கள் பெருமையையும் கவர்ந்து சென்று விட்டானா? அப்படியானால் மீண்டும் ஒரு அவதார புருஷன் தேவை. வாத்தியார் சொன்னது சட்டம் என்பது போக வாத்தியார்களெல்லாம் மட்டம் என்பதல்லவா ஆயிற்று? இப்பெயரே ஒரு இளிச்ச வாய்ப் பட்டமாகக் காண்கிறது. திசை காட்டுங் கருவி யிழந்து திகில் கொண்ட மாலுமி போலும் விழிக்கிறார் வாத்தியார். கள்ள அரக்கன்தான் பிடிபடுவானா, கலங்கரை விளக்கம் காணப் படுமா என்பதும் தெரிய வேண்டும். இல்லையெனில் இவர் பெருமைகளும் இழந்தனவேயாகும்; இவர் கலமும் கவிழ்ந்தது போலாகும்.

எங்கள் கிராமத்து 'ஸார்' வெளியிலே கிளம்பி விட்டால் வெளியில் உள்ளவர்கள் உள்ளே ஓடுவர்; பெரியவர்கள் யாராவது தான் நின்று பார்ப்பார்கள். அவர்களையும் விடமாட்டார் நம்மள் ஸார். 'ஏண்டா, சுப்பா, உன் பேரப்பயல் சோமு இருக்கானே, சுத்தக் கழுதையாப் போனானே, நீ ஏதாவது விசாரிக்கிறதுண்டோ இல்லையோ? நேற்று சாயரக்ஷை ராமோதந்த சுலோகம் 20வரி எழுதிப் போட்டேன், பயல் 15வரிதான் இன்றைக்குச் சொன்னான். ராத்திரியிலும் காலையிலும் அவன் கூட இருந்து ஒழுங்காகப் படிக்கிறானா என்று கவனிக்கப்படாதா? குழந்தைகளை நல்ல மாதிரி கவனிக்கிறாப்போலிருக்கிறது! எங்கே, சீட்டாடப் புறப்பட்டாச்சா?'

சுப்பையரும்'அடே சோமு' என்று சொல்லிக்கொண்டே உள்ளே புறப்பட்டு விடுவார். என்ன ஜோர்! என்ன அதிகாரம்!

இன்றைக்குப் பார்த்தால் இது ஒரு கனவாய் இருக்கிறது.

அன்றைக்கு நமது ஆரம்பப் பாடசாலை ஆசிரியன் ஆதிவராகன் அவசரமாய்ப் போகிறான். அசுவதி அய்யர் மகன் ஆதிமூலம் வாயில் பகை

யிலேயை யடக்கியபடியே 'ஓய், வாத்தியாரே, இப்படி வாருங்காணும்; நேற்று அப்பா உம்மைக் கூட்டிக் கொண்டு வரச் சொன்னாரய்யா. உம்முடைய வீட்டில் சொல்லிவிட்டு வந்தேனே. யாரும் சொல்ல வில்லையா?' என்கிறான். இப்படி இருக்கிற சமயத்தில் அசுவதி அய்யரே வந்து விடுகிறார். 'என்ன ஐயா, உங்கள் பள்ளிக்கூடமும், படிப்பும். பள்ளிக்கூடச் சம்பளம் வெறுந் தண்டம். பள்ளிக்கூடத்திற்கு யார் யார் வந்தார்கள், வரவில்லை என்பதுகூடப் பார்க்கிறதில்லை போலிருக்கிறது. நம் பள் பயல் நாலு நாலு நாட்களாக வீட்டிலே இருக்கிறான். வந்துகூட்டிக் கொண்டு போவீராக்கும் என்று நானும்தான் நாலு நாட்களாகப் பார்க்கிறேன். கூப்பிட்டு விட்டால்தான் வருவீர் போலிருக்கிறது. இப்படியெல்லாம் இருந்தால் பள்ளிக்கூடம் எப்படி ஐயா உருப்படியாகும்?' என்று ஒரு போடு போட்டார். ஆதிவராகன் அப்படியே அசந்து போனான். அரைமணி நேரம் நின்ற இடம்விட்டு நிமிரவில்லை. அசுவதி அய்யராகப் பார்த்து, 'இரண்டு நாள் நீர் போகிறபோது கூட்டிக் கொண்டு போனால் பிறகு சரியாய்ப்போகும்' என்று சொல்லுகிறார். 'அப்பாடா' என்று மெதுவாய்க் கிளம்புகிறார் வாத்தியாரய்யா.

நகர்ப்புறம் போய்ப் பார்ப்போமென்றால், அங்கும் பெரிய அல்லோலம். கால் சட்டை, கைச்சட்டை மாட்டி, கண்ணாடி முன்னின்று கழுத்துக் குட்டையும் பூட்டி, தலையில் தொப்பியும் மாட்டி, கண்ணுக்கு கண்ணாடியும்தான் போட்டுப் பார்க்கிறார் வாத்தியார். அப்பவும் ஆசாமி விட்டபாடில்லை. கூடுமானவரை சிறந்த முறைகளைக் கையாடிச் சொல்லிக் கொடுக்கிறார். கண்டிப்பு தன்னை இவற்றிற் கிடமில்லாமல் பாடங்களை ரஸப்படுத்துகிறார். சிறுவர்களுடன் சிரித்து விளையாடி சகோதரப் பான்மையைக் கொண்டாடுகிறார். சிறுவர் கைக்கும் கண்ணுக்கும் செவிக்கும் போதுமான வேலைகள் சுளுவான முறையில் கொடுத்து இயன்றவரை இதவாய் இருந்தும் வருகிறார்: என்றாலும் இடி விட்டபாடில்லை.

ஒவ்வொருவரும் தம் குழந்தை கோமானும் சீமானுமாக வேண்டும் என்று எண்ணிவரும் இக்காலத்தில், குழந்தைகளைப்பற்றிப் பெற்றோரிடம் குறை சொன்னால் பொறுப்பார்களா? 'போதுமே, படித்தவர்கள் கிழிக்கிறது பார்த்தால் தெரியவில்லையா? ஏதோ, குழந்தை பள்ளிக்கூடம் போய் வந்தால் போதும். வயசும் யோகமும் வந்தால் மாடுமேய்க்கிறவன்கூட மன்னாதி மன்னனாய் விடமாட்டானா? குழந்தை கவனமில்லாமல்தான் இருக்கும். அதையெல்லாம் தட்டு மெட்டாய்க் கொண்டு வரத்தானே வாத்தியார் என்று வைத்திருக்கிறது. இதையெல்லாம்விட்டு, நம்மிடமே வந்து அவன் அசடு, சுத்த சோம்பேறி, ஒன்றும் தெரியவில்லை என்கிறீரே! ஏதோ ஒழுங்காய் வகுப்புவிட்டு வகுப்புக்குப் போய்க் கொண்டிருந்தால் போதும்' என்று காமு அம்மாமி கிளம்பிவிட்டால் சாமா வய்யர், 'அவனுக்கு பிரைவேட்டியூஷனுக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்கிறீரா' என்று ஒரு போடு போடுவார். அப்புறம் வாத்தியார் ஏன் அங்கே நிற்கிறார்?

பையனையே பார்த்து வாத்தியார் 'ஏண்டா தம்பி, இவ்வளவு மோசமாய் இருந்தால் எப்படி நீ மேல் வகுப்புக்குத் தகுதியாவாய்? தேர்ச்சி எப்படி அடைய முடியும்?' என்று

கேட்டாலோ மோசம் வந்தது. 'என் ஸார், படித்தவர்கள் எத்தனையோ பேர், ஏன் வீணே இப்படிப்பில் பணத்தையும் பலத்தையும் காலத்தை யும் செலவு செய்தோம் என்று பரதவிக்கிறார்களாமே. அனேகர் வாங்கின சர்டிபிகேட்டுகளை யெல்லாம் வாபஸ் செய்துவிட்டார்களாமே. இதில் ஏதேனும் வாஸ்தவம் உண்டா? இதைச் சிறிது விளக்குங்கள்' என்று ஒரு கேள்வியைப் போட்டு விடுவான் போல் இருக்கிறது. இப்படிக் கழியும் நாட்களில் இன்ஸ்பெக்டர் ஐயாவும் வந்துவிடுவார். 'என்னங் காணும், போதுமான அளவு பாடங்கள் நடத்தப்படவில்லை. நடத்திய தாகக் காட்டப் பெற்ற விஷயங்களும் புரிந்ததாகப் புலப்படவில்லை. உம்மைப் பொறுப்புள்ளவராகச் சொல்வதெப்படி' என்று அப்படியும் இப்படியுமாக ஆட்டிப் போடுவார்.

உண்மை என்னதான் என்று உன்னுமிடத்து தற்சமயம் உபாத்தியாயர் வேறு பட்டவராய் விட்டார் என்பது தான். அன்றைய ஆசான் அல்ல இவர். ஏவியபடி நிற்கும் ஓர் ஏவலாள்; கூலிக்கு வேலை செய்யும் ஒரு ஆசாமி. அன்று இவர் உத்தமனும் ஒரு எஜமானன் ஆஞ்ஞையை நடத்தி வந்தார். இன்று மாற்றான் கை 'மாலி' ஆகி விட்டார். செடிகள் நன்கு தழைத்து ஓங்கி வளரவில்லை. தோட்டத்தின் அழகு குன்றி வருகிறது. அனேக பாகங்களில் செடிகள் பட்டுவிழுகின்றன. இதைக் கண்டு கோபித்தால் 'நான் கூலிக்காரன் தானே' என்று ஒதுங்குகிறார். அத்துடன் மட்டுமன்றி அருகிலழைத்து விசாரித்தால், 'கூலிக்காரனுக்குவேலையின் தன்மையைப்பற்றிக் கவலை யென்ன? இட்ட வேலையைச் செவ்வனே செய்து முடிப்பதுதானே. கொடுத்த வேலை கொலையாயிருப்பதற்குக்கூலிக்காரன் என்செய்வான்?' என்று ஒருவாறு சொல்லி வருவது என்றைக்கும் காப்பாற்றுமா? கொலைச் செய்தி வெளியாக, விசாரிக்க அதிகாரி களும் வந்து விட்டால், முதற் கேள்வியும் முக்கிய அபராதமும் யாருக்கு என்பதை யோசிக்க வேண்டாமா? கூலிவேலை செய்த கொலைஞன் கதற வேண்டித் தான் வரும். 'கடவுள் பக்தி, தேசாபிமானம், பெரியார் பெருமை, சுயபாஷாபிமானம், உண்மையின் உயர்வு, சமாதானத்தின் அவசியம் போன்ற ஒப்பற்ற செடிகளைக் களையெனப்பிடுங்கி எருக்குங் குறுக்கும் விதைத்து எருவு மிட்டுவரும் இவர் செய்தது கூலி வேலை தான். எனினும் குறைக்குப் பாத்திர மற்றதா வென்பது ஒரு கேள்வி. சில சமயத்தில் பிரயோஜனத்தையே நாடித்தானு தோட்டத்தில் செடிகளை வளர்ப்பது என்று கேட்டும் விடுகிறார். முடிந்த வரையில் எருக்கு குறுக்கால் ஏற்படக் கூடிய பிரயோஜனங்களையும் எடுத்துக் கூற ஆரம்பிக்கிறார். எல்லா வற்றிற்கும் ஏற்றவிதமாய் பதில் கூறிக் குற்றத்தை உரைரவைத்து 'என்ன சொல்லுகிறீர்கள்?' என்றால், 'எய்தவனிருக்க அம்பை ஏன் நோவது' என்றும், 'எறிந்தவனிருக்கக் கல்லைக் கடிவதா' என்றும் கேட்பார். அறிவு பெற்றவர், அறிவு வளர்ச்சிக்காகப் பாடு படுபவர், தம்மை அம்புக்கும் கல்லுக்கும் ஒப்பாகக் கூறுவது தப்புவதற்கானதே யொழிய பிறர் ஒப்புவதற்கான தல்ல.

தவறிய நிலையையும் பெருமையையும் மறுபடியும் பெற்று மாண்புறுவதற்கு நல்ல வேளையாய் ஒரு சமயம் கிடைக்கிறாப் போல் இருக்கிறது. பிழைகளுக்குப் பிராயச் சித்தங்களும் தயாராகின்றன. இது சமயம் தப்பவிடாமற் கெட்டியாய்ப் பற்றிக் கொள்வதே

நலம்; ஆசிரியர் பிற்கால வாழ்வை சீர் செய்ய முடியும்.

முழுவதும் சேவகா விருத்தியிலே இறங்கிய இவரை, இவ்விருத்தியிலிருந்தே விருத்திக்குக் கொண்டு வர கலங்கரை விளக்கம் கண் முன் தோன்றி விட்டது. கண்ணைத் திறந்து கவனத்துடன் முயன்றால் கரை காண்பேனென்றிருந்த இவர் கலம் கரையைச் சேரும். இழந்த பெருமைகளை மீண்டும் பெற ஒத்தாசைக்காக அவதார புருஷனும் நம்மிடைத் தோன்றியிருக்கிறார். உண்மைக் களைகளை உருவி எறிய ஊக்கம் வேண்டும். செடிகளின் தன்மைகளை நன்கு ஆராய வேண்டும். வேண்டுவன மட்டும் எருவும் தண்ணீரும் பாய்ச்ச வேண்டும். தோட்டம் சிங்காரவனமாக மறுபடியும் திகழ்வது திண்ணம்.

ஜன நாயகத்தின் நன்மையை நாடி வேண்டுவன செய்வோம் என்று வெளிப்போந்த எஜமானனிடமும் அவதார புருஷனிடமும் சங்கோசமின்றி உண்மை நிலையையும் நியாயமாய் வேண்டுவனவற்றையும் அடிக்கடி கலந்து அவர் உரைகளுக்கு அனுவளவும் பிறழாது செவி மடுத்து தன் திறன் கொண்டவளவு செம்மையாய் நடந்து வருதலே நலன். அவதார புருஷன் அசரீரியாய் இருந்து அடிக்கடி விடும் நற்போதனைகள் பெரும் பேறளிக்கும். எஜமானனும் ஆசாரியார், ஆசிரியர் அஞ்ஞானத்தையே அகற்றும் அறவுரைகள் தருவர். அவர்கள் சொல்மொழி கேட்டுச் செய்வழி சென்று தொழிலை நடத்துவதே உண்மையான ஆசான் நிலையை அளிக்கும்; இழந்த பெருமைகள் எய்தப் பெறும்.

ஆசிரியராம் நம்மை நாடி வரும் சிறார்கள் நன்மையை நாடுகின்றனர்; அறிவு வளர்ச்சியில் ஆசைப்படுகின்றனர்; ஆண்டவன் கிருபைக்கு ஆளாகப் பிரியப்படுகின்றனர்; என்றும் நிரந்தரமான வாழ்வைப் பெற விரும்புகின்றனர்; அடிமை வாழ்வை வெறுக்கின்றனர். இப்படியெல்லாம் இருக்க நமது நன்மையை மட்டும் நாடுவதோடு அன்மையில் வந்த அச்சிறாருக்கு அறிவுக்கு அழிவும், யகர மற்ற விஷயதானமும், அடிமையின் ஆழமும் காண்பிப்போமானால் அநேக நாள் செல்லாது நமக்குக் கீழே போக.

தெய்வம், தேசம், ஜன நாயகம் இவற்றை விட்டது கல்வியல்ல. அத்தகைய கல்வியைப் போதிப்பவரும் ஆசிரியரல்லர். அவருக்குப் பெருமையும் கிடையாது. அவரிடமுள்ள திறம் பட்ட போதனை முறைகளும் சேர்த்து செய்யப் பெறினும் சாப்பிடப் பொருத்தமல்ல; இன்மையே பயப்பன. பேய்ச்சுரைக்காய்க் கறி எவ்வளவு தயிர் பால் நெய்யுடன் சேர்த்துச் செய்யப் பெறினும் சாப்பிடத் தகுதியுடையதல்ல. ஆகவே விழித்தெழுந்து அசரீரியை வாழ்த்தி ஆசாரியாரைத் தொழுது அவர்கள் ஆசி பெறுங்கள். ஆண்டவனும் கிருபை செய்வான். விழியிலார்க்கேது விளக்கு என்பதற்கிலக்காக வேண்டாம். இழந்த செல்வங்கள் இம்மியும் விடாமல் கிடைத்து விடும்.

அரசியல் முறைகளும் சமஷ்டி அரசியலும்

—கே. வி. ராமசுப்ரமணியம்
B. A., B. L.,

பலர் அடங்கிய ஒரு குடும்பத்துக்குத் தலைவர் இல்லா விட்டால் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டுக் குடும்ப விவகாரங்களை நடத்துவது கஷ்டமாகி விடும். இது போலவே ஒரு தேசத்திலுள்ள ஜனங்களுக்கும் ஒரு தலைவர் இருக்க வேண்டியது அவசியம். இந்தத் தலைவரைத் தான் நாம் அரசர் என்று கூறுகிறோம். சாதாரணமாக ஒருவர் மட்டும் அரசர் என்ற பெயரால் தேசத்தின் தலைவராயிருந்திருக்கிறார்கள். சிற்சில சமயங்களில் சில தேசங்களில் பலர் அரசராயிருந்திருக்கிறார்கள் என்றும் நாம் சரித்திர மூலம் அறிகிறோம். இந்தியாவில் 2000 வருஷத்துக்கு முன் நவநந்தர்கள் என்று ஒன்பது அரசர்கள் இருந்தார்கள் என்று நாம் அறிகிறோம்.

இவ்விதம் அரசர் அல்லது அரசர்கள் ஏற்பட்டு அரசியல் சம்பந்தமான விஷயங்களை நிர்வகிப்பதில் 'குடியரசு' 'முடியரசு' என்று இரண்டு முறைகள் உண்டு. பொது ஜனங்களின் ஆதரவின் பேரில் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் அல்லது சிலர் வசம் நிர்வாகத்தை ஒப்படைத்து வருவது 'குடியரசு' அல்லது குடியாட்சியாகும். இதை ஜனநாயக ஆட்சி என்றும் சொல்வதுண்டு. 'முடியரசு' என்று சொன்னால், குடிகள் அல்லது பிரஜைகளினால் தேர்ந்தெடுக்கப் படாமல், 'அரசர்' என்ற பெயருடன் ஒரு தலைவர் வம்சபரம்பரை பாத்தியமாக முடி சூட்டித் தேசத்தின் தலைமை ஸ்தானத்தை வகிப்பதைக் குறிக்கும்.

இந்திய சரித்திரம், கிரேக்கர்கள் சரித்திரம், ரோமர்கள் சரித்திரம் இவைகளிலிருந்து, பண்டைக்காலத்திலும் சிற்சில இடங்களில் குடியரசு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன என்று நாம் அறிகிறோமாயினும், சாதாரணமாகப் பெரும் பான்மையான தேசங்களில் முடியரசு ஆட்சிமுறையே நடந்து வந்திருக்கிறது. இது இயல்பானது. இப்பொழுது நாகரிகத்தின் சின்னங்களாகக் கருதப்படும் துப்பாக்கிகள், பீரங்கிகள், முதலிய யுத்த தளவாடங்கள் இல்லாத பண்டைக் காலத்தில் புஜபலமும், ஆண்மையும், வீரமும், வில், வாள் முதலிய ஆயுதங்களில் தேர்ச்சியுமே பிரதானமாகக் கருதப்பட்டன. இவைகளிற் சிறந்தவரையே மற்ற எல்லா ஜனங்களும் தங்களுடைய தலைவராகப் பாவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டு நடந்து வந்து சுற்றிலுமுள்ள பிரதேசங்களைத் தங்கள் புஜபலத்தினால் ஜெயித்து, அதற்குத் தங்கள் தலைவரை அரசராக நியமித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்தார்கள். இவ்விதம் ஒவ்வொரு தேசமும் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு அரசரின் ஆளுகைக்குள் வந்தது. இவ்வரசர்கள் தங்கள் புஜபலத்தினால் இந்தப் பிரதேசத்தைத் தங்கள் ஆளுகைக் குட்படுத்திக் கொண்டதால், ராஜ்யத்தைத் தங்கள் சொந்த சொத்தாகக் கருதி வந்தார்கள். இதனால்தான், புது அரசர் இறந்த பின் அவருடைய வாரிசுகள்,

ஷ்டிராஜ்யத்துக்கு உரிமை பாராட்டி வந்தார்கள். இந்த உரிமையை மற்ற ஜனங்களும் ஒப்புக்கொண்டதின் மூலம் ஒரு ராஜ்யத்துக்கு வம்ச பரம்பரையாகப் பாத்தியம் கொண்டாடுவது என்ற வழக்கம் ஏற்பட்டுவிட்டது.

கி. பி. பதினேழு நூற்றுண்டுகள் முடியும் வரை முடியரசு ஆட்சி முறையே சரியான ஆட்சி முறை என்றும், அரசர்கள் பிரத்தியேகமான கௌரவத்திற்கும் மரியாதைக்கும் பாத்திரமானவர்கள் என்றும் ஜனங்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆகையால் ராஜ குடும்பத்தாருக்குப் பிரத்தியேகமான கௌரவமும் மரியாதையும் அளிக்கப்பட்டன. சிற் சில சமயங்களில் ஏற்பட்ட கொடுங்கோல் அரசாட்சியையும் ஜனங்கள் சகித்துக் கொண்டிருந்தார்கள். இந்தியாவில் இந்தியர்கள் ஆதிமுதலிலே ராஜபக்தியுள்ளவர்கள். பிரஜைகளை ரக்ஷிப்பதே அரசர்களின் கடமை யாதலாலும், சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்ற முத்தொழிலையுடைய கடவுளை பிர்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற மூன்று ரூபமாக இந்தியர்கள் உபாசித்து வருவதில், காக்கும் கடவுளாகிய மகா விஷ்ணுவின் அம்சமாகவே அரசர்கள் கருதப்பட்டார்கள். இதுபோலவே இங்கிலாந்திலும் பதினேழாம் நூற்றுண்டின் கடைசியில் அரசுலுசெலுத்திய ஸ்டுவர்ட் (Stuart) அரசர்கள் தங்களுக்கு தெய்வீக அம்சமுண்டு என்று பாத்தியம் பாராட்டினார்கள்.

பதினெட்டாம் நூற்றுண்டு ஆரம்பம் முதல், முடியரசு ஆட்சி முறையின் மகத்துவம் குறைய ஆரம்பித்தது. உலகில் எல்லா மனிதர்களும் சமமான உரிமைகள் உள்ளவர்கள் என்றும் ஒருவர் உயர்வு, ஒருவர் தாழ்வு என்ற வித்தியாசம் கிடையாது என்றும் கருதப்பட்டு, சுதந்திரம், சமத்வம், சகோதரத்வம் (Liberty, Equality, Fraternity) என்ற கொள்கைகள் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பிரகடனம் செய்யப்பட்டன. இதன் பலனுக, இப்பொழுது அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்கள் (United States of America) இங்கிலீஷ் சாம்ராஜ்யத்தை விட்டு விலகி, குடியரசு முறையை ஸ்தாபித்தது. பிரான்சு தேசத்து அரசன் லூயி என்பவர் ஜனங்களால் தூக்கிலிடப்பட்டு (Guillotined) குடியரசு முறை ஸ்தாபிக்கப்பட்டது. 1914ம் வருஷத்தில் ஆரம்பம் ஆன ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப்பின் பல தேசங்களில் முடியாட்சி வீழ்ச்சியடைந்து குடியாட்சி ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதம் அரசியல் முறை மாறுவதற்கு முன் சில தேசங்களில் பெருத்த கலகம் நடந்து, ரத்த ஆறுகள் பெருகி ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். ஆனல் சில தேசங்களில் யாதொரு கலகமு மில்லாமலேயே முடியாட்சிக்குப் பதிலாகக் குடியாட்சி ஸ்தாபனம் ஆகியிருக்கிறது.

தற்காலம் முடியாட்சி சில தேசங்களில் மட்டுமதான் நடைபெற்று வருகிறது. இந்த முடியாட்சியும் அநேகமாகப் பெயருக்குமட்டும் முடியாட்சியே யொழிய வாஸ்தவத்தில் ஜனநாயக ஆட்சியே. உதாரணமாக, இங்கிலாந்தில் (அதாவது இங்கிலாந்து ஸ்காட்லாண்ட், வட ஐர்லாண்டு இவைகளில்) நடந்துவரும் ராஜரீகம் முடியாட்சி என்று சொல்லப்படுகிறது. இங்கிலாந்தின் அரசுரிமை ஒரு குடும்பத்தில் ஜேஷ்ட வாரிசுக்கிரம பாத்தியமாக இறங்கிவருகிறது. சமீபத்தில் ஆறும் ஜார்ஜ் மன்னருக்கு முடி சூட்டப்பட்டது. இங்கிலீஷ் • சாம்ராஜ்யத்தின் சகல அதிகாரங்களும்

காமன்ஸ் சபை, லார்ட்ஸ் சபை, மன்னர் ஆகிய மூவர்களிடமும் வந்தடைகின்றன. ஒரு சட்டம் ஏற்படுத்த வேண்டுமானால் மேற்படி மூன்று பேர்களாலும் அது அங்கீகரிக்கப் படவேண்டும். இவ்விதம் இங்கிலாந்து மன்னர் அவர்களுக்கும் ராஜரீக சம்பந்தமாக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் இங்கிலாந்து அரசாட்சி, பெயருக்கு மட்டும் முடியாட்சியே தவிர வாஸ்தவத்தில் ஜனநாயக ஆட்சியே. எல்லா அதிகாரங்களும் 'காபினெட்' (Cabinet) என்ற மந்திரி சபையாரே செலுத்துகின்றனர். இந்த மந்திரிகள் காமன்ஸ் சபையின் ஆதரவை யுள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்த மந்திரிகளின் அபிப்பிராயப்படிதான் இங்கிலாந்து மன்னர் நடக்க வேண்டும். மந்திரிகளின் அபிப்பிராயத்துக்கு விரோதமாக மன்னர் நடக்கவே முடியாது. ராஜரீக சம்பந்தமான விஷயங்களில் மட்டும் அல்ல, மன்னர் அவர்களின் குடும்ப விஷயங்கள் சிலவற்றிலும் மந்திரிகள் அபிப்பிராயத்துக்கு அனுசரணையாகத்தான் மன்னர் நடக்க வேண்டும் என்று சமீபத்தில் முடி துறந்த எட்டாம் எட்வர்ட் மன்னர் அவர்களின் ஜீவிய சரித்திரத்தின் மூலம் நாம் அறிகிறோம். இதே ஜன நாயக ஆட்சிதான் 'டொமினியன்கள்' என்று சொல்லப்படும் குடியேற்றநாடுகளிலும் அமுலிலிருக்கிறது. மன்னர் அவர்களின் பிரதிநிதியாக கவர்னர் ஜெனரல் ஒருவர், ஒவ்வொரு டொமினியனுக்கும் நியமிக்கப் பட்டு, இங்கிலாந்தில் மன்னர் அவர்களுக்கு எந்தெந்த அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றனவோ அதே மாதிரி அதிகாரங்கள் இந்த கவர்னர் ஜெனரலுக்கும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அந்தந்த டொமினியனில் உள்ள சட்ட சபைகளின் ஆதரவையுடைய மந்திரிகளே சர்வாதிகாரமும் செலுத்துகிறார்கள். இந்த டொமினியன்கள் இங்கிலாந்துக்குக் கீழ்ப்படிந்தவைகளல்ல. இங்கிலாந்துக்குச் சரிசமமான உரிமைகள் இவைகளுக்கும் உண்டு. இந்த டொமினியன்களில் நடந்து வரும் அரசியல் முறையைப்பற்றிப் பின் வியாசங்களில் ஆராய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்.

இந்த ஜன நாயக ஆட்சி முறையைத்தான் இந்தியாவிலும் பர்மாவிலும் நாளடைவில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்துடன் 1935 வருஷத்தில் இந்தியா ஆக்ட், பர்மா ஆக்ட் என்ற ஆக்ட்கள் இங்கிலீஷ் பார்லிமெண்ட் சபையாரால் வெளியிடப்பட்டு 1-4-1937 வருஷ முதல் அமுலுக்கு வந்திருக்கிறது. இந்த ஆக்டுகள் மூலம் இந்தியாவை விட்டுப்பர்மா பிரிக்கப்பட்டு, இந்தியாவின் மாகாணங்களைப் போலவே பர்மாவுக்கும் மாகாண சுய ஆட்சி முறை அளிக்கப்பட்டிருக்கிறது. சில பாதுகாப்புகளும் சில பந்தகங்களும் ஆக்டிலேயே ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்தியாவில் மாகாண சுய ஆட்சி முறையுடன், எல்லா மாகாணங்களிலும் அமுலுக்கு வரக்கூடியதாக சமஷ்டி ஆட்சி என்ற மத்திய சர்க்கார் ஆட்சியும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த அரசியல் முறையின் விவரங்களையும், சமஷ்டி ஆட்சி முறையின் கொள்கைகளையும் இத்தகைய ஆட்சி அமுலிலிருக்கும், கானடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலிய தேசங்களில் இது எவ்விதம் கையாளப்பட்டு வருகிறது என்பதையும் அடுத்த வியாசங்களில் ஆராய்வோம்.

என்ன வேடிக்கை!



இந்த வாராவதியைப் பார்த்தீர்களா? இதை எந்த இஞ்சீனிரும் கட்டவில்லை. இயற்கை தேவியின் செயலிது. ஒரு பெரிய பாறையைக் குடைந்து கொண்டு ஆறு கீழே போகிறது. மேற்பாகம் வாராவதி போல் அமைந்திருக்கிறது. இது அமெரிக்காவிலுள்ளது.



இவை யெல்லாம் என்ன
வென்று நினைக்கிறீர்கள்?
ஏதோ ஒரு கோவிலின்
புராதனச் சின்னங்கள் என்று
நினைக்கிறீர்களா?
இல்லை; இல்லை.
வெறும் கற்பாறைகள்தான்.
காற்றிலும்
மழையிலும் அடிபட்டு, இந்த
உருவத்தை
அடைந்திருக்கின்றன.
இவை அமெரிக்காவிலுள்ள
வர்ஜீனியாவில்
இருக்கின்றன.

லண்டன் போலீஸார்
செய்யும்
அற்புதமான
காட்சி!

இந்தச்சிங்கம் கயிற்றின்
மேலேறிச் செல்ல பழக்கப்
படுத்தப்பட்டிருக்கிறது.
இந்தச் சிங்கத்தின்
நிறை **250** பவுண்ட்.
இரண்டு மாதந்தான்,
இதற்குப்
பயிற்சியளிக்கப்பட்டது.

வேகமான காலமல்லவா இது ? இந்த மின்சார யந்திரம் தானகவே பல் தேய்த்து விடுகிறது. அதற்குள் நாம் முக க்ஷவரமும் செய்து கொண்டு விடலாம். ஒரே காலத்தில் இரண்டு வேலே !



நாகரிகம் முற்றுகிறது ! அமெரிக்காவில் பசுக்களுக்கு காற்சட்டை முதலியன அணிகிருர்கள், ஈக்கள் உபத்திரவத்தினின்று தடுக்கும் பொருட்டு.

சாதாரணமாக பீட் கான்ஸ்டேபில்கள், சிவப்பு, பச்சை விளக்குகளைத் தனியாக வல்லவோ காட்ட வேண்டியிருக்கிறது. அப்படிக் கில்லாமல், இப்பொழுது, சான்ஸ்டேபில்களின் கட்டையிலேயே மின்சார விளக்குகளைச் சேர்த்துத் தைத்து விடுகிறார்கள். விளக்குகளைத் திருப்புவதற்குப் பதில் தானே திரும்ப வேண்டும் இந்தக் கான்ஸ்டேபில்.

தானே சீவிக்கொள்கிற பென்சில்! பென்சிலுக்கு மேல் முனையிலிருப்பதைச் சிறிது திருகினால் பென்சில் சீவப்படுகிறது.

கைகேயி கேட்ட வரங்கள் இரண்டில் முன்னெது? பின்னெது?

—கு. ப.

இராமாயணத்தில் கைகேயி கேட்ட வரங்கள் இரண்டும் இராமாயண காவியத்துக்கு மூலமாகும். இராமாயணத்தில் முக்கிய பாகம் இராவண சம்மாரம். எவ்வாறெனில் வால்மீகியானவர் தான் சொல்லவந்த அந்த இராமாயண காவியத்தை இருபத்து நாலாயிரம் ஸ்லோகங்களைக் கொண்டு முடிக்க வேணுமென்று கருதியதற்குச் சரியான காரணமான காயத்திரி மந்திரத்தின் தாத்பரியம், அஞ்ஞான நிவிர்த்தியாதலால் அந்த உண்மையை இராவண சம்மாரம் நிரூபித்துக் காட்டுகிறது. இரா + வண்ணன் = இராவணனல்லவா? இரா என்றால் இருள்; வண்ணன் என்றால் மேனியுடையவன்; இங்கு வண்ணம் என்னும் மொழி இடைக்குறையால் வணம் என்றாகி அந்த வணத்தை யுடையவன் வணன் என்றாயிற்று. அவனுக்குப் பத்துத் தலைகளை வால்மீகி சிருஷ்டிக்கின்றார். அந்தப் பத்துத் தலைகளை ஓவியக் கலைஞர் வட்டமாகவோ நீளமாகவோ உயரமாகவோ அல்லது அவர்களுக்குத் தோன்றுகின்ற வேறு எவ்வித வடிவமாகவோ அமைத்துக் கொள்ளலாம். காவியக் கலைஞனுக்கு அந்தக் கவலையில்லை. ஏனென்றால் காவியக் கலைஞன் கருத்தை யுணர்வானே யல்லாது ஓவியக்கலைஞனைப்போல் உருவெளித்தோற்றத்தை ஒருபொழுதுங் கருதான். பத்துத் தலைகளோடுகூடிய ஒரு பிறப்பு அபூர்வமே யொழியப் பூர்வமல்ல. அதாவது இயற்கையிலில்லாது செயற்கையில் தோன்றியதாகக் கொள்ள வேண்டும்.

ஆனால் வால்மீகியார் இயற்கையாக அத்தலைகள் பத்தும் இருந்தன என்று மெய்ப்பிக்கின்றார். ஆகையால் அதை நாம் ஒத்துக் கொள்வதுதான் அழகு. இயற்கையில் இல்லையென்று கொண்ட நாமே இயற்கையில் உண்டு என்று ஒத்துக்கொள்வது சாத்தியமாகுமா என்று ஒரு சிலர் கேட்கலாம். இயற்கையை உண்மையென்று தீர்மானிக்கின்றவர்களனைவரும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். உள் + மை = உண்மை; அதாவது உள்ளே யிருப்பது. இதனால் வெளியே தோன்றுவதல்லவென்பது நன்கு புலப்படுகின்றது. வெளியே தோன்றுவதனைத்தும் வெளிப்பகட்டென்ற தீர்மானமுடையார் வால்மீகி முதலியோராதலின் அவர் உள்ளிருக்கும் இருப்பைத்தான் கூறுகின்றார். 'வடநூல் வல்லவர்கள் சொல்லும் வாசகப்பொருள் சேராம-விடராகிற் பொருளாம் வண்ணம் இலக்கணை யுரையாற் கொள்வர்' என்னும் கைவல்யக் கூற்றின்படி தமிழ் நூலை ஆராய்கின்ற நாம் ஊரடங்கிற்று என்னும் இலக்கண உதாரணத்தைக் கொண்டு வெளியே தோன்றுகின்ற ஊர் என்னும் பதத்துக்குப் பொருள் இடமாவதாலும் அந்த இடம் அடங்காமல் ஆடிக் கொண்டிருப்பதில்லையாதலால் அந்த இடத்துக்குச் சம்பந்தப்பட்ட அதாவது அந்த இடத்திலிருக்கின்ற மக்களே அடங்குகிறார்களென்று வெளிப்படையாய் விளங்குவதாலும் ஊரடங்கவில்லையென்று கண்டு கொள்ளுந் தன்மையை அநுசரித்து இங்கு வெளியிலே பத்துத் தலைப் பூச்சிகள்

கூட இல்லையென்னும் உண்மையால் அந்த வெளித்தூலத்துக்குச் சம்பந்த மான அதாவது ஆதாரமான சூக்ஷ்ம சரீரத்தை ஆராய்வோமாயின் மேற் காட்டியவாறு உள்ளிருக்கும் அஞ் ஞான மென்னும் இராவணத்தையு டைய ஜீவனாகிய இராவணனுக்கு முக லாகத் தோன்றியவை உள்ளம், மனசு, புத்தி, சித்தம், அகங்கா ரம் என்னும் அந்தக் கரணங்கள் ஐந்தும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் பத்துத் தலைகளாகக் கொள் ளப் பட்டன என்னும் உண்மை விளங்காமற் போகாது. முதலுக்குத் தலை யென்று பெயரல்லவா? அத ஞல் தலைகள் பத்து என்ருர். நமது அருளாளரான தாயுமானப் பெரியா ருங் கூட 'ஆங்காரமான குலவேட வெம் பேய் பாழ்த்த ஆணவத்தினும் வலிதுகாண், அறிவினை மயக்கி விடு நடுவறிய வொட்டாதி யாதொன்று தொடினுமதுவாய்த், தாங்காது மொழிபேசு மரிஹரப் பிரஹ்மாதி தம்மொடுசமான மென்னும், தடை யற்ற தேரிலஞ் சுருவாணி போலவே தன்னிலசையாது நிற்கும், ஈங்காரெ னக்கு நிகரென்னப்ரதாபித் திராவண காரமாகி, இதய வெளி யெங்கணுந் தன்னரசு நாடுசெய்திருக்குமிதனெடெ நேரமும், வாங்கா விலாவடிமை போராட முடியுமோ மௌனுபதேச குருவே, மந்த்ர குருவே யோக தந்த்ர குருவே மூலன் மரபில் வருமௌன குருவே' என்னும் மௌன குருவணக் கப்பாசுரத்தில் ஆங்கார சொரூபமான ஜீவனை 'இராவணுகாரமாகி' என்று பொருந்தும்படி அமைத்துச் சென்ற னர். இராவணன் ஜானகியைச் சிறை வைத்தா ‹னென்னுங் காரணத்தால் அவன் கொல்லப்படுகின்ருன். இங்கு ஜீவனாகிய இராவணன் அசோகம் அல் லது சோக மற்ற இடம் அதாவது பேத மற்ற சுழுப்தியில் [உறக்கத் தில்] ஆநந்தம் என்னும் ஜானகியை மறைத்து வைக்கின்ருன். இந்த ஆநந்த மென்னும் ஜானகி, பிறப்பிக் கின்றவன் என்னும் அர்த்தத்திற்கேது வான ஜனகன் என்பவன் யாகத்திற் காகப் பூமியை உழும்போது தோன்றி யவளாம். என்ன அழகு பாருங்கள்! உழும்போது மண்ணிலிருந்து எந்த உலகத்திலாவது எந்தப் பெண்ணாவது தோன்றுவாளா? தோன்றிக் கொண் டிருக்கின்ருளா? தோன்றியிருந்தா ளா? ஒருக்காலு மில்லை. ஆநந்த சொரூபத்தைப் பிறப்பிக்கின்ற ஜன கனைச் சுத்த மனம் என்று கொள்ள வேண்டும். இந்தச் சுத்த மனத்தில் விசாரிக்கின்ற விசாரணைக்குக் கல்வி அல்லது உழவு என்று பெயர். அத னிடமாகத் தோன்றிய ஆநந்தமே ஜானகி. அந்த ஜானகியைப் பிரித்தெடு த்துக் கொண்டு போன இராவணனைச் சம்மாரம் பண்ணினலொழிய ஜானகி யாகிய ஆநந்தத்தை எப்படி மீண்டும் பெற முடியும்? ஜானகியை விட்டு இராமரும் அதாவது ஆத்மாவும் இரா மரைச் சார்ந்த யாவரும்அதாவது சற் குணங்களும் பிரிய வேண்டு மென்ருல் அதற்கு உபாயம் வேண்டுமல்லவா? அந்த உபாயந்தான் கைகேயியின் இரண்டு வரங்கள்.

கைகேயி, வரங்களிரண்டையும் கேட்டுக் கொண்டபோது தந்திரமாக வால்மீகியும் கம்பனும் முறை பிறழ வைக்கின்றனர். அந்தப் பிறழ்ச்சி யால் முதலாவது வரம் பரதனுக்குப் பட்டஞ் சூட்டுவதென்றும் இரண்டா வது வரம் இராமனைப் பதினன்கு வருஷம் காட்டுக் கனுப்புவதென்றும், பிற்பட்டோரிற் பலரும் உறுதியாகக் கொண்டு புத்தகங்களிலும் பத்திரிகை களிலும் வியாசங்களிலும் எழுதியும்

நாடகங்களிலும் கால க்ஷேபங்களிலும் பிரசங்கங்களிலும் வியாக்கியானங்களிலும் பேசியும் வருகின்றனர். அது தப்பு. முதலாவது வரம் இராமனைப் பதினான்கு வருஷம் காட்டுக் கனுப்புவதென்றும், இரண்டாவது வரம் பரதனுக்குப் பட்டஞ் சூட்டுவதென்றும் வைத்துக்கொள்ள வேண்டும். வால்மீகி இராமாயணத்தின்படி கைகேயி மந்தரையின் ஆலோசனையை ஒப்புக்கொண்ட சமயம் 'அடீ மந்தரே! இந்த நிமிஷத்தில் இராமனைக் காட்டிற்குத் துரத்திப் பரதனுக்குப் பட்டங் கட்டுகிறேன்' என்று இராமனைக் காட்டுக் கனுப்புவதை முதலாகக் கொண்டிருந்தாளென்றும் அப்பால் மந்தரை 'இராமனைப் பதினான்கு வருஷங்கள் காட்டிற் கனுப்ப வேண்டுமென்றும் பரதனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டுமென்றும் சொல்' என்று இராமனைக் காட்டுக் கனுப்புவதையே முதலாகக் கொண்டிருந்தாளென்றும் நன்கு விளங்குகின்றது.

கம்பர், மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் 'இருவரத்தினி லொன்றினாலரசு கொண்டிராமன், பெருவனத்திடை யேழிருபருவங்கள் பெயர்ந்து, திரிதரச் செய்தி யொன்றினாற் செழுநில மெல்லாம், ஒருவழி படு முன்மகற் குபாயமீதென்றாள்' என்னுமிடத்தில் ஒரு வரம் பரத பட்டாபிஷேகத்திற் கெனவும் ஒரு வரம் இராம வனவாசத்திற் கெனவும் பொதுப்படக் கூறுகின்றார். இன்னும் அவர் கைகேசி சூழ்வினைப் படலத்தில் 'ஏயவரங்களிரண்டி னொன்றினாலென்,சேயரசாள்வது சீதை கேள்வ னொன்றால், போய்வன மாள்வதெனப் புகன்று நின்றாள், தீயவையாவினுஞ் சிறந்த தீயாள்' என்று முக்கியவாறே கூறுகின்றார். இந்த இரண்டிடங்களிலும் முன்னது பின்னதாகப் பிறழுவைத்தனரே யன்றி முதலாவதிது இரண்டாவதிதுவென அறுதி யிட்டாரில்லை.

மகா தந்திர சாலியான மந்தரை கைகேயியின் மனதை வெகு சாமர்த்தியமாக மாற்றியது எதற்காக? தான் எடுத்துக் கொண்ட காரியத்தை நிறைவேற்றும் பொருட்டல்லவா? அதற்குரிய யோசனையைச் சொல்லும் போது சாமர்த்தியத்தை உபயோகியாமல் விட்டு விடுவாளா? அதுவும் இரண்டு வரங்களில் எது முன்னிருக்க வேண்டுமென்பதைக் குறித்து ஆலோசியாது போய்விட்டாள் என்னும் குற்றத்தைச் சுமந்து கொள்ளக் கூடியவளாயிருப்பாளா? இருக்கவே மாட்டாள். அப்படியிருந்தால் இராமாயணத்தின் கருத்தே அருத்தமற்றதாய்ப் போய்விடும். கைகேயி முன்னுக்குப் பின்னாகச் சொல்லி விட்டாளென்று கம்பர் கருத்தைத் திரித்துக் கொண்டு பொருள் கொள்ளுமிடத்தும் மந்தரையின் ஆலோசனைக் காவது இராமாயணக் கருத்துக்காவது பங்கம் சொல்வதற்கில்லை.

இனி இரண்டு வரங்களும் மேற்காட்டிய வாறு முறையாக அமைந்திருப்பதனாலுண்டாகும் நன்மையும் அவ்வாறில்லாது முறையிழந்திருப்பதனாலுண்டாகும் தீமையும் யாவை? என ஆராய்வோம்.

பரதனுக்குப் பட்டஞ் சூட்டுவதென்னவோ முதலாவதெழுந்த தோற்றமென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதற்காக இராமன் காட்டுக்குப் போகவேண்டுமென்பது இரண்டாவதாக எழுந்தது. இந்த வகையில் முதலாவது பரதனுக்குப் பட்டஞ் சூட்டுவதும் இரண்டாவது இராமனைக் காட்டுக் கனுப்புவதுமாயிருக்கலாம். இராமன் காட்டுக்குப் போனால்தான் பரதனுக்குப் பட்டம்

சூட்டலாம். கைகேயி தசரதருக்குப் பட்ட ஸ்திரீயும் இட்டஸ்திரீயும் அதாவது ஆசை நாயகியுமாயிருந்தாளென்று மந்தரையின் சில தந்திர வார்த்தைகளினின்றும் காணக் கிடைக்கின்றது. கோசலையே மூத்தவளும் பட்ட மகிஷியுமாயிருந்தாளென்பதை யாரும் ஆக்ஷேபிக்க முடியாது. கைகேயி இரண்டாவது தாரமாக வாழ்க்கைப் பட்ட காரணத்தால் தசரதர் கோசலையை விட அவளை அதிகமாக நேசித்திருக்கலாம். அதனால் அவள் ஆசை நாயகியாகவும் பட்டஸ்திரீயாகவும் இருக்கக் கூடும். அதைவிட அவள் பட்ட ஸ்திரீயானதற்கு மற்றொரு முக்கிய காரணமும் நமக்குத் தோன்றுகின்றது. இதிகாசங்களெனத் திகழும் காவியங்களிரண்டில் இராமாயணம் ஒன்றும் பாரதம் ஒன்றுமாம். அந்த பாரதத்தில் சந்தனு மகாராஜனுக்கு மச்சகந்தி இரண்டாம் தாரமாக வாழ்க்கைப் படுமுன் மூத்த பட்டத் தேவியாயிருந்த கங்கா தேவியின் அருந்தவப் புத்திர சிகாமணியான காங்கேயனென்னும் பீஷ்மனுக்கும் அவன் சந்ததிக்கும் பட்டம் செல்லாதிருக்குமாறு பீஷ்மன் பட்டத்தையும் மணத்தையும் தானகவே துறக்கும்படி செய்து அப்பால் மணந்து கொண்டாற்போல், கோசலைக்குப் புத்திரனில்லாதிருந்த காரணத்தால் கேகய தேசத்தரசனுடைய மகளை விவாகம் செய்து கொள்ள நாடிய தசரதர், கேகய தேசத்தரசனின் விருப்பப்படி கைகேயியைப்பட்டஸ்திரீயாக ஏற்றுக்கொண்டாரென்று சொல்வது மிகவும் பொருத்தமுடையதாம். இதனல் இருவரும் பட்டத்துக் குரியவராகின்றனர். இருவர் வயிற்றில் பிறந்த இராமனும் பரதனும் முறையே பட்டத்துக் குரியவராகின்றனர். இராமனே காங்கேயனைப்போல் பீஷ்மனாகி விடவில்லை. இராமன் அப்படித் துறந்துவிடவில்லை. இராமன் அப்படித் துறந்துவிடக் கூடிய தூயோனல்லவோ? என்றால் தூயோன்தான், துறந்து விடக் கூடியவன்தான். ஆனல் மச்சகந்தியின் விவாகத்தின்போது பீஷ்மன் இருந்ததுபோல் கைகேயியின் விவாகத்தின்போது இராமன் இருக்கவுமில்லை; பிறக்கவுமில்லை. கைகேயியின் புத்திரனை பரதனுக்குப் பட்டங் கட்டுவதற்கு கைகேயியின்பால் தசரதருக்கு இருந்த பேரபிமானங் காரணமாயிருந்ததெனக் கொண்டாலும் கைகேயியே ஒப்புக்கொள்ளுகின்ற நீதி யொன்று குறுக்கிட்டதால் மூத்த குமாரனை இராமனுக்குப்பட்டாபிஷேகம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தசரதர் செய்து விட்டார். அன்றியும் வெகு காலம் குழந்தைகளே யில்லாதிருந்து முதலில் இராமன் பிறந்தபடியால் அவனிடத்தில் தசரதருக்கிருந்த புத்திரவாத்ஸல்யமும் அதற்குக்காரணமாயிருக்கலாம். பரதன் பட்டஸ்திரீயாக வந்த கைகேயியின் புத்திரனையிருந்ததால் பட்டத்துக் குரியவனென்றாலும் இராமனுக்குப் பட்டமில்லை யென்று போனல்தான் பரதனுக்குப் பட்டத்தில் பாத்தியம் கிடைக்கும். பீஷ்மனைப்போல் இராமன் தானகவே பாத்தியத்திலிருந்து விலகிக் கொள்ளாதிருக்கும்போது பரதனுக்குப்பட்டம் என்று நினைத்தாலும் பேசினலும் எப்படி ஞாயமாகும்? இராமாயணத்தில் பரதனுக்குப் பட்டமாக வேண்டியதற்குரிய உரிமையை ஏற்கனவே கேகயராஜன் உண்டு பண்ணிக் கொள்ளத்தவறி விட்டதை யறிந்தே பிற்பாடு நடந்த பாரதத்தில் மச்சகந்தியின் தந்தை வெகு ஜாக்கிரதையாகக் காங்கேயனைப் பீஷ்மனாக்கினன். கோசலைக்குக் குழந்தை

பிறக்குமென்று யார்தான் தீர்மானிக்க முடியும்? இராமன் பிறந்த பின்பு தான் பரதன் பிறந்தான்.

பரதன் பிறந்த உடனே மந்தரை நடந்தகாரியங்களை நினைத்தாள். பரதன் பட்ட ஸ்திரீயின்வயிற்றிற் பிறந்தாலும் இராமனிருக்கும் வரையில் பட்டத்துக்குரியவனல்லன் என்று நன்றாகவறிந்திருந்தாள். அப்பொழுது முதற் கொண்டே பரதனுக்குப் பட்டஞ் சூட்டுவது பற்றியும் கைகேயிக்குத் தசரதர் கொடுப்பதாக வாக்களித்திருந்த இரண்டு வரங்களைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தாள். இராமனை எப்படியாவது பட்டாபிஷேகம் செய்து கொள்ள விடாமல் தடுத்து விட வேண்டியதற்குத் தான் மந்தரையின் சூழ்ச்சி அவசியமாயிற்று. கைகேயியின் கபடமற்ற மனதைக்கலைப்பதற்குப் பரதன் பட்டத்துக்குரியவனென்பதைக் கூனி முதலில் ஸ்தாபித்து விட்டது உண்மைதான். இது வெறும் ஆசை முதலியவற்றால் எழுந்த யோசனை. அப்பால் வசிஷ்டாதிகளனைவரும் நகர மாந்தர்களும் தந்தையாகிய தசரதரும் இராமனும் நாளைக்குப் பட்டாபிஷேகமென உறுதி கொண்டு ஆவலோடு அந்த நல்ல வேளையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பரதன் பட்டத்துக்குரியவனென்பது வாஸ்தவமாயிருந்தாலும் தேவாதியர்களாலேயாவது மாற்றி விட முடியுமா? முடியாதென்பது திண்ணம். அதனாலேதான் இராமனைக் காட்டுக்கனுப்பி விட வேண்டுமென்று கூனி தீர்மானித்துக் கொண்டாள். தசரதர் ஒப்புக் கொள்ள மாட்டாரென்று அவளுக்குத் தெரியும். முதலில் கைகேயியே ஒப்புக்கொள்ள ஆயத்தமாயில்லை. ஆகையால் அவளை ஒப்புக்கொள்ளச் செய்து தசரதரை வரங்களால் கட்டுப்படுத்தி விடலாமென்பதே கூனியின் கருத்து.

இராமன் பதினான்கு வருஷங்கள் வரை வனத்துக்குப் போயிருக்க வேண்டும். ஏன்? அப்பொழுதுதான் பரதனுக்குப் பட்டம் நிலைக்கும்; அதாவது அநுபவ பாத்தியமாகும். பாரதத்தில் பஞ்சவர்களைப் பதினான்காவது வருஷம் வரையில் வனத்துக்குப் போயிருக்கும்படி துரியோதனன் கூறியது அநுபவ பாத்தியத்தை ஊர்ஜிதப்படுத்தி விடுவதற்காகத்தான். பாண்டவர்கள் சூதாடி நாடு நகரங்களைத் தோற்றுத் தாங்களும் அடிமைகளாய்ப் போயிருந்தார்கள். அவர்களைக் காட்டுக்கனுப்புவதில் யாதொரு சிரமமுமில்லை. இராமன் யாரோடு சூதாடி நாடு நகரங்களைத்தோற்றான்? ஆயினும் குற்றமற்ற சற்குண சொரூபனை இராமனைக் காட்டுக்கனுப்புவதற்குக் காரணங்களில்லாமலில்லை. இராமன் ஏற்கனவே வைராக்கிய சீலனாயிருந்து வசிஷ்டருடைய போதனையால் ஞானாநுபவச் செல்வனாக மிளிர்கின்ற சந்தியில் இராஜ்யபாரத்தை அவன் தலையிற் சுமத்திவிட வேண்டுமென்று தசரதர் தீர்மானித்திருந்தார். ஒவ்வொரு குடும்பத்திலும் மூத்த குமாரன் குடும்ப நன்மைக்கான தவம் முதலிய தெய்வ காரியங்களிலீடுபடுவதும் அவனுக் கிளையவன் குடும்ப நிர்வாகம் செய்துவருவதும் சகஜமே. 'மூத்தது மோழை, இளையது காளை' என்னும் பழமொழி அதனை வலியுறுத்துகின்றது. மேலும் சற்குண சம்பன்னனான இராமன் தெய்வ காரியங்களுக்குப் பொருத்த முடையவன். குடும்ப நன்மைக்காக அவனைப் பதினான்கு வருஷம் வரை தவஞ்செய்யும் பொருட்டுக் காட்டுக்கனுப்புவதாகிய முதல் வரத்தைக் கைகேயி கேட்டுக் கொண்டால் தசரதருக்கு

பிறரைத் துன்புறுத்தாமல், எவன் தானே துன்பத்தை அநுபவிக்கிறானோ அவனுக்கு உலகம் தலை வணங்கும்.

—ஓர் அறிஞர்

ஃ ஃ ஃ

எல்லாரிடத்திலும் நம்பிக்கை கொள்வதை விட்டு, எல்லாரையும் சந்தேகிப்பது நம்மிடத்திலுள்ள குற்றத்தையே காட்டுகிறது.

—ரெவரெண்ட் ஹேரன்

ஃ ஃ ஃ

உழைப்பின் பயனைவிட, உழைப்பு மதுரமாயிருக்கிறது; வெற்றியைவிட போராட்டமே இனிமையாயிருக்கிறது.

—ஓர் அறிஞர்

ஃ ஃ ஃ

நற்காரியங்களின் மூலமாகக்கிடைக்கும் சன்மானமானது, பேரீச்சம்பழத்தைப்போல, பிற்காலத்திலேயே பழமாகக் கிடைக்கும்.

—டால்முட்

ஃ ஃ ஃ

துக்கமும் பாவமும் நிறைந்த உலகத்தினிடையே போராடும் ஒழுக்கத்தின் விருப்பத்தை உணர்ந்தவன்,

---

மறு இடமில்லாமல் போய் விடுகிறது. ஆனால் இராமன் மேல் வைத்திருந்த அபிமான மிகுதியால் அந்த வரத்தைக் கொடுத்துக் கொலைத்தபின் பட்டம் சூட்டிக்கொள்ளவேண்டியவன் பரதனாயிருந்தாலும் சூதாகப் பரதனுக்குப் பட்டம்சூட்டக்கருதிக் கேட்கப்பட்ட வரமென்று தசரதர் வெகு சுலபமாயறிந்துகொண்டு பரதனுக்குப் பட்டமில்லாமல் செய்துவிடலாமல்லவா? அப்படியாகாதிருக்கத்தான் பரதனுக்குப் பட்டம் சூட்டுவது இரண்டாவது வரமாயிற்று. இவ்வாறு இரண்டு வரங்களையும் ஏற்கனவே கொடுக்க உடன்பட்டபடி கொடுத்துத் தீரவேண்டிய சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்ட தசரதருக்கு ஒன்றும் பேசநாவெழாமல் போய்விட்டது ஆச்சரியமல்ல. இப்படி வரங்கள் முறையாகக் கேட்கப்பட்டிருந்தால்தான் இராமாயணத்துக்குப் பெருமை யுண்டாகின்றது. அவ்வாறின்றிப் பலரும் எழுதியும் பேசியும் வருகின்ற பிரகாரம் முறை பிறழ்ந்திருந்தால் கைகேயிக்கே சமாதானம் ஏற்பட்டிருக்க மாட்டாது. அப்பால் தசரதருக்கு எப்படி சமாதான முண்டாகும்? கைகேயி வரங் கேட்கத் துணியாத போது இராமாயணத்துக்கே இடமில்லாமல் போயிருந்திருக்கும். இதனால் மந்தரையின் ஆலோசனைப்படி இராமனைக் காட்டுக்கனுப்புவது முதல் வரமும், பரதனுக்குப் பட்டம் சூட்டுவது இரண்டாவது வரமுமாயிற்று.

மிகவும் பலசாலியாகிறன். அவனுக்கு எப்படியாவது, அமைதியும், நன்மையும் உண்டாகும். மலைமீதேறிச் செல்கிறவன், மலையுச்சியில் சாந்தியான ஓர் இடம் அகப்படுமென்ற நம்பிக்கையோடுதான் செல்கிறன்.

—ஹக்ஸ்லி

ஃ ஃ ஃ

ஒருவன் பெற்ற அநுபவத்தை வேருெருவனுக்கு மாற்ற முடியாதது, வாழ்க்கையின் துக்ககரமான அமிசங்களுள் ஒன்று. பிறர் அநுபவிக்கும் துன்பத்தினல் எவனும் பாடங் கற்றுக் கொள்வதில்லை. அவனவனே துன்பம் அநுபவிக்க வேண்டும். அவனவனே தன் சுமையைச் சுமக்க வேண்டும்.

—ஜி. எச். லூயிஸ்

ஃ ஃ ஃ

'உன் வாழ் நாளிலே நீ என்ன செய்தாய்?' என்றுதான் உலகத்தார் உன்னைப் பார்த்துக் கேட்பார்கள். 'உன் பெற்ருேர்கள் யார்?' என்று கேட்க மாட்டார்கள். சவக்குழியின் மீது மூடப் பட்டிருக்கும் பட்டுத் துணியை, அது பட்டுப் பூச்சியினின்று உண்டானது என்பதற்காக எவரும் அதை வணங்குவதில்லை.

—ஷேக் ஸாதி

ஃ ஃ ஃ

மனே சக்தி யுள்ளவனிடத்தில் இருக்கிற அச்சம் நிதான புத்தியாகவும், துக்கம் பிறர்க்கிரங்கும் சுபாவமாகவும் மாறிவிடுகின்றன. ஒழுக்கக் கல்வியில்லாவிட்டால் முன்னது கோழைத்தனமாகவும், பின்னது சோர்வாகவும்பரிணமமாகும். எனவே, ஒவ்வொரு மனிதனுடைய கல்விநிதி அவன் வசத்திலேயே இருக்கிறது.

—சிட்னி ஸ்மித்

உலகம் பெரியதோ, சிறியதோ அதைப்பற்றி மனித சமூகத்திற்கு ஆக வேண்டிய தென்ன? துன்பஞ் சகித்தலுக்கும் அன்புக்கும் இடங் கொடுக்கிறவரையில் அது பெரியதுதான். உலகத்தின் அழகுக்கு வற்ருத ஊற்றுக்களமா யிருப்பன துன்பஞ் சகித்தலும் அன்புமேயாம். கஷ்டமநுபவிப்பது என்பது எவ்வளவு தெய்விகமானது? ஆனல் மானிடர் அதை எவ்வளவு தவருக உணர்ந்து கொண்டிருக்கின்றனர்! இந்தத் துன்ப மநுபவித்தல்தான், நம்மிடத்திலுள்ள எல்லா நற் குணங்களையும் பிரகாசிக்கச் செய்கிறது. உண்மையான வாழ்க்கையை நடத்தும்படி செய்கிறது. நம்மிடத்தில் இரக்கம், வீரம் முதலிய நற்குணங்களை உண்டாக்குகிறது.

—அனடோல் பிரான்ஸ்

ஃ ஃ ஃ

பெரிய காரியங்களைச் சாதிப்பதற்குத் தன்னம்பிக்கை அவசியம்.

—ஜான்ஸன்

ஃ ஃ ஃ

நாம் தினந்தோறும் ஒருவனைப் பார்த்துப் பழகிக் கொண்டிருந்தால் அவனுடைய பெருமை நமக்குத் தெரிவதில்லை. மற்றச் சாதாரண மனிதர்களின் நிலைமையிலேதான் அவனையும் வைத்துப் பார்க்கிருேம். அவனுடைய பெருமைகள், புதுமையிழந்து நிற்கின்றன.

—வாஷிங்க்டன் இர்விங்

ஃ ஃ ஃ

நீ சாகும் போது என்ன கொண்டு போகிருய் உன்னிரு கைகளிலும்? நீ கொடுத்தவற்றை யெல்லாம் கொண்டு போகிருய்.

—ஹப்பார்ட்

மாரியாயி எங்கே?

—"சனத் குமாரன்"

இந்தக் கதை எழுதியுள்ள அன்பர் கொஞ்சம் பழைய வாசனை யுள்ளவர் போல் தெரிகிறது. சிறு கதைகள் எழுதுவதில் கை தேர்ந்த பலர் இப்பொழுது தமிழ் நாட்டிலே தோன்றி யிருக்கிறார்கள். இவர்கள், சிறு கதை எழுதுவதை ஒரு கலையாகவுங் கொண்டு விட்டார்கள். இந்த நிலையில், 'என்னைப்போன்ற பழைய பசலிகளுக்கு இடங் கிடைக்குமா?' வென்று 'சனத் குமாரன்' சந்தேகப்படுகிறார். ஆனால் பழமையும் புதுமையாக ஒரு காலத்தில் மாறலாமல்லவா? இந்தக் கதையில் வரும் பெயர்கள் யாவும் கற்பனை என்று 'சனத்குமாரன்' கவனப்படுத்துகிறார். அது தெரிந்தது தானே.

I

காண்டவராய முதலியார் என்னமோ நல்லவர்தான். அவருக்கென்ன குறைவு? சொத்திலேயா, சுதந்திரத்திலேயா, தொந்தியிலேயா? அவர் வசித்த குழப்பலூர் கிராமத்தில் அவர் ஒரு பெரிய மிட்டாதார் மாதிரிதான் இருந்தார். மிட்டாதார் என்ற முறையில், கவர்ன்மெண்டுக்கு இவர் எந்தவிதமான கிஸ்தியும் செலுத்தவில்லையானாலும், இவருடைய தொந்தியையும் தலையையும் பார்த்து, ஜனங்கள் இவருக்கு 'மகாராசன்' 'மிட்டாதார்' என்கிற பட்டங்களைக் கபடமின்றிக் கொடுத்து விட்டார்கள். முதலியார்வாளும் மதிப்புப்போகாமல் நடந்து கொண்டு வந்தார். இவருக்கு வருகிற கடிதங்கள்கூட 'கனம் முதலியாரவர்கள் சமுகத்திற்கு' என்றுதான் வந்து கொண்டிருந்தன. இவர் எந்த அமிசத்தில் கனமுள்ளவர் என்பது, கடிதங்களுக்கோ, கடிதம் எழுதும் யாசக சிகாமணிகளுக்கோ என்ன தெரியும்! ஒருகால், இவருக்குத் தபால்களைப் பக்தி வினயத்துடன் இரண்டு கைகளாலும் சேர்த்துக் கொடுக்கிற 'போஸ்ட்மேன் குடுமியா பிள்ளை'க்குத் தெரியுமோ என்னவோ?

முதலியாருக்குத் தரிசு நிலங்கள் ஏராளமாக உண்டு. அவைகளில் அங்குமிங்கும், நானாற் செடிகள் மாதிரி கும்பல் கும்பலாகச் சில பயிர்கள் முளைத்திருக்கும். இதே மாதிரிதான், இவருடைய பருத்த தலையிலும் சில மயிர்க்கூட்டங்கள் தீவு தீவாக இருந்தன. எப்பொழுதோ சிறு பிள்ளையில் இவர் தலையில் கொள்ளிக் கட்டை விழுந்து இந்த மாதிரி ஆகி விட்டதாம். இவருடைய தலை எவ்வளவுக்கெவ்வளவு கனமோ அவ்வளவுக்கவ்வளவு அதிலுள்ள வஸ்து லேசாயிருந்தது. ஏன்? எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்தார் முதலியார் என்று கூசாமல் சொல்லலாமல்லவா?

முதலியார் ஐந்தே காலரைக்காலடி உயரம்—இவரை ஒருவரும் சர்வே செய்யவில்லை. மார்பின் அகலம் $52\frac{1}{2}$ இஞ்சு என்று, இவருக்குச் சட்டை தைத்துக் கொடுத்துத் தடுமாறி நிற்கிற காத்தவராயப் பிள்ளை கூறினான். நெற்றிக்குக் கீழேயும், மூக்குக்கு இரண்டு பக்கங்களிலும் இரண்டு புளியங் கொட்டைகள் இருந்தன. ஓ! இவைதான் கண்கள்! அந்தக் கண்களிலே பிரகாசமாவது மண்ணாவது? இவருக்குப் பிறக்கிற பிள்ளைக்குப் பிரகாசம் என்று பெயர் வைத்தால்தான் உண்டு. மூக்கோ, நுனியிலே வளைந்து இடையிலே ஒரு கணவாய் மாதிரி அமைந்திருந்தது. நெற்றியின் அகலம் இரண்டு விரற்கடை பிரமாணந்தான்.

அதிலே முக்கால் அங்குல விஸ்தீரணமுள்ள சந்தனப்பொட்டு. காதிலே சிவப்புக் கல் கடுக்கன்; இடுப்பிலே சாவிக்கொத்துடன் சேர்ந்த ஜெர்மன் வெள்ளிச் சங்கிலி. தொப்புளின் கீழே வேஷ்டி கட்டினால் தான் அது இடுப்பிலே நிற்கும் முதலியாருக்கு. இடுப்பின் மற்றொரு புறத்திலே, மூக்குப்பொடிக்கலர் கட்டிடச் சவுக்கம். மூக்குப் பொடி துடைப்பதற்காகத்தான். இந்த உலகத்திலே எதையும் திரணமாக மதிக்கத் தயார் முதலியார்; போலீஸ் கான்ஸ்டேபிலேயும் மூக்குப் பொடியையும் தவிர.

சாதாரணமாக முதலியார் வெளியே புறப்பட்டால், இரண்டு மூன்று பேர், பல்லை இளித்துக் கொண்டு, இரண்டடி பின்புறமாகவே உடம்பை நெளித்து நெளித்துக் கொடுத்துக் கொண்டே வருவர். முதலியார், வெள்ளிப் பூண் போட்ட தடியை டக் டக் என்று தரையில் ஓசை கேட்கும்படியாக அடித்துக் கொண்டு போவார். இடை இடையே கொஞ்சம் கனைத்தும் கொடுப்பார். பின்னடி வருகிற பரிவாரங்கள் முகஸ்துதியாக ஏதேனும் உளறிவைத்தால் 'ஹா, ஹா' என்று என்ஜெய் இல்லாமல் ஓடுகிற மோட்டார் வண்டியைப் போல் சப்தமிட்டுக் கொண்டு சிரிப்பார். அப்பொழுது இவர் வாயிலே இருக்கிற அஷ்டோத்திரத்திற்குப் போடக்கூடிய அத்தனை பற்களும் தரிசனம் கொடுக்கும். இவருக்குப் பல் வரிசையாக இராது. பல்லுக்கு மேல் பல் குஸ்தி போட்டுக் கொண்டு தான் இருக்கும். இதனால் இவர் பேசுகிறபோது, எதிரிலே இருக்கிறவர்களுக்கு உச்சிஷ்ட அபிஷேகம் நடக்காமலிரா்து. எத்தனை தரம் அவர்கள் முகத்தைத் துடைத்துக் கொண்டாலும், முதலியாருக்கு ஜாடை தெரியாது. அவர் என்ன செய்வார் பாவம்! அவர் மண்டைக்குள்ளே இருக்கிற வஸ்து மிக இலேசுதானே!

முதலியாருக்கு வயது முப்பத்தெட்டுத்தானாகிறது. ஒரு தாரம், ஒரு வாரம் இவரிடமிருந்துவிட்டுப் பரலோகயாத்திரை போய் விட்டாள். அந்தத் துக்கம் மாற முதலியாருக்கு அநேக வருஷங்கள் பிடித்தது. இப்பொழுது கொஞ்சம் ஆசை. சிறிய பெண்ணொருத்தியைக் கலியாணம் செய்துகொண்டு, சில நாட்களுக் காவது சுகம் அநுபவிக்க வேண்டுமென்பதை, தமது நண்பர்களுக்கு ஜாடை மாடையாகச் சொல்வார். அவர்களும், ஏதாவது உபாயஞ்செய்ய வேண்டுமென்று சொல்லி, இவரிடமிருந்து எங்கெந்த விதமாகப் பணத்தைப் பிடுங்கலாம் என்று தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

II

'அடே சுப்பா! வருகிற சிநேகிவியை ஏன் காலாலே உதைத்துத்தள்ளுகிறாய்? காலம் இருக்கிற பாட்டிலே, எப்படியாவது இரண்டு காசு வராதா என்று படித்தவர்களெல்லாம் திண்டாடிக்கொண்டிருக்கிறார்களே! நீயென்னமோ இவ்வளவு பிகுவு பண்ணிக் கொள்கிறாயே?'

'இருக்கலாம் சாமி. நான் ஏழை. ஆனால் என் ஒரு குழந்தையை இந்தப் படுகுழியிலே தள்ள நான் தயாராயில்லை'.

'என்னடா படுகுழி யென்கிறாய்? முதலியார், உன்ஜாதியைவிட உயர்ந்த ஜாதி; உன்னை விட பணக்காரர்.'

'அதற்காக என் மரியாதையையோ மானத்தையோ நான் விற்பதா?'

'மானமாவது? அது எங்கேயடா இருக்கிறது? ஏதோ, சொல்கிறபடி நடந்தால் க்ஷேமப் படுகிறாய். இல்லா

விட்டால்—? பெரியவர்கள் விரோதம் உதவாது.'

'என்ன செய்யப் போகிறார்கள்.? பணத்தின் உதவியினால் கொஞ்சம் மிரட்டிப்பார்ப்பார்கள். அவ்வளவு தானே. இதற்கெல்லாம் பயப்படுகிறவன் நானல்ல' என்றான் சுப்பன் சிறிது விறைப்பாக.

'அடே! உனக்கு என்ன கொழுப்பு! மிட்டாதார் விரோதி, கொட்டாவி விடுவதற்குள் ஆலாய்ப் பறப்பான் தெரியுமா? '

'உங்களுக்குப் பயந்து இருப்பதை விட, அப்படிப் பறப்பது நல்லதுதான்!

'சரி, பார்; நன்றாக அநுபவிக்கப் போகிறாய்?' என்று தடியை ஓங்கி ஒரு குத்துக் குத்தி விட்டு முடுக்காக நடந்தார் முக்கோணம் முருகைய தாஸர்.

இங்கே ஒரு சின்ன விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது. இவருக்கு 'முக்கோணம்' என்ற அடைமொழிப் பெயர் ஏன் கொடுக்கப் பட்டதென்பதைச் சொல்லி விடுகிறோம். இவருக்கு மாம்பழத்தின் மீது பஞ்சப்பிராணன். எங்கேயிருந்தாலும், எப்படியாவது ஒரு பழமாவது எடுத்து வந்து ருசி பார்ப்பதில் அதி சாமர்த்தியர். சில வருஷங்களுக்கு முன்னால், இவர் ஒரு மாந்தோப்புக்குள், காவற்காரனுக்குத் தெரியாமல் நுழைந்து இரண்டுமூன்று மாம்பழங்களை அவசரம்அவசரமாகத் தின்று கொண்டிருக்கையில் கையும் பிடியுமாகப் பிடிக்கப் பட்டு விட்டார். காவற்காரன் மகாசூரன். தாஸரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டுபோய் பிரியாது கொடுத்து விட்டான். விசாரணை நடந்தது. பிரம்பினால் ஆறு அடி முக்கோணத்தில் கட்டி அடிக்கும்படி தீர்ப்பு ஆயிற்று. இந்தப் பிரசாதம் கிடைத்த பிறகு, 'முக்கோணம்' என்ற பட்டம், இவரையும் இவர் பெயரையும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. தாஸருக்குக் கொஞ்சம் தேவாரம், பண்ணோடு ஓதத் தெரியும். அதை வைத்துக் கொண்டுதான், தாண்டவராய முதலியாருக்கு இவர் பரிச்சயமானார். சென்ற மூன்றரை வருஷ காலமாக இவர் மிட்டாதாரின் சமஸ்தான வித்வானாகவும் இருந்து வருகிறார். முதலியார் சொல்கிற ஒவ்வொரு வார்த்தைக்கும், அல்லது ஒவ்வொரு செயலுக்கும், தேவாரம், திருப்புகழ் முதலிய நூல்களிலிருந்து ஆதாரம் காட்டுவார். முதலியாரை முன்னிலைப் படுத்தி, ஒரு பிரபந்தம் பாடக் கூட இவர் முயற்சி செய்து கொண்டிருப்பதாகக் கேள்வி. அந்தக் காரியங்களெல்லாம் நிறைவேற வேண்டுமே யென்பதற்காகத் தான்,முதலியாரின் தூதராக இருந்து, சுப்பனுடன் வாதாடுகிறார்.

சுப்பன் ஓர் ஏழைக்குடியானவன். ஆனால் சத்தியவாதி. பரிசுத்தமான மனசு. உலகம், பணக்காரர்களுடைய அக்கிரமங்களைக் கண்டு பிரமித்தும் பயந்தும் இருக்கிறது என்பதை நன்றாகத் தெரிந்தவன். இவன் எந்தக் காலேஜுக்கும் சென்று படிக்கவில்லை. ஆனால் இவனுக்குள்ள உலக ஞானம், எம். ஏ. பட்டாதாரிகள் எத்தனை பேர் சேர்ந்து கும்மாளம் போட்டாலும் அத்தனை பேருக்கும் உண்டாகாது. எவரிடத்திலும் கூலி வேலை செய்து வயிறு பிழைக்கும்படியான நிலைமையில் இவன் இல்லை. இவனுக்குச் சொந்தமாக இரண்டு ஏகரா பூமி இருந்தது. அதனையும் ஒரு ஜதை உழவு மாட்டையும் வைத்துக் கொண்டு மானம் போகாமல் ஜீவனம் செய்து கொண்டு வந்தான். அக்கிரகாரத்திலே யாகட்டும், முதலிமார் தெருவிலே யாகட்டும் சுப்பனுக்கு யோக்கியன் என்ற பெயர் இருந்தது.

'அவன் எந்த விஷயத்திலும் தலையிட மாட்டான். அவன் விஷயத்தில் மற்றவர் தலையிடுவதையும் அவன் விரும்ப மாட்டான்' என்ற பெயர் இவனுக்கு இருந்தது.

சுப்பனுக்கு ஒரே ஒரு பெண் குழந்தை. பதினேழு வயதாகிறது. ஒரு குடியானவனுடைய பெண்ணென்று அவளைப் பார்த்தவர்கள் சொல்ல மாட்டார்கள். மாநிறந்தான். ஆனால் மூக்கும்விழியும் தீர்மையாகஇருக்கும். முகத்திலே எப்பொழுதும் களங்கமற்ற ஒரு புன் சிரிப்பு. ஒரு பணக்கார குடும்பத்தில் அவள் பிறந்திருப்பாளேயாகில், அவள் எப்படியோ இருப்பாள். ஆனால் இவ்வளவு அடக்கமும், இவ்வளவு பதவிசும் அப்பொழுது ஏற்பட்டிராது. பணக்கார குடும்பங்களிலே பிறந்து விட்டால், காலையிலே தூக்கத்திலிருந்து எழுப்புவதற்குக் கூட ஒரு ஆள் தேவையல்லவா! பல் தேய்ப்பதற்கு முன்னரே சுடச்சுட காபி கொண்டு வந்து கையிலேந்தி நிற்க ஒரு வேலைக்காரி வேண்டுமே! இவை யெல்லாம் கௌரவமென்று நினைக்கிறார்கள். ஆனால் உண்டாவது என்ன? சோம்பல், வியாதி, பணச் செலவு, மனக் கஷ்டம் முதலியவைதான். அந்த மட்டும் மாரியாயிக்கு—இதுதான் சுப்பனுடைய பெண்ணின் பெயர்—இந்த மாதிரியான கஷ்டங்கள் சம்பவிக்க வில்லை; வரவும் வேண்டாம் அவளுக்கு.

சுப்பனோடு மாரியாயியும் வயலுக்குச் சென்று நடவு நடுவாள்; களை பிடுங்குவாள்; கதிர் அறுப்பாள்; எல்லாஞ் செய்வாள். குடிப்பது கூழுதான். ஆனால் குளித்துத்தான். உடுப்பது அரைவராகன் கண்டாங்கிச் சேலைதான். ஆனால் சுத்தமாக இருக்கும். சுப்பன், ஐயமார் தெரு, முதலிமார் தெரு ஆகிய தெருக்களிலுள்ள சில பெரிய மனிதர்களை நல்ல தனப்படுத்திக் கொண்டு, மாரியாயியை, சிறிய பெண்ணாயிருந்தபோது கிராமப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வந்தான். நான்காவது வகுப்புவரையில்தான் அங்கே படிக்க முடிந்தது. அதற்குமேல், கிராமப்பெரிய மனிதர்கள் உதவி செய்யமுடியாதென்று சொல்லி விட்டார்கள். சுப்பனும் ஊர் வாய்க்குப் பயந்து, மாரியாயியைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவில்லை. ஆனால், மாரியாயி, கற்ற வித்தையை மறக்கவில்லை. மேலும் மேலும் விருத்தி செய்துகொண்டு வந்தாள். பணக்கார குடும்பத்தில் இவள் பிறந்திருந்தால், படிப்பில் இவளுக்கு இந்த அக்கரை ஏற்பட்டிருக்குமோ என்னவோ, சந்தேகந்தான்.

மாரியாயிக்குத் தற்கால நாகரிக முறையில் ஆர்மோனியத்தை வைத்துக் கொண்டு, கர்த்தப சாரீரத்திலிருந்து அபஸ்வரக் களஞ்சியத்தைக் கொட்டத்தெரியாது. ஆனால், பழைய தமிழ் நாட்டுத் தெம்மாங்கு, ஆயலோட்டுதல், வண்டிக்காரன் பாட்டு முதலியவைகளை யெல்லாம், கழனியிலேயும், வீட்டுக்கு வரும்போதும் அழகாகப் பாடிக்கொண்டு, ஒயிலாக நடந்து வருவாள்.

III

முதலியாருக்கு ஓர் ஆசை இருந்ததல்லவா ஏதாவது ஒரு பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டு கொஞ்ச காலமாவது சுகமனுபவிக்க வேண்டுமென்று. ஆனால் ஒருவரும் இவருக்குப் பெண் கொடுக்க முன்வரவில்லை. ஏதாவது விலக்க முடியாத ஒரு பாவத்தைச் செய்தவர்களல்லவோ இவருக்குத் தங்கள் பெண்ணைப்பலி கொடுக்க வேண்டும்? முதலியாரும், தம்முடைய தூதர்களைக் கொண்டு,

எங்கெங்கேயோ தூது விடுத்துப் பார்த்தார். நல்ல பெண்ணாகவும், நல்லகுடும்பமாகவும் இருந்தால் தமது ஆஸ்தியில் பாதியை—எல்லாம் ஒரு ஐயாயிரம் ரூபாய்க்குத்தான். இந்தப் பணமுடை காலத்தில், இவருடைய ஆஸ்தியை பதினாயிரம் ரூபாய்க்கு மேல் எவரும் மதிக்கவில்லை.—எழுதி வைப்பதாகவும் சொல்லிப் பார்த்தார். இந்தக் கலியாண ஏற்பாட்டுக்காக, இவர் தூங்காத இரவுகள் எத்தனை! சாப்பிடாத பகல்கள் எத்தனை! இவரைக் காக்க வைத்து, சில்லரை சில்லரையாக இவரிடமிருந்து பணம் பிடுங்கித்தின்ற நண்பர்கள்தான் எத்தனை பேர்? புது மாப்பிள்ளையாக இருக்க வேண்டுமென்ற ஆவலினால் இவர் உயர்ந்த செண்டுகளை வரவழைத்துப் பூசிக் கொண்டார். சில்க் ஜுப்பாக்கள் தைத்துப் போட்டுக்கொண்டார். சேலம் குண்டஞ்சு தவிர வேறு வேஷ்டிகளை அன்றாட உபயோகத்திற்குக் கட்டுவதில்லை. இவ்வளவு சம்பிரமத்துடன் முதலியார் இருக்கிறாரென்று, பெண் கொடுப்பவர்களுக்குத் தெரிகிறதா? இவருடைய நாணற்புல் குடுமித் தலைதான் அவர்கள் கண்ணுக்குத் தெரிகிறதே தவிர, இவர் பூசிக் கொண்டிருக்கிற செண்டுகள் அவர்களுக்கு வாசனை வீசவில்லையே.

முதலியார் நிரம்ப ஏக்கங் கொண்டு விடுவார் போலிருந்தது. அவருடைய ஆப்த நண்பர்கள் ஏதாவது ஒரு பெண்ணுருவத்தை இவருடன் சேர்த்து விடுவதென்று தீர்மானித்தார்கள்.

'உள்ளூரிலேயே ஏதேனும் ஒரு சரக்கைப் பார்த்து முடித்து விடலாமே'

'எதையாவது செய்யுங்களேயா. எத்தனை நாள் நான் இப்படி தவிப்பது?' என்றார் பரிதாபக் குரலுடன் முதலியார்.

'இந்தக் காலத்திலே சீர்திருத்தம் என்கிறார்கள்; கலப்பு மணம் என்று பேப்பர்களிலே எழுதுகிறார்கள். நாமும் ஏன் அந்த மாதிரி ஏதேனும் ஒன்றைச் செய்து கொள்ளக்கூடாது?' என்று ஒரு புதிய யோசனையைப் புகவிட்டார் முக்கோணத்தார்.

'பேஷ். நல்ல யுக்தி. அப்படி ஏதேனும் ஒன்றைச் செய்து கொண்டால் பேப்பர்காரன்கள் கூட நமது போட்டோவைப் பேப்பர்களிலே போடுவான்கள். நாமும் ஒரு சீர்திருத்தவாதியாகவும், வீரராகவும் கஷ்டமின்றி வந்துவிடலாம். அப்படி ஏதேனும் ஒன்றைப் பிடியுங்களேன்.'

'போட்டோவைப் பற்றிக் கவலையில்லை. இரண்டு காசை வீசி எறிந்தால், கொட்டை எழுத்துக் களிலே பெரிய போட்டோவைப் போடச் செய்கிறேன். எல்லாம் வெள்ளையப்பனிடந்தான் இருக்கிறது' என்றார் நாகரிகந் தெரிந்த முக்கோணம் முருகையதாஸர், கட்டை விரலை ஆள் காட்டி விரலின் கீழ் தட்டிக் கொடுத்துக் கொண்டு.

இந்தச் சுறு சுறுப் போடு எழுந்தவர் தான் முருகய்யா. சுப்பனிடம் சென்று மேலே கூறிய விதமாகப் பேசலானார். முருகய்யா, மாரியாயியை அடிக்கடி பார்த்திருக்கிறார். அவள் பாடுவதையும் கேட்டிருக்கிறார். சில சமயங்களில் அவளைப் பார்த்து 'கெண்டை விழியாள், சதங்கை ஒலியாள்' என்று ஏதோ கவனம் செய்து பாட ஆரம்பித்து விடுவார். முதலியாருக்கும் மாரியாயியைப்பற்றி ஜாடையாகப் பல முறை சொல்லியிருக்கிறார். முதலியார், குடியானவர்கள் தெருப் பக்கம் அடிக்கடி சென்று அங்குள்ளவர்களுடைய க்ஷேமலாபங்களை விசாரித்து வந்ததற்கு இப்பொழுது காரணந் தெரி

கிறதா? ஒருநாள், நல்ல பகலில் குடியானவர்கள் வீதிப் பக்கம் சென்று, தாகமெடுத்ததாகச் சொல்லிக் கொண்டு, சுப்பன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து, மாரியாயியின் கையிலேயே ஒரு குவளை மோர் வாங்கிக் குடித்ததற்குக் காரணம், இதுதானா என்று சுப்பன், முக்கோணத்தாருடைய சம்பாஷணைக்குப் பிறகு தெரிந்துகொண்டான்.

இந்த விதமான அஸ்திவாரங்களையெல்லாம் போட்டுக் கொண்டுதான் முருகையதாஸர், முதலியாரின் பிரதிநிதியாகச் சுப்பனிடம் சென்றார். மேலே கூறிய விதமாகப் பதில் கிடைத்தது. சுப்பனுக்கு 500 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னால் அவன் திருப்தியடைந்து விடுவானென்றும், ஆனால் காரியத்தை முடித்துக்கொண்டு பிறகு நூறோ, ஐம்பதோ கொடுத்து வாயடக்கி விடலாம் என்றும் முதலியாரும் தாஸரும் சதியாலோசனை செய்தார்கள். பண மிருந்தால், ஏழைகள் விஷயத்தில் எந்த விதமாகவும் நடந்து கொள்ளலாம் போலிருக்கிறது! பணத்தினாலே தங்கள் காரியம் ஆகவில்லையென்றால் அப்பொழுது இந்தப் பணக்காரர்களுக்கு என்ன கோபம் வருகிறது? கண்களைக் கோவைப் பழமாக வைத்துக்கொண்டு வயிற்றுப் பிழைப்புக்காகத் தங்களை அண்டி நிற்கும் ஏவலாட்களை முறைத்துப் பார்க்கிறபோது, யமலோக தரிசனத்தை இங்கேயே கண்டு விடலாம்.

'இந்தக் குடியானப் பையனுக்கு இவ்வளவு கர்வமா? இவ்வளவு கொழுப்பா?'

'இந்தப் படுகுழியில் தள்ளுவேனா? என்கிறான் அவன்.'

'அவன் படுகுழியிலே விழுவதற்குப் பிள்ளையார் குட்டு, குட்டிக்கொண்டு விட்டான்.'

'எஜமான் மனது வைத்தால் என்னதான் நடக்காது?'

'இந்தப் போக்கிரிப் பயல்களையெல்லாம் இப்படியே துளிர்க்க விடக்கூடாது. இவனெல்லாம், இந்தப் பிரசங்கம் செய்கிற பேர்வழிகளின் பேச்சைக் கேட்டு, இப்படித் தலை தூக்காகத் திரிகிறான்கள்'.

'இவர்களையெல்லாம் தங்களைப் போன்றவர்கள் அடக்கிப் போடாவிட்டால் எங்களைப் போன்றவர்களுடைய பிழைப்புக்குக்கூட இனிக் கஷ்டந்தான்' என்றார் தாஸர் பல்லை இளித்துக்கொண்டு.

'ஒன்றும் கவலை வேண்டாம்; நான் பார்த்துக் கொள்கிறேன். நமது காரியம் கைகூட வேண்டுமென்று நீர் தினந்தோறும் காலையிலும் மாலையிலும், நமது வீட்டிற்கு வந்து பக்தி சிரத்தையோடு தேவாரம் ஓதும். அந்தக் கடவுள் நமக்கு வழிகாட்டுவார்' என்றார் ஆஸ்திக சிகாமணி மிட்டாதார்.

'நமச்சிவாயன் தாள் வாழ்க! திருச்சிற்றம்பலம்!' என்று கண்ணை மூடிக் கை கூப்பினார் சிவானுபூதிச் செல்வரான தாஸர்.

ஆமாம்; பணத்தைச் செலவழித்தால் கடவுள் கூட கைகட்டிக் கொண்டு ஓடி வர மாட்டாரா?

V

மாலை வேளை. இருட்டுகிற சமயம். சுப்பன் அன்று ராத்திரி, தன் கழனிக்குப் பக்கத்துக் கழனியிலிருந்து ஜலம் வர வேண்டுமென்பதற்கு ஏற்பாடு செய்து விட்டு வர, ஏரிக்கரைப் பக்கம் சென்றிருந்த ஆப்பாயி நாயுடு

வைத் தேடிக் கொண்டு சென்றிருந்தான். மாரியாயி, தனியாக வரப்பின் மீது வந்து கொண்டிருக்கிறாள் வீட்டை நோக்கி. தலையிலே தாங்க முடியாத ஒரு பெரிய நெல்லரிக்கட்டு. இடுப்பிலே, பகல் பொழுதில் தகப்பனுக்கு எடுத்துப் போன சோற்றுப் பானை. தன் சிரமம் தீர்வதற்காக, தானே ஏதோ பாடிக் கொண்டே வந்து கொண்டிருக்கிறாள். வழியிலே ஒரு சிறிய திட்டு. அதன் மீது சில புதர்கள் அடர்த்தியாக வளர்ந்திருந்தன. இந்தத் திட்டின் ஒரு புறமாக மாரியாயி வந்து கொண்டிருந்தபோது, திடீரென்று, நான்கு பாவிகள் இவளை வந்து பிடித்துக் கொண்டார்கள். ஒருவன் வாயிலே துணியை அடைத்து விட்டான். மற்றொருவன் இரண்டு கைகளைக் கட்டி விட்டான். இன்னொருவன் இரண்டு கால்களையும் கட்டி விட்டான். ஐயோ! நான்கு பேரும் யமதூதர்கள் மாதிரி சுப்பனுடைய மகளைத் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். எங்கே கொண்டு போகிறார்கள்? யாரைப் பார்த்து யார் கேட்பது இந்தக் கேள்வியை.

இரவு எட்டுமணியாயிற்று. சலித்து அலுத்துப்போய் சுப்பன் வீடு வந்து சேர்ந்தான். வீட்டில் ஸ்மசான அமைதி குடிகொண்டிருந்தது. இன்னும் மாரியாயி வரவில்லையென்று தெரிந்து கொண்டான். வயிறு பகீரென்றது. தனக்கும் தன் குடும்பத்திற்கும் பெரிய விபத்தொன்று வந்து விட்டதாகக் கலங்கிப் போனான். இவனை யறியாமலே கண்களில் நீர் வந்துகொண்டிருந்தது. இவன் மனக்கண் முன்னர், தாண்டவராய முதலியாரும், முக்கோணம் முருகையதாஸரும் வந்து நின்றார்கள். அடபாவிகளா! என்று கதறிக்கொண்டு எங்கேயோ ஓடினான்.

மாரியாயி எங்கே? இந்தச் செய்தி ஊரெல்லாம் பரவி விட்டது. முதலியாரின் பரிவாரங்கள், 'அவள் எங்கே யாவது ஓடிப் போயிருப்பாள்' என்று வதந்தியை உண்டுபண்ணி விட்டார்கள்.

மூன்று நாட்களுக்குப் பிறகு, குழப்பலூர் கிராமத்தின் ஈசானியத் திக்கிலேயுள்ள மாந்தோப் பொன்றில் மாரியாயி, சுருக்குப் போட்டுக் கொண்டு இறந்து கிடக்கிறாள் என்ற விஷயத்தை அவ்வூர் ஜனங்கள் காதோடு காதாகப் பேசிக்கொண்டார்கள்.

சுப்பன் எங்கே? ஏரியிலே அவன் பிணமாக மிதந்து கிடக்கிறான். இரண்டு நாட்களுக்கு முன்னரேயே, இவன் ஏரியில் விழுந்திருக்க வேண்டுமென்று ஜனங்கள் சொல்லிக் கொண்டார்கள்.

மாரியாயி யாரையோ ஒருவனை இழுத்துக் கொண்டு ஓடிப்போனதாகவும், பின்னர் அவனால் கைவிடப்பட்டு, மானம்பொறுக்கமாட்டாமல் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தாளென்றும், தன் குடும்பத்திற்கு நேர்ந்த இந்த அவமானத்தைச் சகிக்க மாட்டாமல், சுப்பன் ஏரியில் விழுந்து விட்டானென்றும், தாண்டவராய முதலியார் ஊராருக்கு உபதேசம் செய்து வந்தார்.

ஆனால் உண்மை யாருக்குத் தெரியும்?

தாதாபாய் நௌரோஜி

ஜனனம்—1825—மரணம்—1917

—ஒரு காங்கிரஸ் வாதி

இந்திய அரசியலின் பிதா மகன் என்ற கௌரவப்பட்டத்தை நீண்ட நாட்களாகத் தரித்துக் கொண்டிருந்தவர் யார்? பிரிட்டிஷ் பார்லிமெண்டில் முதன் முதலாக ஸ்தானம் வகித்த இந்தியர் யார்? ஒரு முறையல்ல, மூன்று முறை காங்கிரஸுக்குத் தலைமை வகித்த பெருமை யாரைச் சேர்ந்தது? தாதாபாய் நௌரோஜி.

பணக்கார சமூகத்திலே பிறந்த இவர் இந்திய மக்களுக்குப் பெரிதும் உழைத்துப்புகழ் பெற்றார். சட்ட வரம்புக்குட்பட்ட அரசியல் கிளர்ச்சியை எப்படிச் செய்வது என்பதற்கு முதன் முதலாக வழிகாட்டியவர் தாதாபாய் நௌரோஜி தான். அந்தக் காலத்தில் இவர், காங்கிரஸிலும், பொது மேடைகளிலும், விசாரணைக் கமிஷன்கள் முன்னரும் இவர் பேசிய பேச்சுக்களும், கொடுத்த சாட்சியங்களும், இப்பொழுது கூட நமது செவிகளில் ஒலித்துக் கொண்டுதானிருக்கின்றன. பிரிட்டிஷாரின் ஆட்சி முறையின் காரணமாக இந்தியா ஏழ்மை நிலை அடைந்து விட்டதென்பதை இவர் பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்கு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டி, உலகத்தின் கவனம் இந்தியா பக்கம் திரும்புவதற்கு முக்கிய காரணமாயிருந்தவர் தாதாபாய் தான்.

நௌரோஜி, ஒரு பார்சி புரோகித குடும்பத்தில் 1825-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 4-ந் தேதி பம்பாயில்

பிறந்தார். இவருடைய மூதாதையர்கள், சுமார் 600-வருஷங்களாக புரோகிதத் தொழிலையே பரம்பரையாக நடத்திக் கொண்டு வந்திருக்கின்றனர். அந்தப் பரம்பரைத் தொழிலிலிருந்து விலகி வேறு துறையில் முதன் முதலாகப் புகுந்தது தாதாபாய் நௌரோஜிதான். நௌரோஜியின் நான்காவது வருஷத்தில் அவருடைய தகப்பனர் காலமாகிவிட்டார். எனவே, இவரை வளர்த்து முன்னுக்குக் கொண்டுவரும் பொறுப்பு அனைத்தும் இவருடைய தாயாரின் பேரிலேயே விழுந்தது. தாயார் இவரைத் தகப்பனற்ற பிள்ளையாயிற்றே என்பதற்காக மிகுந்த பரிவுடன் வளர்த்து வந்தார். இவரை 'டாடி' என்றுதான் செல்லமாக அழைத்து வந்தார். தம் மகனுக்கு அந்தக் காலத்தில், பம்பாயில் எந்த விதமான உயர்முறைக் கல்வியைக் கொடுக்க முடியுமோ அந்தப்படி அளித்து வந்தார். நௌரோஜிக்கும் தாயாரிடத்தில் பரம பக்தி. தமது பிற்கால வாழ்க்கை, பண்பட அமைந்ததற்கு, தாயார் அளித்த பயிற்சி தான் காரணம் என்று தெரிவிக்கிறார்.

'எனது எண்ணங்களின் முதன்மையிலே இருக்கிறவர் எனது தாயார். நான் அவளுடைய ஒரே குழந்தை. என் சிறு பிராயத்திலேயே அவள் விதவையாகி விட்டாள். அவளுடைய எல்லாமுமாக நானே இருந்தேன், அவள் சகோதரருடைய உதவி பெற்று என்னை வளர்த்து வந்தாள். அவளுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் புத்திசாலி. நான் கெட்ட வழிகளில் பிரவேசிக்காதபடி, கண்டிப்பாக என்னை நடத்தி வந்தாள். அண்டை அயலார்களின் நல்லாசிரியையாகவும் இருந்தாள். பெண் கல்வி, ஆசார சீர்திருத்தம் முதலிய துறைகளில் நான் செய்த முயற்சிகளுக் கெல்லாம் அவள் துணை செய்து வந்தாள். நான் இப்பொழுது இப்படி இருப்பதற்கு அவள்தான் காரணம்".

நௌரோஜி, அரசாங்கப் பள்ளிக்கூடமொன்றில் ஆரம்பக் கல்வியை முடித்துக் கொண்டு, பின்னர் எல்பின்ஸ்டன் காலேஜில் சேர்ந்து படித்தார். இங்கே, ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாகத் தேறி, அநேக பரிசுகள் பெற்றார். ஓர் ஐரோப்பிய மாது, ஒரு சமயம், பள்ளிக்கூடத்தைப் பார்க்க வந்தாள். அத்தனை பிள்ளைகளையும் விடுத்து, நௌரோஜியின் மீது தான் அவளுக்குக் கவனம் சென்றது. பின்னர், அவள் எழுதிய ஒரு புத்தகத்தில் கூட, 'முன் வந்து நிற்கிற நெற்றியும், பிரகாசமான கண்களும் உடைய அந்த பார்சி சிறுவனை' ப் பற்றிக் குறிப்பிடுகிறாள். வகுப்பிலே வாத்தியார் ஏதேனும் கேள்வி கேட்டால், எல்லாரையும் விட தான் முந்திப் பதில் சொல்லிவிட வேண்டுமென்று, துடி துடிப்பார். அப்படியே சொல்லியும் விடுவார்.

தமது இருபதாவது வயதில், பம்பாயிலுள்ள இளைஞர்கள் அனைவரைக் காட்டிலும் மகா புத்திசாலி என்று நௌரோஜி பெயரெடுத்து விட்டார். அப்பொழுது ஹைகோர்ட்டின் பிரதம நீதிபதியாகிய ஸர் எர்ஸ்கைன் பெர்ரி என்பவரே, கல்வி இலாகாவின் தலைவராகவு மிருந்தார். இவர், நௌரோஜியின் அதிதீட்சண்ய புத்தியைக்கண்டு, 'இந்தப் பையனை இங்கிலாந்துக்கு அனுப்பிப்படிக்கிற செலவில் பாதியை நான் ஏற்றுக்கொள்கிறேன்' என்று சொன்னார். மற்றப்பாதிச் செலவை, பார்சி சமூகத்தில் பெரிய பிரபுவாயிருந்த ஸர் ஜேம்ஸெட்ஜீ ஜீஜிபாய் என்பவர் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார். அப்படியே, நௌரோஜி இங்கிலாந்துக்கு மேல் படிப்புக்குச் செல்வதற்குரிய எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. திடிரென்று ஸர்

ஜேம்ஷெட்ஜிக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அதாவது, நௌரோஜி இங்கிலாந்துக்குச் சென்று வேறு மதத்தில் சேர்ந்து ஜாதிப் பிரஷ்டனாகி விட்டால் என்ன செய்வதென்ற சந்தேகம் உண்டாகி விட்டது. தாம் பண உதவி செய்ய முடியாதென்று சொல்லி விட்டார். ஸர் எர்ஸ்கைன், தன் பங்கைக் கொடுக்கச் சம்மதிப்பாரா? கடைசியில், இங்கிலாந்துக்கு மேற் படிப்புக்குச் செல்வதென்கிற ஏற்பாடு ரத்தாகி விட்டது. அப்படி இங்கிலாந்துக்குச் செல்லாதிருந்தது நல்லதுதானென்றும், ஏனென்றால், அவருடைய உழைப்பையும் தியாகத்தையும், இந்தியா, பின்னர் அநுபவித்திருக்க முடியாதல்லவா வென்றும் ஸர் எர்ஸ்கைனே ஒரு சமயம் சொன்னார்.

நௌரோஜி, எங்கேனும் ஓர் உத்தியோகம் தேடலானார். குடும்ப ஜீவனம் நடக்கவேண்டுமே. இவருடைய பொருளாதார நிலையும் அப்பொழுது சரியாயில்லை. கடைசியில், தாம் எந்தக் கல்லூரியில் படித்தாரோ அதே எல்பின்ஸ்டன் கல்லூரியில் ஓர் ஆசிரியர் வேலையை ஏற்றுக்கொண்டார். இவர் கணிதத்தில் மகா நிபுணர். காலேஜ் அதிகாரிகள், இவருடைய கணிதப் புலமைக்காக இவருக்குத் தனியானதொரு பரிசும் அளித்தனர். இப்படி இவர் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறபோது, கல்லூரியின் ஐரோப்பிய கணித போதகாசிரியர் (Professor) காலமாகிவிட்டார். அந்தப்பதவியில் நௌரோஜி நியமனம் செய்யப்பட்டார். ஓர் இந்தியருக்கு இங்ஙனம் புரொபெஸர் பதவி கொடுக்கப்பட்டது இதுதான் முதல் தடவை.

“என் வாழ்நாளிலேயே, இந்தப் பதவியை நான் முக்கியமாகக் கருதுகிறேன். எல்லாக் கௌரவப் பட்டங்களிலும் இதையே நான் பெரிய கௌரவமாகக் கொள்கிறேன். எனது பள்ளிக்கூட சகாக்கள் என்னை ‘தாதாபாய் புரொபெஸர்’ என்று அழைக்கிறபோது, நான் எவ்வளவு சந்தோஷப்படுவேன்?”

சுமார் எட்டு வருஷ காலம், நௌரோஜி, புரொபெஸர் உத்தியோகம் பார்த்தார். ஆனால், தமது உத்தியோக அளவோடு இவர் நிற்கவில்லை. பொது வேலைகள் பலவற்றில் ஈடுபட்டார். பார்சி சமூகத்தாருடைய பலத்த எதிர்ப்புக் கிடையே, ஒரு பெண் பள்ளிக்கூடம் ஸ்தாபித்தார். இது தவிர, இலக்கியச் சங்கம், பம்பாய் சங்கம், ப்ரேம்ஜி கௌவாஸ்ஜி இன்ஸ்டிடியூட், இரானி பண்ட், பார்சி ஜிம்னேஷியம், விதவா விவாகச் சங்கம், விக்டோரியா அண்ட் ஆல்பர்ட் மியூசியம் முதலிய பல பொது ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதற்கு இவர் முக்கிய காரணஸ்தராயிருந்தார். ‘இந்தக் காலத்தில் நான் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு வேலை செய்தேன்’ என்று ஒரு சமயம், நௌரோஜி திருப்தியாகச் சொல்லிக் கொள்கிறார்.

இந்தப் பொது வேலைகள் போதாவென்று, 1851ம் வருஷம் இவர் குஜராத்தி வாரப் பத்திரிகை யொன்றை ஆரம்பித்தார். அதற்கு ‘உண்மை கூறுவோன்’ என்று பெயர். முன்னேற்றக் கொள்கைகள் பலவும் அதில் எழுதப்பட்டுவந்தன. சுமார் இரண்டு வருஷ காலம் அதனைத் திறம்பட நடத்தி வந்தார். பின்னர் இது வேறொருவர் கைக்கு மாறியது.

இங்ஙனம் சுமார் பத்து வருஷ காலம், பம்பாய் நகரத்தின் பொது ஜன வாழ்க்கையிலேயே ஒரு புதிய முத்திரையிட்டு விட்டு, தமது முப்பதாவது வயதில் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றார். எப்படி?

பம்பாயிலே, காமா அண்ட் கம்பெனி என்ற பிரபல வியாபார கம்பெனி ஒன்று இருந்தது. இந்தக் கம்பெனியார், லண்டனில் ஒரு கிளை ஸ்தாபனத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று யோசித்து, அதற்கு நௌரோஜியை, கிளை ஆபீஸ் மானேஜராக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். இவருக்கு, இதற்கு முன் எவ்வித வியாபார அநுபவமும் இல்லை யானாலும், இவரிடத்திலேயுள்ள நம்பிக்கையைக் கொண்டு இந்தப் பதவியை இவருக்குக் கொடுத்தார்கள். இதை முன்னிட்டுத்தான் இவர் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கே சென்று, தமது தொழிலில் அதிக கவனஞ் செலுத்தி எல்லா நுணுக்கங்களையும் கற்றுக் கொண்டு விட்டார். சில காலத்திற்குள், இவர் மேற்படி கம்பெனியின் பாகஸ்தராகவும் ஆனார்.

இங்கிலாந்தில் இவர் வசித்த காலத்தில் இந்தியாவைப் பற்றி பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்வதில் இவர் சிறிது கூடச் சலிப்புக் கொள்ளவில்லை. அங்கே சென்று 'லண்டன் இந்தியா சொஸைடி' என்ற தொரு ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். இது தவிர, 1877-ம் வருஷத்தில் 'கிழக்கிந்திய சங்கம்' என்ற தொரு ஸ்தாபனத்தை ஆரம்பித்து, இந்தியாவைப் பற்றித் தீவிரப் பிரசாரஞ் செய்தார். இவை தவிர, இந்தக் காலத்தில் இவர் இங்கிலாந்தில் பார்த்த வேலைகள் அபரிமிதம். காமா கம்பெனி பாகஸ்தர் வேலையோடு, மேற்படி இரண்டு சங்கங்களையும் நடத்தி வந்தார். தவிர, லண்டன் சர்வகலா சாலையில் குஜராத்தி பாஷா போதகராக நியமிக்கப் பட்டார். மேற்படி சர்வகலாசாலையின் செனெட்டில் ஓர் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். ஓர் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் டைரெக்டரானார். இந்தியாவின் பிரச்னைகளைப் பற்றி இந்தியா மந்திரி காரியாலயத்திற்கும் பத்திரிகைகளுக்கும் கடிதங்கள் எழுதி வந்தார். ஊர் ஊராகச் சென்று பொதுக் கூட்டங்களில் பேசி வந்தார். என்ன உழைப்பு! சுமார் பன்னிரண்டு வருஷ காலம் இந்த மாதிரியாக உழைத்துக் கொண்டிருந்தார்.

இச்சமயத்தில் துரதிருஷ்ட வசமாக இவருடைய கம்பெனி முறிந்து விட்டது. சுமார் மூன்று லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. ஆனால் இவருடைய நண்பர்கள், இவருக்குச் சமயத்தில் உதவி செய்தார்கள். ஒருவாறு இவற்றையெல்லாம் சமாளித்துக் கொண்டு 1869ம் வருஷம் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். பம்பாய்த் துறைமுகத்திலே இவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஸர் பெரோஸிஷா மேத்தாவின் நன் முயற்சியால் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப் பெற்று அதில் இவருக்கு ஓர் உபசாரப் பத்திரம் வழங்கப் பெற்றது. அதனுடன் 30,000 ரூபாய்ரொக்கமும் இவருக்குக் கொடுக்கப் பெற்றது. இந்தத் தொகையனைத்தையும் நௌரோஜி பொது ஜன நன்மைக்காகவே செலவிட்டார். ஒருகாசு கூட இவர் சொந்த உபயோகத்திற்கென்று செலவழிக்க வில்லை.

1874ம் வருஷம் இவர் பரோடா திவானாக நியமிக்கப் பட்டார். சுமார் ஒன்றரை வருஷ காலம் இந்த உத்தியோகத்திலே இருந்து சமஸ்தானத்தில் பல விதமான சீர்திருத்தங்கள் செய்தார்.

1886ம் வருஷம் இங்கிலாந்துக்குச் சென்று, அங்கே பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஓர் அங்கத்தினராவதற்கு முய

ற்சி செய்தார். ஆனால் முயற்சி பலிக்க வில்லை. எனவே, அந்தவருஷம் கடைசியில் இந்தியாவுக்குத் திரும்பி வந்ததும், கல்கத்தாவில் கூடிய இரண்டாவது காங்கிரஸுக்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். அப்பொழுது இவர் நிகழ்த்திய சொற்பொழிவில், காங்கிரஸின் லட்சியம் எதுவாயிருக்க வேண்டுமென்பதைத் திட்டப்படுத்திப் பேசினார்.

மீண்டும் இவர் இங்கிலாந்துக்குச் சென்று அங்கே பார்லிமெண்ட் ஸ்தானத்திற்கு அபேட்சகராக நின்றார். கடைசியில் 1892ம் வருஷம் மத்திய பின்ஸ்பரி தொகுதிக்கு அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். இங்கே சுமார் மூன்று வருஷ காலம் அங்கத்தினராயிருந்து, இந்தியாவுக்குச் சாதகமாகப் பல காரியங்களைச் செய்தார். இவருடைய முயற்சியின் பேரில்தான், இந்தியாவில் ஏற்படுகிற அரசாங்கச் செலவுகளைப்பற்றி விசாரிக்க ஒரு ராயல் கமிஷன் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷனில் இவரும் ஓர் அங்கத்தினராயிருந்தார். ஒரு ராயல் கமிஷனில் இந்தியர் அங்கத்தினராக நியமனம் செய்யப்பட்டது இதுதான் முதல் தடவை.

பின்னர், 1893ம் வருஷம் லாகூரில் நடைபெற்ற காங்கிரஸுக்கும்,1906ம் வருஷம் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸுக்கும் இவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். இந்தக் காலங்களில், பொதுஜனங்கள் இவரிடம் காட்டிய அபிமானம் சொல்லிமுடியாது. இவருக்கு ஒரே மகன். அவன் இறந்து விட்டான். இந்த மகத்தான துக்கத்தைச் சகித்துக் கொண்டுதான், இவர் லாகூர் காங்கிரஸில் தலைமை வகித்தார்.

1906-ம் வருஷத்துக் கல்கத்தா காங்கிரஸின்போது இவர் நிகழ்த்திய தலைமையுரையில் சில வாக்கியங்கள் வருமாறு:—

"நாம் பேசாவிட்டால் நாம் திருப்தியடைந்து விட்டதாக, நம்மை ஆள்வோர் நினைக்கிறார்கள். பேசினால் நாம் கிளர்ச்சி செய்கிறோமென்று சொல்கிறார்கள். சட்ட வரம்புக்குட் பட்டு இந்தியர்கள் நடக்க வேண்டுமென்று அரசாங்கம் சொல்கிறது. ஆனால் அரசாங்கம், சட்ட வரம்பு மீறியும், சுயேச்சையாகவும் இருக்கிறது."

ஃ ஃ ஃ

"சுயராஜ்யம் ஒன்றுதான் நமக்குப் பரிகாரம். அதுதான் நமக்கு நம்பிக்கை தருவது; பலத்தை அளிப்பது; பெருமையைக் கொடுப்பது. எனது தாய் நாட்டாரைப் பார்த்து நான் சொல்வதென்னவென்றால் ஒற்றுமையாயிருங்கள்; முயற்சி செய்யுங்கள்; சுயராஜ்யத்தை அடையுங்கள். அப்பொழுதுதான், லட்சக்கணக்காக இப்பொழுது வறுமையிலே மடிகிறவர்கள் பட்டினியினின்று மீள முடியும். மேனாட்டு நாகரிக தேசங்களுக்குச் சமமாக வாழ முடியும்".

கல்கத்தா காங்கிரஸ் முடிந்ததும், இவர் மறுபடியும்1907ம்வருஷம் இங்கிலாந்துக்குச் சென்று, அங்கே இந்தியாவுக்கு அநுகூலமான காரியங்கள்பலவற்றைச் செய்து வந்தார். அப்பொழுது இவருக்கு வயது 82. ஆனாலும் உழைப்பில் சலிப்பே கொள்ளவில்லை. சில வருஷகாலம் இங்கிலாந்து வாசத்திற்குப் பிறகு, மறுபடியும் இந்தியாவுக்கு வந்து பம்பாய்க்கு அருகாமையிலுள்ள வார்சோவா கிராமத்தில் தங்கி வசிக்கலானார். தேசத்திலுள்ள பல கட்சித் தலைவர்களும், இவரிடத்தில் ஆலோசனைக்குப் போவார்கள். தமது கடைசி காலம்வரை, தேசத்தின் சிந்தனைதான் இவருக்கு.

கடைசியில் 1917-ம் வருஷம், தமது 92-ம் வயதில் வார்சோவாவில் இவர் ஆண்டவன்திருவடி நிழலடைந்தார்.

சிவப்பு இந்தியர்கள்

—நமது அமெரிக்க நிருபர்

அமெரிக்காவின் பூர்வீக குடிகளுக்குச் சிவப்பு இந்தியர்கள் என்று பெயர். இவர்கள் நிறம் சிவப்பல்ல. இவர்கள் இந்தியர்களுமல்ல. ஆனால் பெயர் மட்டும் சிவப்பு இந்தியர்கள்!

கொலம்பஸ் (Christopher Columbus) 1492ம் வருடத்தில் இந்தியாவைக் கண்டு பிடிக்க யாத்திரை தொடங்கினார். இந்தியாவைக் காண்பதற்குப் பதிலாக அமெரிக்காவைக் கண்டார். இந்நாட்டுப் பூர்வீக குடிகள் இவருக்குத் தொந்தரவு கொடுத்தனர். கொலம்பஸ், இவர்களிற் சிலரைக் கைது செய்து ஸ்பானியர்கள் நியாயஸ்தலத்தின் முன் நிறுத்துகையில் இவர்களைச் 'சிவப்பு இந்தியர்கள்' என்று குறிப்பிட்டார். அதுமுதல் இப்பெயர் வழங்கலாயிற்று. கொலம்பஸ்தான் அமெரிக்காவை முதன் முதலில் கண்டார் என்பது சரித்திர ஆசிரியர்கள் கண்ட முடிவு. ஆனால் தன்னுடைய பெயரை இந்நாட்டுக்குச் சூட்டும் பாக்கியம் கொலம்பஸுக்குக் கிடைக்கவில்லை. 1501ம் வருடத்தில் அமெரிக்கோ வெஸ்புக்கி (Amerigo Vespucci) என்ற இத்தாலியர் தென்னமெரிக்காவிலுள்ள பிரேஜில் (Brazil) என்ற நாட்டைக் கண்டு பிடித்தார். பின்னர் ஐரோப்பா திரும்பியதும் தன்னுடைய செயல்களைக் குறித்துப் புத்தகம் வெளியிட்டார். அதுமுதல் இந்நாட்டுக்கு 'அமெரிக்கா' என்று பெயரிடப்பட்டது. 'சிவப்பு இந்தியர்கள்' 'அமெரிக்க இந்தியர்கள்' ஆனார்கள்.

இவ்விந்தியர்களுடைய ஆதி வரலாறு சரித்திர ஆசிரியர்களின் எண்ணங்கட்கும் எட்டாத ஒரு மர்மமாக இருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வட அமெரிக்காவிலுள்ள அலாஸ்கா பகுதியும் ஆசியா கண்டமும் ஒரே நிலப்பரப்புடன் இருந்ததென்றும் இவ்விந்தியர்கள் ஆசியாவைச் சேர்ந்தவர்களென்றும் சில ஆராய்ச்சியாளர்கள் **தக்க சான்றுகளுடன்** கூறுகின்றனர். இவ்விந்தியர்கள் மெக்ஸிகோ இந்தியர்களின் வம்ச பரம்பரையென்றும் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் இங்குக் குடியேறினார்கள் என்றும் வேறு சில ஆராய்ச்சியாளர்கள் **தக்க சான்றுகளுடன்** கூறுகின்றனர். நம்புவதானால் இரண்டையும் நம்பத்தான் வேண்டும். இல்லையேல் இரண்டையும் நம்புவதற்கில்லை.

முதலில் இந்நாட்டில் குடியேறிய வெள்ளையர்கட்கும், அமெரிக்க இந்தியர்கட்கும்பல பெரும் போர்கள் மூண்டன. இந்தியர்களின் ஆயுதம் வில்லும் அம்புந்தான். வெள்ளையர்கள் ஏராளமான யுத்தக்கருவிகளை ஐரோப்பாவிலிருந்து கொண்டு வந்தனர். இப்போர்களில் சில வெள்ளையர்கள் மாண்டனர். அதிகச் சேதம் அமெரிக்க இந்தியர்கட்குத் தான். ஆயிரக்கணக்கான அமெரிக்க இந்தியர்களை வெள்ளையர்கள் ஈவிரக்கமின்றிக் கொன்றதாகத் தெரிகிறது. நாட்டைப் பறிகொடுத்த அமெரிக்க இந்தியர்கள் எத்தனை லட்சம் பேர் வெள்ளையர்

* Rights Reserved.

களால் கொல்லப்பட்டார்க ளென்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும். சமீபத்தில் வெளியான அரசாங்க அறிக்கையின்படி தற்பொழுது ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் 250 பிரிவுகளைச் சேர்ந்த மூன்றரை லட்சம் இந்தியர்கள் வசிக்கின்றனர்.

பொதுவாக இந்தியர்களின் பாஷை மிகவும் பிற்போக்கானது. அமெரிக்க இந்தியனின் அகராதியில் மிகச் சில வார்த்தைகளே காணப்படும். பல பிரிவினர் பலவிதமாகப் பேசியபோதிலும் அவர்களுடைய பாஷை ஒன்றுதான். நாம் பல வார்த்தைகள் கூறும் ஒன்றை அவர்கள் ஒரே வார்த்தையில் கூறுவார்கள். உதாரணமாக 'ஏரிக்குச் சென்று மீன் பிடிக்க' என்பது அவர்கட்கு ஒரே வார்த்தையில் முடியும். தற்பொழுதுள்ள அமெரிக்க இந்தியர்களிற் சிலர் ஸ்பானிய பாஷை பேசுகின்றனர். இளைஞர்கள், ஆண்களும் பெண்களும் நன்கு ஆங்கிலம் பேசுகின்றனர்.

இவ்விந்தியர்கள் நகரங்களில்வசிக்க அனுமதிக்கப் படுவதில்லை. தெற்கிலும் வடக்கிலும் தனித்த இடங்களில் (Reservation) இவர்கள் வசிக்கின்றனர். காலின் ரோஸ் (Collin Ross) என்ற பிரபல ஜெர்மானிய எழுத்தாளர் கூறுவதுபோல, நாட்டின் வளப்பமில்லாத பகுதி யொன்றிருக்குமானால் அது இந்தியர்கள் வசிக்குமிடம் என்று கொள்ளலாம்.

1540ம் வருடத்திற்கு முன்னே இந்தியர்கள் நிலை எவ்வாறிருந்தது என்பது குறித்துப் பல ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. நியூமெக்ஸிக்கோவில் புயே (Puye)என்றொரு இடமிருக்கிறது. ஆயிரம் வருடங்களுக்கு முன்னேஇஃதொரு சிறந்த நகரமாகத் திகழ்ந்திருக்க வேண்டும். இப்பொழுது பாழடைந்த சின்னங்கள்தான் காணப்படுகின்றன. வட்டமாகவோ அல்லது சதுரமாகவோ நான்கு அல்லது ஐந்து மாடிகளையுடைய கட்டிடம் இருந்திருக்க வேண்டுமென்றும், பல நூற்றுக் கணக்கான அறைகள் இருந்திருக்கக் கூடுமென்றும் பாழடைந்த சின்னங்களால் தெரிய வருகின்றன. குறைந்தது ஆயிரம் பேராவது இதில் வசித்திருக்கக் கூடும். மலையுச்சியில் அழகிய ஆற்றங் கரையோரத்திலே இந்நகர் அமைக்கப் பெற்றிருந்தது. இந்நகர் ஒரே வீடுதான். ஒரே சமயத்தில் ஒருவர் உள்ளே நுழையக் கூடியவாறு கதவு அமைக்கப் பெற்றிருந்தது. அறைகளுக்குக் கதவுகள் கிடையாது. இரண்டாவது அல்லது மூன்றாவது மாடியிலுள்ள ஒரு அறைக்கு வந்து, பின்னர் அறையின் உச்சியிலுள்ள பெருத்த துவாரத்தின் வழியாக மற்ற மாடிகளுக்குச் சென்றிருக்கக் கூடுமென்று தெரிகிறது. இக் கட்டிடத்தில் பல அந்தரங்கமான இடங்கள் இருக்கின்றன. இதற்குக் 'கீவாஸ்' (Kivas) என்று பெயர். கூட்டங்கள் நடைபெறுவது இங்குதான். பல அறைகளிலுமுள்ளவர்கள் சில சுரங்கங்களின் வழியாக இங்கு வந்து சேர்வர். சுற்றித் திரியும் பல விரோதிகளிடமிருந்து தப்ப வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன்தான் காற்றும் வெளிச்சமும் நுழையாத இக் கட்டிடங்கள் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். இவைகளுக்கருகேயுள்ள மலைகளில் பல குகைகள். இக் குகைகளில் இந்தியர்கள் வசித்தார்கள் என்பதற்கும் பல சின்னங்கள் காணப்படுகின்றன. ஏணியின் உதவியால் இவர்கள் தங்கள் குகை வீடுகளுக்குச் சென்றார்கள். ஆபத்துக் காலங்களில் இவர்கள் பொதுக் கட்டிடத்திற்கு வந்தார்களென்றும் ஊகிக்கப் படுகிறது.

டவுஸ் (Taos) என்ற இடத்திலுள்ள இந்தியர்கள் புயோப்ளோ (Pueblo) என்ற அழகிய கட்டிடங்களில் வசிக்கிறார்கள். வடக்கு புயோப்ளோ, தெற்கு புயோப்ளோ என்ற இரண்டு நான்கு மாடிக் கட்டிடங்களில் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் வசிக்கின்றன. இரண்டு புயோப்ளோக்களையும் பிரிப்பது மத்தியில் ஓடும் சிறிய ஆறு ஒன்றுதான். இந்த இரண்டு வீட்டுக் காரர்களுக்கும் பல நூற்றாண்டுகளாகச் சில்லரைச் சண்டைகள் உண்டு. ஆனால் இந்தச் சச்சரவுகள் பொது விஷயங்களில் குறுக்கிடுவதில்லை. இங்கு தினந்தோறும் நூற்றுக் கணக்கான யாத்ரீகர்கள் வருகிறார்கள். முதலில் இந்தியக் கவர்னரின் பிரதிநிதி இவர்களை வரவேற்கிறார். தனிப்பட்ட நபர்களைப் படம் பிடிக்க அனுமதிக்கப் படுவதில்லை. கட்டிடங்களைப் படம் பிடிக்க கவர்னருக்கு ஒரு டாலர் கட்டணம் செலுத்த வேண்டும். இப்பணம் அவர்களின் பொது நிதியில் சேரும். தனிப்பட்டவர்களைப் படம் பிடிக்க பத்துக் காசு முதல் ஐம்பது காசு வரை பணங் கொடுக்க வேண்டும். நடனங்களின் போது படம் பிடிக்க யாரும் அனுமதிக்கப் படுவதில்லை.

ஹூகோனு என்பது மற்றொரு இந்தியர் வசிக்குமிடம். இதொரு புதிய நகரம். ஜூனி (Zuni) என்ற இந்தியர்கள் இங்கு வசிக்கின்றனர். இவர்கள் ஏனைய சில இந்தியர்களை விடச் சிறிது முற்போக்குடையவர்கள். வடக்கேயுள்ள இந்தியர்கள் சிறந்த நிலைமையிலிருக்கின்றனர். பல பள்ளிக்கூடங்கள் அவர்களுக்கெனத் தனியாக இருக்கின்றன. நூற்றுக்கணக்கான இந்தியர்கள் தனி மோட்டார்கள் வைத்திருக்கின்றனர்.

இந்தியர்கட்குச் சொந்தமாகச் சில நிலங்கள்தான் இப்பொழுதிருக்கின்றன. ஏனைய எல்லாம் அரசாங்கத்தாராலும், வெள்ளையர்களாலும் பங்கிடப் பட்டு விட்டன. அமெரிக்க இந்தியர்கள் எவ்வித வரியும் செலுத்துவதில்லை. மோட்டார்கள் வைத்திருக்கிறார்கள். அதற்கு லைசென்ஸ் தேவையில்லை. அவர்கள் மோட்டார் ஓட்டுவதற்கும் லைசென்ஸ் அவசியமில்லை. இத்துணை மைல் வேகந்தான் போக வேண்டும் என்ற நிபந்தனையும் அவர்களுக்குக் கிடையாது. ஏதாவது தவறுக நடந்தால் அவர்களுக்குத் தண்டனையுமில்லை. எவ்வளவு அதிகச் சுதந்திரம் பாருங்கள்! இந்தியர்கள், அமெரிக்கச் சரித்திரம் ஆரம்பிப்பதற்கு முன்னமேயே சிறிதளவு அரசியல் அறிவு பெற்றிருந்ததாகத் தெரிகிறது. வருடந்தோறும் நடைபெறும் விருந்தில் தங்கள் தலைவனைத் தேர்ந்தெடுத்தனர். இத்தலைவர்கட்குக் காரியாலயமோ அன்றிச் சம்பளமோ கிடையாது. அறிவு, அநுபவம், ஆண்டுமுதலிய தகுதிகளைக் கொண்டே தலைவனைத் தேர்ந்தெடுத்தனர். அவனுக்கு ஓரளவு கட்டுப் பட்டும் நடந்தனர். தற்பொழுது இந்தியக் கவர்னர்களுக்கு, காரியாலயம், காரியதரிசி, மோட்டார் முதலிய அனைத்தும் உண்டு. இக் கவர்னர் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் பெறும் நிர்வாக சபைக்குப் பொறுப் புள்ளவராவர்.

பண்டைக்கால இந்தியர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் பரவி யிருந்தனர். போக்கு வரத்து வசதிகள் மிகக் குறைவு. ஏராளமான குதிரைகளை உபயோகித்தனர். சாலை வசதிகள் கிடையாது. ஐக்கிய அமெரிக்கா மட்டும் சுமார் 30 லட்சம் சதுரமைல் கொண்டது. எனவே இந்தியர்கள்

ஒருவர்க் கொருவர் அதிகத் தொடர்புடையவர்களாக இருந்திருப்பார்களென்று எண்ணுவதற்கில்லை.

அமெரிக்க இந்தியர்களின் வழக்கங்களிற் சில விசித்திரமானவை. பல பகுதியினருள்ளும் வழக்கங்கள் மாறுபட்டிருந்தன. நினைத்தபொழுது விவாகம் செய்து கொள்வார்கள். பிள்ளைகள் பிறந்தவுடன் மனைவியை விரும்பாவிட்டால், மனைவி மக்கள் எல்லோரையும் விரட்டி விட்டு புதிதாக மணம் செய்து கொள்வார்கள். பழைய மனைவி மக்களைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள். அவர்களுடைய சாதாரண வாழ்க்கை, சடங்குகள் நிரம்பியதாக இருந்தது.

ஒருவர் இறந்தால், அப்பிணத்தை இரண்டு அல்லது மூன்று நாள் வீட்டில் வைத்திருந்து நிச்சயமாகப் பிணம் என்று தெரிந்தபின் பேரில் வீட்டிற்கு முன்னாலோ அல்லது பின்னாலோ புதைப்பார்கள். புதை குழியில் பிணத்தை மூடிய பின்னர், அப்பிணத்தின் உருவம் அடங்கும் அளவில் சிறிய கட்டிடம் ஒன்றை எழுப்புவார்கள். இறந்த மனிதர் உபயோகித்த பழைய ஆடைகளை இக் கட்டிடத்தில் வைப்பார்கள். ஆறுவது நாள் இங்குச் சென்று இவ்வாடைகளைக் கொளுத்தி இறந்தவருக்குச் சில உணவுகள் படைத்து அவரைக் கௌரவிப்பதற்காக உற்றார் உறவினர்களுடன் விருந்துண்பர். இறந்தவரின் ஆத்மா இக்கட்டிடத்தில் சாந்தி பெறும் என்பது இவர்களது நம்பிக்கை.

இவ் விந்தியர்கள் திடசரீரம் உடையவர்கள். பொதுவாக அழகு வாய்ந்தவர்கள். ஆண்களும் பெண்களும் சமமாக வாழ்க்கை நடத்துகின்றனர். நவஜோ பகுதியிலுள்ள இந்தியர்கள் செல்வம் படைத்தவர்கள். இங்குள்ள இந்தியப் பெண்கள் அழகிய ஆடைகள் அணிவதிலும் விலையுயர்ந்த ஆபரணங்கள் அணிவதிலும் விருப்பமுள்ளவர்கள். சுமைதாங்கி போல ஆபரணங்களைத் தாங்க இப்பெண்கள் ஒரு சிறிதும் பின்வாங்க மாட்டார்கள். தங்கள் செல்வ நிலையை ஆபரணங்களின் மூலமாகவே இப்பெண்கள் காட்டிக்கொள்வர். இவர்களின் ஆபரணங்கள் வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களால் ஆனவை. முத்து, பவளம் முதலியவைகளும் அதிகம்.

நவஜோ இந்தியர்கள் கைத்தொழிலில் பேர்பெற்றவர்கள். பல விதமான கம்பளங்கள் நெய்கிறார்கள். வெள்ளியினால் பல பொருள்கள் தயாரிக்கின்றனர். 1850ம் வருடம் மெக்ஸிக்கோ வாசிகள் இத்தொழிலை இவர்கட்குக் கற்பித்தனர். இவர்களின் கருவிகள் மிகவும் சாதாரணமானவை. ஆனாலும் இவர்கள் திறமை பெரிதும் வியக்கத்தக்கது. அவசரமின்றி மெதுவாக இவர்கள் வேலை செய்கின்றனர். அவ்வேலையின் தன்மையையும் இவர்கள் நன்குணர்கின்றனர். புயேப்ளோ இந்தியர்கள் பானை சட்டிகள் செய்வதில் புகழ் பெற்றவர்கள்.

இந்தியர்களிற் பெரும் பாலோர் தற்பொழுது கத்தோலிக்க கிறிஸ்தவர்கள். இவர்கள் வசிக்குமிடங்களிலே இவர்களுக்கென தேவாலயங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஆனால் இவர்கள் பெயரளவில் தான் கிறிஸ்துவர்களா யிருக்கின்றனர். தங்களுடைய பழைய கடவுள்களைப் பூசிப்பதற்கு இவர்கள் மறப்பதில்லை. மூட நம்பிக்கைகளும் இவர்களை விட்டபாடில்லை. அன்னியர்கள் யாரும் நுழையாத அந்தரங்க இடங்களிலே இவர்கள் கூடித் தங்கள் தேவதைகளைப்பூசித்து விருந்துண்டு நடனமாடிக் களிப்பார்கள். இவர்களுடைய நடனங்கள் மிகவும் பேர் பெற்றவைகள்.

மான், எருமை, கரடி, போன்ற மிரு கங்களின் தலைகளை மாட்டிக் கொண்டு இவர்கள் நடனமாடுவது வேடிக்கை யாகவும் கவர்ச்சியுள்ளதாகவும் இருக் கும். இளைஞர்கள் சந்தோஷமாக ஒ ரிடத்தில் கூடிவிட்டால், மணிக்கணக் காக, சில சமயங்களில் இரவு முழு தும் ஆடிக் கொண்டும் பாடிக் கொண் டும் பொழுது போக்குவார்கள்.

பொதுவாக இவர்கள் நல்ல சுபாவ முடையவர்கள். மற்றவர்களோடு அதிகமாகக் கலந்து பழக மாட்டார் கள். நகைச்சுவை குறைவு. சமூகக் கட்டுப் பாட்டை மீற மாட்டார்கள். இவர்களுக்குள் நேரும் சண்டை சச் சரவுகளை நிர்வாக சபையார் மூலம் தீர்த்துக் கொள்வார்கள்.

பொதுவாக அமெரிக்கர்கள், மற்ற வெள்ளையர்களைவிடப் பரந்த நோக்க முடையவர்கள். இந்தியர்களை முன் னேறச் செய்வதற்குக் கூடிய வரை முயற்சி செய்கின்றனர். தற்பொழுது இந்தியர்களின் பிறப்பு விகிதம், வெள் ளையர்களைவிட, நீக்ரோக்களைவிட அதிகமாகி வருகிறது. வடக்குப் பகுதி யில் சில இந்தியர்கள் நகரங்களில் வேலை பார்க்கின்றனர். இந்தியர்கள் சுதந்திரமுடையவர்கள் தான். என் றாலும் நாளடைவில் மற்றத் தடைகளி னின்று விடைபெற்று ஐக்கிய அமெ ரிக்காவின் பிரஜைகளாகிப் பூரண உரிமை பெறும் நாள் விரைவில் தோன்றக்கூடும். ஆனால் ஒன்று: வெள்ளையர்கள்-அவர்கள் யாராயிருப் பினும்சரி, வெள்ளையரல்லாதவர்களின் நன்மையை உண்மையில் விரும்புவார் களா வென்பது சந்தேகிக்கக் கூடிய விஷயந்தான். எனினும் இந்நாட்டைப் பண்படுத்தி உலகிற் சிறந்த நாடுகளில் ஒன்ருகச் செய்த அமெரிக்கர்கட்கு இந்தியர்கள் என்றும் நன்றி செலுத் தக் கடமைப் பட்டிருக்கிருர்கள்.

குறிப்பு:—'இந்தியர்கள்' என்று இக்கட்டுரையில் குறிப்பிடப்படுவது 'அமெரிக்க இந்தியர்கள்' அல்லது 'சிவப்பு இந்தியர்களை'க் குறிக்கும்.



நமது அமெரிக்க நிருபர்
நியுயார்க் நகரத்திலுள்ள இந்த மாளிகையில்தான் வசிக்கிருர்.

சிவப்பு இந்தியர் சம்பந்தமாக இங்கே வெளியிட்டுள்ள போட்டோக்கள் யாவும் "ஜோதி"யின் அமெரிக்க நிருபரால் எடுக்கப் பெற்றவை.

வடக்கேயுள்ள இந்தியர்களிற் சிலர் வசிக்கும் குடிசைகள். இவ்விந்தியர்களில் பலர் சொந்தமோட்டார்கள் வைத்திருக்கின்றனர்.

ஓஸகோனுவில் ஒரு வயோதிகன்



புயோப்ளோவில் தெற்கு வீடு.



டவுஸ் (Tacs)
இந்தியக் கவர்னரின்
காரியாலயமும் மோட்டாரும்.

கிராண்ட் கன்யானு (Grand Canyon)க்கு
அருகிலுள்ள இந்திய கிராமத்தில் தாயும் குழந்தையும்.

வடக்கே அமெரிக்க இந்தியர்கள் கூட்டம்.
தலையில் பல அணிகளோடு விளங்குபவர்கள்
நிர்வாக சபையினர்.



அம்மா! இந்திரா! உன் முகத்தில என்ன இவ்வளவு சிரிப்பு! தாயற்ற குழந்தையாகிய உன்னைப் பார்த்தால், எல்லாருடைய மனமும் உருகிறது. உன் தந்தையோ, தேசம், தேசம் என்று சுற்றித் திரிகிறார். நீ படிப்பிலே ஊக்கங் கொண்டு தனியாக மேனாடு சென்று விட்டாய்!



ஸ்ரீமான் கோபால கிருஷ்ணய்யா
இவர்தான் இந்தக் கட்டுரை எழுதியவர்

ராக்பெல்லர்— ஒரு தனி மனிதன்

—பி. கோபால கிருஷ்ணய்யா
M. A., M. Sc., Ph. D.,

ஸ்ரீமான் கோபால கிருஷ்ணய்யா, தென்னாட்டு அறிஞர்களில் ஒருவர். முன்னர், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பல ஆண்டுகள் ஆசிரியராக இருந்தார். இப்பொழுது அமெரிக்கா நியுயார்க்கிலுள்ள கோலம்பியா சர்வகலாசாலையைச் சேர்ந்த ஆசிரியர் காலேஜில் ஓர் ஆசிரியராக இருக்கிறார். ராக்பெல்லரைப் பற்றி இவர் கொடுக்கும் சில புள்ளி விவரங்கள் ருசிகரமானவை.

காலஞ் சென்ற ஜான் ராக்பெல்லர் உலகத்தில் பெரிய பணக்காரர் என்று பெயரெடுத்தார். இவர், வியாபாரத்திலிருந்து விலகிக் கொண்டபோது, இவருடைய ஆஸ்தி, 1,500,000,000 டாலர் என்று மதிப்பிடப்பட்டது. ஒரு தனி மனிதன், தனது சொந்த முயற்சியினால் அதிகமான பணம் சேர்க்க முடிந்ததற்கு இவர் ஒரு சிறந்த உதாரண புருஷர்.

ராக்பெல்லர், சம்பாத்தியத்திற்கு எப்படி ஒரு சிறந்த உதாரண புருஷராக இருந்தாரோ, அப்படியே சிறந்த கொடையாளியாகவும் இருந்தார். 1855-ம் வருஷத்திலிருந்து 1934-ம் வருஷம் வரையில், மொத்தம் ராக்பெல்லரினால் கொடுக்கப்பட்ட நன்கொடைகளின் மதிப்பு 530,853,632 டாலர். இந்தப் பெருந் தொகையில், 182,851,480 டாலர், ராக்பெல்லர் ஸ்தாபனத்திற்கும், 129,209,167 டாலர், மத்திய கல்வி போர்டுக்கும், 73,985,313 டாலர் லௌராஸ் பெல்மான் ராக்பெல்லர் ஞாபகார்த்த ஸ்தாபனத்திற்கும், 59,931,891 டாலர், வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனத்திற்கும் பெருந் தொகைகளாகக் கொடுத்திருக்கிறார். இவை தவிர, சில்லரை சில்லரையாகப் பல ஸ்தாபனங்களுக்கு ஏராளமான தொகைகள் கொடுத்திருக்கிறார். இவர், தான் தருமமாகச் செலவழித்ததோடு திருப்தி யடையவில்லை. வேறு பலரையும் தருமஞ் செய்யுமாறு தூண்டியிருக்கிறார். மற்றும், இவர், தம் குடும்பத்தினர்க்கும், விகிதாசாரப்படி சொத்துக்களை வழங்கி யிருக்கிறார்.

கையிலே ஒன்றுமில்லாமல் வாழ்க்கையை ஆரம்பித்த இவர், அதிகமான பணத்தைச் சம்பாதித்து, அதிகமான தருமங்களைச் செய்தது, அமெரிக்க வியாபார உலகத்திலேயே ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கிறது. நல்ல பரம்பரை, சுற்றுப்புறத்து நிலைமை முதலியன பலவும்சேர்ந்து இவருக்குத் துணை செய்தன. தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களையும் இவர் நன்றாக உபயோகித்துக்கொண்டார்.

ஜான் டி. ராக்பெல்லர், ரிச்போர்ட் என்ற கிராமத்தில், 1839ம் வருஷம் ஜூலை மாதம் 8ந் தேதி பிறந்தார். இவருடைய தகப்பனார் பெயர் வில்லியம் அவரி ராக்பெல்லர். ஒரு வைத்தியர். தாயார் பெயர் எலிஜா டேவிஸன். ஜான், இவர்களின் மூத்த குழந்தை. வில்லியம் என்றும் பிராங்க் என்றும் இரண்டு சகோதரர்கள் இவருக்கு உண்டு. பெற்றோர்கள், ஜானை, கண்டிப்பாகவும், நல்ல முறையிலும் பழக்கிக்கொண்டு வந்தார்கள்.

தமது பாலிய அனுபவத்தை ராக்பெல்லர் பின்வரும் வாக்கியங்களில் சித்திரித்துக் காட்டுகிறார்:—

> "எனக்கு 7 அல்லது 8 வயது இருக்கும். என் தாயாரின் துணைகொண்டு, முதன் முதலாக வியாபார முயற்சியில் இறங்கினேன். எனக்கென்று சொந்தமாகச் சில வாத்துக்களை வளர்த்து வந்தேன். அவைகளுக்கு ஆகாரமாக என் தாயார் தயிர் சப்ளை செய்து வந்தாள். பட்சிகளை நன்றாக வளர்த்து, லாபகரத்தக்க முறையில் அவைகளை விற்றேன். விற்று முதல் அத்தனையும் லாபக் கணக்காகவே வைத்துக் கொண்டேன்."

ராக்பெல்லரின் பெற்றோர்கள் மத பக்தி நிறைந்தவர்கள். இதனால் தங்கள் குழந்தைக்கு, மத ஸ்தாபனங்களுக்குத் தருமஞ் செய்ய வேண்டுமென்றும், அவைகளை ஆதரிக்க வேண்டுமென்றும் போதனை செய்து வந்தார்கள். தவிர ஒரு காசு வரவு செலவானாலும் கணக்கு வைத்துக் கொள்ளும்படி போதித்து வந்தார்கள். இந்தப் பாடங்களை, ராக்பெல்லர், தமது வாழ் நாளின் கடைசி பாகம் வரையில் அநுஷ்டானத்தில் வைத்திருந்தார். இவர், சிறு பிராயத்தில் எழுதி வைத்திருந்த கணக்குப் புஸ்தகம், பிற்காலத்தில் ஒரு பெரிய ஞாபகச் சின்னமாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறது.

> "என் குடும்பத்தில் எனக்கு ஒரு விநோதமான முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. புதிதான வேலை எதுவாயிருந்தாலும் அலுத்து எங்களுக்குக் கஷ்டமாகத்தோன்றுது. வேலை செய்யவும், சம்பாதித்து மிச்சப் படுத்தவும், பிறர்க்கு வழங்கவும் தான் நாங்கள் சொல்லித்தரப் பட்டோம். ஆரம்பத்திலிருந்தே, எங்களுக்கு வியாபார தோரணையில் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. 'தன்கையே தனக்குதவி' என்னு முறையில் நாங்கள் பயிற்சி அளிக்கப்பட்டோம். என்னுடைய 10 அல்லது 11வது வயதிலேயே நான் எவ்வளவு அதிகமாக வியாபாரம் செய்ய முடியுமோ அவ்வளவு அதிகமாக வியாபாரஞ் செய்யுமாறு உற்சாகப் படுத்தப் பட்டேன். சிறு பருவத்திலிருந்தே, நான் சாமான்களை வாங்குவதற்கு அனுப்பப் பட்டேன். நான் வியாபாரிகளிடத்தில் நன்றாகப் பேரம்பேசி சாமான்களை வாங்கினேன். இஃதெனக்கு நல்ல பயிற்சியாயிருந்தது".

இவை ராக்பெல்லரின் வாக்கியங்கள். ராக்பெல்லர், தமது 14வது வயதிலேயே, பணம் சம்பாதிக்கும் வித்தையில் நிபுணராகி விட்டார். இவர் 50 டாலர் சேர்த்து வைத்து 7% விகிதம் வட்டிக்குக் கொடுத்து, அந்த வருஷக் கடைசியில் அசலும் வட்டியுமாக வாங்கினார். தவிர, ஒழிந்த நேரங்களில் நிலங்களில் கூலி வேலை செய்து, அதன் மூலயாக வேறு சம்பாதிக்கத் தொடங்கினார்.

ராக்பெல்லர், காலேஜ் படிப்புப் படிக்கவில்லை. இவருடைய தகப்ப

ளுருடைய பொருளாதார நிலைமை, இவருக்கு உயர்தரக் கல்வி கொடுக்க முடியாமலிருந்தது. எனவே, இவர், ஹைஸ்கூல் படிப்பை முடித்துக் கொண்டு, ஒரு வியாபாரக் கல்லூரியில் சேர்ந்து பயிற்சி பெற்றார். இங்கேதான், இவர் வியாபாரப் பயிற்சியனைத்தையும் உயர்ந்த தோரணையில் கற்றுத்தேர்ச்சி பெற்றார்.

ராக்பெல்லர், 15-வது வயதில், கிளெவ்லாண்டிலுள்ள பாப்டிஸ்ட் மாதா கோயிலில் ஒரு காரியஸ்தராகச் சேர்ந்து கொண்டார். அப்பொழுது இந்த மாதா கோயிலுக்கு இரண்டாயிரம் டாலர் கடன் இருந்தது. இவர், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் மாதா கோயிலின் வாயிற்படியில் நின்றுகொண்டு, நன்கொடை வசூலித்து, வெகு சீக்கிரத்தில் மேற்படி கடனைத் திருப்பிக் கொடுத்து விட்டார். இரண்டு வருஷத்திற்குப் பிறகு, அதாவது இவருடைய 17-வது வயதில், இவர் மேற்படி மாதா கோயிலின் டிரஸ்டியாக நியமிக்கப்பெற்றார். இதன் பின்னர், மேற்படி மாதா கோயிலின் ஆதரவில் நடைபெற்று வந்த ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடத்திற்கு மேற்பார்வை யாளராக நியமிக்கப்பட்டு, சுமார் முப்பது வருஷம் வரை இந்த வேலையைப் பார்த்து வந்தார். மாதா கோயில் சம்பந்தமாகத் தாம் பிச்சை யெடுக்க நேர்ந்தது குறித்து இவர் எப்பொழுதும் பெருமையாகப் பேசுவார்.

ராக்பெல்லருக்கு முதன் முதலாக உத்தியோகங் கிடைத்தது 26-9-1855ல். அப்பொழுது இவருக்கு வயது 16. இந்த வேலைக்காக இவர் ஆறு வாரம் சுற்றியலைந்தார். கடைசியில் இவருக்கு ஓர் உத்தியோகம் கிடைப்பது அதிக சிரமமாகிவிட்டது. தமக்கு முதன் முதலாக உத்தியோகங் கிடைத்த செப்டம்பர் மாதம் 26ந் தேதியை ஒவ்வொரு வருஷமும் இவர் நண்பர்களுக்கு விருந்தளித்துக் கொண்டாடி வந்தார். முதலில் இவர் உத்தியோகத்தில் சேர்ந்து கொண்டாரே யொழிய இவருக்கு ஒரு வருஷம் வரை, எவ்வித சம்பளமும் கிடையாது. இதற்குப் பிறகுதான் இவருக்குச் சம்பளம் போட்டார்கள். கிடைத்த சம்பளத்தில், கொஞ்சம் மிகுத்தி, அதிலும் சில தான தருமங்களைச் செய்தார். பின்னர், இந்த உத்தியோகத்தை விடுத்து விட்டு, 1858ம் வருஷம் மாரிஸ் பி. கிளார்க் என்பவருடன் கூட்டாகச் சேர்ந்து ஒரு கமிஷன் வியாபாரத்தைத் தொடங்கினர். ஒவ்வொருவரும் இரண்டாயிரம் டாலர் மூலதனம் போடவேண்டுமென்று ஏற்பாடு. ராக்பெல்லரிடத்தில் அப்பொழுது கையிருப்பு ஆயிரம் டாலர்தான். எனவே, தம் தகப்பனரிடத்திலிருந்து 10% வட்டியின் பேரில் ஆயிரம் டாலர் கடன் வாங்கி, மேற்படி வியாபாரத்தில் போட்டார். இந்த வியாபாரக் கம்பெனியின் விலாசம் 'கிளார்க் அன்ட் ராக்பெல்லர்' என்பது. முதல்வருஷத்தில் இந்தக் கூட்டு கம்பெனிக்கு 4400 டாலர் நிகர லாபம் கிடைத்தது. ராக்பெல்லர், தாராளமாகக் கடன் வாங்குவதில் அதிக நம்பிக்கையுடையவர். வியாபார விஸ்தரிப்புக்காக இவர் கடன் வாங்கக் கொஞ்சங்கூடப் பின் வாங்கியதில்லை. இவர் வியாபார ஒழுங்கு, நாணயம், முதலிய வற்றைப் பார்த்து பாங்கிக்காரர்கள் இவருக்குத் தாராளமாகக் கடன் கொடுக்க ஆரம்பித்தார்கள். ஒரு சமயம், ஒரு பாங்கி அதிகாரி, இவருக்கு எவ்வளவு கொடுக்கலாம் என்று நிர்ணயிக்கப் பட்டிருந்ததோ

அவ்வளவு தொகையையும் வாங்கிவிட்டாரென்றும், இது சம்பந்தமாக இவரை டைரக்டர்கள் பார்க்கவிரும்புவதாகவும் எச்சரிக்கை செய்தார்.

'நிரம்ப சரி; அவர்களை நேரில் நான் போய்ப் பார்க்கிறேன். ஏனென்றால் இன்னும் அதிகமாக நான் கடன் வாங்க வேண்டியிருக்கிறது' என்றார் இதற்குப் பதில் ராக்பெல்லர். இவர் விரும்பியபடி, பாங்கி அதிகாரிகளும் இவருக்கு அதிகத் தொகையைக் கொடுத்து உதவினார்கள். இவரும் குறித்த தவணைப்படி பணத்தைக் கொடுத்து விட்டார்.

ராக்பெல்லர் முதன் முதலாக எண்ணெய் வியாபாரத்தில் புகுந்தது 1862-ம் வருஷத்தில். இவரும், கிளார்க்கும், சாமியல் ஆண்ட்ரூஸ் என்பவரும் சேர்ந்து, 'ஆண்ட்ரூஸ் கிளார்க் கம்பெனி' என்ற ஒரு எண்ணெய் வியாபாரக் கம்பெனியை ஆரம்பித்தனர். ஓரிடத்தில் இதற்கு வேண்டிய கட்டிடங்கள், கருவிகள் முதலியனவும் அமைக்கப் பட்டன. ஆனால் இது வெற்றிகரமாக நடக்கவில்லை. எனவே இந்தக் கம்பெனி கலைக்கப்பட்டு ஏலத்திற்கு விடப்பட்டது. ராக்பெல்லரே துணிந்து, இந்த ஸ்தாபனத்தை 75,000 டாலருக்கு வாங்கினார். இதுதான் பின்னாடி, ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனியாக மாறியது. இதன் பிறகு, பல சிறிய கம்பெனிகள் இதில் சேர்ந்து ஐக்கியமாயின. 1882-ம் வருஷத்தில் இந்தக் கம்பெனியின் மூலதனம் 70,000,000 டாலராகவும் பின்னர் 95,000,000 டாலராகவும் உயர்த்தப்பட்டது.

தமது வியாபாரம் இவ்வளவு தீவிரமாக முன்னேறும் என்று தாம் கனவிலும் கருதவில்லையென்று இவர் கூறுகிறார். இவர் வியாபாரம் பெருகப் பெருக, இவருக்குப் போட்டி பலமாக ஏற்பட்டது. அதற்காக, இவர், தமது வியாபாரத்தைக் காப்பாற்றிக்கொள்ள பலமாகப் போராட வேண்டியிருந்தது. ராக்பெல்லர், தமது வியாபாரத்தில் அதிகமான சிக்கனத்தைக் காட்டி, கணக்குகளை ஒழுங்காக வைத்து, கம்பெனியை அதிக வேகமாக முன்னுக்குக் கொண்டு வந்தார். ராக்பெல்லருடைய பெயர் உலகமெங்கும் பரவியது. பெட்ரோல் நிறைந்த இவருடைய கம்பெனியில் கப்பல்கள் ஒவ்வொரு துறைமுகத்தையும் நாடிச் சென்றன. பெட்ரோல் வியாபாரத்திலிருந்து வருகிற பணத்தைக்கொண்டு இவர், கப்பல்கள் வாங்கினார். ரெயில் பாதைகள் போட்டார். பெட்ரோல் வியாபாரத்திற்கு அநுசரணையாகவுள்ள எல்லாத்துறைகளிலும் மூலதனத்தைப் போட்டார். இப்படியே பல சில்லரைக் கம்பெனிகளையும் சேர்த்து ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனியை ஒரு பெரிய டிரஸ்டாக்கினார். இதனால், பலர் இவருக்கு விரோதமாகக் கிளம்பினர். பத்திரிகைகளில் இவரைத் தாக்கிப் பல வியாசங்கள் வந்தன. சில நூல்களும் வெளித் தோன்றின. இவைகளையெல்லாம் ராக்பெல்லர் மறுத்தார். 'எந்த மனிதனும், அல்லது எந்தத் தனிக் கம்பெனியும் ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனியில் பலவந்தமாகப் புகுத்தப்படவில்லை' என்று இவர் கூறினார். தம்முடைய வியாபார முறைகள், ஒரு பொருளாதாரப் புரட்சியை உண்டுபண்ணிவிட்டனவென்றும், இதனால் பழையமுறைகளைக் கையாள்கிறவர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கலாமென்றும் இவர் சொன்னார். தம்மைத் தாக்குகிறவர்களுக்குப் பதில் சொல்வதில் இவர் காலத்தை வீணாக்கவில்லை. 'சில சமயங்களில் நாங்கள் குரூரமாகத் தாக்

கப் படுகிறோம். ஆனால் இதற்காக நாங்கள் சோர்ந்து போகவில்லை. உலகசகோதரத்துவத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு. கடைசியில் எல்லாம் நன்மையாக முடியும். என்மீது பழி தூற்றுகிறவர்களுக்கு நான் ஒன்றும் பதில் சொல்வதில்லை. நான் இறந்த பிறகு உண்மை தெரியவரும்' என்று இவர் ஒரு சமயம், தம் நண்பர்களுக்குச் சமாதானம் கூறினர்.

1884-ம் வருஷம், தமது 56வது வயதில் ராக்பெல்லர், வியாபாரத்திலிருந்து விலகிக் கொண்டு, ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனியின் பிரசிடெண்டாகமட்டும் 1911-ம் வருஷம் வரையில் இருந்தார். வியாபாரத்திலும், பிறர்க்குத் தருமஞ்செய்வதிலும் இவருக்குச் சிறந்த ஒரு குணம் இருந்தது. கெட்டிக்காரர்களைப் பொறுக்கியெடுத்து, அவர்களுக்குப் பூரணப் பொறுப்பையும் கொடுத்து விடுவதுதான் இந்தக் குணமாகும்.

ராக் பெல்லர் ஒரு வியாபாரி என்ற முறையில்தான் பொது ஜனங்களுக்குத் தெரியுமே தவிர, அவருடைய குணதிசயங்களைப் பற்றியோ, அவருடைய அன்றாட வாழ்க்கையைப் பற்றியோ, அவர் குடும்பத்தாருடன் எங்ஙனம் பழகி வந்தார் என்பதைப் பற்றியோ பலருக்கும் தெரியாது. இவைகளைப் பற்றி அடுத்த தடவை எழுதுவோம்.

தாய் யார்?

—"தேவ கவி"

தாய் யார்?

தாய், ஆதி சக்தி; சிருஷ்டியின் ஊற்று; பிராணிகளின் ஜனனீ.

தாய், உலகத்திற் கெல்லாம் வெளிச்சங் கொடுக்கும் ஜோதி; ஜன சமூகத்தின் வழி காட்டி; வீட்டின் எஜமானி.

தாய், சாக்ஷாத் அன்பின் சொரூபம்; தனது மக்களின் சுகத்திற்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்வதிலேதான் அவள் ஆனந்த மடைகிறாள். அவள், தவம், தியாகம் ஆகிய இவ்விரண்டின் மூர்த்தி.

தாய், கீழே விழுந்துகிடக்கிறவர்களைக் கைதூக்கி விடுவதற்காகவும், பாவிகளுக்குப் பிராயச் சித்தஞ் செய்வதற்காகவும், ஜனங்களின் க்ஷேமத்திற்காகவும் ஜன்ம மெடுத்திருக்கிறாள்.

தாய், தேசம், சமூகம் இவை நிலைத்து நிற்பதற்கு ஆதாரமாயிருக்கிறாள். அவள்தான் தேசத்தின் ஆத்மா.

உலகத்திலே தாயாரின் ஸ்தானந்தான் மகா சிரேஷ்டமானது. அவள் எல்லாராலும் பூஜிக்கப்பட வேண்டியவள். உலகத்தினால் வந்திக்கப்படும் தேவி அவள்!

கனகாவின் கடிதங்கள்

—— "சரசா"

கடிதம் II

கீழவேளூர்

புரட்டாசி வெள்ளிக்கிழமை.

அம்மாவுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம். இது புரட்டாசி மாதம் என்று மட்டும் தெரியும். தேதி என்னவென்று தெரியவில்லை. அதனால்தான், தேதியைப் போடாமல் கிழமையை மட்டும் போட்டு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

முந்தின கடிதத்தை நான் ரொம்ப அவசரமாக முடித்து விட்டேன். அங்கே, நமது 'ஜிம்மி' (நாயின் பெயர்) எப்படி இருக்கிறதென்று கேட்க வேண்டுமென்று நினைத்திருந்தேன். அது இப்பொழுது எப்படி இருக்கிறது? என்னை நினைத்துக் கொண்டு குலைக்கிறதா? அதற்குத் தினசரி 'டாக் சோப்' (Dog Soap) போட்டுக் குளிப்பாட்டுகிறீர்களா? நான் ஊருக்குப் புறப்பட்டு வருகிற போது அது எவ்வளவு வருத்தத்துடன் அழுதது பார்த்தாயா அம்மா! எனக் கென்னமோ அது அடிக்கடி கனவிலேகூட வருகிறது. ஆனால் இங்கே நாய், கீய் ஒன்றும் வளர்க்கக் கூடாது. வளர்த்தால் போய்விட்டது என்னுடைய மாமனாரின் வைதிகமெல்லாம். என்னமோ என் தலையெழுத்து, இந்த வைதிகக் குடுக்கைக்குள் வந்து அகப்பட்டுக் கொண்டேன். அடி வயிற்றிலிருந்து பெருமூச்சு விடக்கூட யோசனையா யிருக்கிறது இங்கே.

என்னமோ அம்மா, இந்த வீடு கட்டி யிருக்கிற பிளானே எனக்குப் பிடிக்கவில்லை. சொந்த வீடுதான் கட்டிக்கொண் டிருக்கிறார்களே, அதை நல்ல புது மாதிரியாகக் கட்டிக் கொள்ள மாட்டார்களோ! எல்லாம் பழைய மோஸ்தர்தான். நாலு பக்கம் தாழ் வாரம்; நடுவிலே முற்றம். திம்மை திம்மையாகக் கம்பங்கள். அழகா அந்தமா ஒன்றும் காணும். முன்னே ஒரு ஹால் போட்டுக் கட்ட மாட்டார்களோ? ரேழியாம் ரேழி. வீட்டுக்குள்ளே வருகிறபோதே குகைக்குள்ளே போகிற மாதிரி இருக்கு.

வீடுதான் இப்படி கட்டி யிருக்கிறார்களென்றால், முன் பக்கமும் பின் பக்கமும் தோட்டத்தை எப்படி வைத்திருக்கிறார்கள் தெரியுமோ! இடமென்னமோ விசாலமாக இருக்கிறதே, அதை அழகாக உபயோகிக்கக்கூடாதா? முன் பக்கம் தோட்டம் வைத்திருக்கிறார்கள். அதில் அழகான குரோட்டன்ஸ் வைக்க மாட்டார்களோ? அல்லது நல்ல மாதிரியான புஷ்பச் செடிகள் வைக்க மாட்டார்களோ? பால்ஸம் என்ன, கிரிஸாந்திமம் என்ன, தாலியா என்ன இப்படி பார்ப்பதற்கு அழகான புஷ்பங்கள் எத்தனையோ இருக்க, திருப்பித் திருப்பி, மல்லிகைச் செடி வைத்திருக்கிறார்கள். இதிலேயே எத்தனையோ தினுசாம். ஊசி மல்லி, முல்லை இப்படி எல்லா தினுசுகளையும் வைத்திருக்கிறார்கள். சம்பங்கிக் கொடி படர்ந்திருக்கிறது. ரோஜா செடி கொஞ்சம் இருக்கிறது. இதிலேகூட, பட்டன் ரோஸ், க்ரீபர் ரோஸ் முதலிய புது மாதிரிகள் ஒன்றும் இல்லை. இவையெல்லாம் எதற்கு அம்மா? புஷ்பக் காரனிடத்திலே ஒரு காசை வீசி

எறிந்தால் கொண்டு கொட்டி விட்டுப் போகிறுன். அதை விட்டு, இவையெல்லாம் எதற்காக வளர்க்கிருர்கள்? போதாக் குறைக்கு, ஈசுவரனுக்குப் பிரியமான புஷ்பங்களென்று சொல்லி சரக்கொன்னே, பன்னீர் பூ, நில சம்பங்கி இவ்வகளே யெல்லாம் வைத்திருக்கிருர்கள். யாருக்கு வேண்டியிருக்கு இவை யெல்லாம்! வாழை மரங்களே நிறைய வைத்திருக்கிருர்கள். கத்தரி, வெண்டை, பாகல், பீர்க்கு, அவரை எல்லாம் இருக்கின்றன. தோட்டத்திலே வீசி வரக்கூட இடமில்லே. இந்த லட்சணத்திலே என் மாமியாரின் உத்திரவு என்னவென்ருல், தோட்டத்திலே பூக்கிற புஷ்பங்களேத்தான் தலேயிலே கோத்து வைச்சுக்கணும்; ஆத்திலே விளேகிற காய் கறிகளேத்தான் சமைக்கணும். இங்கே வந்த பிற்பாடு, கோஸ், காலிப்ளவர் முதலிய பெங்களூர் கறிகாய் தினுசுகள் ஒன்றும் நான் சாப்பிடவேயில்லே. யாராவது வந்தால் அவைகளேக் கொஞ்சம் கொடுத்தனுப்பு.

குளிக்கிறபோது மூஞ்சியிலே மஞ்சளே பூசிக்கொள் என்கிருள் என் மாமியார். அதை நான் கையால் கூட தொட்டதில்லே. நானென்ன பேயா, பிடாரியா, மூஞ்சியிலே மஞ்சளேயும் குங்குமத்தையும் அப்பிக் கொள்ள. சோப் தேய்த்துக்கொண்டு குளித்தால்தான் உடம்பு மொரமொரன்னு இருக்கு. குளித்தபிறகு முகத்திலே பவுடர் பூசிக் கொள்வது என் மாமியாருக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லே இது என்ன வேஷம் என்கிருள்.

பத்து முழம் புடவைக்கு மேல் நான் கட்டிக் கொண்டதே யில்லே. உள்ளே ஷிம்மியும் பாடிஸூம் போட்டு அதற்கு மேலே பத்து முழம் புடவையைக் கட்டிக் கொண்டால் தான், உடம்பிலே பாந்தமாயிருக்கு. பதினெட்டு முழம் புடவையைக் கட்டிக் கொள் என்கிருள். அதுவும் குசகம் வைத்துத் தான் கட்டிக்கொள்ள வேண்டுமாம். எனக்கு அழமாட்டாத குறை. 'ஆம்படையானேப் பார்த்துப் பல்லே இளிக்கத் தெரிகிறது, குசகம் வைச்ச புடவை கட்டிக்கோ என்ருல் மூஞ்சி சிணுங்கறதே' என்று படபடக்கிருள் என் மாமியார்.

நீ வாங்கிக் கொடுத்த சேலே யொன்றையுமே கட்டிக் கொள்ளக் கூடாதாம். எனக்கு பிளேயின் மாதிரிதான் பிடிக்கிறது. 'பெங்காலி சாரி' கட்டினுல்தான் இந்தக் காலத்திற்கு எடுப்பாகவும் இருக்கு. என் மாமியாரோ கர்நாடக மாதிரியைத்தான் கட்டிக் கொள்ளச் சொல்கிருள். இந்தச் சேலேகளிலேயே புது தினுசுகள் வந்திருக்கிறதாம். கார்ட் கரையாம், மேக வர்ணமாம். என்னென்னமோ சொல்கிருள். இவைகளே யெல்லாம் கட்டிக் கொள்வது ஏதோ வேஷம் போட்டுக் கொள்வது போலிருக்கிறது: கூட எவ்வளவு பளுவு? இந்தச் சுமையை யார் தூக்குவது?

என்னமோ அம்மா, என் கஷ்டராலி சொல்லித்தொலேயாது.

அப்பா அங்கே எப்படி இருக்கிருர்? சர்க்கூட் போகிருரா? ஜவான்களெல்லாம் ஒழுங்காக வேலே செய்கிருர்களா? எனக்கு இப்பொழுது கொண்டை கரகரப்புஇல்லே. குழந்தைகிச்சுவும், பாபா பேபியும் என்னே நினேக்கிருர்களா? அக்கா எங்கே என்று அழுகிருர்களா? அவர்களேமடியிலே வைத்துக்கொண்டு, ஊஞ்சலிலே ஆடணும்னு இருக்கு. இந்த வீட்டிலே ஊஞ்சலேயும் காணேம்; கீஞ்சலேயும் காணேம்.

உன் மாப்பிள்ளேக்கு இன்னும் எங்கேயும் வேலே அகப்படவில்லே.

பிரியமுள்ள கனகா

பசி யெடுக்குதே !—ஒரு விதவையின் புலம்பல்

—"பழைய பெருச்சாளி"

இந்தியா ஒரு காலத்தில் கைத் தொழிலில்—சிறப்பாக நெய்தற்றொழிலில்—அதிக பிரசித்தி பெற்றிருந்தது. சென்ற 150 வருஷங்களாக, அந்நிய நாடுகளிலிருந்து பகட்டான சாமான்கள் வந்து இறங்க இறங்க, இந்தியாவின் உற்பத்தி குறைந்து கொண்டுவர ஆரம்பித்தது. சுமார் 110 வருஷங்களுக்கு முன்னரேயே, கை ராட்டைகளில் நூல் நூற்று ஜீவனஞ் செய்து வந்த கிராம வாசிகள் கூக்குர லிட ஆரம்பித்தார்கள். 'சர்க்கா என் ஜீவனதாரி; அதுவே என் குமாரி' என்று பாட்டுப் பாடி வந்தவர்களெல்லாரும் அழ ஆரம்பித்து விட்டனர்.

1828-ம் வருஷத்தில் வங்காள மாகாணத்தில், 'சமாசார தர்ப்பணம்' என்ற பெயருடைய ஒரு வங்காளி பத்திரிகை பிரசுரமாகி வந்தது. அதில் ஒரு பெண், தன் பரிதாப நிலையை விவரித்துப் பின்வரும் ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறாள்.

சாந்திபூர், 1828ஸ்ரு ஜனவரி மீ 2உ
ஆசிரியர், **சமாசார்.**

நான் ஒரு நூல் நூற்பவள். அதிக மான கஷ்டங்களை அநுபவித்த பிறகு இந்தக் கடிதத்தை எழுதலானேன். தயை செய்து உங்கள் பத்திரிகையில் இதை வெளியிடவும். உங்கள் பத்திரிகையில் எழுதினால் என் கஷ்டங்களைக் குறைத்து, என் எண்ணத்தைப் பூர்த்தி செய்யக் கூடியவர்கள் காதில் விழும் என்று நான் கேள்விப் படுகிறேன். ஓர் ஏழையினுடைய இந்தக் கடிதத்தைத் தயை செய்து அசட்டை செய்ய வேண்டாம்.

நான் ஒரு துரதிருஷ்ட சாலி. என் துயரங்களை யெல்லாம் சொல்வதென்றால் அது ஒரு பெருங்கதையாக முடியும். ஆனாலும் சுருக்கமாக உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

என்னுடைய 22வது வயதில் நான் விதவையாகி விட்டேன். எனக்கு மூன்று பெண் குழந்தைகள். என் கணவர் இறந்து போனபோது, ஆஸ்தி யொன்றும் வைத்து விட்டுப் போகவில்லை. எனவே, வயதான தகப்பனர், என் மாமியார், என் மூன்று பெண்கள் இவர்களனைவரையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. என் புருஷருடைய முதல் திதிக்குக் கூட, என்னுடைய நகைகளை விற்றுத்தான் செய்ய வேண்டியிருந்தது. பட்டினி கிடக்க வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டோம். கடைசியில் கடவுள் எங்களுக்கு ஒரு வழி காண்பித்தார். நான் தக்ளியிலும் கைராட்டையிலும் நூல் நூற்க ஆரம்பித்தேன்.

காலையில் என் வீட்டு வேலைகளையெல்லாம் செய்து விட்டு, பிறகு பகல் வரையில் கைராட்டையில் நூல் நூற்றுக் கொண்டிருப்பேன். ஆனால் அந்நிய நூல் (லங்காஷைரிலிருந்து இறக்குமதி யாகிற நூல்) எங்களுக்கு அழிவைக் கொண்டு வந்து விட்டது. ஜனங்கள், என்போன்றார் நூற்ற நூலினால் நெய்யப் பெற்ற துணிகளை வாங்க மறுக்கிறார்கள். ஏனென்றால் இரண்டு மாதங்களுக்குள் இது நைந்து விடுகிறதாம். அங்கே யிருக்கப்பட்டவர்கள், (அதாவது லங்காஷைரிலே) இந்த என்னுடைய வேண்டுகோளைக் கவனித்து இங்ஙனம் நூல்களை அனுப்பிப்பது சரியா என்பதைக் கவனிக்க வேண்டுகிறேன்.

ஒரு நூல்நூற்பவள்

சர்வதேச சர்க்கரை ஒப்பந்தம்—
இந்தியாவின் நிலைமை

—டி. எஸ். அவினாசிலிங்கம்
B. A., B. L., M. L. A.

ஸ்ரீமான் அவினாசிலிங்கம், இந்தியா சட்ட சபையில் ஓர் அங்கத்தினர்; வயதிலே சிறியவர்; ஆனால் அறிவிலும் தியாகத்திலும் பெரியவர். சொல்லளவோடு திருப்தியடைகிற கர்ம வீரரல்லர் இவர். மேடு பள்ளம் நிறைந்த பொருளாதாரத் துறையில் லாகவமாக நீஞ்சும் ஆற்றல் பெற்றவர். தமிழில் ஒழுங்கான ஒரு பொருளாதார நூலை முதன் முதலாக வெளியிட்ட பெருமை இவரையே சாரும். 'தமிழ்ப்பணியில் ஈடு பட்டவர்களுக்கு என்னாலியன்ற சேவை செய்ய எப்பொழுதும்கடமைப்பட்டிருக்கிறேன்' என்ற இவருடைய வாக்கியங்கள் இவருடைய வாழ்க்கையின் குறிக்கோளை நன்கு புலப்படுத்துகின்றதல்லவா?

சர்வதேச சர்க்கரை மகாநாடு 1937-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 5-ந் தேதி லண்டனில் கூடியது. இதில், சர்க்கரையை உற்பத்தி செய்வதன் சம்பந்தமாகவும், அதனை விற்பனை செய்வதன் சம்பந்தமாகவும் சர்வதேச ஒப்பந்தம் ஒன்று 6-5-1937ல் கை யெழுத்திடப் பெற்றது. இந்த மகாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாக டாக்டர் டி. பி. மீக் (Dr. D. B. Meek) என்பவர் இருந்தார். இந்தியாவில் சர்க்கரைத் தொழில் ஆரம்ப தசையிலிருந்தாலும் அபிவிருத்தியடைந்து கொண்டு வருகிறது. எனவே, இந்தச் சர்வதேச சர்க்கரை ஒப்பந்தத்தினால் இந்தியா, எவ்வளவு தூரம் சாதக பாதகங்களை யடையக் கூடும் என்பதை நாம் கவனிக்க வேண்டியது அவசியமாகும்.

இந்த ஒப்பந்தத்தின் 16வது பிரிவில் இந்தியாவைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன்படி, இந்த ஒப்பந்தம் அமுலில் இருக்கிற வரை, பர்மாவைத் தவிர, வேறெந்த நாட்டிற்கும் கடல் மூலமாகச் சர்க்கரையை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதில்லை யென்று இந்தியா அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்தியாவிலிருந்து பர்மாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சர்க்கரையானது பர்மாவிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் இந்தியா அரசாங்கம் செய்து கொண்ட இந்த ஒப்பந்தம் பிரயோஜன மில்லாமற் போய் விடுமே யென்பதற்காக, அப்படி மறைமுகமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுவதாகத் தெரிந்தால், இந்த விஷயத்தை இந்திய அரசாங்கத்தார், பர்மா அரசாங்கத்தாரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, தாங்கள் ஏற்படுத்தியுள்ள தடை, பயனுள்ளதாயிருக்கு மாறு செய்து கொள்வர். இந்த ஒப்பந்தம், அநுஷ்டானத்திற்கு வருகிற தேதியிலிருந்து ஐந்து வருஷம் வரை அமுலில் இருக்குமென்றும், இதில் கையெழுத்திட்ட அனைவரையும் இது கட்டுப் படுத்தும் என்றும், ஒப்பந்தத்தின் 50வது ஷரத்து கூறுகிறது. (51-வது ஷரத்தின்படி, சில சந்தர்ப்

பங்களில், கையெழுத்திட்ட தேசங்கள் இதிலிருந்து விலகிக் கொள்ளலாம்.) இந்த ஒப்பந்தம் அநுஷ்டானத்திற்கு வருமானால் கடல் மார்க்கமாக பர்மாவுக்குத் தவிர, வேறெங்கும் இந்தியாவிலிருந்து சர்க்கரையை ஏற்றுமதி செய்ய முடியாது. இதைப் பற்றிச் சிறிது பரிசீலனை செய்து, இந்த ஒப்பந்தத்தினால் இந்தியாவுக்கு நன்மை உண்டா என்பதைக் கவனிப்போம்.

சென்ற சில வருஷங்களாக, சர்க்கரைத் தொழிலானது அதிக அபிவிருத்தி யடைந்திருக்கிறது. உலகத்தில், சர்க்கரையை அதிகமாக உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. பீட் கிழங்கிலிருந்து செய்யப்படுகிற சர்க்கரையையும், கரும்பிலிருந்து செய்யப்படுகிற சர்க்கரையையும் சேர்த்துப் பார்த்தால், 1935–36ம் வருஷத்தில் உலகத்தில் 27,128 ஆயிரம் டன் சர்க்கரை உற்பத்தியாயிருக்கிறது. இதே வருஷத்தில் இந்தியாவில் 3,688 ஆயிரம் டன் சர்க்கரை உற்பத்தியா யிருக்கிறது. இவற்றில் 2,508 டன் வெல்லமும், 1,180 டன் சர்க்கரையுமாகும். வெல்ல உற்பத்தியையும் சேர்த்துக் கொண்டு கணக்குப் பார்த்தோமானால், இந்தியாதான், உலகத்திலே அதிகமான சர்க்கரையை உற்பத்தி செய்கிற நாடு என்று சொல்லலாம். ஏனென்றால் சோவியத் ருஷ்யா 2,612 ஆயிரம் டன்கள் தான் உற்பத்தி செய்கிறது. தென்னமெரிக்காவிலுள்ள க்யூபா (Cuba) தேசம், 2,603 டன்களை உற்பத்தி செய்திருக்கிறது. ஆனால், இந்தியாவில் அதிகமான சர்க்கரை செய்யப்படுகிறதே யென்பதற்காக, அது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று நாம் சொல்லவில்லை. முதலாவது, உள் நாட்டிலே தேவையாயிருக்கிற சர்க்கரையை சப்ளை செய்ய வேண்டும். இரண்டாவது, வெளி நாடுகளிலே விற்பனை யாகக்கூடிய ரகத்தை உற்பத்தி செய்ய வேண்டும். மூன்றாவது, வெளிநாட்டு மார்க்கெட்டுகளில், இதன் விலையானது, மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் சர்க்கரையோடு போட்டி போடக் கூடியதா யிருக்க வேண்டும்.

இந்தியாவுக்குள்ளே எவ்வளவு சர்க்கரை செலவழிக்கப் படுகிறதென்பதற்கு முறையாக அரசாங்கத்தார் எவ்வித கணக்கும் எடுக்கவில்லை. நிர்ணயமான கணக்கு எடுப்பதும் அசாத்தியம். நமது தேசத்து ஜனங்களுக்கு எவ்வளவு சர்க்கரை தேவையென்பதற்கு உத்தேசமாகச் சில புள்ளிகள் போடப்பட்டிருக்கின்றன. இவைகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு பார்த்தோமானால், வெல்லத்தைத் தவிர்த்து, சர்க்கரை மட்டும் இந்தியாவில் 1,150 ஆயிரம் டன் தேவையா யிருக்கிறது. இதனைக் கொண்டு 1935–36ம் வருஷத்துச் சர்க்கரை உற்பத்திக் கணக்கைப் பார்த்தால், இந்தியா, எவ்வளவு தேவையோ அவ்வளவு சர்க்கரையை ஏறக்குறைய உற்பத்தி செய்து கொள்கிறது என்பது தெளிவாகிறது. ஆனால் எவ்வளவு உற்பத்தி செய்யவேண்டுமோ அந்தத் திட்டத்திற்கு இந்தியா இன்னும் வந்துவிடவில்லை. 1936–37ம் வருஷத்துப்புள்ளி விவரப்படி 100-க்குச் சுமார் $16\frac{3}{4}$ விகிதம் கரும்புதான் ஆலைகளில் சர்க்கரைக்காக உபயோகிக்கப்படுகின்றது. சரியான மார்க்கெட்டு இருந்தால் இன்னும் அதிகமான கரும்பை ஆலைகளில் கொடுத்து நசுக்க முடியும்.

ஐக்கிய ராஜ்யத்தில் (அதாவது இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, ஐர்லாந்து) வருஷந்தோறும் சராசரி 20 லட்சம் டன் சர்க்கரை செலவழிகிறது. இதில் ஏறக்குறைய 100க்கு 96 பாகம், வெளிநாடுகளிலிருந்து வருகிற மூலப் பொருள்களிலிருந்து தயாரிக்கப் பட்டு மார்க்கெட்டுக்குக் கொண்டு வரப்படுகிறது. எனவே, விலை விஷயத்தில் நாம் மற்ற நாடுகளுடன் போட்டி போடுவதாயிருந்தால் நமக்கு நல்ல மார்க்கெட்டு இருக்கிறது.

லண்டன் மார்க்கெட்டில் விற்கப்படுகிற பல நாட்டுச் சர்க்கரைகளின் விலை, ஒரு அந்தர்வெயிட்டுக்கு இறக்குமதித் தீர்வை முதலியனவெல்லாம் சேர்த்துச் சுமார் என்னஆகிறதென்று பார்ப்போம். அந்நிய நாட்டுச் சர்க்கரைக்குச் சுமார் $14\frac{1}{2}$ ஷில்லிங்கும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட நாடுகளிலிருந்து வருகிற சர்க்கரைக்குச் சுமார் $14\frac{2}{3}$ ஷில்லிங்கும், மோரீசு தீவிலிருந்து வருகிற சர்க்கரைக்குச் சுமார் $12\frac{1}{2}$ ஷில்லிங்கும் ஆகிறது. இந்தியாவிலிருந்து அனுப்புவதற்கு என்ன ஆகுமென்று பார்த்தோமானால் இறக்குமதித் தீர்வை, கப்பல் கேழ்வை முதலிய எல்லாச்செலவுகளையும் சேர்த்து ஒரு அந்தர்வெயிட்டுக்குச் சுமார் $13\frac{3}{4}$ ஷில்லிங்கு ஆகிறது. மோரீசு சர்க்கரையை விட இது சிறிது அதிக விலையாயிருக்கிறது. ஆனால் வெளிநாட்டுச் சர்க்கரையை விடக்குறைவாக இருக்கிறது. எனவே இந்தியா சர்க்கரைக்குக் கொஞ்சம் சலுகை காட்டும்படி இங்கிலாந்தைத் தூண்டுவோமானால் இந்தியா சர்க்கரைக்கு இங்கிலாந்தில் நல்ல மார்க்கெட்டு உண்டு.

தவிர, இந்தியா சர்க்கரைக்கு மார்க்கெட்டு தேடுவது மற்றொரு விதத்திலும் அவசியமாயிருக்கிறது. சமீபகாலமாக இந்தியாவில் கரும்பு விளைவு அதிகமாகிக் கொண்டு வருகிறது. 1931-32ம் வருஷத்தில் கரும்பு சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம்30லட்சம் ஏகராக்கள்; 1936-37ம் வருஷத்தில் 44 லட்சம் ஏகராக்கள். இந்தக் கரும்பு சாகுபடி காரணமாக, 1931-32ம் வருஷத்தில் 16,640 தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்து வந்தது. 1936-37ம் வருஷத்திலேயோ, ஒரு லட்சம் பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது. இந்த விகிதாசாரப்படி, 1936-37ம் வருஷத்தில், கரும்புத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்குக் கொடுக்கப் பட்ட மொத்தக் கூலி சுமார் 60 லட்சம் ரூபாய் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சர்க்கரைத் தொழிலுற்பத்தியிலீடுபட்டவர்களுக்கு நிரந்தரமான சந்தோஷத்தை நாம் தருவித்துக் கொடுக்க வேண்டுமானால், இந்தியாவின் சர்க்கரைக்கு வெளி மார்க்கெட்டுகள் தேட வேண்டியது அவசியமாகிறது.

சர்வதேச சர்க்கரை மகாநாட்டில் இந்தியாவின் உரிமைகளை இந்திய அரசாங்கத்தார் வற்புறுத்தாமலிருந்தது விசனிக்கத்தக்கது. ஆனால் இப்பொழுதும் முழுகிப்போய்விடவில்லை. ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட எல்லா அரசாங்கங்களும், இதனை அங்கீகரித்துக் கொள்ளுமானால், இது 1—9—37 முதல் அமுலுக்கு வரவேண்டுமென்று ஒப்பந்தத்தின் 48-வது பிரிவு கூறுகிறது. ஆகலின் (தங்கள் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டாலொழிய) ஒப்பந்தத்தை அங்கீகரிக்க முடியாதென்று இந்திய அரசாங்கத்தார் கூறலாமல்லவா?

2300 வருஷங்களுக்கு முன் இந்தியா

—— "சரித்திரக்காரன்"

இந்தியாவைப் பற்றி கிரேக்க ஆசிரியர் பலர் பலவிதமான குறிப்புகள் எழுதி வைத்தனர். அவைகளிற் பல மறைந்து போயின; சில வேற்றுருவங்கொண்டு உலவுகின்றன. ஏறக்குறைய இப்பொழுது இந்திய மாணவரிற் பெரும்பாலோர், சந்திரகுப்தனுடைய சந்நிதானத்திலிருந்து இந்தியாவைப் பற்றி எழுதி வைத்த மெகாஸ்தநேசன் என்னும் கிரேக்க ஆசிரியனைப் பற்றியே அறிவர். ஆனால் மெகாஸ்தநேசனைப் போல்பல கிரேக்க ஆசிரியர்கள் அவனுக்கு முன்னும் பின்னும் இந்தியாவிற்கு விஜயம் செய்தோ, அல்லது இந்தியாவிலிருந்து வந்தவர்கள் கூறும் விவரங்களை ஆதாரமாகக் கொண்டோ இந்தியாவைப் பற்றி நூல்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். இங்ஙனம் எழுதி வைத்தவர்களின் மூலங்கள் இப்பொழுது அகப்படவில்லை. இவர்கள் எழுதி வைத்ததைப் பிற்கால ஆசிரியர்கள் தங்கள் நூல்களில் இடையிடையே குறிப்பிடுவதை நாம் இப்பொழுது ஆதாரங்களாக எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

* * *

இச்சிறு வியாசத்தில் தேசியாஸ் என்னும் கிரேக்க ஆசிரியன் ஒருவன் இந்தியாவைப் பற்றி எழுதிவைத்ததாகச் சொல்லப்படும் சில குறிப்புகளை வெளியிடுகிறேன். இந்தத் தேசியாஸ் என்பவன், முதன் முதலாக இந்தியாவைப் பற்றித் தனி நூல் ஒன்று எழுதி, கிரேக்கர்களுக்குத் தெரிவித்த கௌரவத்தைப் பெறுகிறான். இவன் இந்தியாவுக்கு நேரே வந்து யாவற்றையும் தெரிந்து கொண்டு பிறகு இந்தியாவைப் பற்றி ஒரு நூல் எழுதினனில்லை. இவன் பாரசீக தேசத்து அரசனை அர்தார்க்ஸர்க்ஸேஸ் நேமான் என்பவனுடைய வைத்தியனாயிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவ்வரசனுடைய சமூகத்திற்கு வரும் இந்தியர்களையும், இந்தியாவைப் பற்றி அறிந்திருக்கும் மற்ற பாரசீகர்களையும் கேட்டு, அக்கேள்வி வாயிலாகவே இவன் இந்தியாவைப் பற்றி ஒரு நூல் எழுதினான். இவன் பாரசீக தேசத்தினின்றும் தன் நாட்டிற்கு கி. மு. 398-ம் வருஷத்தில் திரும்பினான். அதன் பிறகே இந்தியாவைப் பற்றிய நூலொன்றை இவன் எழுதினான் என்று லாசன் என்னும் அறிஞர் கூறுகிறார். இவன் இந்தியாவைப் பற்றி எழுதி வைத்த குறிப்புகளில் பல, விநோதக் கூற்றுகளாகவும் புனைந்துரைகளாகவும் இருக்கின்றன என்று இந்தக் கிரேக்க ஆசிரியனைச் சரித்திரக்காரர் தூற்றி வந்தனர். ஆனால் பிற்கால ஆராய்ச்சியினால் இவனுடைய கூற்றுக்களில் சிலவேனும் உண்மையாயிருக்கலாமென்றும், இவன் நூலில் காணப்பட்ட பொய்யுரைகளுக்கு இவன் காரணனல்லன் என்றும், இந்தியாவில் வழங்கப்பட்டவைகளைப் பிரயாணிகள் எடுத்துக்கூறிய வண்ணம் இவன் தொகுத்து எழுதினனென்றும் அபிப்பிராயப்படுகின்றனர். இனி தேசியாஸ் இந்தியாவைப் பற்றிக் கூறிய உரைகள் சிலவற்றின் சாராம்சத்தை ஈண்டுக் குறிப்பிடுகிறேன்.

* * *

"சிந்து நதியானது குறுகியோடும் இடத்தில் நாற்பது ஸ்டேடியாவும் விரி

வான இடத்தில் இருநூறு ஸ்டேடியாவும் (தேசியாஸ் நூறு ஸ்டேடியாவே கூறினன் என்று வேறொரு கிரேக்க ஆசிரியன் குறிப்பிடுகிறான்) இருக்கின்றன. இந்தியர்களே (உலகத்திலுள்ள) மற்றெல்லா மனிதரையும் விட அதிகமாயிருக்கிறார்கள். சிந்து நதியில் ஒரு வித பூச்சி தவிர வேறெவ்விதமான ஜந்துக்களும் வசிப்பதில்லை. இந்நதி மலைகளினின் றிழிந்து சமவெளி வழியாக ஓடுகிறது. இந்தியாவில் மழையே பெய்வதில்லை. நதிகளே ஜனங்களுக்கு ஜலாதார மாயிருக்கின்றன.''

* * *

"இந்தியாவில் சுவர்களைத் தகர்த் தெறியும் படியான பெரிய யானைகள் இருக்கின்றன. நான்கு முழம் நீளமுடைய வாலைக் கொண்ட குரங்குகள் இருக்கின்றன. பெரிய கோழிகள் காணப்படுகின்றன. மனிதனுடைய குரலைக் கொண்ட கிளி என்னும் ஒரு பட்சியும் இருக்கிறது. இந்தப் பட்சி இந்தியர்களுடைய பாஷையைப் பேசுகிறது. கிரேக்க பாஷையைக் கற்றுக் கொடுத்தால் அதையும் பேசுகிறது.''

* * *

"பொன் திராவகத்தையுடைய ஊற்று காணப்படுகிறது. இதிலிருந்து வருஷந்தோறும் நூறு தொட்டி பொன் எடுக்கப் படுகிறது. இந்த ஊற்றின் சுற்றளவு 11 முழமாகும். இதன் ஆழம் ஒரு பாதம்—அல்லது ஒரு சாணை—ஆகும். இந்த ஊற்றின் கீழ் இரும்பும் அகப்படுகின்றது. இந்த இரும்பைப் பூமியில் பதிய வைத்தால் மழை, இடி காற்று முதலியவற்றை நிறுத்தி விடுகின்றது.''

* * *

"இந்தியாவில் சிங்கத்தோடு போர் தொடுக்கும் நாய்களும் இருப்பதாகச் சொல்லப் படுகின்றது. இந்தியாவிலுள்ள மலைகளில் கோமேதகம் முதலிய இரத்தினங்கள் உண்டாகின்றன என்று தெரிகிறது. சூரியன் மற்ற நாடுகளில் தோன்றுவதைவிட இந்தியாவில், அளவில் பதின்மடங்கு அதிகமாகவே தோன்றுகிறான். சூரிய வெப்பம் தாங்கமுடியாமல் பலர் இறந்து போகின்றனர். இந்தியாவினுடைய சமுத்திரங்கள், மேல் மட்டத்தில் சுமார் நான்கு விரற்கடை அளவுவரை மிகவும் உஷ்ணமாகவே யிருக்கின்றன. எனவே மீன் முதலிய ஜந்துக்கள் மிகுந்த ஆழத்திலேயே வசிக்கின்றனவன்றி மேல் மட்டத்திற்கு வருவதில்லை.''

* * *

"இந்தியர்கள் நியாயமுள்ளவர்களாகவே காணப்படுகிறார்கள். அவர்கள் நிர்மானுஷ்யமான ஓர் இடத்திற்குச் சென்று சூரியனையும் சந்திரனையும் வணங்குகிறார்கள். இந்த நிர்மானுஷ்யமான இடம் சார்தெளஸ் மலையிலிருந்து பதினைந்து நாள் பிரயாண தூரத்திலிருக்கிறது. (சார்தெளஸ் மலையென்பது விந்திய பர்வதத்தினின்று பிரிந்து செல்லும் சாத்தைன் மலையே என்று சரித்திரக்காரர் துணிந்திருக்கின்றனர்) இந்த இடத்தில் ஒவ்வொரு வருஷமும் முப்பத்தைந்து நாள்கள், சூரியன், பக்தர்கள் தன்னைத் தொழுவதற்காகக் குளிர்ச்சியுடன் காய்கிறான். இங்ஙனம் வணங்கிவிட்டுத் திரும்பிச் செல்வோரிடத்தும் சூரியன் தன் உஷ்ணமான கிரணங்களால் தாக்குவதில்லை. இந்தியாவில் இடி, மின்னல், மழை முதலியன ஒன்றும் இல்லை. ஆனால் சுழற் காற்றுகளோ அதிகமாயிருக்கின்றன. இவைகள் அடிக்கடி தோன்றுவதுமின்றி, தோன்றிய காலத்து எல்லாவற்றை

யும் அடித்துக்கொண்டு செல்கின்றன. சூரியன் காலையில் உதயமாகுங் காலத்தில் குளிர்ச்சியைக் கொடுக்கிறான்; பின் பாகத்தில் உஷ்ணத்தை கொடுக்கிறான். ஏறக்குறைய இந்தியா முழுவதும் இங்ஙனமே இருக்கிறது."

* * *

"இந்தியர்கள் சூரிய வெப்பத்திற்கு ஈடுகொடுக்கின்றவர்களாதலின் கறுப்பாயிருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் அவர்களுடைய இயற்கையே அதுவாகும். ஏனென்றால் இந்தியாவில் உலகத்திலுள்ள மற்றவர்களைக் காட்டிலும் அழகுள்ள ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள். இவர்கள் ஒரு சிறு தொகையினர்களாகவே இருக்கிறார்கள் என்பது உண்மையே." (இத்தகைய அழகுள்ளவர்களில் இரண்டு ஸ்திரீகளையும் மூன்று புருஷர்களையும் தானே நேரில் பார்த்ததாகத் தேசியாஸ் கூறுகிறான்.)

* * *

"இந்தியாவினுடைய நடுப்பாகத்தில் குள்ள வடிவினரான ஒரு ஜாதியார் இருக்கின்றனர். அவர்களில் உயர்ந்தவர் இரண்டு முழமே இருக்கின்றனர். பெரும்பாலோர் ஒன்றரை முழம் உயரமுடையவராகவே இருக்கின்றனர். அவர்கள் தங்கள் தேகத்தில் வளரும் மயிர்களைக் கொண்டே தங்கள் தேகத்தை மறைத்துக் கொள்கிறார்கள்."

* * *

"இந்தியாவில் ஏராளமான வெள்ளி அகப்படுகின்றது. பொன்னும் இந்தியாவின் பொருள்களில் ஒன்றேயாகும்."

* * *

"இந்தியர்கள் நியாயத்தோடு நடந்து கொள்கிறார்கள்; ராஜ பக்தி பூண்டவர்களா யிருக்கிறார்கள். மரணத்தை அலக்ஷியம் செய்கிறார்கள்."

* * *

"இந்தியர்களுக்குத் தலைவலியாவது, பல்வலியாவது, தேகத்தாலாய வேறு வியாதிகளாவது அனுபவமே கிடையாது. அவர்கள் அநேகமாக 120, 130, 150 வயது வரை ஜீவித்திருக்கிறார்கள்."

* * *

"இந்தியாவில் 'பாரேபோன்' என்ற ஒரு செடி வளருகிறது. இஃது அநேகமாக அரசருடைய தோட்டங்களிலே வளர்க்கப்படுகிறது. இதில் பூக்களேனும் பழங்களேனும் உண்டாவதில்லை. ஆனால் பூமியில் நன்கு பதிந்துள்ள பதினைந்து வேர்களே காணப்படுகின்றன. ஒவ்வொரு வேரும் மிகவும் பருமனுயிருக்கிறது. இந்த வேரில் ஒரு சிறு துண்டை வெளியே எடுத்துக் கொண்டு அதன் அருகில் பொன், வெள்ளி, செம்பு, கற்கள் முதலியன கொண்டு போகப்பட்டால் யாவற்றையும்—அம்பர் என்னும் வஸ்துவைத் தவிர—அஃது இழுத்துக் கொள்ளுகிறது. இந்த வேரில் ஒரு முழத்தை எடுத்துக் கொண்டு, ஆடுகள், பட்சிகள் முதலியவைகளிடத்தில் கொண்டு போனால் அவைகளையும் இந்த வேர் இழுத்துக் கொள்கிறது. தண்ணீரை இறுகச் செய்துவிட வேண்டுமானால், இந்த வேரில் ஒரு சிறு துண்டை அத்தண்ணீரில் போட்டால் உடனே இறுகி விடும். இந்த வேர், வயிற்றுக் கடுப்பு முதலிய நோய்களைத் தீர்க்க உபயோகப்படுகிறது."

* * *

"(கங்கை) நதி ஆரம்பமாகும் இடத்தில் ஊதா நிறமுள்ள ஒரு மலர் உண்டாகிறது. இதிலிருந்தும் இந்தி

யர்கள் சிவப்பும் ஊதாவும் கலந்த நிற மான சாயத்தை உண்டாக்கிக் கொள்கிறார்கள். இந்தச் சாயம் கிரேக்கர்கள் உபயோகிக்கும் சாயத்தைவிட நேர்த்தியா யிருக்கிறது. மற்றும் இந்த மலர் உண்டாகும் இடத்திலேயே ஒருவிதமான மிருதுவுள்ள பூச்சி உண்டாகிறது. இந்தப் பூச்சியைக் கொன்று அரைத்து, தங்களுடைய உடைகள் முதலியவைவற்றிற்கு சிவப்பும் ஊதாவும் கலந்த நிற மான சாயம் வேண்டுமானால் அதை உபயோகிக்கிறார்கள். இந்தியர்களுடைய சாயம் ஏற்றிய வஸ்துக்கள் பாரசீகர்களுடைய வஸ்துக்களைவிட உயர்ந்தனவா யிருக்கின்றன."

* * *

"இந்தியாவில் ஒருவிதமான மரம் வளருகின்றது. இந்த மரங்களிலிருந்து புஷ்பங்களேயன்றிப் பழங்கள் உண்டாவதில்லை. இந்த மரங்களிலிருந்து ஒருவிதமான எண்ணெய் துளித் துளியாக விழுகின்றது. இதனைக் கம்பளிகளைக் கொண்டு துடைத்து எடுத்துப் பிறகு ஒரு பெட்டியில் சேமித்து வைத்துக்கொள்கிறார்கள். நல்ல சிவப்பு இல்லாத இந்த எண்ணெய் உலகத்திலுள்ள வாசனைத் திரவியங்களைவிட அதிகமான வாசனையைக் கொண்டிருக்கிறது. இதனுடைய வாசனை சுமார் ஏழு அல்லது எட்டுமைல் தூரம்வரை பரவுகின்றது. அரசரும், அரச வமிசத்தினருமே இந்த வாசனையை வைத்துக் கொள்ளும் உரிமையைக் கொண்டிருக்கிறார்கள். இஃது ஒருமுறை, இந்திய அரசரால் பாரசீக அரசருக்கு மரியாதைப் பொருளாக அனுப்பப்பட்டது. இந்த வாசனையை எதற்கு ஒப்பிடுவது என்பது விளங்கவில்லை."

* * *

"இந்தியாவில் ஓர் ஊற்று, பாறையின் நடுவண் இருக்கிறது. செல்வத்தை மிகுதியாகப் படைத்த இந்தியர்கள், வியாதிகள் ஏதேனும் இருந்தால் அவைகளைப் போக்கிக் கொள்வதற்காகவும் பரிசுத்தத்திற்காகவும் இதில் நீராடுகிறார்கள். இந்த நீரில் பொன், வெள்ளி, இரும்பு, செம்பு முதலியவைகளைப் போட்டால் உள்ளே அமிழ்ந்து விடுகின்றன. மற்றவைகள் யாவும், பிணங்கள் கூட உள்ளே செல்வதில்லை; மேலேயே மிதக்கின்றன. இந்த நீர் குளிர்ச்சியுள்ளதா யிருக்கிறது. குடிப்பதற்கு மிகவும் இனிமையா யிருக்கிறது. இந்தத் தண்ணீர் குஷ்டரோகத்தைத் தீர்க்கிறது."

* * *

"இந்தியாவின் வட பாகத்திலுள்ளவர்கள் திடகாத்திரமுள்ளவர்களாய் இருக்கின்றனர். இவர்களில் பதின்மூன்று முழம் உயரமுள்ளவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் இருநூறு வயதுவரை வசிக்கிறார்கள்."

* * *

"இந்தியர்களுடைய அரசன் ஒரு யுத்தத்திற்குச் சென்றால் அவனுக்கு முன்னர் நூறாயிரம் யானைகளும் பின்னர் மூவாயிரம் யானைகளும் செல்லும். இந்த யானைகள் முக்கியமாகச் சத்துரு அரசனுடைய கொடிகளைக் கீழ் வீழ்த்துவதில் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றன. இவைகள் சத்துருவின் (கோட்டைச்) சுவர்களைத் தகர்க்கவே பழக்கப் படுத்தப்பட்டிருக்கின்றன."

* * *

"இந்தியாவில் பலவிதமான மூலிகைகள் உண்டாகின்றன. இந்த மூலிகைகள் மருந்துகளாக உபயோகிக்

கப்படுவதுமன்றி பாம்புகடி முதலிய வைகளைக் குணப்படுத்துவதற்கும் உப யோகப்படுத்தப்படுகின்றன.''

* * *

"சிந்துநதியில் அகப்படும் ஒரு ஜந்துவினிடமிருந்து, ஒருவிதமான எண்ணெய் உண்டாகிறது. இந்த ஜந்துவினிடமிருந்து எடுக்கப்படும் எண்ணெய் இந்திய அரசனுக்கு அனுப்பி விடப்படுகிறது. அரசன் தவிர மற்றவர்கள் இதில் ஒரு துளியே உபயோகித்துக் கொள்ள விடப்படுகிறார்கள். இந்த எண்ணெயினுடைய குணம் ஆச்சரியமாயிருக்கிறது. எவ்வளவு உயரம் மரங்களோ அல்லது வேறெச்சாமான்களோ அடுக்கி வைத்திருந்தாலும் இந்த எண்ணெயில் ஒரு சிறிதளவு விட்டால் உடனே அவையாவும் சாம்பலாகி விடும். இங்ஙனமே ஒரு மனிதனையோ மிருகத்தையோ கொல்லவேண்டுமென்றால் இந்த எண்ணெயை ஊற்றினால் அந்த மனிதனோ அல்லது மிருகமோ நீறாகிவிடுகின்றன. அரசர்கள் இந்த எண்ணெயைக் கொண்டே சத்துருக்களின் நகரங்களை நெருப்புக்கிரையாக்குகிறார்கள். இந்த எண்ணெயைச் சிறுபாத்திரங்களில் அடக்கம் செய்து, அவைகளைச் சத்துருக்களின் கோட்டையின் மீதோ, வேறெதன் மீதோ எறிந்தால் உடனே அவை சாம்பராகி விடுகின்றன. இந்த நெருப்பை அவிக்க வேண்டுமானால் இதன் மீது குப்பை முதலியன வற்றைக் கொட்ட வேண்டும்."

* * *

தேசியாஸின் குறிப்புகளெனக் கருதப்பட்டவைகளில் முக்கியமான சில வற்றின் சாராம்சத்தையே நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன். இக் குறிப்புகளில் கூறப்பட்ட விஷயங்களில் சில விநோதங்களாகவே பலர்க்குத் தோன்றும். ஆனால் இந்தியாவின் பண்டைய நூல்களில் ஆராய்ச்சியுடையார்க்கு, இவைகளிற் பெரும்பாலானவை உண்மை என்றே தெரியும். தேசியாஸ் என்பவன் சிந்து நதியையும், வேறொரு நதியையும்-இது கங்கையாக இருக்கலாம்- அறிந்திருக்கிறானென்றும், இந்தியாவின் வட பாகத்தில் ஒரு பகுதியையே அறிந்திருக்கிறானென்றும் இக்குறிப்புகளினால் தெரிகிறது.

மாப்பிள்ளையின் யுக்தி

பணக்காரச் சிறுவன் ஒருவன், அவன் மனதுக்கு ஒரு பெண் பிடித்திருந்தது. அவளை விவாகஞ் செய்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான். ஆனால் பெண்ணின்பெற்றோர்கள் ஏழைகள். வரதட்சணை கொடுப்பதற்கு அவர்கள் கையில் பண மேது? பணம் கேளாமலிருந்தால் பெண்ணைக் கொடுப்பதாகச்சொன்னார்கள். சிறுவன், தன்தகப்பனாரிடத்தில் சென்று, மேற்படி ஏழைப் பெண்ணைத் தான் காதலிப்பதாகக் கூறினான். ஆனால் அவர் ஆசை பிடித்தவர். ஐயாயிரம் ரூபாய் வரதட்சணை யில்லாமல் செய்ய முடியாதென்று சொல்லி விட்டார்.

பையன் ஒரு யுக்தி செய்தான். தான் வெளியூர்களுக்குச் சென்று அநேக விஷயங்களைத் தெரிந்து கொண்டு வரப் போவதாகச் சொல்லி விட்டு, பிரயாணப் பட்டு விட்டான். சில நாட்கள் கழித்து பிள்ளையிடமிருந்து தகப்பனாருக்கு ஒரு தந்தி வந்தது. "5000 ரூபாய் தந்தி மணியார்டர் செய்யுங்கள். ஜாமீன் கட்ட வேண்டும். கிரிமினல் வழக்கில் அகப் பட்டுக் கொண்டேன். ஜெயிலிலே இப்பொழுது பட்டினி" என்று அத் தந்தியில் கண்டிருந்தது. உடனே தகப்பனார் 5000 ரூபாயை அனுப்பிவிட்டார். பையன் அந்தப் பணத்தை, பெண்ணின் தகப்பனாரிடத்தில் கொடுத்து, இதை வரதட்சணையாகத்தன்தகப்பனாரிடத்தில்செலுத்திமுகூர்த்தத்தை நிச்சயிக்குமாறு சொன்னான். அப்படியேகல்யாணம் விமரிசையாக நடந்தது. பையனுடைய தகப்பனாருக்கு அதிக சந்தோஷம்.

அறிவுத்துறை

புகைக்கூடு மேலே போவதேன்?

—"விஞ்ஞான போதகர்"

நாம் கடந்த மாத "ஜோதி"யில் 'கப்பல் மிதப்பதேன்' என்ற தலைப்பில் ஏதாவதோர் பொருள் நீரில் மிதப்பதின் காரணங்களைப்பற்றி விரிவாக ஆராய்ந்தோம். அதிலிருந்து கீழ்க்கண்ட மூன்று முக்கிய கருத்துக்களையும் தெரிய வேண்டியிருக்கிறது.

ஒரு பொருள் நீரின் ஆழத்தில் அமிழ்த்தி விடப்பட்டிருக்கிறதென்று வைத்துக் கொள்ளுவோம்.

1. அப்பொருள் தன்னளவுள்ள நீரின் கனத்தை விடக் குறைந்த கனமாயிருந்தால் அஃது மேல்நோக்கி வந்து மிதக்கும்.

2. நீரின் கனத்தைவிட அதிகமானால் அது கீழே அமிழ்ந்து கொண்டே செல்லும்.

3. நீரின் கனத்தை ஒத்திருந்தால் அப்பொருள் எவ்விடத்திலே விடப்படுகிறதோ அவ்விடத்திலேயே தங்கி நிற்கும்.

இதனால் நாம் முக்கியமாய் அறிந்துகொள்ள வேண்டியது யாதெனில், ஏதாவதொரு பொருள் நீரிலிருந்து கொண்டே மேல் நோக்கிச் செல்ல வேண்டுமானால் அப்பொருளின் முழுக்கனம் அதே அளவுள்ள (அது ஒதுக்கி விடப்படும்) நீரின் கனத்தை விடக் குறைந்ததா யிருத்தல் அவசியம்.

அவ்வாறு நீரை நீக்கி, காற்றை வைத்துப் பார்ப்போம். நாம் காற்றால் சூழப்பட்டிருக்கிறோமல்லவா? இங்கு ஏதாவதோர் பொருள் மேலே தானாகப் போகவேண்டுமானால் அப்பொருளின் முழுக்கனம் அஃது ஒதுக்கிவிடும் காற்றின் கனத்தைவிட மிகக் குறைந்ததாயிருக்க வேண்டுவது அவசியமல்லவா?

காற்றிற்குக் கனமும் உண்டா வென்றால் உண்டு. அதின் கனத்தால் நம்மைச் சுற்றிலும், மேலுமுள்ள வாயு மண்டலத்திற்கு அபாரமான அமிழ்த்தும் சக்தியுளது. வாயு மண்டலத்தைப்பற்றிக் கூறப்புகின், அது விரியும். காற்றிற்குக் கனம் உள்ளதைத் தெரிவதற்கு ஒரு பெரிய கண்ணாடிக் கூட்டை யெடுத்து அதினுள் ளிருக்கும் காற்றை வெளியேற்றி நன்றாய் அடைத்து இலேசான தராசில் வைத்து நிறுக்க வேண்டும். அதன் பின் கூட்டின் வாயை மெதுவாகத் திறந்தால் காற்று உள்ளே பாய்ந்தோடும். வாயை முன்போல மூடி மறுபடியும் நிறுத்தால் அதின் நிறை அதிகப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஆனால் காற்று தண்ணீரை விட மிகக் குறைவான கனத்தையுடையது என்பதைக் கூறத்தேவையில்லை. தண்ணீரின் கனம் 10,000 என்றால் அதே அளவுள்ள காற்றின் கனம் 12 தானாகிறது, அதே அளவுள்ள ஜலவாயு (Hydrogen) 1 என்றும் ஹீலியம் (Helium) என்ற வாயுவின் கனம் 2 என்றும் ஆகின்றன. இதிலிருந்து காற்றைவிட மிகவும் இலேசான வாயு ஜலவாயு வென்றறிகிறோம். [உஷ்ணமான காற்று குளிர்ந்த காற்றைவிடச் சிறிது இலேசானது.] ஆகவே ஒரு மெல்லிய பையில் ஜலவாயுவை (அல்லது காற்றைவிட இலேசான எந்த வாயுவையும்) உட்செலுத்தி வெளியேறா வண்ணம் செய்து விட்டு விட்டால் அதின் கனம் அதே அளவுள்ள காற்றின் கனத்தை விடக் குறைவாயிருப்பதால் அது மேலே போக ஏற்படுகிறது. இதனைக் குழந்தைகள் வாங்கி விளையாடுவதுண்டு. அவர்கள் தவறி விட்டு விட்டால் அக்கூண்டுகள் மேலே போய் விடுவதைக் கண்டிருக்கலாம். அவ்விதம் இலேசான காற்றைச் செலுத்தாமல் வாயால் ஊதி (சாதாரண காற்றையே செலுத்தி) கட்டி விட்டால் அது மேலே செல்லுவதில்லை.

அவ்வாறு சிறிய கூண்டுகளை உபயோகிக்காது, உறுதியான தோல் போன்றகாற்றைவெளிவிடாதவஸ்துக்களால் செய்யப்பட்ட மிகப் பெரிய கூண்டுகளில் ஜலவாயுவைச் செலுத்தினால் அஃது மிக மிக இலேசாகி வெகு வேகமாக மேலே செல்லப் பார்க்கும். ஏன்? அது ஒதுக்கி நிற்கும் காற்றின் கனம் மிகவும் அதிகப்படுவதால் காற்று அதனை வெகு பலமாக உயரத் தள்ளுகிறது. ஆகவே அவ்விதக் கூண்டுகளில் மனிதர்கள் ஏறிச் செல்ல ஏதுவாகிறதல்லவா?

உலகத்தைச் சுற்றியுள்ள வாயுமண்டலம், பூமியிலிருந்து மேலே போகப் போக கனத்தில் குறைந்து விடுகிறது. ஆகவே புகைக்கூடு * மேலே செல்லச் செல்ல காற்றின் அமிழ்த்தும் சக்தி குறைவாகி கூடு உருவத்தில் பெரிதாகிக் கொண்டே போகும். இதனால் கூட்டில் முதலாவது வாயுவை நிறைய நிரப்பிச் செல்லுவதில்லை.

---

* புகையும் காற்றைவிட இலேசானதால் சில சமயம் சிறிது தூரம் போவதற்கு உஷ்ணமான புகையை பெரிய கூண்டிலடைத்து மேலே போவது வழக்கம். இதனால் இதனைப் 'புகைக் கூடு' என்றும் அழைப்பதுண்டு.

படத்தில் காட்டியிருக்கும் புகைக் கூடு மேலே செல்லத் தயாராயிருப்பதைப் பார்க்கலாம். அதில்குறைவாகவாயுவை நிரப்பியிருப்பதையுங் காணலாம். முதலிலேயே வாயுவை பூரணமாக நிரப்பிச் சென்றால் மேலே கொஞ்ச தூரம் சென்றதும் கூடு ஊதி வெடித்துப் போம். ஆகவே எவ்வளவு உயரம் போக வேண்டுமோ அவ்வளவுக்குத் தகுந்த வண்ணம் வாயுவைக் கூட்டில் அடைத்துச் செல்லுகின்றனர். குறிப்பிட்ட உயரத்துக்குப் போனதும் கூடு தானாகவே வெடித்து விடும். அவ்வாறு வெடிக்க விடாமல் செய்ய வேண்டுமானால் வாயுவைச் சிறிது



புகைக் கூடு

வெளியேற்றிக் கொண்டே மேலே போகலாம். இவ்வாறு வெகு தூரம் மேலே போவதெல்லாம் அங்குள்ள வாயு மண்டலத்தின் தன்மையை ஆராய்ச்சி செய்வதற்கே. இது காலை மனிதன் 13½ மைல் தூரம் மேலே புகைக் கூட்டில் சென்றிருக்கிறான் என்றால் ஆச்சரியமல்லவா?

'ஏர் ஷிப்' (Air Ship) என்ற ஆகாயக் கூண்டு விமானம் இதே விதமாகத்தான் அந்தரத்தில் 'மிதக்க'ச் செய்யப் படுகிறது. இது உருவத்தில் நீண்டு கூடானதோர் கப்பல். இந்தக் கப்பல்கள் மேல் நாட்டில் அதிகமாய் ஆகாயத்தில் பிரயாணஞ்செய்கின்றன. இக் கப்பல்களில் நூற்றுக் கணக்கான ஜனங்கள் ஏற்றிச் செல்லப்படுகின்றனர். ஆகவே இவைகள் உருவத்தில் பெரியவை. இவை மெல்லிய உறுதியான உருக்குக் கம்பிகளால் கட்டப் படுகின்றன. இதின் நாலாபக்கங்களிலும் ஜலவாயுவை நிரப்பிக் கொள்ள பெரிய பெரிய பைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. பொதுவாகக் கப்பலின் பாகங்களின் கனம், ஏறும் ஜனங்களின் கனம் இவைகளைக் கணக்கிட்டுக் கப்பல் அந்தரத்தில் நின்று காற்றை ஒதுக்கி 'மிதக்க' விடவேண்டிய அளவுள்ள ஜல வாயுவைப் பைகளில் நாலாபக்கங்களிலும் நிரப்பிக் கொள்ளுகின்றனர். இக்கப்பல் மேலே அதின் கனத்திற்குத் தகுந்த உயரத்தில் சென்று நிற்கும். பின்பு அதன் பக்கங்களிலுள்ள (ஆகாய விமானத்திற்கு முன்னுள்ள விசிறி போன்ற) இயந்திரக் கருவிகளால் நேர்முகமாக ஓட்டப் படுகின்றன.

இவ்விதமாக வேண்டிய இடத்திற்குச்சென்று அங்குக் கட்டப்பட்டிருக்கும் உயர்ந்த ஸ்தம்பத்தின் உச்சியில் மெதுவாக அணைந்து முன் நுனிப் பக்கமாகக் கட்டுண்டு உயரத்திலேயே



கட்டுண்டு இருக்கும் கப்பல்

தங்கி நிற்கும். ஜனங்கள் கப்பலின் முன் பாகமாக வந்து ஸ்தம்பத்தின்வழியாகக் கீழே இறங்க வேண்டும். அவ்வாறு கட்டுண்டு இருக்கும் கப்பலைப் படத்தில் காணலாம்.

ஜல வாயுவை உண்டாக்குவது எளிது. உண்டாக்கும் செலவோ மிகக் குறைவு. கனத்திலும் இலேசானது. ஆகவே பலரும் ஜல வாயுவையே பெரும்பாலும் உபயோகிக்கின்றனர். ஆனால் அது சீக்கிரத்தில் நெருப்புப்பிடிக்கும் தன்மையுடையதால் எப்பொழுதும் திடீரென்று அபாயம் ஏற்படுவது சகஜமாயிருக்கிறது. R 101 என்னும் பிரிட்டிஷ் கப்பல் முதலாவதாக 1930ம் வருஷத்தில் இந்தியாவுக்கு வரும்போது வழியில் பிரான்சு தேசத்தில் திடீரென்று நெருப்புப் பற்றி எரிந்து அனேக பெரிய உத்தியோகஸ்தர்கள் உயிர் துறந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதற்குமுன் அமெரிக்கர் கப்பலும், சமீபத்தில் ஜெர்மன் 'கிராப் ஜெப்லேன்' என்ற கப்பலும் தீக்கிரையாயின. ஆகவே தற்போது ஹீலியம் என்ற அபாயமற்ற வாயுவை உபயோகிக்க முயலுகின்றனர். ஆனால் இது கனத்தில் ஜல வாயுவைவிடச் சிறிது அதிகமாகவும், உண்டாக்குவதில் அதிகச் செலவையுடையதாகவுமிருக்கிறது.



ஆகாயக் கப்பல் R· 101

கனமான பொருள் கீழ் நோக்கி வருவதேன்?

நாம் ஏதாவதோர் பொருளை மேலே வேகமாக எறிந்தால் அப்பொருள் மேலே சென்று பிறகு பூமியை நோக்கி வந்து விடுகிறது. அவ்வாறு பூமியை நோக்கி மாத்திரம் வருவானேன்? அது மேல் நோக்கியே ஏன் சென்றுவிடக் கூடாது என்று பலர் சிந்தித்திருக்கக்கூடும். இதனையே வெகு காலத்திற்குமுன் 17-ம் நூற்

ருண்டில் ஆங்கிலேய விஞ்ஞான சாஸ்திர நிபுணர் சர் ஐஸக் நியூடன் என்பவர் தனது இள வயதில் சிந்திக் கலானார். இவர் ஓர் தினம் ஓர் தோட்டத்தில் அமர்ந்திருக்கும் போது ஆப்பில் பழமொன்று மரத்திலிருந்து திடீரென்று கீழே விழுந்தது. அதைக் கவனித்த நியூடன் உடனே அப் பழம் ஏன் பூமியை நோக்கிவர வேண்டும், மேல் நோக்கி ஏன் போகக்கூடாது என்று சிந்தித்து அதன் காரணத்தை ஆராயத் தொடங்கினார். இவர் ஆராய்ச்சிகளின் பயனாக பூமிக்கு அபாரமான இழுக்கும் சக்தி யிருக்கிறதென்றும் அதனால் சகல பொருள்களும் அதன் பக்கமாக இழுக்கப்படுகின்றன வென்றும் அறிய முடிந்தது.

மேலே எறியப்பட்ட பொருள், வேகத்தின் சக்தியால் (பூமியின் இழுக்கும் சக்தியைவிட அதிகப்பட்டு) மேலே செல்லுகிறது. இவ்வாறு மேலே போகும் பொருளை பூமியும் இழுத்துக் கொண்டே யிருக்கிறது. இதனால் அதின் வேகம் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே போய் கடைசியில் வேகமே அற்றுப்போனதும் பூமியின் சக்தியால் கீழ் நோக்கி இழுக்கப்பட்டு அதனை வந்தடைகிறது. அவ்வாறு மேலே நோக்கி எறியாமல் நேர்முகமாய் எறிந்தாலும் பூமியின் இழுக்கும் சக்தி இழுத்துக் கொண்டே யிருப்பதால் அப்பொருள் வளைவாகச் சென்று பூமியை அடைகிறது.

பூமியின் இழுக்கும் சக்தியின் அளவைக் கொண்டும், உயரத்தில் எறியப்படும் பொருளின் வேகத்தையும், பூமி மட்டத்திற்குமேல் அது போகும் மார்க்கத்தையும் கொண்டும் அப்பொருள் போய்விழும் நேர் தூரத்தைக் கணக்கிட முடிகிறது. ஆகவே எந்த இடத்திற்கு எறிய வேண்டுமோ அத் தூரத்திற்குத் தகுந்த வேகத்துடனும் சாய்வுடனும் எறியப்பட வேண்டு மல்லவா? இவ்விதமாகத்தான் பீரங்கிக் குண்டுகள் மேல் நோக்கி வீசப்பட்டுக் கண்ணுக் கெட்டாத தூரத்து இடங்களைச் சரியாகத் தகர்த்துவிடுகின்றன.

நம்மைச்சுற்றிக் காற்றேயில்லாவிட்டால் இறகுமுதல் இரும்புவரை சகல பொருளும் ஒரே விரைவுடன் பூமியில் இழுக்கப் படுவதைப் பார்க்கலாம். சகல பொருளும் ஒரு வினாடிக்கு 32 அடி வேகத்துடன் இழுக்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. காற்று நிறைந்திருப்பதால் தான் காகிதம் போன்ற இலேசான வஸ்துக்கள் மெதுவாக பூமியை வந்தடைகின்றன.

பூமியின் இழுக்கும் சக்தி மேலே போகப் போகக் குறைந்துகொண்டே போகிறது. பூமியின் மத்தியிலிருந்து இழுக்கும் சக்தி சிறிது சிறிதாகக் குறைந்து பூமிக்கு மேலே வெகு தூரத்திற்கப்பால் அதின் சக்தி இல்லாமலே போய்விடுகிறது. எப்பொருளாவது அத்தூரத்திற்கப்பால் சென்று விட்டால் அது பூமியால் இழுக்கப்படாமல் வேறு எங்காவது சென்றுவிடலா மல்லவா?

சர் ஐஸக் நியூடன் ஆராய்ச்சியினாலேயே உலகத்திலுள்ள சகல பொருள்களும், தங்கள் பருமனுக்குத் தகுந்த அளவுடன் ஒன்றுக் கொன்று இழுக்கும் சக்தியுடையன வென்று தெரியக்கிடக்கிறது. இதனை அதி நுட்பக் கருவிகளால் அளவிட்டு உண்மையென உலகத்தார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இக்கோட்பாட்டின் மூலந்தான் பூமியின் கனத்தையும் அளவிட்டுச் சொல்ல உதவியா யிருக்கிறது.

இதனால் பூமிக்கு இழுக்கும் சக்தி இருப்பது போலவே மற்றக் கிரகங்களுக்கு முண்டு. சூரியன் பிரமாண்டமானதால் மற்றக் கிரகங்கள் யாவும் அதனால் இழுப்புண்டு அதனைச் சுற்றி, சுழன்று கொண்டே வர முடிகிறது. இச்சக்தியின் மகிமையே மகிமை !

சந்திரன் பூமிக்குச் சமீபத்திலுள்ளதோர் பெரிய கிரகமாதலால், பூமி இழுக்கும் சக்திக்கப்பால் போன பொருள், பின்பு சந்திரனால் இழுக்கப்பட்டு அதனை அடையலாமல்லவா ? ஆகவே சந்திரனை நேரில் சென்று பார்க்க வேண்டுமானால் ஒரு மனிதனை வெகு வேகமாய்ப் பூமி இழுக்கும் சக்தியே இல்லாத தூரத்திற் கப்பால் அனுப்பி விட்டால், அவன் சந்திரனின் இழுக்கும் சக்தியால் இழுப்புண்டு சந்திரனைப் போய்ச் சேர்ந்து விடலாம். ஆனால் அவன் உயிருடன் சென்று பின் உயிருடன் வருவது முடியாத காரியமல்லவா ?

முன்பு மகாபாரத யுத்தத்தில் யானைகளைத் தூக்கி மேலே எறிந்தார்களென்றும் அவைகள் கீழே மறுபடியும் வரவில்லையென்றும் கூறப்படுகின்றன. இது நம்புவதுகஷ்டமாகத் தானிருக்கிறது. ஆனால் முற்காலத்தில் மிருகங்கள்யாவும் உருவத்தில் சிறியனவாகவும், மனித வர்க்கம் பெரியனவாகவுமிருந்து நாளடைவில் மனித வர்க்கம் க்ஷீணித்து மிருகவர்க்கங்கள் உருவத்தில் பருத்து வந்து விட்டனவென்று சில ஆராய்ச்சிக்காரர் கூறுகின்றனர். இதற்கொப்ப ஆதியில் அரவான் போன்ற ராக்ஷதர்கள் ஒரு மலையில் தலையையும் மற்றோர் மலையில் காலையும் வைத்துப் படுத்து வந்த அவ்வளவு பிரமாண்டமான உருவம் என்று கூறப்படுகிறது. ஆதலால் அக்காலத்தில் யானைகள் யாவும் சிறிய ஜந்துக்கள் போலிருந்து, ராக்ஷதர்கள் அவைகளை வெகு இலகுவில் மேலே எறியவும் அவைகள் பூமியின் இழுக்கும் சக்திக்கப்பால் சென்று விடவே பூமியை வந்து சேரவில்லை என்று ஏன் சொல்லக்கூடாது?

மின்னல் ஒளிவிடுவதேன்? மேகம் இடிப்பதேன் ?

மாரி காலங்களில் அணுக்களையுடைய மழை, மேகங்கள் ஒன்றோடொன்று வெகு வேகமாய் மோதித் திடீரெனப் பிரிந்தோடுவதின் அதிர்ச்சியானது மேக மண்டலங்களில் அங்கு மிங்கும் தாக்கப்பட்டு எதிரொலிப்பதால் குமுறுதலேற்படுகிறது. இவ்விதமாக மேகங்கள் ஒன்றோடொன்று உராய நேரிடுவதால் மேகங்கள் மின்சார சக்தியை யடைய ஏற்படுகிறது. மேகங்கள் திடீரென்று மோதி விலகி யோடுவதால் அவை இரண்டும் இருவித ('பாஸிட்டிவ்.' 'நெகட்டிவ்' என்ற) மின்சார சக்தி



மின்சாரச் சுடர்

களையடைய ஏற்பட்டுப்படத்தில் காட்டியவாறு ஒரு மேகத்திலிருந்து மறு

மேகத்திற்கு மின்சாரச் சுடர் ஒளி பாய்ந்தோடுகிறது. இதனையே மின்னல் என்கிறோம். இவ்விதமாக ஏற்பட்ட உண்மையான மின்னல் ஒளியின் படத்தை இவண் காட்டியிருக்கிறது. அதின் ஒளி வடிவத்தைக் கவ



மின்னல் ஒளி

னித்தால் மின்சாரம் பாய்ந்தோடும் ஒளி வடிவத்தைப்போலிருப்பதுநன்கு விளங்கும். மின்னல் ஒளி விட்டதும் இடிமுழங்கும். சிற்சிலசமயம் மின்னல் காணப்படாமலேஇடியுண்டாவதுண்டு

இடியானது மேகங்கள் திடீரென்று மோதி விலகுவதினால் ஏற்படும் தொனி.மின்னல்,ஒருமேகத்திலிருந்து மற்றொரு மேகத்தில் பாயும் மின்சார வெளிச்சம். சப்தம் ஒரு வினாடிக்கு 1120 அடிகள்வீதம்செல்லுகிறது. ஆனால் வெளிச்சமோ ஒரு வினாடிக்கு 186,000 மைல் வீதம் பாய்ந்தோடுகிறது. ஆகவே இடியும் மின்னலும் ஒரே சமயத்தில் ஆகாயத்தில் உண்டானாலும், வெளிச்சம் வெகு வேகமாய்ச் செல்லுவதால் நாம் முதலாவது மின்னலைப் பார்த்து பின்பு வெகு நேரங்கழித்து இடியைக்கேட்கிறோம்.

மின்னல், மின்சாரச்சுடராகையால் அது எப்பொழுதும் பூமியை அடையச் சுருக்கமான வழியைப் பார்த்துக் கொண்டே யிருக்கும். உயர்ந்த கட்டடமும், மரமும் அதற்கு நல்ல மார்க்கங்களாகின்றன. கட்டடங்கள் வழியாக மின்சாரம் பாய்ந்தோடாமலிருக்கக் கூரிய உலோகக் கம்பிகள் கட்டடங்களுக்குமேல் நாட்டப்படுகின்றன. அவைகளைத் தொட்டு ஒரு மெல்லிய கம்பி பூமியில் புதைக்கப் படுகிறது. இதன் வழியாக பூமியிலிருந்து மின்சாரம் மேல் சென்று கட்டடத்தை நோக்கிவரும் மின்சாரத்தைக் கலக்கி விடுகிறது.

தனியாக உயர்ந்து நிற்கும் மரங்கள் வழியாகத் திடீரென்று மின்சாரம் பாய்ந்து பூமியை நாடி யோடுவது சகஜம். அவ்வாறு ஏற்படும் போது அடுத்தபக்கம்படத்தில் காட்டியிருப்பதுபோல் மரங்களை ஊடுருவிப் பாய்ந்து எரித்துவிடுகிறது.

நாம் முன் கூறியவாறு இடி சாதாரணமானதோர் பெருந்தொனி. ஒருவன் மின்னலுக்குத்தான் அஞ்ச வேண்டியதே யன்றி இடியினால் யாதொரு அபாயமு மில்லை. சிலர் வழிப் பிரயாணத்தில் இடியைக் கேட்ட மாத்திரத்தில் பயந்தோடி ஓர் மரத்தினடியில் பதுங்குவதுண்டு. அதைவிட அபாயமான காரியம் வேறொன்று மில்லை. அவ்வாறு மரத்தையண்டி நாசமடைந்த ஆடுகளை அடுத்த பக்கத்திலுள்ள கீழ்ப்படத்தில் காணலாம். ஆகவே மரங்களையடுத்துப் போகாமல் வெட்ட வெளியிலேயே நின்றுவிடுவது மிகவும் சிலாக்யம்.

மின்னலினல் எரிக்கப்பட்ட மரம்



மரத்தையண்டி நாசமடைந்த ஆடுகள்

பிச்சைக்காரனுடைய பினத்தல்

—வை. சுந்தரம் ஐயர்
B. A., B. L.,

ஐயா, எஜமான்மார்களே, என் கதையைச் சொல்றேன், கொஞ்சம் கேக்கிறீங்களா? என் கொச்சை பாஷையிலே சொல்றேன்; நீங்க நல்ல பாஷையிலே திருத்தி படிச்சுக்கிறீங்களா?

ஐயா, எனக்கு இந்த ஊரிலே ஒவ்வொருவீடும் தெரியும். அதிலே யார் இருக்கிறார்கள் என்பது தெரியாது. ஆனால் ஒவ்வொரு வீட்டின் வாசற்படி எப்படி யிருக்கிறது என்பது மட்டும் தெரியும். சிலபேர் அன்பாயிருக்கிறார்கள்; சிலர் 'யாரோ, போ' என்று அசட்டையாயிருக்கிறார்கள். இன்னும் சிலருக்கு என்னைக் கண்டாலே பிடிக்கிறதில்லை. ஆனால் நான் 'எல்லாரையும் கடவுளே! காப்பாற்று' என்று கையெடுத்துக் கும்பிடுகிறேன். எனக்குப் பிச்சை போட்டவர்களுக்கு இன்னும் அமோகமான செல்வம் செழிக்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். என்னைக் கண்டதும், கொஞ்சங் கூட ஈவு இரக்கமின்றி விரட்டியடிக்கிற கல் நெஞ்சம் படைத்

தவர்களையும் காப்பாற்ற வேண்டுமென்றுதான் நான் கடவுளைப்பிரார்த்திக்கிறேன். நான், எல்லாருடைய நன்மையையும் நாடுகிறவன்; எல்லாருடைய க்ஷேமத்திற்காகவும் பிரார்த்தனை செய்கிறவன்.

நான் வீடுகளுக்குச் சென்று பிச்சை கேட்கிற போது, சும்மாயிருந்து பொழுது போக்குகிற புருஷர்கள் 'போடா போ; நான் வேலையாயிருக்கிறேன்' என்று சொல்லி என்னை விரட்டியடிக்கிறார்கள். ஆனால் சுறுசுறுப்பாக உள்ளே வேலை செய்து கொண்டிருக்கிற அம்மாமார்களோ, தங்கள் கையில் கிடைத்ததைப் போட்டு விட்டுப் போகிறார்கள். அவர்களுக்கு வீட்டு வேலை யதிகம். அதிகமான ஓய்வு அவர்களுக்கு இல்லை. அந்தச் சாக்கை வைத்துக் கொண்டு என்னை 'போய் வா' என்று சொல்லிவிடலாம். ஆனால் அவர்களுக்கு இளகிய மனசு. அவர்களுடைய கைகள், எப்பொழுதும் பிறர்க்கு உபகாரஞ் செய்யக் காத்துக் கொண்டிருக்கின்றன. பெண்கள், கருணை, அன்பு இவற்றின் வடிவமாக அவதரித்திருக்கிறார்கள். அவர்களை, ஆண்டவனே! நீண்ட காலம் காப்பாற்று! கொடைக்கு ஓர் அழகு கொடுப்பதற்காகவே, கடவுள், ஆண்களை விடப் பெண்களுக்கு அதிகமான கருமசிந்தையைக் கொடுத்திருக்கிறார் போலிருக்கிறது.

எனக்குக் குழந்தைகளுண்டு; வீட்டுக் காரியும் இருக்கிறாள். இவர்களையெல்லாம், நான் பசியிலிருந்து காப்பாற்ற வேண்டும். எனக்கோ வயதாகி விட்டது; தரித்திரமோ பிடுங்கித் தின்கிறது. இவைகளினால் எனக்குக் கூனும் விழுந்து விட்டது. ஆனால் இவைகளுக்காக, என் அருமையான குழந்தைகளையும், என் சம்சாரத்தையும் நான் காப்பாற்றாமல் கை விட்டு விட முடியுமா? என் வீட்டுக்காரியைக் காப்பாற்ற நான் பிச்சையெடுக்கிறேன். அவள், எங்கள் குழந்தைகளைக் காப்பாற்றக் கஷ்டப்படுகிறாள். இப்படியாக நாங்கள் ஒருவர்க்காக ஒருவர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய தரித்திரம் எங்களுடைய அன்பைப் பலப்படுத்துகிறது.

நான் அரண்மனைகளின் வழியாகச் செல்கிறேன்; பணக்காரர்கள் மத்தியில் போகிறேன். செல்வமும் ஆடம்பரமும் என் கண்முன்னே படுகின்றன. ஆனால், நல்ல காலம், இவையெல்லாம் என் மனத்திலே பொறாமை எண்ணத்தை உண்டுபண்ணவில்லை. என் சாதாரண தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிற அவசரத்திலே, அவசியத்திலே, இவற்றையெல்லாம் நான் மறந்து விடுகிறேன். என் தேவைகள் கொஞ்சம். என் வாழ்க்கையும் பரிசுத்தம். என்னுடைய அன்றாட வயிற்றுப் பாட்டுக்குக் கிடைத்து விட்டால், நான் திருப்தியடைந்து விடுகிறேன்; அதிகம் வேண்டுமென்று ஆசைப் படுவதில்லை. நான் யாரைப் பார்த்தும் பொறாமை கொள்வதில்லை. எவரும் என்னைப் பார்த்துப் பொறாமைப் படுவதுமில்லை.

என்னுடைய வீட்டின் மேற்கூரை ஆகாசந்தான். நான் நெடுந் தூரம் அலைந்தபோதிலும், என் கால்கள் நோவதில்லை. வெயிலையோ, மழையையோ கண்டு நான் பயப்படுவதில்லை. வெயிற் காலத்தில் என் தேகத்தில் ஏறுகிற உஷ்ணமானது, மழை காலத்தில் தானாகக் குறைந்துபோய் விடுகிறது. குளிர் காலத்தில் என் தேகத்திலே புகுந்து கொள்கிற குளிரானது, அடுத்த கோடை காலத்தில் வெளியே வியர்வையாகப் போய்விடுகிறது. நோய்கள், என்னைக்காண வருவதே

யில்லை. நோயாளியின் படுக்கையென்பது எனக்குத் தெரியவே தெரியாது. முள்ளும்கல்லும்நிறைந்த பாதைகளில் என்கால்கள் தைரியமாகச் செல்லும்; ராத்திரி தூக்கம் வர வில்லை என்று நான் சொன்னதே கிடையாது. என் சந்தோஷம் பூரணமானது. ஏனென்றால், சூரியன் மலை வாயிலில் விழுந்தவுடனேயே, என் கவலைகளும் அஸ்தமனமாகி விடுகின்றன வல்லவா?

பணக்காரர்கள், பணத்தை இன்னும் சேகரிக்க வேண்டு மென்று ஏன் ஆசைப் படுகிறார்களோ தெரியவில்லை. எவ்வளவு பணம் இருந்தாலும், அவர்கள் முகத்தில் கவலைக் குறிகளே நிரம்பிக் கிடக்கின்றன. சந்தோஷமாக இருக்க வேண்டியவர்கள், அதிகமான தேவைகளை ஏற்படுத்திக் கொண்டு, இன்னும் அதிகமான துக்கத்தை ஏன் வருவித்துக் கொள்கிறார்களோ தெரியவில்லை. திருப்தி என்பதின் பதவியிலே ஆசை என்பதை வைத்து விட்டோமானால், நம்முடைய துன்பங்களும் அதிகமாகின்றன.

பிச்சைக் காரர்களைப் பார்த்துச் சிலர் கேவலமாகப் பேசுகிறார்கள். எங்களுடைய ஏழ்மைத் தனத்திற்காகவும், எங்களுக்குத் தேவையொன்றும் இல்லாமைக்காகவும் எங்களை வெறுக்கிறார்கள். ஆனால், எளிய வாழ்க்கையும், பந்தமற்ற வாழ்க்கையும் எங்களுடைய பரம்பரைப் பாத்தியங்கள் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள். சித்தார்த்த மகாராஜன் (புத்தர்) கூட எங்களுடைய எளிய வாழ்க்கையிலே ஈடுபட்டு, தமது அரச போகங்களை யெல்லாம் துறந்து பிச்சைக்காரக் கோலம் பூண்டு, எளியதும்பந்தமற்றதுமானவாழ்க்கை நடத்த வேண்டு மென்று உபதேசித்து மனித சமூகத்தைப் பெருமைப் படுத்தவில்லையா? எல்லாப் பெரிய மகான்களும் முதலில் எங்கள் வாழ்க்கையை மேற்கொண்ட பிறகு தான், மதப் பிரசாரம் செய்யத் தொடங்கி யிருக்கிறார்கள். மனித சமூகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக அவர்கள் பிச்சையெடுத்தார்கள். அவர்களைப்போல் நாங்கள் செய்ய முடியாவிட்டாலும், எங்களுடைய சிறிய சக்திக்குத் தகுந்தபடி ஏதேனும் கொஞ்சம் செய்கிறோ மில்லையா?

ஒரு சமயம் நல்ல புயற் காற்றடித்தது. ஒரு பணக்கார வீட்டுக் குழந்தை, எங்கேயோ வழிதப்பிச் சென்று விட்டது. அதன் பெற்றோர்கள் எங்கெங்கேயோ தேடிப் பார்த்தார்கள். பணக்காரர்களல்லவா? ஆனால் குழந்தை அகப்படவில்லை. காற்றோ விர் விர்ரென்று அடித்துக் கொண்டிருக்கிறது. ஒரு பிச்சைக் காரன் இந்தச் செய்தியைக்கேள்விப் பட்டான். அந்தக் குழந்தையின் கையிலிருந்து இவன் பலமுறை பிச்சை வாங்கியிருக்கிறான். அவனுக்குக் குழந்தையைக் காணவில்லை யென்று கேள்விப்பட்டதும் திடுக்கிட்டுப் போனான். பெற்றோர்களின் பரிதாப நிலையைப்பார்த்து மனம் கரைந்தான். புயற்காற்றென்றால் அவனுக்கென்ன பயம்? குளங் குட்டைகளிலும், சந்து பொந்துகளிலும் குழந்தையைத்தேடித் தேடி யலைந்தான். கடைசியில், ஒரு குட்டிச் சுவருக்குச் சமீபத்தில் குழந்தை குளிரினால் நடுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். இவனைப் பார்த்ததும், குழந்தை இவனைக் கட்டியணைத்துக் கொண்டது. இவனும் அதனைவாரி அணைத்து எடுத்துக் கொண்டான். பெற்றோர்களிடத்தில் ஒப்புவித்தான். எல்லாம் ஒரு பிச்சைக்காரனுடைய வேலை.

இப்படியும் நடக்குமா?

லார்ட் நப்பீல்ட் என்பவர் இது வரையில் 9,000,000 பவுன் தருமஞ் செய்திருக்கிறார்.

ஃ ஃ ஃ

இங்கிலாந்தில் மட்டும் இப்பொழுது 59,010 டாக்டர்கள் இருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

சென்னை மாகாணத்தில் 147,000 ஏகராக்களில் வாழை பயிரிடப்பட்டு வருகிறது.

ஃ ஃ ஃ

மதுரை மீனாக்ஷியம்மன் கோயிலின் மீது தேசியக் கொடி பறக்கிறது. "அம்பா! நன்னு ப்ரோவவே."

ஃ ஃ ஃ

இரண்டு மாடிகளுள்ள ரெயில் வண்டிகள் இப்பொழுது அமெரிக்காவில் ஓடுகின்றன.

ஃ ஃ ஃ

ஜெர்மனியின் தலை நகரமான பெர்லின் நகரம் கட்டப்பட்டு 700 வருஷங்களாகிறது.

ஃ ஃ ஃ

இத்தலியினால் ஆக்ரமித்துக் கொள்ளப்பட்ட எத்தியோப்பியாவில் இப்பொழுது 150 இந்தியர்களே (தொழில் முறையில்) வசிக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

ஒரு மனிதன் குடித்திருக்கிறானா இல்லையா வென்பதைப் பரிசோதிக்க, அமெரிக்காவில் ஒரு புதிய கருவி கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

ஹங்கேரி தேசத்தில் சமீபத்தில் தவளை மழை பொழிந்தது. ஒவ்வொரு தவளையும் அரை அங்குலம் நீளம் இருந்தது.

ஃ ஃ ஃ

1937-ம் வருஷ மத்தியில், அமெரிக்காவில் நெல் சாகுபடி யாகிற நிலங்களின் விஸ்தீரணம் 1,003,000 ஏகராக்களாகும்.

ஃ ஃ ஃ

நோய்கள் போவதற்காக ஜப்பானியர்கள், பாம்புகளை வேக வைத்துச் சாப்பிடுகிறார்கள். தினந்தோறும் சராசரி ஆயிரம் பாம்புகள் வீதம் டோக்கியோ நகரத்தில் மட்டும் கொல்லப் படுகின்றன.

ஃ ஃ ஃ

ஜார்ஜ் ஹாட்லி என்ற 42-வயதுள்ள ஓர் அமெரிக்கன், 57 நாட்கள்

இவையெல்லாம் ஒரு பிச்சைக்காரனுடைய பினத்தல்கள்! வாஸ்தவந்தான். சீமையிலிருக்கிற ஒரு பாதிரி என்ன சொல்கிறார் என்பதைக் கொஞ்சம் கவனிக்கிறீர்களா?

"நமது தேவைகளையும் செல்வத்தையும் பெருக்கிக் கொள்கிற பைத்தியக்கார முயற்சியில் மேனாடு ஈடுபட்டிருக்கிறது. அதிகார ஆசையும், பணஞ்சேகரிக்க வேண்டுமென்ற முயற்சியும் மேனாட்டைப் பெரிய ஆபத்திலே கொண்டு விடும். தேவைகளைக் குறைத்துக் கொண்டு, திருப்திப் படுகிற சுபாவத்தை தெரிந்து கொண்டால்தான் மேனாடு சுகப் பட முடியும். அப்பொழுதுதான் ஆன்மபலத்தையும் அடைய முடியும். மரணத்தின் நடுவிலேயும் அழிவின் மீதுந்தான், யுத்தம் வெற்றி யளிக்கிறது."

எளியவர்களைச் சுரண்டுவதைக் காட்டிலும், எப்பொழுதும் தேவையோடு இருப்பது கௌரவ மல்லவா?

விடாமல் 3565 மைல் தூரம் நடந்து சென்றிருக்கிறான். சராசரி தின மொன்றுக்கு 62/½ மைல் விகிதம் ஆகிறது.

ஃ ஃ ஃ

டாஸ்மேனியா தேசத்தில் எர்னஸ்ட் ரெனல்ட் என்ற ஒருவன் இருக்கிறான். இவன் அரைமணி நேரத்திற்குள் 44 வாழைப் பழங்களைத் தின்ன முடியும் என்று ஜம்பம் அடித்துக் கொள்கிறான்.

ஃ ஃ ஃ

சாதாரணமாக எட்டு பர்லாங்கு கொண்ட தூரத்திற்கு ஒரு மைல் என்று நாம் கணக்கிட்டுச் சொல்கிறோம். ஆனால் நார்வே தேசத்திலுள்ளவர்கள், ஏழு மைல் கொண்ட தொலைவையே ஒரு மைல் என்று கூறுகின்றனர்.

ஃ ஃ ஃ

காஸ்பியன் கடலில் மொத்தம் 300 ஆறுகள் சங்கமமாகின்றன. அப்படியிருந்தும், இந்தக் கடலின் நீர் மட்டம் வர வரக்குறைந்து கொண்டு வருகிறது. நூறு வருஷங்களுக்கு முன்னிருந்த நீர் மட்டத்தை விட இப்பொழுது 3 அடி குறைந்திருக்கிறதாம்.

ஃ ஃ ஃ

ஜெர்மனியிலுள்ள ஹாேனேவர் என்ற ஊரில் ஒரு திருடன் ஒரு வீட்டுக்குள் புகுந்து திருடி விட்டான். பிறகு என்ன தோன்றியதோ என்னவோ, மறுபடியும் திருடனைப் போலவே வீட்டுக்குள் புகுந்து, களவாடின சாமானை வைத்து விட்டு வந்தான். யோக்கியமுள்ள திருடனல்லவா ?

ஃ ஃ ஃ

ஐக்கிய மாகாண சட்ட சபையின் தலைவரான பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன், சட்ட சபை இலாகாவைச் சேர்ந்த எல்லாச் சேவகர்களும் கதர் உடையே தரிக்க வேண்டுமென்றும், தன் இலாகாவுக்கு வேண்டிய சாமான்கள் யாவும் சுதேசியாகவே இருக்க வேண்டுமென்றும் உத்திரவிட்டிருக்கிறார்.

ஃ ஃ ஃ

சென்ற பதினைந்து வருஷ காலமாக, ஜனங்கள், கிராமங்களைப் புறக்கணித்து விட்டு, நகரங்களில் குடியேறும் வழக்கத்தை மேற் கொண்டிருக்கிறார்களென்றும், இந்த மாதிரியே போய்க் கொண்டிருந்தால், உலகத்திலுள்ள ஜனங்களில் பெரும்பாலோர் 200 அல்லது 300 நகரங்களிலேயே வசிக்கும்படி நேரிடுமென்றும் அறிஞர் பாஸெட் என்பவர் கூறினார்.

ஃ ஃ ஃ

உலகத்தில் மொத்தம் எத்தனை டெலிபோன்கள் இருக்கின்றன தெரியுமா? 1936-ம் வருஷக் கடைசியில் உலகத்தில் 35,028,682 டெலிபோன்கள் இருக்கின்றன. இவற்றில் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் மட்டும் 17,423,871 டெலிபோன்களும், ஜெர்மனியில் 3,269,952 டெலிபோன்களும், கிரேட் பிரிட்டனில் 2,511,117 டெலிபோன்களும் இருக்கின்றன.

ஃ ஃ ஃ

ஆஸ்திரேலியா கண்டத்தில் சில விநோதமான விவாகங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. மணமகள் 13-வயது; மணமகன் 93-வயது. இந்த மணமகனுடைய முதல்தாரம் 80-வது வயதில் இறந்து விட்ட பிறகு, இரண்டாவது கல்யாணம் செய்யத் துணிந்தான் இவன். இன்னும் சில தம்பதிகளின் வயதைப் பாருங்கள். மணமகன் வயது 87; மணமகள் வயது 77. இன்னொரு விவாகத்தின் தம்பதிகள் இருவருக்கும் வயது சரியாக 79. இப்படியிருக்க, இந்தியாவில் மட்டும் தாரதம்யமற்ற விவாகங்கள் நடை

பெறுகின்றன என்று ஏன் சிலர் கூற வேண்டும்?

ஃ ஃ ஃ

சாதாரணமாக ஆபத்து என்றால் சிவப்பு வர்ணத்தைத்தான் எல்லாரும் குறிப்பார்கள். ஜெர்மனியில் இது காறும், நெருப்பணைக்கிற யந்திரங்களுக்கெல்லாம் சிவப்பு வர்ணமே பூசப்பட்டு வந்தது. இனி ஊதா வர்ணமே பூசப்பட வேண்டுமென்பது புதிய உத்திரவு. ஊதா வர்ணத்தோடு கூடியிருந்த தபால் பெட்டி முதலியவைகளெல்லாம் இனி சிவப்பு வர்ணமே பூசப்பட வேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

துருக்கியிலே இஸ்தாம்பூல் என்பது ஒரு பெரிய நகரம். இந்தவூரிலுள்ள நகர சபையார், தங்கள் சிப்பந்திகளில் சிலருக்குப் போலீஸ் அதிகாரங்கள் கொடுத்திருக்கிறார்கள். இவர்கள் மூலமாகத் தினந்தோறும் சராசரி 200 பேர் இப்பொழுது அபராதம் விதிக்கப்படுகிறார்களாம். ஏன் தெரியுமா? மோட்டார், பஸ், டிராம் முதலியன ஓடிக் கொண்டிருக்கிறபோது, அவைகளிலிருந்து இறங்கினால் அபராதம். தெருக்களிலே மிதியடிகளைத் தூசு தட்டினால் அபராதம். தெருக்களிலே குப்பைகளை வாரி எறிந்தால் அபராதம். இந்த ஒவ்வொரு குற்றத்திற்கும் ஒவ்வொரு பவுன் அபராதம்.

ஃ ஃ ஃ

ஹங்கேரி தேசத்தின் கல்வி மந்திரியான ஹோமன் என்பவர் சமீபத்தில் ஆசிரியர்கள் கூட்ட மொன்றில் பேசினார். அப்பொழுது, வேலை யில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் தொகை அதிகமாகி விட்டதென்றும் ஆசிரியத் தொழில் செய்யும் பெண்களெல்லாம் வேலையை விட்டு விட்டு, கலியாணம் செய்து கொண்டு குடும்பத்தோடு இருந்தால், ஆண்களுடைய வேலை யில்லாத் திண்டாட்டம் கொஞ்சம் குறையுமென்றும் சொன்னார். மறு நாளே இவர் வீட்டிற்கு ஏராளமான பெண்கள் வந்து கூட ஆரம்பித்தார்கள். என்ன விஷயம் என்று கேட்டார் அவர். 'எங்களுக்குப் புருஷர்களைத் தேடிக் கொடுங்கள்; நாங்கள் கல்யாணம் செய்து கொள்கிறோம்' என்றார்கள் பெண்கள். என்ன செய்வார் மந்திரி? பெண்களுக்குப் புருஷர்களைத் தேடிக் கொடுப்பதா இவர் வேலை? ஏன் இந்தப் பிரசங்கத்தைச் செய்தோம் என்றாகிவிட்டது இவருக்கு.

ஃ ஃ ஃ

இந்தியாவிலிருந்து கால் நடைகள் ஏற்றுமதி செய்யப்படுவது குறைந்து போயிருக்கிற தென்று அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது. 1927–28ம் வருஷத்தில் 18,354 கால் நடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால் 1935–36ம் வருஷத்தில் 407 கால் நடைகளே ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன.

ஃ ஃ ஃ

நகரங்களில் ரோட்டுகளில் நடப்பவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து போக வேண்டுமல்லவா? மோடார்களென்ன, மற்ற வண்டிகளென்ன இவற்றிற்கெல்லாம் தப்பித்துக் கொண்டு நாம் வீடு போய்ச் சேர வேண்டும். அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் சென்ற வருஷம், மோட்டார் முதலியவைகளினால் 10,740,000பேர் காய மடைந்தவர்கள்; 400,000 பேர் அங்க ஹீனமடைந்தவர்கள்; 111,000 இறந்து போனவர்கள்; 3,700,000 டாலர் நஷ்டமடைந்துவிட்டது.

தாமஸ் மஸாரிக்—ஜெக்கோ-ஸ்லோவேகியாவின் சிருஷ்டி கர்த்தன்

ஐரோப்பா கண்டத்தின் மத்திய பாகத்திலே ஜெக்கோ-ஸ்லோவேகியா என்றொரு நாடு உண்டு. ஐரோப்பிய யுத்தத்திற்கு முன் இது பொஹிமியா என்று அழைக்கப்பட்டது. பின்னர், இதனுடன் மொரேவியா, ஸிலிஷியா, ருதேனியா முதலிய சில பிரதேசங்களும் சேர்ந்து ஜெக்கோ—ஸ்லோ



Thomas Masaryk—1850–1937

வேகியா என்று அழைக்கப்பட்டது. இந்தப் பிரதேசங்கள், ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்னர், ஆஸ்திரியா ஹங்கேரியின் ஆதிக்கத்தில் இருந்தன. மேற்கூறப்பட்ட பிரதேசங்களில் பல ஜாதியார் வசித்து வந்தனர். இவர்களனைவரையும் ஒற்றுமைப்படுத்தி, ஒரு நாட்டின் கீழ் சுதந்திர புருஷர்களாக வாழக்கூடிய தன்மையில் வைத்தவர் தாமஸ் மஸாரிக் என்பவர். இவர் தமது 88 வது வயதில் 14-9-37ல் பிரேக் நகரத்தில் காலமானார். இவருடைய சரித்திரம் மிகவும் அற்புதமானது.

1850ம் வருஷம் மார்ச் மாதம் 7-ந் தேதி, மொரேவியா மாகாணத்திலுள்ள ஜெக் என்ற ஊரில் ஒரு வண்டிக்காரனுடைய வீட்டில் ஒரு குழந்தை பிறந்தது. இது பிற்காலத்தில், நாட்டுக்குப் பெரிய அதிகாரியாக வரக்கூடிய அதிருஷ்டத்தைப் பெறும் என்று அந்த ஊரிலுள்ளவர்கள் யாருமே அப்பொழுது நினைக்கவில்லை. ஜோஸப் மஸாரிக் என்கிற வண்டிக்காரனும், அவன் மனைவியாகிய தெரீஸே க்ரோபாஸிக் என்பவளும் வறுமையிலே செம்மை கண்ட தம்பதிகள். மனமொத்து, வந்ததைக் கொண்டு ஜீவனஞ் செய்து வந்தார்கள். ஆனால் ஒரே இடத்தில் நிரந்தரமாக வசித்து இவர்களால் காலட்சேபம் செய்ய முடியவில்லை: ஊர் ஊராகத் திரிந்து அலைய வேண்டியிருந்தது கேவலம் வயிற்றுப் பிழைப்புக்கு. என்ன செய்வார்கள் பாவம்! தங்களுடைய கஷ்டம் எவ்வளவாக இருந்த போதிலும், தங்களுடைய குழந்தையாகிய தாமஸுக்கு, நல்ல விதமான கல்வி பயிற்ற வேண்டுமென்று கவலை கொண்டிருந்தார்கள். இவ்விஷயத்தில், சிறப்பாகத் தாமஸின் தாய் அதிக சிரத்தை காட்டி வந்தாள். எவ்வித கஷ்டத்தைப் பட்டாவது, தன் மகனுக்கு நல்ல கல்வி கற்பிக்க வேண்டுமென்பது அவள் எண்ணம். எனவே, தான் ஜீவனோபாயத்திற்காக எந்தெந்த ஊர் சென்ற போதிலும் அங்கங்கெல்லாம், தன் மகனை ஆரம்

பப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிக் கல்வி அளித்து வந்தாள். தாமஸும், படிப்பிலே அதிக ஊக்கங் காட்டினார். உலக சரித்திரம், பூகோளம் முதலிய விஷயங்களில் இவருடைய கவனம் அதிகமாகச் சென்றது. பொஹிமியா, ஹங்கேரி முதலிய நாடுகளிலுள்ள முக்கியமான ஊர்களை யெல்லாம் மனப் பாடம் பண்ணுவார். பூகோள படங்களை அடிக்கடி உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பார். இப்படி இவர், தான் படித்ததோடு கூட இல்லாமல், மற்றவர்களுக்குப் போதிக்கும் சக்தியைப் பெற்றார்.

கடைசியில் ப்ரோனு என்ற ஊரில் இவருக்கு ஓர் ஆசிரியர் உத்தியோகம் கிடைத்தது. இதில் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு இவர், தன் சகோதரனைப் படிப்பித்ததோடு கூட, தானும் மேலே மேலே அறிவை விருத்திசெய்து கொண்டார். சுமார் நான்கு வருஷகாலம் இங்ஙனம் உபாத்தியாயர் வேலை பார்த்தார். இந்தக் காலத்தில் இராச்சாப்பாடே இவருக்குக் கிடையாது. இங்ஙனம் சாப்பிடாமல் மிகுத்திவைத்த பணத்தைக் கொண்டுதான் இவர் தன் சகோதரனைப் படிப்பித்து வந்தார்.

இந்தக் காலத்தில் தனது நாட்டிலுள்ள ஜாதிமதக் கட்டுப்பாடுகளையும், இவற்றினால் தேசம் சுதந்திரம் பெற முடியாமல், அந்நியர்களுடைய ஆதிக்கத்திற் குட்பட்டுத் துன்பம் அநுபவிப்பதையும் கண்டு இவைகளுக்கெல்லாம் பரிகார மொன்று மில்லையா வென்று தனக்குத்தானே சிந்திக்கலானார்.

பள்ளிக்கூடத்து ரஜா சமயம். தன் சொந்த ஊருக்குப் போக வேண்டுமென்ற ஆவல் இவருக்கு. ஆனால் கையில் காசில்லை. எனவே நடந்து சென்றார். வழியில், ப்ரஷ்யர்கள், பொஹிமியா தேசத்தின் மீது படையெடுத்து வருகிறார்களென்றும், தன் ஊரை நோக்கி வருகிறார்களென்றும் கேள்விப்பட்டார். உடனே, ஊருக்குள் நுழைகிறபோது காணப்படும் முதல் வீட்டில் 'இந்த ஊரில் காலரா மும்முரம்' என்று எழுதி வைத்து விட்டுச் சென்றார். ப்ரஷ்யப் படையினர், இதைப் பார்த்துவிட்டு, ஊருக்குள் நுழையாமலே திரும்பிச் சென்று விட்டனர்.

மஸாரிக், தனது 22 வயதிலிருந்து தேசிய காரியங்களில் அதிகமாகத் தலையிட்டு உழைக்கலானார். இந்தக் காலத்தில் பொஹிமியா தேசம், ஆஸ்திரியா—ஹங்கேரியின் ஆதிக்கத்திற் குட்பட்டு இருந்ததென்று சொன்னோமல்லவா? அரசாங்கத்தார் ஜனங்களின் தாய்ப்பாஷையாகிய ஜெக் பாஷைக்கு நிராதரவு காட்டினர்; ஜெர்மன்பாஷையை வலுவாகத் தேசிய வாழ்க்கையில் புகுத்தினார்கள். அரசாங்க பாஷையும், ஜெர்மன் பாஷையாக இருந்தது. இது தவிர, அந்நிய நாட்டாருடைய ஆசைக் கண்கள் இந்த நாட்டின் மீது அடிக்கடி பட்டுக் கொண்டு வந்தன.

இந்தச் சமயத்தில் பிரான்ஸ் முதலிய பல ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்ட தேசிய உணர்ச்சியானது, பொஹிமியா தேசத்திலும் பரவியது. ஜனங்கள், தாய் மொழி மீதும் தாய் நாட்டின் மீதும் அதிகமான அக்கறை காட்டினார்கள். இது சம்பந்தமாக நடைபெற்ற கிளர்ச்சிகளின் பயனாக, ப்ரேக் நகரத்தில் ஜெக் சர்வ கலாசாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இதில் தாமஸ், ஓர் ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டார். இதற்கிடையே இவர் அமெரிக்கா முதலிய நாடுகளைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்திருந்தார். எனவே மற்ற நாடுகள் எந்தெந்த விஷ

யங்களில் முன்னுக்கு வந்திருக்கின்றன வென்பதைத் தெரிந்து கொண்டார். தான், சர்வ கலாசாலையில் சேர்ந்து கொண்டதும், தேசத்தின் கல்வி விஷயத்தில், பல சீர்திருத்தங்களைச் செய்தார். ஒரு தேசத்தின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாயிருப்பது கல்வித் திட்டமல்லவா? இந்தக் கல்விச் சீர்திருத்தத்தின் மூலமாகத் தேசத்தின் சுதந்திரத்திற்குப் போராட இவர் துணிந்தார். ஆஸ்திரியா-ஹங்கேரி அரசாங்கத்தாரின் ஆதிக்கத்தையும் அவர்களின் அரசியல் ஊழல்களையும் பலமாகத் தாக்கி வந்தார். ஜனங்கள், இவருடைய உண்மை உழைப்பில் ஈடுபட்டு, இவரைப் பின்பற்றத் தொடங்கினார்கள். இச் சமயத்தில், 'அதீனியம்' என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்து ஜனங்களுக்கு நல்லறிவு புகட்டிவந்தார். கலாசாலை உத்தியோகத்திலிருந்து கொண்டே, இங்ஙனம் அரசியல் விவகாரங்களில் தலையிடுவதை, கலாசாலை அதிகாரிகள் அங்கீகரிக்கவில்லை. இவருடைய உத்தியோகத்திற்கே ஆபத்து ஏற்படும் போலிருந்தது. ஆனால் இவர் எதனையும் சட்டை செய்யவில்லை. மற்றொரு அரசியல் பத்திரிகையைத் தொடங்கினர். 1889ம் வருஷம் இவர் ஆஸ்திரிய பார்லிமெண்டில் ஓர் அங்கத்தினராக வாக்காளர்களால் தெரிந்தெடுக்கப் பட்டு, தேசத்தின் சுதந்திரத்திற்காகப் பெரிதும் உழைத்தார். இடையிலே இவர், பார்லிமெண்டிலிருந்து விலகியிருந்த காலத்தில், வேறொரு மாதாந்த பத்திரிகை ஆரம்பித்து நடத்தி வந்தார். இதன் மூலமாக இவர், ஜனங்களின் மனதைக் கவர்ந்தார். 'பொஹிமியாவின் தலைவர்' என்று ஜனங்கள் இவரைக் கொண்டாடினார்கள்.

1907ம் வருஷம் இவர் அமெரிக்கா சென்று, ஆஸ்திரிய அரசாங்கத்தார் தனது நாட்டை எங்ஙனம் ஹிம்சித்து ஆண்டு வருகின்றனர் என்பதைப் பற்றிப் பிரசாரஞ் செய்தார். பொஹிமியாவில் இவருக்குள்ள பொது ஜன செல்வாக்கைப் பார்த்து, இவர் கோரியபடி அநியாயமாகச் சிறை வைக்கப் பட்டிருந்தவர்களை விடுதலை செய்தனர். ஆஸ்திரியா—ஹங்கேரியில் குடியரசு ஏற்பட்டால்தான் தனது நாட்டிற்கு க்ஷேமம் ஏற்படுமென்று முழக்கம் செய்தார். இந்தக் கருத்தை துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள், நூல்கள் ஆகியவற்றின் வாயிலாக வெளியிட்டார்.

1914ம் வருஷம் யுத்தம் தொடங்கியது. இதன் முடிவில் பொஹிமியா, சிலீஷியா முதலிய பல சிறு நாடுகள் ஒன்று சேர்க்கப்பட்டு ஜெக்கோ—ஸ்லோவேகியா என்ற பெயரால் ஒரு சுதந்திர நாடு தோன்றியது. ஜெக்கர்கள் சுதந்திரம் பெற்றார்கள். இந்தத் தனிநாட்டின் அரசியல் அமைப்பு குடியரசு முறையைத் தழுவியதாக இருந்தது. இதன் முதல் தலைவராக (பிரசிடெண்டாக) மஸாரிக் தெரிந்தெடுக்கப் பட்டார். இந்தப் பதவியின் உத்தியோக காலம் ஏழு வருஷம். அந்தக் காலம் முடிந்தவுடன், மறு ஏழு வருஷத்திற்கும் இவர் பிரசிடெண்டாகத் தெரிந்தெடுக்கப் பட்டார். இதனால் ஜனங்கள் இவரிடத்தில் வைத்திருந்த மதிப்பு நன்கு புலப்படுகிறது. தமது உத்தியோக காலத்தில், ஜெக்கோஸ்லோவேகியா நாட்டை, உலகத்து முக்கியமான வியாபார நாடுகளில் ஒன்றாகச் செய்தார். ஐரோப்பிய அரசியல் ஆலோசனை மண்டபத்தில் தனது நாட்டுக்கு ஒரு கௌரவமான ஸ்தானத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

நமது நிருபர்களுடன்—

இந்தப்பகுதியில், ஆசிரியருடன் வாசகர்கள் தாராளமாகச்சந்திக்கலாம். சிலருக்குக் குறைகள் நிறைய இருக்கும். அவற்றை வாய்விட்டுச் சொன்னால்தான் அவர்களுக்கு ஆறுதல் ஏற்படும். இதுபோல், வேறு சிலர், ஏதேனும் ஆச்சரியமான ஒரு விஷயத்தைப் பார்த்தோ, கேட்டோ விடுவார்கள். அதை வெளியே சொல்லாமற்போனால் அவர்களுக்கு வயிறு வெடித்துப் போகும். இந்தச் சங்கடங்களெல்லாம் ஏன்? நண்பர்கள் மனந்திறந்து பேசுவதற்குத்தான், இந்தப் பகுதி திறக்கப்பட்டிருக்கிறது.

வறுமையும் கடமையும்

ஐயா,

இவ்வுலகில் வறுமையுஞ் செல்வமும் மக்களின் வாழ்க்கையோடிசைந்திருக்கிறது. ஒருவன், அறிவு, ஆற்றல் படைத்துத் தனது கடமையைச் செவ்வனே செய்தும், யாவர்க்கும் நல்லோனாய்ப் பொதுநலப் பிரியனாய்ப் பெரியோரால் புகழப்படுகிறான். ஆயினும் அவனிடம் வறுமைப் பிணி வலிய வந்தடைகிறது.

மற்றொருவன் பெருநிதி படைத்து, மக்கள் நெறியை முற்றும் மறந்து, அடாதுசெய்து, அறிவுடையோரால் பெரிதும் பழிக்கப்படினும் அவன்பால் செல்வத் திருமகள் செழிப்புற்றோங்கும் விந்தைதான் என்னே?

—*நேசன்*

ஒன்று 'நேசன்' கவனித்திருக்க வேண்டும். எல்லாச் சிறப்பும் பெற்றவனுக்கு வறுமை வலிய வந்தடைகிறதா? அன்றி வறுமை யடைந்தவன் எல்லாச் சிறப்பும் பெறுகிறானா? எல்லோராலும் பழிக்கப் பட்ட பின்னர் திருமகள் செழிப்புற்று ஓங்குகிறாளா? திருமகள் செழிப்புற்று ஓங்கிய பின்னர் எல்லோராலும் பழிக்கப் படுகிறானா? செல்வம் பெருகி இருந்தவன், அக் காலத்திலடைந்திருந்த செருக்கு, அவனை வறுமை வந்தடைந்த பின்னர் முழுதும் மாறி எல்லா நற்குணங்களுக்கும் பாத்திரனாக ஆவதையும், வறுமை யுற்றிருந்தவன் செல்வம் பெருகின காலத்து முன்னிருந்த எல்லா நற்குணங்களும் மாறி செருக்குற்று, பலராலும் உள்ளூற வெறுக்கப் படுவதையும்தான் அநுபவத்தில் காண்கிறோமே.

—*எஸ். வி.*

மந்திரிகளின் அதிகாரங்கள்

ஆசிரியரவர்களே,

நமது மந்திரிகள் இப்பொழுது, உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களைக் குறைக்க முயன்றுகொண்டிருக்கிறார்களே! அதில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறார்கள்? அவர்கள், வைஸ்ராய், கவர்னர்கள் ஆகியவர்களின் சம்பளங்களைக் குறைக்க முடியுமா? இர்வின், வைஸ்ராயாக இருந்த காலத்தில் வைஸ்ராய் கவர்னர்களின் சம்பளம் எவ்வளவு? இப்பொழுது ஏதாவது அதிலிருந்து குறைக்கப்பட்டிருக்கிறதா? இனிமேல் குறைக்கப்படுமா? விவரம் தெரிய அதிக ஆவலுடையவனாயிருக்கிறேன்.

—*ஒரு ஜிலோன் தமிழன்*

முயன்று கொண்டுதான் இருக்கிறார்கள். இதற்குள் வெற்றியைக் கண்டுவிட முடியுமா? வைசிராய், கவர்னர்கள் ஆகியவர்களுக்குச் சம்பளத்தைக் குறைக்க, சட்டப்படி மந்திரிகளுக்கு அதிகாரமில்லை. அப்படி யிருந்தால்,

சுயராஜ்யம் வந்து விட்டது போல் தானே. லார்ட் இர்வின் காலத்திலிருந்து இப்பொழுது ஒன்றும் சம்பளம் குறைக்கப் படவில்லை. தற்போதுள்ள திட்டப்படி, வைசிராய், மாகாண கவர்னர்கள் இவர்களுடைய மாதச் சம்பளம் வருமாறு:—

	ரூ
வைசிராய்	**20,000**
கவர்னர்கள்	
சென்னை	**10,000**
பம்பாய்	**10,000**
வங்காளம்	**10,000**
ஐக்கிய மாகாணம்	**10,000**
பஞ்சாப்	**8333⅓**
பீஹார்	**8333⅓**
மத்திய மாகாணம்	**6000**
அஸ்ஸாம்	**5500**
வடமேற்கெல்லை மாகாணம்	**5500**
ஒரிஸா	**5500**
சிந்து	**5500**

இந்தச் சம்பள விகிதங்கள் இனி குறைக்கப் படுமாவென்ற கேள்விக்கு குறைக்கப் படத்தான் வேண்டும் என்ற பதிலே சொல்ல வேண்டியிருக்கிறது.

—*ஆசிரியர்*

தமிழ்ப் பிரயோகங்கள்

ஆசிரியரவர்களே,

இப்பொழுது நாம் தமிழில் புதிய புதிய வார்த்தைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். ஆங்கில வார்த்தைகளுக்குப்பதிலாக அவைகளுக்குத் தக்க தமிழ் வார்த்தைகளை சிருஷ்டிக்க முயன்றுகொண் டிருக்கிறோம். அப்படி யிருக்கச் சில பத்திரிகைக்காரர்களும் கட்டுரையாளர்களும் தமிழில் எழுதும் பொழுது 'சில டயங்களில் (Time)', 'கிளியராக (Clear)' என்பவை போன்ற அபூர்வ சங்கதிகளை அநாவசியமாக—அதற்குத் தக்க தமிழ் வார்த்தைகள் இருக்கும் பொழுதே—உபயோகித்து வருகிறார்களே! இது ஏன்? இதற்கு என்ன செய்யலாம்?

—S. *கல்யாணம்*

என் என்ற கேள்விக்கு நாம் எப்படிப் பதில் சொல்ல முடியும்? அவரவர்களுடைய இஷ்டம் என்றுதான் சமாதானப் படுத்திக் கொள்ள வேண்டும். பொதுவாக சரியான தமிழ்ப் பதங்கள் அகப்படுகிறபோது, அவைகளுக்குப் பதிலாக ஆங்கில பதங்களையோ மற்றச் சொற்களையோ போட வேண்டியது அநாவசியம். மேனாடுகளில், அரசியல் சுதந்திரத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்கு முன்னோடி தலைவர்கள் பாஷைச் சீர்திருத்தந்தான் செய்திருக்கிறார்கள். துருக்கி நாட்டில் கமால் அதாதுருக் பாஷைச் சீர்திருத்தம் செய்திருப்பது போல், தமிழ் நாட்டிலும் ஒரு சர்வாதிகாரி தோன்றி தமிழ்ப் பிரயோகங்கள் விஷயத்தில் ஒரு நிர்ணயம் ஏற்படுத்தினால் மிகவும் நல்லது.

—*ஆசிரியர்*

அம்மாயியின் குறை

உங்க பேப்பரிலே என் பொம்மனாட்டிகளைப்பத்தி ஒன்னும் எழுதறது இல்லே. ஆத்திலே புருஷா, பொண்டுகளிடத்திலே எப்படி நடக்கறது, பொண்டுகள் புருஷாள் கிட்டே எப்படி மரியாதையா இருக்கறது, இதுகளெல்லாம் எழுதக்கூடாதோ? கூட, இக்காலத்து பொட்டைகளுக்கு சரியா சமைக்கக்கூட தெரியலே. பாகற்காய் பிட்லே இப்படி பண்ணறது; உளுந்து வடை இப்படி தட்டறது; இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் எழுதினா, பொம்பனாட்டிகள் மத்தியா

னத்திலே உட்காந்து படிச்சு புதுபுது மாதிரி பட்சணங்கள் பண்ணுவா. புருஷாளும் சாப்பிடுவா. அது எங்காணும் நீர் அதெல்லாம் எழுதறதில்லே?

—அம்மாமி

வாஸ்தவம் அம்மாமி; ரொம்ப கோவிச்சுக்கிறீளே. பொம்மனாட்டிகளுக்கு, பட்சணம் பண்றதுக்குச் சொல்லிக் கொடுக்கவா நாங்க இருக்கோம்? உங்களே போலேயிருக்கிற அம்மாமிகள் ஏன் மத்தியானத்திலே குட்டிகளுக்கு இதையெல்லாம் சொல்லித் தரப்படாது? நடக்கிற நியூஸ் பேப்பர் மாதிரி வீடு வீடாக நுழைந்து புறப்படுகிறீளே தவிர, ஓர் இடத்தில் உட்கார்ந்து, உருப்படியா ஏதாவது வேலே செய்யப் படாதா? படிச்சதுக்கு அடையாளம் அதானே. உங்களே போலவே நானும் எழுதியிருக்கேன் பார்த்தேளா?

—ஆசிரியர்

தமிழ் பார்லிமெண்ட்

ஐயா,

சென்னையிலே சமீபத்தில் தமிழ் பார்லிமெண்ட் ஒன்று ஏற்படப்போவதாகக் கேள்வப்படுகிறேன். இது நிரம்ப நல்ல முயற்சி. இளைஞர்கள், முக்கியமான பல பிரச்னைகளைக் குறித்து வாதம் செய்து, அதன் மூலமாகத் தங்கள் அறிவையும் ஆராய்ச்சித்திறனையும் அதிகப்படுத்திக் கொள்ளலாமல்லவா? முக்கியமாகத் தமிழ்ப் பாஷையிலே, அரசியல் விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்குத் தகுந்த மேடையோ சந்தர்ப்பமோ கிடைப்பதில்லை. அதற்கு இந்தப்பார்லிமெண்டு நிரம்ப உதவியாயிருக்கும். இது மாதிரி பல இடங்களிலும் ஏற்படுத்தினால் நிரம்ப நன்றாயிருக்குமல்லவா?

—ஷண்முகம்

பல ஊர்களிலும் இந்த பார்லிமெண்டுகள் தோன்ற வேண்டும். இவற்றில் இளைஞர்கள் சேர்ந்து, ஒழுங்காகப் பேசவும் தர்க்கம் செய்யவும் கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் பேச்சளவோடு நின்று விடக் கூடாது. செயலிலும் கொண்டு வர வேண்டும்.

—ஆசிரியர்

தமிழ் டாக்கிகள்

ஸார்,

இப்பொழுதுள்ள தமிழ் டாக்கிகள் எல்லாம் ரொம்ப யூஸ்லெஸ் ஸார். இங்கிலீஷ் பிக்சர்ஸ் ஸ்டாண்டர்டுக்கு ஈக்வலாக ஒரு தமிழ் படத்தையாவது எடுத்துச் சொல்ல முடியுமா? அடேயப்பா, எத்தனை ஸாங்க்ஸ்! பெரிய நியூஸென்ஸ். வேஷத்திற்குப் பொருத்தமில்லாத ஆள்; ஆளுக்குப் பொருத்தமில்லாத வேஷம். இதோடு நல்ல ஆக்டிங் கேபபிலிடியாவது உண்டோ? ஒன்றுமில்லை. இவைகளை யெல்லாம் ரிபார்ம் பண்ணுவதெப்படி?

—ஒரு கிராஜுயுவேட்

ஸார், முதலில் உங்களைச் சீர்திருத்திக் கொள்ளுங்கள். ஏன் இப்படி இங்கிலீஷும் தமிழுமாகக்குளறிக்கொட்டுகிறீர்கள்? ஒழுங்காக உங்கள் தாய்ப் பாஷையாகிய தமிழை எழுதக் கற்றுக் கொள்ளும். பிறகு டாக்கி சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசலாம்.

—ஆசிரியர்

கொஞ்சம் கவனியுங்கள்

——" கணக்காயன் "

அதிசயமான பெருக்கல்

```
      12345679 ×
      999999999
    ─────────────
      111111111
     111111111
    111111111
   111111111
  111111111
 111111111
111111111
111111111
111111111
─────────────
12345678987654321
─────────────
```

கோள்ளக்குப் போனாலும் கூட்டு வேண்டாம்.

ராமன் 30 பழங்களை வைத்துக்கொண்டு வியாபாரம் தொடங்கினன்.

5 காசுக்கு (ஒன்றேகாலணுவுக்கு) 2பழம் வீதம் விற்றான்.
விற்று வந்த தொகை — 1—2—9

கிருஷ்ணனும் அவனைப் பார்த்து 30 பழங்களை வாங்கி வியாபாரம் செய்யத் தொடங்கினன்.

5 காசுக்கு 3 பழம் வீதம் விற்றான்.—விற்று முதல் 0—12—6

மொத்தம் 1—15—3

இரண்டு பேரும் சேர்ந்து கூட்டாக வியாபாரம் செய்யத் தீர்மானித்தார்கள். இருவருடைய மூலதனமாகிய 60 பழங்களை 10 காசுக்கு ($2\frac{1}{2}$ அணுவுக்கு) 5 பழம் என்று விற்றார்கள். கிடைத்தது என்ன ? 1—14—0

எனவே நஷ்டம் 0—1—3

கொள்ளைக்குப் போனாலும் கூட்டாகப் போகாதே யென்பார்களே பெரியோர்கள். இதற்குத்தானே ?

அன்றாட உலகம்



1937

ஆகஸ்ட்

25 சீன ஜப்பானிய யுத்தத்தைப் பற்றி பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேனும் அந்நிய நாட்டு மந்திரியாகிய ஈடனும் 2-30 மணி நேரம் கலந்தாலோசித்தனர்.

26 தளபதி பிராங்கோவின் துருப்புகள், சாண்டாண்டாருக்குள் பிரவேசித்தன. அரசாங்கத் துருப்புகளில் பதினையாயிரம் பேர் சரணடைந்தனர்.

சீனாவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகரான ஸர் ஹ்யூ நாட்ச்புல் ஹூகெஸ்ஸன் (Sir Hugh Knatchbull Hugessen) நாங்கிங்கிலிருந்து ஷாங்காய்க்கு மோடாரில் வருகிறபோது, ஜப்பானிய ஆகாய விமானங்கள், அவரை வெடி குண்டுகளால் தாக்கின. இதனால் அவருடைய முதுகெலும்பு ஒடிந்து விட்டது.

கான் அப்துல் கபுர்கான் 6 வருஷத்திற்குப் பிறகு இன்று பெஷாவர் நகரம் போய்ச் சேர்ந்தார், பொது ஜனங்கள் இவரை மிகவும் உற்சாகமாக வரவேற்றனர்.

27 அந்தமான் தீவிலுள்ள அரசியல் கைதிகள் விஷயமாக அரசாங்கத்தார் சரியாக நடந்து கொள்ளாமையைக் கண்டிக்க வேண்டி வங்காள சட்ட சபையின் காங்கிரஸ் அங்கத்தினர்கள், இன்று கூடிய சட்ட சபையின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாமல் வெளியேறி விட்டனர்.

மோரீசு தீவிலுள்ள போர்ட் லூயிஸ் என்னும் நகரத்தில் இன்று பெரிய கலகம். இந்தியர்கள் வசிக்கும் குடிசைகள் பல நாசமாயின.

தளபதி பிராங்கோ சாண்டாண்டாரைக் கைப்பற்றியதைப் பாராட்டி அவருக்கு முஸோலினி ஒரு தந்தி கொடுத்திருக்கிறார்.

28 சைனாவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர் மீது வெடி குண்டு எறிந்தது, அவரைக் கொல்ல வேண்டுமென்ற நோக்கத்துடனல்லவென்றும், சீனத்தலைவரான சியாங் கைஷேக்கைக் கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கமேயென்றும் ஜப்பானியர் கூறுகின்றனர்.

சைனாவை முழங்கால் முறிய அடிக்க வேண்டுமென்று, ஜப்பானின் பிரதம மந்திரி, ஜப்பானியப் பார்லிமெண்டில் இறுமாப்புடன் பேசினார்.

29 அடுத்த காங்கிரஸுக்கு உத்தியோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கவேண்டி வரவேற்புக் கமிட்டியின் கூட்டமொன்று இன்று பர்தோலியில் கூடியது. கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப் பட்டார்கள்:-

தர்பார் கோபால்தாஸ் தேசாய்-வரவேற்புக்கமிட்டித்தலைவர்; கன்யாலால் தேசாய் பொதுக் காரியதரிசி; (1) ஸ்ரீவன்லால் திவான் (2) போகிலால் லாலா, (3) நரஹரி பரேக் (4) கல்யாண்ஜி மேடா, (5) ஷன்முகலால்ஷா (6) ஜ்யோத்ஸ்னா பென்சுக் லால்-கூட்டுக் காரியதரிசிகள்; (1) தயாபாய் மேடா (2) வேணிலால் புலாபாய் (3) மாயாபாய் டேவி (4) சோடாபாய் மார்பேடியா-பொக்கிஷதார்கள்; மிருதுளாபென் சாராபாய்-ஸ்திரீ தொண்டர்களின் தலைவி. வரவேற்புக் கமிட்டியின் காரியாலயம், பர்தோலியிலுள்ள சுயராஜ்ய ஆசிரமத்தி லிருக்கும்.

அந்தமான் தீவு அரசியல் கைதிகள், இன்று உண்ணாவிரதத்திலிருந்து விலகிக் கொண்டு ஆகாரமேற்றுக்கொள்ள ஆரம்பித்தனர்.

30 பீஹார் சட்ட சபையில் வரவு செலவு திட்டம் ஆஜர் படுத்தப்பட்டது. மாகாணத்தின் உத்தேச வரவு ரூ 1,89,57,000; உத்தேச செலவு ரூ 1,84,37,000. மிச்சம் ரூ 5,20,000,

அமெரிக்கக் கப்பலாகிய 'ஹூவெர்' என்பதை, சீன ஆகாய விமானங்கள் தாக்கின. தவறுதலாக இது நிகழ்ந்து விட்டதென்று சீன அரசாங்கத்தார் கூறுகின்றனர்.

ஜூலை மாதம் 7ந் தேதியிலிருந்து, ஜப்பான், சீனாவில் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளைத்தொகுத்து, சர்வதேச சங்கத்திற்குச் சீன அரசாங்கம் ஓர் அறிக்கை அனுப்பி யிருக்கிறது.

31 இந்தியாவின் வருங்கால அரசியல் திட்டத்தை நிர்ணயிக்க ஒரு பொது ஜன சபை கூட வேண்டுமென்ற தீர்மானம், பிரதம மந்திரி ராஜகோபாலாச்சாரியாரால் சென்னைச் சட்ட சபையில் கொண்டு வரப்பட்டு நிறைவேறியது.

சென்னையிலுள்ள மேல்சபை கீழ்சபை ஆகிய இரு சட்டசபைகளையும் ஒன்று கூட்டி கவர்னர் ஒரு பிரசங்கம் செய்தார்.

சென்னை அரசாங்கத்தார், ஒன்றரைக்கோடி ரூபாய் கடன் வேண்டுமென்று அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். எதிர் பார்த்ததற்கு அதிகமான தொகை கிடைத்திருக்கிறது.

சென்னை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் இன்று சென்னைச் சட்ட சபையில் ஆஜர் படுத்தப் பட்டது. 6000 ரூபாய் வரையில் அதிக வரவு இருக்குமென்று திட்டம் போடப் பட்டிருக்கிறது.

18 வயதுக்கு மேல் 45 வயதுக்குட்பட்ட அனைவரும் கட்டாய ராணுவச் சேவகம் செய்ய வேண்டுமென்று சீன அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

சீனாவுக்கும் சோவியத் ருஷ்யாவுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. சீனாவுக்கு யுத்த தளவாடங்கள் சப்ளை செய்வதற்காகவே இந்த ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக ஜப்பானியர்கள் கூறுகிறார்கள்.

செப்டம்பர்

1 பாலஸ்தீனத்தில் மறுபடியும் அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் சண்டை கிளம்பி விட்டது. நான்கு அராபியர்கள் கொலை செய்யப் பட்டார்கள்,

சட்டசபை உத்தியோகஸ்தர்கள், அங்கத்தினர்கள் இவர்களின் சம்பள நிர்ணய மசோதா இன்று சென்னைச் சட்டசபையில் நிறைவேறியது.

2 ஹாங்காங் நகரத்தில் பெரிய புயற்காற்று அடித்தது. அதிகமான சேதம்.

மத்திய தரைக் கடலில் ஸ்பெயின் யுத்தத்தில் கலவாத நாடுகளின் கப்பல்கள் தாக்கப்படுவதை நிறுத்த, ஐரோப்பிய வல்லரசுகளின் மகாநாடு ஒன்று கூட்ட வேண்டுமென்பதைப் பற்றி யோசிக்க பிரிட்டிஷ் மந்திரி சபையின் கூட்டம் இன்று கூடியது.

சீனாவில் ஜப்பான் கொண்டுள்ள நோக்கம் தான் என்ன வென்பதைப் பற்றி, ஜப்பானிய பார்லிமெண்டில் கோகுமைன் டோமை என்ற கட்சியார் ஒரு பிரச்னையைக் கிளப்பினர்.

மத்திய மாகாணத்துக் கல்வி மந்திரியாகிய ரவி சங்கர் சுக்லா என்பவர், மேற்படி மாகாணத்தில் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதன் சம்பந்தமாக காந்தியடிகளுடன் கலந்துபேசினார்.

5 மத்திய தரைக் கடல் விஷயமாக ஆலோசிக்க ஐரோப்பிய வல்லரசுகளின் மகாநாடொன்று ஜினிவாவுக்குச் சமீபத்திலுள்ள நியோன் என்ற இடத்தில் கூடுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

ஜப்பானில் யுத்த ஜுரம் அதிகமாயிருக்கிறது. பொது ஜனங்கள் பலரும், யுத்தத்தில் சேருமாறு தூண்டப் பட்டு வருகிறார்கள்.

6 நாஜி கட்சியின் ஒன்பதாவது மகாநாடு, நியுரென் பேர்க்கில் கூடியது. ஹிட்லரின் வருகை, மக்களிடை பெரிய உற்சாகத்தை உண்டுபண்ணியது.

சீனாவிலுள்ள பிரிட்டிஷ் பிரஜைகளைக் காப்பாற்றுவதற்கு, இந்தியாவிலிருந்து

அனுப்பப்பட்ட துருப்புகள் இன்று ஹாங்காங் துறைமுகத்தில் வந்திறங்கின.

7 வட மேற் கெல்லைப்புற மாகாணத்தில் காங்கிரஸ் கட்சியினர், மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொண்டனர். டாக்டர் கான் சாய்பு-பிரதம மந்திரி; மற்ற மந்திரிகள்:- காஜி அதவுல்லா, பஞ்சாராம் காந்தி, கான் அப்பாஸ் கான்.

இந்தியா சட்டசபையில் காங்கிரஸ் கட்சித் தலைவரான புலாபாய் தேசாயை, வைசிராய் அழைத்துப் பேசினார்.

8 ஜப்பானின் தற்போதையமந்திரிசபைக்கு சீன ஜப்பான் யுத்தங் காரணமாக சர்வாதிகாரம் கொடுக்கப்பட்டது.

சுபாஸ்சந்திரபோஸ் கல்கத்தா நகரசபை ஆல்டர் மெனாகத் தெரிந்தெடுக்கப் பட்டார்.

9 மத்திய தரைக்கடல் மகா நாட்டுக்கு இத்தலியும் ஜெர்மனியும் வர முடியாதென்று தெரிவித்திருக்கின்றன.

சீனாவுக்கு உதவி செய்ய ருஷ்யாவிலிருந்து ஆகாய விமானங்கள், யுத்த தளவாடங்கள் முதலியன சியான்பு என்ற துறை முகத்தில் வந்திறங்கின என்று ஒரு ஜப்பானியப்பத்திரிகை கூறுகிறது.

திருவாங்கூர் அரசாங்கத்தார், அரசாங்கக் காரியாலயங்களில் உபயோகிக்கப் பெறும் எல்லாச் சாமான்களும் சுதேசியாயிருக்க வேண்டுமென்று ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

ஐக்கிய மாகாண கவர்னர், இரண்டு சட்ட சபைகளையும் கூட்டி இன்று பேசினார்.

10 மத்தியதரைக்கடல் மகாநாடு இன்று ஜினிவாவுக்குச் சமீபத்திலுள்ள நியோன் என்ற ஊரில் கூடியது. பிரெஞ்சுப் பிரதிநிதியாகிய டெல்போஸ் என்பவர் தலைமை வகித்தார்.

மத்திய மாகாண சட்ட சபையில் இன்று வரவு செலவுத் திட்டம் ஆஜர் படுத்தப் பட்டது. சுமார் 21009 ரூபாய் அதிக வரவு இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

11 கவிஞர் ரவீந்திரநாத் டாகூருக்குக் கடுமையான நோய். இதனால் நாட்டில் பலருக்கும் கவலை.

பர்மா அரசாங்கத்தார், வழக்கம் போல மேமியோ என்ற கோடை வாசஸ்தலத்திற்கு இவ் வருஷம் போவதில்லையென்றும், சிக்கனத்தை உத்தேசித்து இங்ஙனம் செய்யப்பட்டிருக்கிற தென்றும் அறிவிக்கப்படுகிறது.

30-9-37ல் பாரிஸில் நடைபெறப் போகும் விஞ்ஞான மகா நாட்டில் பிரசன்னமாயிருக்க, ஸர் சி. வி. ராமன் இன்று பம்பாயில் கப்பலேறினார்.

குமாரி இந்திரா நேரு, இங்கிலாந்துக்கு மேல் படிப்புக்குப் பிரயாணமானாள்.

எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதாக. வடமேற்கு எல்லைப்புற மந்திரிச் சபையார் தீர்மானித்திருக்கின்றனர்.

12 சர்வதேச சங்கத்திற்குத் தன் கட்சியை எடுத்துச் சொல்லி சீனா ஓர் அறிக்கை அனுப்பி யிருக்கிறது.

13 இந்தியா சட்டசபையையும் ராஜாங்க சபையையும் ஒன்று கூட்டி வைசிராய் ஒரு பிரசங்கம் செய்தார்.

சீன ஜப்பான் சண்டையில், தான் மத்தியஸ்தம் சொல்வதாக ஜெர்மனி தெரிவித்திருக்கிறது.

பண்டித ஜவஹர்லால் நேரு, பரோடா சமஸ்தானத்திற்கு விஜயஞ் செய்யும் போது, அவருக்கு உபசாரப்பத்திரம் வழங்க வேண்டுமென்று பரோடா முனிசிபல் சபையார் தீர்மானித்தனர். ஆனால் திவான் இதனை ரத்து செய்து விட்டார்.

14 ஜெக்கோஸ்லோவேகியாவின் தலைவரான தாமஸ் மஸாரிக் என்பவர் இறந்து விட்டார்.

மத்தியதரைக்கடல் மகாநாட்டு ஒப்பந்தம் கையெழுத்திடப் பெற்றது.

ஷாங்காய் நகரத்தில் இத்தாலிய துருப்புகள் வந்திறங்கின.

15 சர்வதேச சங்க அஸெம்ப்ளிக்கூட்டத்தில் சைனாவின் கட்சியை எடுத்துச் சொன்னார் வெல்லிங்டன் கூ என்பவர்.

ஸ்பெயினில் உள்ள அஸ்டூரியா மாகாணம் சுதந்திரக் கொடியை நாட்டி விட்டது.

16 மாட்ரிட் நகரம், கலகக்காரர்களின் ஆகாய விமானங்களிலிருந்து வெடி குண்டுகளால் தாக்கப்பட்டது. மொத்தம் 347 வெடி குண்டுகள் எறியப்பட்டன.

சீனப் படைகள் இருக்கும் ராணுவ ஸ்தலத்தை, ஜப்பானிய ஆகாய விமானங்கள் பலமாகத் தாக்கின.

பண்டித ஜவஹர்லால் நேரு குஜராத் மாகாணத்தில் சுற்றுப் பிரயாணம் செய்யத் தொடங்கி விட்டார்.

17 பிகானீர் மகாராஜா பட்டத்திற்கு வந்த ஐம்பதாவது வருஷக் கொண்டாட்டம், மேற்படி சமஸ்தானத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

சட்டமறுப்புக்காலத்தில் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களை யெல்லாம் வாபீஸ் செய்துவிட வேண்டுமென்று பம்பாய் அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

பம்பாயின் புதிய கவர்னரான ஸர் ரோகர் லம்லி இன்று பம்பாய் வந்து சேர்ந்தார்.

வட மேற்கெல்லைப்புற மாகாணத்தில், காங்கிரஸ் மந்திரிச் சபையினர், மாகாண வரவு செலவு திட்டத்தை ஆஜர் படுத்தினர். சுமார் நாலேகால் லட்சம் ரூபாய் மிச்சப்படுத்திக் காட்டி யிருக்கின்றனர்.

18 பம்பாயின் கவர்னர் லார்ட் பிராபோர்ன், இன்று தம் குடும்ப சகிதம் கப்பலேறினர்.

ஆப்ரிக்கா கண்டத்திலுள்ள லிபியாவுக்கு மூவாயிரம் துருப்புகளை அனுப்பி யிருக்கிறது இத்தலி.

கவிஞர் டாகூர் பூரண சொஸ்தமடைந்து விட்டார். தாம் நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தில், தம்மிடம் அநுதாபம் காட்டிய அனைவருக்கும் வந்தனம் செலுத்தி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

ஜப்பானியர் முப்பது மைல் நீளமுள்ள சீன ரெயில்வேயைக் கைப்பற்றிக் கொண்டதாக அறிவிக்கப் படுகிறது.

20 மத்திய மாகாண மந்திரிகள், தங்களுக்கு பார்லிமெண்டரி காரியதரிசிகள் தேவையில்லை என்று தீர்மானித்து விட்டனர்.

சேலம் ஜில்லாவில் பூரண மதுவிலக்குத் திட்டம் 1-10-37 முதல் அமுலுக்கு வரும் என்று இன்று அறிக்கை பிறந்தது.

பம்பாய்ச் சட்டசபையில், இலவச ஆரம்பக் கட்டாயக் கல்வித் திட்டத்தை மாகாண முழுவதிலும் அமுலுக்குக் கொண்டு வருவதென்று தீர்மானிக்கப்பட்டது.

சீனக் கடல் வழியாகச் செல்லும் பிரிட்டிஷ் கப்பல்களை ஜப்பானிய அதிகாரிகள் பரிசோதனை செய்வதில் தனக்கு ஆட்சேபமில்லை யென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தெரிவித்திருக்கின்றனர்.

21 இன்றைய சர்வதேச சங்கக் கூட்டத்தில் லிட்விநொப் என்ற ருஷ்யப் பிரதிநிதி, ஸ்பெயினில்தான் நடைபெறும் யுத்தத்தையும், சீனாவின் மீது ஜப்பான் படையெடுத்திருப்பதையும் கண்டித்துப் பேசினார்.

ஜெக்கோஸ்லோவேகியாவின் தலைவரான தாமஸ்மஸாரிக்கின் சவச் சடங்கின்போது டாக்டர் பெனிஸ் உருக்கமானதொரு பிரசங்கம் செய்தார்.

பொதுஜன சபை கூட்டவேண்டுமென்ற தீர்மானம் இன்று பம்பாய் சட்டசபையில் கொண்டுவரப்பட்டது.

22 சீனாவில், நாங்கிங்கிலும் காண்டனிலும் ஜப்பானிய ஆகாய விமானக்குண்டுகள் பலத்த சேதத்தை விளைவித்தன.

உனக்காக வாழ்வேன்—

என் காதலா! உள்ளத்தின் அரசே! என் தெய்வமே! மரிப்பதற்குத் தயாராயிருந்தேன். ஆனால் உனக்காக வாழத் தீர்மானித்து விட்டேன்.

உன்னை எதிர் பார்த்து நிற்கிறேன். அதனால் சந்தோஷமும் அடைகிறேன். அந்தச் சந்தோஷத்திற்காகவாவது உயிர் வாழக் கூடாதா?

உன்னடியிலே என்னைப் பலி கொடுக்கத் தயார். அதனால் பலனில்லையென்று நீ கருதினாலும், என் கடமைச் செய்கிறேன் என்ற திருப்திக்காகவாவது நான் உயிர் வாழக் கூடாதா?

உலகத்தின் பழைய பத்திரிகை எது?

——சி. மா.

உலகத்தின் மிகப்பிரபலமான பத்திரிகைகள் பத்து என்று சொல்லலாம். இவற்றில் ஏழு பத்திரிகைகள் இங்கிலீஷ் பாஷையில் வெளியாகின்றன. இது இங்கிலீஷ்காரர்களுக்கு ஒரு பெரிய பெருமையல்லவா! ஆனால் பத்திரிகை, முதன் முதல் ஆரம்பிக்கப் பட்ட இடம் எது? இங்கிலாந்தல்ல. ரோமாபுரி எப்படி, உலகமெங்கணும் நாகரிகம் பரவுவதற்கு முக்கிய காரணமாயிருந்ததோ அப்படியே, பத்திரிகா உலகம் அபிவிருத்தியடைவதற்கு, இந்த ரோமாபுரியே ஆதி ஸ்தலமாயிருந்தது.

சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே, ரோமாபுரியில் ஜூலியஸ் சீஸர் என்பவன் ஆண்டு வந்தானல்லவா? அப்பொழுது அன்றாடம் நடைபெறும் செய்திகளைத் தொகுத்து ஒரு பத்திரிகை அவன் வெளியிடச் செய்தான். இதற்கு 'ஆக்டா டியுர்னு' (Acta Diurna) என்று பெயர். 'அன்றாடச் செய்திகள்' என்பது தான் இதன் அர்த்தம். இதனை அக்காலத்தில் பொது ஜனங்கள் அநேகமாக வந்து கூடும் பொது மேடையில் (Forum) ஒட்டுவார்கள். தவிர, இதனை விலைக்கு விற்கவும் செய்வார்கள்.

அந்தக் காலத்திலேயே, இந்தப் பத்திரிகையில் சில 'கப்ஸா' செய்திகளும் வெளியாயின என்று தெரிகிறது. உப்பும் புளிப்பும் இல்லாத செய்திகளைக் கொஞ்சம் காரசாரமாக வெளியிட வேண்டுமென்ற நோக்கத்துடன், 'கைச்சரக்கு' களையும் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் சொல்லடுக்குகள் தான் அதிகமாயிருக்குமே தவிர, உண்மைக்கு மாறான செய்திகள் வெளியிடப் படவில்லை.

மேற்படி பத்திரிகையிலிருந்து சில செய்திகளை உதாரணமாகத் தருகிறோம்:—

'இன்று பலமான இடி இடித்தது. முற்பகல் 'சும்மா வேலியா' என்ற இடத்தில் ஒரு மரத்தின் மீது இடி விழுந்து. அந்த மரம் நாசமாய்ப் போயிற்று'.

'பாங்கர் தெருவு கீழ்க் கோடியிலுள்ள சாராயக் கடையில் இன்று ஒரு சச்சரவு நடைபெற்றது. ஒருவன் பலத்த காயமடைந்தான்'.

'மார்க்கெட்டுகளில், ஓவர்சியர்களினால் பரிசோதனை செய்யப்படாத இறைச்சியை விற்றதற்காக, சில கசாப்புக் கடைக்காரர்கள் இன்று அபராதம் விதிக்கப் பட்டார்கள்'.

ஆனால் இந்த 'ஆக்டா' என்ற பத்திரிகை, ஜூலியஸ் சீஸர் காலத்தோடு முடிவடைந்தது.

சைனாவில், ஆயிரம் வருஷங்களுக்கு முன்னாடி யிருந்து 'பீகிங் கெஜட்' என்ற பத்திரிகையைப் பட்டுத் துணியில் அச்சிட்டு வெளியிட்டு வந்தார்கள். இப்பொழுது இந்தப் பத்திரிகையை இதேமுறையில் வெளியிட்டு வருகிறார்கள். எனவே இது தான், உலகத்தில் பழைய பத்திரிகை, என்ற கௌரவஸ்தானத்தை இப்பொழுது பெற்றிருக்கிறது.

மாணவனே! தலை நிமிர்

—வி. தேவாச்சாரியன்

சகோதர மாணவனே! நம் உலகம் அற்புதமானது. சக்தி வாய்ந்தது. என்றும் இளமைத் தன்மை பொருந்தியது. சக்தி, சத்தியம், சமரஸம் ஆகியவற்றின் நிலைக்களம். அரசியல்வாதி, சமூக சீர்திருத்தக்காரன், மதோபதேசி அனைவரும் வந்து முட்டிக்கொள்ள வேண்டிய இடம். இத்தகைய பெருமை வாய்ந்த உலகத்தினர் நாம்! அறிஞன், பட்டதாரி, உத்தியோகஸ்தன் என்ற ஒவ்வொருவரும், தனது அநுபவம், வயது ஆகிய இரண்டு யோக்கியதைகளைக் கொண்டு நமக்கு உபதேசிக்க வருகிறான். அவனது அநுபவத்தின் நேர்மைத்தன்மைக்கு நமது உலகம் உரைகல். நமது உலகத்தில் உபதேசிக்க வரும் ஒவ்வொருவனும், நம் மனத்தைக் கொள்ளை கொண்டதாகவோ, அன்றி, தன் கொள்கையை நிலைநாட்டி விட்டதாகவோ நினைத்துக் கொள்ளுகிறான். தம்பி! உண்மை அதுவல்ல. நாம் எதையும் கேட்டு, நல்லவற்றை நிறுத்திக் கொண்டு, ஏனையதைத் தள்ளி விடுந்தன்மையர்கள். தீயைத் 'தீ' யென்போம்; பொய்யை, 'பொய்' என்போம்; கெட்டவனை அவன் முகத்தெதிரே, 'கெட்டவன்' என்று சொல்லி விடுவோம். 'ஆல்' உருபு, 'ஆம்' உருபு சேர்த்து, ஐயப் பொருளில் பேசி நைச்சியம் கூறுபவர்களல்ல. 'வெட்டு ஒன்று, துண்டு இரண்டு'—இதுதான் நாம் கடைப்பிடிக்கும் பாதை. ஆதலின் நம் உலகத்தை அணுகுபவன் எவனாயினுஞ்சரி, உண்மைக்கு மாறாக, முற்போக்குக்குத் தடையாக, பேச, நிற்க, முன் வருவானானால், அவன் வெட்கித் தலைகுனிய வேண்டியவனே!

பாதை நேர்மை யொன்றே

ஆண்டுதோறும் தவறாமல் கலாசாலைப் பட்டமளிப்பு விழாக்களில் செய்யும் உபதேசங்களுக்குப் பஞ்சமில்லை. அதில் என்ன இருக்கிறது? உப்பா, புளியா ஒன்றுமில்லை. அவர்கள் மனம் விட்டுப் பேசுபவர்கள் என்று நினைக்கிறாய்? இல்லை. முக்காலுமில்லை. அவ்வுபந்நியாசி நல்லது சொல்ல வேண்டுமென்று தான் நினைக்கிறான்; எழுதிக் கொண்டும் வருகிறான். நம் எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு திட்டத்தையும் வகுத்துக் கொடுக்க எண்ணுகிறான். அவன் என்ன செய்வான் பாவம்!. அவன் மீது எள்ளளவும் வஞ்சனை இல்லை. அவன் ஹிருதயம் நம் ஹிருதயத்தோடு கலக்க வேண்டுமென்று என்ன பிரயத்தனம் செய்கிறான் தெரியுமா? பரிதாபம்! பலிக்கிறதில்லை. எங்கோ ஆரம்பிக்கிறான். ஏகாதிபத்தியம், கிழக்கு மேற்கு சம்பந்தம், இது போன்ற எழுத வொண்ணாத கரும்பூதங்கள் தோன்றி இவன் சுதந்திரத்தை அடைத்து, ஹிருதயப் பிரவாகத்தை தடுத்து விடுகிறது. கலாசாலைத் தோற்றம், வரவு செலவு, அத்யட்சகருக்குத் துதி, சட்டதிட்டத்திற்கு அடங்கி நடக்க வேண்டிய விஷயமாக இரண்டொரு பல்லவி, இவைகள் சொல்லி முடித்து விடுகிறான். ஐயோ! பிரசங்கியே! இது மாணவ உலகம். நேர்மை ஒன்றே இது கண்ட பாதை. இதனை உன்னு

டைய கோழைத்தனத்தால் பாழ்படுத்தாதே. அறிஞ ராதா கிருஷ்ணா! ஆசிரிய அரங்கநாத! நீவிர் இக்கூட்டத்திலிருந்து மாறுபட்டவர்கள். நீவிர் நீடூழி வாழ்வீர்களாக! உங்கள் உபதேசம் போல், ஆங்கிலக் கல்வி தொடங்கிய காலந்தொட்டு, இது காறும் யாம் கேட்டதில்லை. உங்கள் உபதேசங்கள் காரியமாகப் பரிமளிக்கக் கடவுள் கருணை புரிவாராக!

சிரமங்கள்

அன்பனே! உன்னை என்வழிக்குக் கொண்டுவர வேண்டும்; நானும் உன் வழிக்குத் திரும்பவேண்டும். இந்த இரண்டு காரியங்கள் நடைபெற வேண்டுமல்லவா? சற்றுபேசித்தானே ஆகவேண்டும். மேலும் இதுமுதல் தடவை. ஆதலின் பேச்சு சற்று அதிகமாகத்தான் இருக்கும். இருவரும் சமீபித்து விட்டால்,—நமது லட்சியம் ஒன்றே, பாதை ஒன்றே என்ற முடிவுக்கு வந்து விட்டால்-பேச்சு நின்று விடும்; காரியம் உதயமாகும். அது வரையில் சிரமந்தான்.

இது வரையில் எவ்வளவு சிரமப் பட்டோம்? இந்த கொஞ்ச் சிரமத்திற்கு ஆளாகக் கூடாதா? வாரச் சாப்பாடு சாப்பிட்டு, அதன் கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவித்து மாணவ வாழ்க்கையை முடித்ததின் சிரமம் எவ்வளவு? படிப்புக் கென்று பெண் வீட்டாரிடம் மனம் நோகப் பணம் வாங்கிப்படிப்பை முடித்ததில் சிரமம் எவ்வளவ? பெரிய உத்தியோகத் திலமரப் போகிறோம் என்ற மூட எண்ணத்தால், பெற்றோர்களை யாசிக்கச் செய்து, அல்லது உள்ளதை விற்று மாணவ வாழ்க்கையை முடித்ததில் பட்ட பாடு எவ்வளவு? இந்தச் சிரமங்களில் இது எம்மாத்திரம்? கடுகளவு கூட இல்லை.

மனோ விருத்திகள்

சிவசுவாமி அய்யருக்கு இந்த 'கமிஷனி'ல் அங்கத்தினர் பதவி கிடைத்தது; சீனிவாச சாஸ்திரியாருக்கு, 'இங்கிலாந்தின் பிரஜை' என்ற கௌரவங் கிடைத்தது. அல்லாவுதீன் சாயபு சர்வ மத சபையில், 'இந்தியாவில் மதப் பிரிவுகள்' என்ற விஷயமாகப் பேச, ஸ்விட்ஸர்லாண்டு போகிறார். இராமசாமியின் 'மோடார்' வழி மறிக்கப்பட்டுவிட்டதின் காரணமாக, வெள்ளை 'சார்ஜண்ட்' மனனிப்பு கேட்டுக் கொண்டான். கால்ஸ் ராஜுக்கு 'மஹாத்மா' பட்டம் வந்தது. இவைகளையெல்லாம் கேட்டு அண்டம் நிறையக் கூடிய அளவு வாயைப் பிளக்கிறாய்! நீ என்ன செய்வாய்!! பரிதாபம்!!! நம்பிக்கை, எதிர்பார்த்தல் என்பது மனோ இச்சைகளின் விருத்திகளில் ஒன்றல்லவா? அதற்கனுகுணமாக நடந்து கொள்ளுகிறாய்.

நம்பிக்கையை இழக்காதே!

ஆனால் நிலைமை வேறு விதமாக இருக்கிறது. இத்தனை நாளாகத்தான் 'பரிக்ஷை, பரிக்ஷை' என்று அவதிப் பட்டோமே, இப்பொழுதாவது நிம்மதியாக வீட்டில் இருக்கலாம் என்றால், அதற்கு இடமுண்டா? இல்லவே இல்லை. நாம் ரயிலை விட்டு வீட்டுக்கு வந்த அடுத்த நிமிஷத்தில், கடன்காரன் வந்து, 'புரோம்சரி நோட்டுக்குக் காலாவதி வந்து விடுகிறது; இனி எனக்கு புரோ நோட்டு வேண்டாம்; அடமானப் பத்திரம் எழுதிக் கொடுங்கள்' என்று அப்பாவை ஹிம்சிக்கிறான். இந்தக் கடன் ஏது? எல்லாம் நமது படிப்புக்கு. புத்தகம் வாங்க, பரீக்ஷைக்குப் பணங்கட்ட, உண்டு உடுக்க வாங்கியவைகள் தாம்.

அல்லாது வேறென்ன? நாம் படிப்பதற்குத் தொடங்கிய நாள் முதலாக நமது குடும்பம், உண்ணல், உடுத்தல், தேர் திருவிழா முதலிய சுகத்தில் ஏதாவது ஒன்று அறிந்திருக்குமா? 'எல்லாம் பையன் படிப்பு முடியட்டும்; வேண சுகம் அநுபவிக்கலாம்' என்று அப்பா, அம்மாவைத் தேற்றுவதும், அம்மா, சகோதர சகோதரிகளைத் தேற்றுவதும், இயற்கையாகி விடுகிறது. இவ்வளவு கோலமும் போதாதென்று, புஷ்பவதியாய், நமக்காகக் காத்துக் கொண்டிருக்கும் இன்னுயிர்த்துணைவி, நாம் வந்ததைக் கேள்வியுற்று, தன்னை மறந்து, கலாசாலைக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்த வழக்கத்தை யொட்டி, ஊருக்குக் கடிதம் எழுதுகிறாள். படிக்கத் தெரிந்த சகோதரி, அண்ணாவுக்குக் கடிதம் வந்திருக்கிறதென்று மெதுவாகப் பிரித்துப் பார்க்கிறாள். மதனியின் கடிதம்! இவள் ஜென்மத்தும் புருஷனிடத்திருந்து ஓர் கடிதமும் வரப் பெற்றறியாதவள். ஆதலின் ஆச்சரியமாகத் தோன்றி விடுகிறது. 'அம்மா! மதனி அண்ணாவுக்கு கடிதம் எழுதி இருக்கா' என்று ஓடிவருகிறாள். அம்மாவுக்கு, சரச சல்லாபம் இப்பொழுது மறந்து போயிருக்கிறது. 'அடி சிறுக்கி! கொஞ்சங்கூட நெஞ்சில் பயமில்லாமல், ஆம்படையானுக்கு கடுதாசி எழுதிஇருக்கா, பார்த்தியா! படிடீ. கேட்போம்' என்கிறாள். 'எப்படியாவது என்னை தங்களிடம் அழைத்துக் கொள்ளுங்கள். இங்கு அதிக கஷ்டமாக இருக்கிறது. உங்கள் நினைவால் என் உடல் ஒடுங்கி விட்டது' என்னும் வரிகளைப் படிக்கிறாள். தாயார் கேழ்க்கிறாள். 'தேவடியா! கையிலே போட்டுண்டுட்டா, பிள்ளேயே' என்று வீராவேசம் கொள்ளுகிறாள். சகோதரி முன்போல கடிதத்தை மூடி நம்மிடம் சேர்த்து விடுகிறாள். கடிதத்திலுள்ள ஒவ்வொரு எழுத்தும் இன்பத்தை யூட்டி வாழ்க்கைக்குப் புத்துயி ரளிப்பதாக இருக்கின்றது.

'கடன்காரனுக்கு வட்டியும், இயமனுக்கு நாளும்' சீக்கிரம் வளரும் என்பது பழமொழி. காலம்போகிறது. 'பரீக்ஷையில் தேறிவிடுவோம்; எவ்வளவு நன்றாகக் கேள்விகளுக்கு விடை இறுத்திருக்கிறோம்! குறைந்தது II Class வரவேண்டும். பரிக்ஷை தேற தடையே இல்லே' என்று தீர்மானித்து வாழ்க்கைத்திட்டத்தை அமைத்துக்கொண்டிருக்கையில், அப்பா,சும்மாவா இருக்கிறார்? யார் யாருக்கு தினசரி பத்திரிகை வருகிறதோ, அவர்களை யெல்லாஞ் சந்தித்து, 'பையனுக்கு பரிக்ஷை தேறிற்றா?' என்று விசாரித்த வண்ணமாக இருக்கிறார்.

'முதல்பாகம் பாஸாயிற்று' என்று அவர் சொல்லுகிறார். அப்பாவுக்கு அடிவயற்றில் இடி விழுந்தது போலாகிறது. ஓடி வருகிறார் வீட்டிற்கு. சரமாரியாக வைகிறார். நாமோ அவர் வார்த்தையை எளிதில் நம்புவதில்லை. 'இருங்களப்பா, நான் பத்திரிகையைப் பார்த்துவிட்டுச் சொல்லுகிறேன்' என்று இறுக்கும் பதிலானது, அவர் கோபத்தை அதிகரிக்கச் செய்கிறது. உண்மையை அறிந்தபின்னர், நமது கவலேயும் பெருகுகிறது. நம் குதூகலமான எண்ணமெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் ஓடி விடுகிறது. நூற்றுக்குத் தொண்ணூறு மாணவர்கள் கதி இதுதான்.

அன்பனே! துக்கத்தில் ஆழ்ந்து விடாதே! கவலேக்கு அடிமையாகி விடாதே!! எல்லாவற்றிற்கும் மேலாக நம்பிக்கையை இழந்துவிடாதே!!!

கற்றுக்கொள்ள வேண்டிய சில பாடங்கள்

துன்பம் மேலிட்டு விட்டது; ஆதரிப்பார் இல்லை; அதற்காகப் பிராணனையா விட்டுக் கொள்ளுவது? சீச்சீ! சகோதர மானவனே! தலை நிமிர்ந்து பார். பட்சிகள், மிருகங்கள், தாவரங்கள் ஆகிய இவைகள் கவலையற்று தந்நிலைமைக் கநுகுணமாக இன்பத்தை எப்படி நுகர்ந்து கொண்டிருக்கின்றன! இவைகளிடமிருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டாமா?

தேவர்களுக்கு அசுரர்களால் துன்பம் உண்டாயது. துரியோதனாதிகளால் பாண்டவர்களுக்கு இன்னல் நேர்ந்தது. இவர்கள் என்ன செய்தார்கள்? சங்கங் கண்டார்கள். அன்பர்களைத் துணைக்கழைத்தார்கள். ஆலோசனை செய்தார்கள். தெய்வ நம்பிக்கை, விடா முயற்சி ஆகிய இரு அருமருந்தை மேலானதெனக் கொண்டார்கள். காரியத்திலிறங்கினார்கள். வெற்றி பெற்றார்கள். இது நமக்குப் பெரிய படிப்பினையல்லவா?

ஏழைகளாய், நிலமில்லாது, தொழிலில்லாது வாழ்க்கைப் போராட்டத்தை நடத்தும் எல்லாரும் ஓர் இனம், ஓர் குலம், ஓர் நிலை என்ற இந்த புனித உள்ளத்தோடு, ஆங்காங்கு சங்கங்கள் நிலவச்செய்வோம்; ஊர்வலங்கள் நடத்துவோம், நாட்டில் தொழிலில்லை; உழுதுண்ண நிலமில்லை; படிப்பு, வாழ்க்கைக்குத் துணை செய்வதாக இல்லை; ஆதரிப்போரில்லை. அநாதைகளாய் விட்டோம்; அபலைகளாய்த் திரிகிறோம் என்று பறை சாற்றுவோம். நாம் ஓலமிடுவதைக் கேட்போர் யார்? நண்பர்களே! அத்தகையோர் மிகச் சிலராகத்தானிருப்பார்கள். அதிலும் முன்னணிக்கு வந்து நமக்குக் கைகொடுப்பார் தொகை விரல் விட்டெண்ணக் கூடிய நிலையிலிருக்கும். இஃது உண்மை. ஆனால் நாம் மட்டில் சோர்வு அடையக் கூடாது. ஏன்?

"குடி செய்வ லென்னுமொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்" (குறள்)

என்றதனால்.

நம் நாட்டில் நிலம் ஏராளமாகப் படைத்திருப்பவர்கள் கூட, வாரம், குத்தகை முதலானவைகளுக்குத் தங்கள் நிலங்களை ஒப்படைத்து விட்டு உல்லாச வாழ்க்கையைக் கருதி, நகரங்களில் வசிப்பதன் நிமித்தம் உத்தியோகப் பதவிக்கு வட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சிபாரிசுகள் அதிகம்; எப்படியோ தொத்திக் கொள்ளுகிறார்கள். நமது நிமித்தியமாகத் தங்கள் உத்தியோகங்களை விட்டு விட்டு, நம்மை அங்கு அமரச் செய்வார்கள் என்று நினைக்கிறீர்கள்! கனவு கூட காண வேண்டாம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இத்தாலி தேசத்தில், படித்தவர்களிடையில் வேலையில்லாக் கஷ்டம் தோன்றியது. அக்கஷ்டத்தைச் சமாளிக்க, உலகம் வியக்கும் தீரனான, முஸோலானி ஓர் சீரிய வழி கண்டார். குடும்ப போஷணைக்கு வேண்டிய நிலம் படைத்திருப்பவர்கள் தங்கள் உத்தியோகங்களை விடுத்து, விவசாயத்தை மேற்கொண்டு, கிராம வாழ்க்கையைச் சீர்பெறச் செய்யுமாறு உத்தரவிட்டார். விவசாயத்திற்கு வேண்டிய திரவிய சகாயம், அரசாங்கத்தாரால் செய்யப்பட்டது. அந்நாட்டு மக்களும், இவர் தம் விழுமிய நோக்கத்தை உணர்ந்தவர்களாய், அவ்வுத்திரவிற்குக் கீழ்படிந்தனர். அவ்வித உன்னத மனோ நிலையை நம் நாட்டவரிடத்தும், நம்மை ஆள்பவரிடத்தும்

கானா என்னால் வீணே. அந்நாட்டின் நிலைவேறு; நம் நாட்டின் நிலை வேறு.

மேலும், இக்காலிய நாட்டவ்வளவு விஸ்தார புத்தியை, நம் நாட்டவரும் அரசாங்கத்தாரும் உபயோகப் படுத்தா விட்டாலும், நம் முயற்சிக்கு இடையூறு தேடாமல் இருக்கலாம். செல்வங் குவித்து, ஏகபோகமாகச் சுகத்தை அநுபவிக்கும் சட்ட நிபுணர்களெனப் படுவோர், 'இவர்கள் செய்யுங் கிளர்ச்சியானது, சட்ட வரம்பிற் குட்பட்டதல்ல' என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்லாமல் 'பாவம்! ஏழைகள்! பிழைப்பில்லாமல் திரிகிறார்கள். எப்படியாவது பரிகாரந் தேடிக் கொள்ளட்டும்' என்று வாளாயிருக்கலாம். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சில்லரை விஷமத்தில் கவனஞ் செலுத்தாமல், 'இத்துணை பேர் தொழிலில்லாமலிருப்பதை அரசாங்கம் ஏன் உணராமலிருக்கிறது; இனி வாளாயிருத்தல் கூடாது. ஏதேனும் ஒருவழி கண்டு பிடித்தாக வேண்டும்' என்னும் நல்ல எண்ணங் கொள்ளலாம். நல்ல எண்ணம் நல்ல தொழிலைச் செய்ய வழிகோலும். நல்ல தொழில் நல்ல பலனைக் கொடுக்கும்.

பழைய பல்லவியைப் பாடாதே

தினவு நமக்கு அதிகமாக இருக்கிறது. சொரிந்து கொள்ள வேண்டியவர்கள் நாம். ஆதலின் சுக துக்கங்கள் நம்மைச் சார்ந்தன. விடாமுயற்சியாலும், பேரறிவாலுமே நம் காரியம் சாதகமாக வேண்டியிருக்கிறது. உத்தியோக மேற்பதனால் எத்துணை பேருக்குக் கஷ்டம் நீங்கிவிடும்? விரல் வைத்தெண்ணக் கூடிய ஒரு சிறிய தொகை யினருக்குத் தான். பெருவாரியாக உள்ளவர்களுடைய கதி என்ன? 'கிராமத்திற்கு போ, விவசாயத்தை மேற்கொள்' என்ற பழைய பல்லவியைப் பாடாதே. கிராம வாழ்க்கையைக் குறித்து, பெரிய பெரிய சங்கங்களில், வானளாவப் புகழ்ந்து பேசுகிறார்களே, அந்த நிலையில் கிராமம் இல்லை. கிராமங்கள் காடாரம்பமாகவும், அதில் வசிப்பவர்கள் மிருகங்களாகவும் மாறிக் கொண்டு வருகின்றன. இது அநுபவமப்பா, அநுபவம். விவசாயியோ மூக்கால் அழுகிறான். அவன் நிலையை விஸ்தரிக்க ஒரு சுருக்கமான கதை சொல்லுகிறேன் கேள். என்னடா, இவன் கதை சொல்ல ஆரம்பித்து விட்டான் என்று நினைக்காதே. ஒரே பிடியாக அழுது கொண்டே இருப்பதா? சற்று அழுகை, சற்று சிரிப்பு, சிறிது விளையாட்டு இவைகளெல்லாம் சேர்ந்தது தானே வாழ்க்கை. ஆகையினால்தான் இதிலும் இடையிடையே கதையும் பாட்டும் கலந்து வருகின்றன.

பத்து காணி பயிரிட்ட மிராசுதார் ஒருவர். அவர் தேர்ந்த விவசாயி. பெரிய குடும்பி. தரும சிந்தை யுடையவர். காலத்தில் மழை பெய்யாத கஷ்டம். விலை பொருளுக்கு விலையில்லாக்கஷ்டம். கடன் தொந்திரவு. (வாயிதா) சர்க்கார் தீர்வை உபத்திரவம். எல்லாம் சேர்ந்துப் பிணித்துக் கொண்டது. என்ன செய்வார், பாவம்! பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். ஒன்றும் பயனில்லை. இறுதியில் ஒரு நாள், வயலில் கோவணத்துடன் வேலை செய்துகொண்டிருந்தவர், 'இந்தப் பாடு எத்தனை நாளைக்குப்படுவது. ஒரு நாளா! இரண்டு நாளா!' என்று சொல்லிக் கொண்டு, இரண்டு கண்களிலும் நீர் ஆறுப்பெருக, 'தேசாந்திரம் போய்த் தொலையலாம்' என்று தீர்

மானித்து, கையிலிருந்த மண் வெட்டியை எறிந்துவிட்டுப் போய்விட்டார். சில மைல்களுக்கப்பால் ஒரு மலையடிவாரத்தில் தங்கினர். கிடைத்ததை உண்டு, உறங்கினர். களை தீர்ந்த பின்னர் எழுந்திருந்தார். மலையின் மேல் ஒரு விக்ரஹம் நிற்பதைக் கண்டார். அதை அணுகினர். அது ஒரு ஜைனவிக்ரஹம். நிர்வாணமாக இருந்தது. உடல் குலுங்கச் சிரித்தார், 'பத்து காணி பயிரிட்டேன்; கோவணமாவது மிஞ்சியது. நீ எவ்வளவு காணி பயிரிட்டாயோ அப்பா! கோவணங்கூட இல்லாமலிருக்கிருயே' என்ருர். இந்தக் கதைதான் விவசாயியினது நிலைமையின் கதை.

சில்லரைக் குடித்தனக்காரர்கள் என்னும் வகுப்பைச் சார்ந்தவர்களது கதியைக் குறித்து நான் இவ்வளவும் சொன்னது. கம்பத்தக்காரர்கள் சமாசாரம் வேறு. சில மாத காலமாவது கிராமங்களில் தங்கி, அவர்களுடைய திருவிளையாடல்களைக் கவனித்தால் தான் தெரியும். அவர்கள் பஹதூர்கள். அவர்களுக்குப் பகல் இரவு; இரவு பகல். பொதுஜன நன்மைக்கு அவர்கள் பெரிய சத்துரு. சுருங்கச் சொல்லின், நவீன ராக்ஷஸர்கள் அவர்கள்.

ஆத்திரம் அவசரம் கூடாது

'விவசாயம் இலாபகரமானதல்ல. கிராம வாழ்க்கையோ, இப்போதைய முறையில் கஷ்டமாக இருக்கிறது. பிறகு, எங்கு போய் முட்டிக் கொள்வது' என்று அவசரம் அவசரமாக ஆத்திரத்தோடு கேட்பாய். பொறு; சொல்லுகிறேன். முன்னுக்கு வர விரும்புவனுக்கு ஆத்திரம், அவசரம் இரண்டுங் கூடாது. விவசாயம், கிராமம் இரண்டும் ஏற்கனவே முட்டிக் கொண்ட குட்டிச் சுவர்கள் தானே!. மீண்டும் மீண்டும் அதில் ஏன் போய் முட்டிக் கொள்ளுகிருய்? நல்ல இடத்தில் முட்டிக் கொள். கதியுண்டு; விடுதலையுண்டு. அடிமடியில் கைவை. விவகாரம் பிறக்கும்; வழியேற்படும்.

தைரியத்தை விருத்திசெய்

ஒரு முறை உன்னைச் சுற்றிப்பார். உன்னைச் சார்ந்திருக்கும் சாமான் ஒன்ருவது உன் நாட்டதல்ல. பேனவை எடு, பென்சிலைப் பார். 'பவேரியாவில் செய்தது' என்று பொறித்திருக்கிறது. உன் குல்லாவை எடு. 'ஜெர்மனியில் ஆக்கப்பட்டது' என்று செதுக்கி யிருக்கிறது. உன் வேஷ்டி, குடை, உணவுப் பொருள் ஏன்? உன்னுடைய பெரும்பாலான தேவைகளெல்லாம், உன் நாட்டிற்குப் புறம்பே இருந்து வருகிறது. நீ என்ன, துரையா? காலாட்டிச் சாப்பிட. ஒன்றுக்கு ஒன்பது கொடுத்து வாங்கும் முத்தண்ணு நீ. சந்தோஷம் வந்தால் மட்டில், தலை கால் தெரியாது குதிப்பாய். துக்கம் வந்தால் நீ இருக்கும் மூலையைக் கண்டு பிடிக்க, எட்டு ஆள் வேண்டாமா?. இது அதிவிருஷ்டி, அநாவிருஷ்டி என்றதன் பாற்படும். எதிலும் அவசரம் வேண்டாம்; ஆத்திரம் வேண்டாம். இனி உனக்குச் சொல்லப் போகிற உபதேசங்களைப்படி. பிறகு யோசி. உடனே காரியத்திலிறங்கு. இதற்குள் தைரியத்தை விருத்தி செய். தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு, துக்கக் கடலில் மூழ்கி இராதே. தலைநிமிர்.